ஜெய்த்து கொண்டே இருப்பேன்

ரா. கி. ரங்கராஜன்



Ra. Ki. Rangarajan

Jaithukonde Iruppen

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

அத்தியாயம் 40

அத்தியாயம் 41

அத்தியாயம் 42

அத்தியாயம் 43

அத்தியாயம் 44

அத்தியாயம் 45

சகல கலா வல்லவர்

ரங்கராஜன் சிறுகதை, நகைச்சுவை நாடகம், சமூக நாவல், சரித்திர நாவல், மர்ம நவீனம் என்று பல துறைகளில் எழுதிப் புகழ்பெற்றவர். ஆனாலும், 1980களில் இளைஞராயிருந்தவர்களில் பலருக்கு அவர் மொழி பெயர்ப்பாளர் என்றே தெரிந்திருந்தது, தாராபுரத்தில் நான் பணி புரிந்த சமயம் எல்.ஐ.சி ஊழியர் ஒருவர், பேச்சு வாக்கில், "அவருடைய ஜெஃப்ரி ஆர்ச்சர் மொழிபெயர்ப்புக்காகவே நான் குமுதம் படிக்கிறேன் என்று சொன்னார். ரா.கி.ரவின் நாவல்கள், சிறுகதைகள் பற்றியோ அவர் கேள்விப் பட்டிருக்கவில்லை!

மொழி பெயர்ப்பு, 'முழி பெயர்ப்பாக இருக்கக் கூடாது என்ற கருத்து கொண்டவர்; அதைச் செயல்படுத்தியும் வந்தார். தன் சக ஆசிரிய நண்பர் ஜ.ரா.சு.விடம் ரங்கராஜன் சொல்வாராம்: "முதலில் ஆங்கில ஒரிஜனலை முழுவதுமாகப் படித்து விட வேண்டும். மனத்தில் கிரகித்து கொண்ட பின்னர், அது நாம் எழுதுகிற கதை; நம்முடைய நடையில் எழுதி விட வேண்டும்."

எந்தப் புத்தகமானாலும் சரி - நாவல், சிறுகதை, தன்னம்பிக்கை நூல், சுயசரிதை - இதுபோல் எல்லா மொழி பெயர்ப்புகளிலும், தன் கருத்தை நூற்றுக்கு நூறு கடைப்பிடித்து வெற்றி பெற்றிருக்கிறார். அவருடைய முதல் மொழி பெயர்ப்பு நாவல் "புரட்சித் துறவி" மேரி கோரில்லியின், 'மாஸ்டர் கிறிஸ்டியன்'; (அறிஞர் அண்ணா இறுதி நாளில் படுக்கையில் இருந்தபடி படித்த நூலாம் இது). இது பிரசுரமான பிறகு 1972களில் வெளியான பட்டாம்பூச்சி', ஏகப்பட்ட ரசிகர்களைப் பெற்றுத் தந்தது.

இந்த சுயசரிதை முகமது அலியின் 'The Greatest' என்ற ஆங்கில நூலின் சுருக்கம். நூக்ரோ அமெரிக்கனான காளியஸ் கிளே, தன் இனத்தவர்களுக்கு நேர்கிற கொடுமைகளைக் கண்டு மதம் மாறுகிறான்; அவனுக்குக் குத்துச் சண்டை வீரனாக வேண்டுமென்பதே ஒரே லட்சியம். மதம் மாறுகிற - மாறின தன்மைக்கும் சண்டை வீரனாக மகத்தானவனாக வேண்டும் என்கிற தீவிர நம்பிக்கைக்கும் இடையே நிகழும் மோதல்கள்தான் சரிதம்.

ஆசிரியரின் வெகு இயல்பான நடைக்கும், சரளத்துக்கும் சில உதாரணங்கள்:

"பழங்காலத்தில், ஏதாவதொரு கறுப்பனின் சாதனையை வெள்ளைக்காரர்கள் ஒப்புக் கொள்ள நேரிடும்போது அது கறுப்பர்களின் திறமை என்றோ, மேதை என்றோ ஆற்றல் என்றோ சொல்லமாட்டார்கள். அந்தக் கறுப்பனின் உடலில் வெள்ளை ரத்தம், இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் தேடுவார்கள். அதே போல், ஒரு கறுப்பனிடம் எத்தனைதான் வெள்ளை ரத்தம் கலந்திருக்கட்டுமே, திருடனாகவோ குடிகாரனாகவோ அவன் இருக்க நேர்ந்தால் அவனுடைய 'வெள்ளை ரத்தத்தை விட்டு விடுவார்கள். அப்போது அவன் வெறும் கருப்பன்தான்"

குத்துச்சண்டை வர்ணனை பற்றி குத்து விழக் கூடிய அளவுக்கு எதிரிக்குக் கிட்டத்தில் முகத்தைக் கொண்டு செல்வது, குத்துமாறு எதிரொளியை ஊக்குவது, பிறகு கண்களை அகலம் திறந்து வைத்துக் கொண்டு பக்கவாட்டில் வலது புறம் அல்லது இடது புறம் நகர்ந்து விடுவது, பிறகு குத்து விடுவது, சட்டென்று மீண்டும் குத்து விழக்கூடிய கிட்டத்தில் தலையை நீட்டுவது வெறும் காற்றையே குத்திக் கொண்டிருந்தால் எப்படிப்பட்ட குத்துச்

சண்டைக்காரனுக்கும் அயர்வு ஏற்படத்தானே செய்யும்?"

இதைப் படிக்கும்போது கல்கி தமிழ்நாட்டில் 1952 வருடம் பாரத சாம்பியன் பட்டத்துக்கான மல்யுத்த போட்டி நடந்தன; அவர் ஆதரித்தது நினைவு வந்தது. தன் வாதத்துக்குத் தோதாக மகாபாரத்தினை மேற்கோள் காட்டி இடும்பனும் வீமனும் மற்போர் இருவரை அட்டையில் வெளியிட்டார்.

நான் ரங்கராஜனின் பரம ரசிகன். 1957ம் ஆண்டு ஆரம்பித்த தொடர்பு, இறுதி வரை நீடித்தது. அவருடைய எந்தப் படைப்பானாலும் படித்து மகிழ்வேன். அவர் இறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஜெயித்து கொண்டே இருப்பேன்' சுயசரிதையைப் படித்த போது கண் கலங்கியது. இராமருக்கு அணில் உதவி செய்தது போல நூலுக்கு என்னை முன்னுரை எழுத வாய்ப்பு அளித்திருக்கிறார் அலையன்ஸ் சீனிவாசன், அவருக்கு என் நன்றி.

வாதுலன்

1

லூயிவில் 100 மைல். மழையில் வழிகாட்டிப் பலகையைப் பார்ப்பதே சிரமமாயிருக்கிறது.

"காலையில் போய்ச் சேர முடியாது," என்கிறான் என்னுடைய சொந்த பஸ்ஸின் டிரைவர். அவன் ரொம்ப நேரமாய், அரை மனத்துடன் ஓட்டிக் கொண்டிருக்கிறான்.

"நான் ஓட்டினால் போய்ச் சேர முடியும்." இங்கிருந்து சாலையின் ஒவ்வொரு திருப்பத்தையும் வளைவையும் நான் அறிவேன். நான் ஸ்டியரிங்கை வாங்கிக் கொள்கிறேன். பின்னால் பஸ்ஸில் என் கோஷ்டியிலுள்ள மற்றவர்களுடன் டிரைவர் சேர்ந்து கொள்கிறான். என் மனைவியும் என் பெண் மரியமும் பின்னால்தான் இருக்கிறார்கள் - ஆழ்ந்த நித்திரையில்.

"உலகத்திலேயே ரொம்ப மோசமான இடம் நமது சொந்த ஊர்தான் - நாம் தோல்வியுற்றிருக்கும் போது," என்று ஒருமுறை என்னை எச்சரிக்கை செய்தார்கள். "சொந்த ஊர்க்காரர்கள் உன்னை வெற்றி வீரனாகவே நினைவு வைத்திருக்கட்டும். ஒருபோதும் தோற்றுப் போனவனாகத் திரும்பி வராதே."

வேட்டையாடிய விலங்குகளுடன் வீடு திரும்பும் வெற்றிகரமான வேட்டைக்காரனாகவே இதுவரை நான் ஊருக்குத் திரும்பியிருக்கிறேன். இரண்டு கோல்டன் க்ளவ் சாம்பியன்ஷிப்கள், சில ஏ.ஏ.யு. விருதுகள், ஓர் ஒலிம்பிக் தங்கப் பதக்கம். உலக ஹெவி வெய்ட் பட்டம். நாடு கடத்தப்பட்டு, குத்துச் சண்டை போடக் கூடாதென்று தடை செய்யப்பட்ட காலத்தில்கூட 'தோற்காதவன்' என்கிற கியாதியுடனேயே நான் திரும்பி வந்திருக்கிறேன்.

இது 1973. வசந்த காலம். ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறேன், தோற்றவனாக.

உலகத்தின் எல்லாப் பகுதியிலும் உள்ள எல்லாருக்கும் தெரிந்த ஆணும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு குழந்தையும் அந்தத் தோல்வியை டி.வி.யில் பார்த்திருப்பார்கள். அவர்கள் மட்டுமல்ல. பத்திரிகைகளின் தலைப்புகள் எப்படியிருக்கும் என்பதை அறிவேன். "தொலைந்தான் முகம்மது! முடிந்தது ஒரு சகாப்தம்! ஊர் பேர் தெரியாத ஆளால் வீழ்த்தப்பட்டான்! ஓட்டை வாயை இனித் திறக்கவே முடியாது! சரித்திரத்திலேயே மயிர்க்கூச்செடுக்க வைக்கும் போராட்டம்!"

எனக்கு ஊருக்குப் போய்விட வேண்டும் போலிருக்கிறது. ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக. என் தாயையும் தந்தையையும் பழைய சினேகிதர்களையும் பார்ப்பதற்காக. நான் எந்த நிலையில் இருக்கிறேன் என்பதை எண்ணிப் பார்ப்பதற்காக. நான் யாரென்பதையும், எங்கிருந்து வந்தேன் என்பதையும், எங்கே போக விரும்புகிறேன் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக. அங்கேதான் நான் பிறந்தேன், வளர்ந்தேன். என் வாழ்வின் முதல் இருபத்தொரு ஆண்டுகளைக் கழித்தேன். உண்மையிலேயே அது சொந்த ஊர்தானா - அடி வாங்கியிருக்கும்போது நம்மை அணைத்துக் கொள்ளக் கூடிய புகலிடம்தானா என்பதைத் தெரிந்து கொண்டாக வேண்டும்.

மழை மேலும் கனமாகக் கொட்டுகிறது. சாலையை நன்கு பார்ப்பதற்காக வேகத்தைத் தணிக்கிறேன். இருட்டிலே கண்ணை இடுக்கிக் கொண்டு, மைல் கணக்கிலே, திரும்பத் திரும்ப, சினிமாவில் பார்ப்பது போல, ஒரே காட்சியை நினைத்துப் பார்த்தவாறிருக்கிறேன். ஸான் டீகோ குத்துச் சண்டை அரங்கம்.

கடைசி ரவுண்ட் முடிந்திருக்கிறது. என் மூலையில் நான் நின்றிருக்கிறேன். ரெ.்பரூ, ஜட்ஜ்களின் வாக்குகளைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார். அவர்களை ஏறிட்டுப் பார்க்கிறார்; ஸ்கோரிங்கைக் கேட்கிறார்; என் பக்கமாக ஒரு வினாடி நோக்குகிறார்; பிறகு நார்ட்டனின் பக்கம் திரும்புகிறார். "மெஜாரிட்டியின் தீர்ப்புப்படி ஜெயித்தவர் - கென் நார்ட்டன்!"

ஸ்டேடியம் வெடிக்கிறது. பெஞ்சுகளிடையேயிருந்து ஒரே காட்டுக் கத்தல்கள்; கூச்சல்கள். ரெ.்பரூயின் முடிவைச் சிலர் ஆட்சேபித்துக் கத்துகிறார்கள். ஆனால் 'நார்ட்டன்! நார்ட்டன்!" என்ற மகிழ்ச்சிக் கூப்பாடுகளுக்கிடையே அவர்கள் குரல் அமுங்கிப் போகிறது.

"......... மகனே! உன்னைத் தோற்கடித்துவிட்டோமடா, டேய்!" கீழே நோக்குகிறேன். ஒரு பெரும்பாடியான வெள்ளைக்காரன். நாற்காலியில் குதித்து ஏறி நின்று, ஒரு செய்தித்தாளை ஆட்டியபடி என்னைப் பார்த்துக் கத்துகிறான்: "உன்னைத் தீர்த்தாச்சு! தீர்த்தாச்சு!"

போலீஸ்காரர்கள் ரிங்குக்குள் பாய்ந்து வருகிறார்கள். ஆனால் மக்கள் அவர்களை மீறிக் கொண்டு, கயிறுகளுக்குக் கீழாக வெள்ளமெனக் கொட்டுகிறார்கள். ஜோ.்ப்ரேஸியர் தன் தோழனும் கூட்டாளியுமான நார்ட்டனைக் கட்டித் தழுவுகிறான். ஒரு ரேடியோ வர்ணனையாளர் என்னைத் தன்னிடம் வருமாறு கத்துகிறார். ஏதாவது சொல்லு! எப்படி இப்படி நேர்ந்ததென்று சொல்லு!" ஆனால் அதற்குள் என் நண்பர்கள் என்னைப் படி வழியே இறக்கி அழைத்துச் செல்லத் தொடங்கி விடுகிறார்கள். தொண்டைக்குள் வந்து கொண்டிருக்கும் ரத்தத்தை என் நாக்கு உணருகிறது. முகத்திலும் தோள்களிலும் வலி அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

சற்றுத் தயங்கி, பெலிண்டா உட்கார்ந்திருக்கக் கூடிய இடத்தைப் பார்த்தது நினைவு வருகிறது. அவளை நோக்கிக் கையை வீச - நான் உருப்படியாகத்தான் இருக்கிறேன் என்பதை ஏதாவதொரு வகையில் அவளுக்குச் சாடை காட்ட - நினைக்கிறேன். ஆனால் போலீசாரும் கூட்டத்தினரும் அலைமோதிக் கொண்டிருக்கவே நான் டிரெஸ்ஸிங் ரூமை நோக்கித் தள்ளப்படுகிறேன்.

"நீ தான் உலகத்திலேயே அழகு என்பாயே? இப்ப யாரடா ரொம்ப அழகு? இப்ப யாரடா ரொம்ப அழகு?" கும்பலாகச் சில வெள்ளைக்காரப் பெண்கள், காலைத் தரையில் உதைத்தபடி தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் அவர்களை அப்புறப்படுத்துகிறது.

என் தலை கழன்று விழுந்து விடுகிற மாதிரி இருக்கிறது. என் இடது தாடையில் உள்ள வலி, பொறுத்துக் கொள்ள இயலாததாக இருக்கிறது.

போலீஸ் வரிசையை மீறிக்கொண்டு ஒரு ஆள் - நெருப்பணைக்கும் படை யூனிபார்ம் அணிந்தவன் வருகிறான்; "நீ தீர்ந்தாச்சுடா ஓட்டை வாய்! தீர்ந்தாச்சு!"

போலீசார் கூட்டத்தினரைக் கிழித்துக் கொண்டு எனக்கு வழி ஏற்படுத்திச் செல்கிறார்கள். அரங்கத்தையும் கீழ் ஹாலையும் கடந்து செல்கிறோம். கலாட்டா செய்கிறவர்கள் கூச்சலிட்டுக் கொண்டும் கத்திக் கொண்டும் கோஷமிட்டுக் கொண்டும் பின் தொடர்கிறார்கள். வழிகாட்டும் காவலர்கள் டிரெஸ்ஸிங் ரூம் கதவைத் திறக்க முயலுகிறார்கள். இறுதியில் கதவு உட்பக்கமாகத் திறந்து கொள்கிறது. என் மானேஜர் ஹெர்பர்ட் முகம்மது, என் துணை டிரெயினர் பண்டினி, என் ரிங்ஸைட் டாக்டரான டாக்டர்

பாச்சகோ, நான் நேஷன் ஆஃப் இஸ்லாமில் சேர்ந்த நாள் தொட்டு எனக்குத் தெரிந்தவரான, 7 ஆம் எண் கோவிலைச் சேர்ந்த காப்டன் ஜோசப் யூஸஃப், என் டிரெயினர் ஆஞ்செலோ டண்டி, பழைய சினேகிதரான லாயிட் வெல்ஸ், என் உதவியாளர்களான யூஜின் கில்ராய், ஹசன் ஸலாமி, என் புகைப்படக்காரரான ஹோவார்டு பிங்ஹாம், என் எழுத்தாளரான டிக்டர்ஹாம், ரெக்கி பாரெட் என்ற இன்னொரு சினேகிதர், மெய்க் காவலரான பாட் பாட்டர்ஸன், அஸிஸ்டென்ட் டிரெயினர் வால்ட்டர் யங்பிளட் - எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக எங்களைத் திணித்துக் கொண்டு அறைக்குள் நுழைகிறோம். நாங்கள் உள்ளே வந்த பிறகுகூடக் கூட்டத்தினர் கதவைத் திறந்து என் காதில் விழும்படியாகக் கத்திக் கொண்டிருக்கிறார்கள். "இப்ப யார் மகா பெரிய ஆள்?"

ஒரு வழியாகக் கதவு சாத்தப்படுகிறது. ஆஞ்செலோ அதன்மூது சாய்ந்து நிற்கிறான் - களைத்து ஓய்ந்தவனாக. அந்தக் குரல்களில் உள்ள சூற்றத்தையும் வெறுப்பையும் அவனால் நம்ப முடியவில்லை. "காட்டுமிராண்டிகள்!" என்று மட்டுமே அவனால் சொல்ல முடிகிறது.

என் தோள் மூதிருந்து நழுவி விட்ட மேலங்கியை எடுத்துத் தருகிறான் கில்ராய். அதன் முதுகில் 'மக்கள் சாம்பியன்' என்று எழுதப்பட்டிருக்கிறது. நான் ஜோ பியூனருடன் சண்டை போட்டபோது எல்லிஸ் பிரெஸ்லி அன்பளிப்பாகக் கொடுத்த அங்கி அது. கில்ராய் என்னருகே வந்து என் மோவாயின் கூழும் தலையின் மூதும் ஒரு துவாலையைச் சுற்றுகிறான், தாடை வலியைத் தணிப்பதற்காக.

"இது நார்ட்டனின் ஊர். நார்ட்டனின் ஜனங்கள்." என்று யாரோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். "லூயிவில் உன் ஊர் மாதிரி, நார்ட்டனுக்கு இது. உள்ளூர்ப் பையனிடம் ஜனங்கள் உற்சாகம் காட்டுவது சகஜம்தானே?"

ஆனால் அந்த முகங்கள், அந்தக் குரல்கள், வெறும் 'உள்ளூர் உற்சாகம்' மட்டும் அல்ல என்று எனக்குத் தெரியும். பெரும்பாலான வெள்ளைக்கார அமெரிக்காவின் உணர்வு அது. என் எதிராளி யாராயிருந்தாலும் சரி, நான் தோற்க வேண்டும், அதைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே பாதிப் பேர் வருகிறார்கள் என்பது எனக்குப் பழக்கமாகிவிட்ட விஷயம்.

ரொம்பக் காலமாக அவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்தது. இன்று கிடைத்து விட்டதால் அவர்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். மாடி ஸன் ஸ்கொயர் கார்டனில், ஃபிரேஸியர் ஒரு லெஃப்ட் ஹூக் கொடுத்து என்னை வீழ்த்தியதற்குப் பிறகு, இப்படி ஒரு சந்தோஷம் அவர்களுக்குக் கிடைக்காமலே இருந்திருக்கிறது. சர்வதேசப் புகழ்பெற்ற ஃபிரேஸியரிடமோ ஃபோர்மனிடமோ தோற்காமல் ஓர் உள்ளூர்ப் பையனிடம் நான் அடி வாங்கியதில் அவர்களுக்கு இரட்டிப்பு ஆனந்தம்.

சண்டை ஆரம்பமாவதற்குக் கொஞ்சம் முன்பு ஹெர்பர்ட் சொன்னது காதில் ஒலிக்கிறது. "உனக்கு வயது முப்பத்திரண்டு. குத்துச் சண்டைக்காரனுக்கு இது அதிகம். நீ இளைஞனாயிருந்த போது சந்தித்தவர்களைக் காட்டிலும் அதிக முரட்டுத்தனமும், வலிமையும் உள்ளவர்களை இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறாய். 'வரலாற்றிலேயே மாபெரும் குத்துச் சண்டைக்காரன் நான் தான்!' என்று ஜம்பமடித்துக் கொண்டிருக்கும் ஆசாமியை வீழ்த்தி, திடீர்ப் புகழும் திடீர் அதிர்ஷ்டமும் அடைய இதுதான் அவர்களுக்குச் சான்ஸ். நீ எதிர்க்கிற குத்துச் சண்டைக்காரர்கள் அனைவரும் ஆவேச உற்சாகத்துடன் வருகிறார்கள். உன் ஜம்பங்கள் அவர்களை ஊக்குவித்திருக்கின்றன. வேறு யாரையும் காட்டிலும் உன்னோடு தான் அதிகத் தீவிரமாக மோதுகிறார்கள்."

குத்துச் சண்டை தொடங்குவதற்கு முன்பு ஒவ்வொரு முறையும் நானும் ஹெர்பர்ட்டும் ஒரு தனியான இடத்தைத் தேடிச் செல்வது வழக்கம். அல்லாவை வாழ்த்தி விட்டு, என்னை எதிர்நோக்கும் நிலைமையைக் கடைசியாக ஒரு முறை ஆராய்வோம்.

"நூ எல்லா விதிகளையும் மீறி நடந்து கொண்டாய்." என்றார் ஹெர்பர்ட், மறு சண்டையை ஒத்திப் போடலாமா என்று நினைத்தேன். ஆனால், "நார்ட்டனை மறுபடி சந்திக்க நான் ரெடி. பார்த்துக் கொண்டேயிரு," என்றேன். ஒத்திப் போடுவதை நான் விரும்பவில்லை.

டிரெஸ்ஸிங் மேஜையின் முன்னே உட்கார்ந்திருக்கிறேன். என் அருகே சுற்றிலுமுள்ள முகங்களைப் பார்க்கிறேன். அறைக்குள்ளே வருகிறவர்களையும், போகிறவர்களையும் பார்க்கிறேன். பழக்கமில்லாத இடத்தில் இருப்பது போல ஓர் உணர்வு தோன்றுகிறது. பிறகு புரிகிறது ஏன் பழக்கமில்லை என்று - இது ஜெயித்தவர்களுக்குத் தரப்படும் அறையல்ல; தோற்றவனின் அறை. இதற்கு முன் ஒரே ஒரு முறைதான் இந்த மாதிரி அறையில் இருந்திருக்கிறேன். இந்த அறையில் என்ன பேசுவதென்று யாருக்கும் தெரிவதில்லை.

நான் ஏன் தோற்றேன்? இரண்டாவது ரவுண்டை எண்ணிப் பார்க்கிறேன். நார்ட்டன் என் பாதுகாப்பைத் துளைத்துக் கொண்டு, என் தாடையில் ஒரு லெஃப்ட் குத்தை இறக்கினான்... எப்போது அந்தக் குத்து விழுந்தது என்று எனக்குக் கச்சிதமாகத் தெரியும். ஏதோ தெறித்தது. தொண்டையில் குபுக்கென்று ரத்தம் பீரிட்டு வருவதை என்னால் உணரமுடிந்தது. என் மூலைக்குத் திரும்பியதும் ஆஞ்செலோவிடமும் பண்டினியிடமும் கேட்கிறேன். "தாடை முறிந்து விட்டால் எப்படித் தெரியும்?"

"வாயை இப்படித் திறக்கும்போது-" பண்டினி செய்து காட்டுகிறான். "கிளாக் என்று சத்தம் கேட்டால், முறிந்திருக்கிறது என்று அர்த்தம்."

நான் திறந்து பார்க்கிறேன். கிளாக் சத்தம் கேட்கிறது. என் முகமெங்கும் சுரூரென்று வலி. தொண்டையில் ஊறிக் கொண்டிருக்கும் ரத்தத்தைப் பக்கெட்டில் துப்புகிறேன். வாயைக் கொப்புளிக்கிறேன். ஆனால் ரத்தம் பீரிட்டு வந்து கொண்டேயிருக்கிறது.

"தாடை முறிந்திருக்குமானால் சண்டையை நிறுத்தி விட வேண்டியதுதான்," என்று பண்டினி சொல்லிக் கொண்டிருக்கிறான்.

நான் நிறுத்த மாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். இன்னும் பதின்மூன்று ரவுண்டுகள் இருக்கின்றன. என்னால் ஜெயிக்க முடியும். கூழே ரிங்ஸைடைப் பார்க்கிறேன். ஜோ ஃபிரேஸியரும் ஆர்ச்சி மூரும் குழப்பமுற்றவர்களாக என்னை ஏறிட்டுப் பார்ப்பது தெரிகிறது. நார்ட்டனுக்கு டிரெயினிங் கொடுப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள் அவர்கள். அவர்களை ஏமாற்றமடையப் பண்ண வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது.

மணி அடிக்குமுன்னே பண்டினி என் காதில் கிசு கிசுக்கிறான்: "குட்டையன் தன் அறையிலிருந்து கொண்டு உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். குட்டையன் காலைச் சப்பணமிட்டு அமர்ந்து உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அதை ஞாபகம் வைத்துக் கொள்."

'குட்டையன்' என்பது பண்டினி கடவுளுக்குச் சூட்டியுள்ள பெயர்.

நார்ட்டனை வீழ்த்திவிட நான் போராடிக் கொண்டிருக்கும்போது

இன்னொரு குத்து என் தாடையைப் பிளக்கிறது. பண்டினி உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்கிறான் : "குட்டையன் உன்னைக் கவனிக்கிறார்! வரவேற்பு அறையின் டெலிவிஷனில் இருக்கிறார்! உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்!"

ரவுண்டுக்குப் பின் ரவுண்டாக நான் போராடுகிறேன். சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. ஆனால், இனி மேற்கொண்டு மூலைகளிலே நார்ட்டனுடன் தடவிக் கொண்டிருக்க முடியாது என்பது எனக்குத் தெரிகிறது. அடிகளைப் பரிமாறிக் கொள்வது இயலாது. ஒரு 'பஞ்ச்' கொடுத்து அது நார்ட்டனின் மூது செம்மையாக இறங்கும்போதுகூட, என் கை வலியாய் வலிக்கிறது, முடக்கு வாதம் ஏற்பட்ட மாதிரி.

பிற்பாடு மக்கள் கேட்டார்கள், ஏன் சண்டையை நிறுத்தவில்லை என்று. என் முகம் குதறிக் கிழிந்துவிடக்கூடும் என்று எனக்குத் தெரியாததா? இப்போதும்கூட என்னால் அதை விளக்க இயலவில்லை. ஒருவேளை, அப்படியொன்றும் மோசமாக அடிபட்டு விடவில்லை என்று நினைத்தேனோ என்னவோ. எனக்குத் தாடை உடைந்த நிலையிலும், என்னை நார்ட்டனால் வீழ்த்த முடியும் என்று நான் நம்பவில்லையோ என்னவோ. ஒருவேளை அதுவரை ஒருபோதும் நான் சண்டையிலிருந்து பின்வாங்கியது கிடையாது என்பதாலோ என்னவோ. அத்துடன், இங்கே இந்தக் குளிர்ச்சியான டிரெஸ்ஸிங் ரூமில் உட்கார்ந்திருக்கையில் என் தாடை வலிக்கிற மாதிரி அங்கே குத்துச் சண்டை மேடையில் இருந்த போது, அந்தச் சூட்டிலும் பரபரப்பிலும் வலி தெரியவில்லை.

இப்போது விண் விண்ணென்று ஒவ்வொரு முறை தெறிக்கும்போதும் ஒரு பல் வலி போல் இருக்கிறது.

யாரோ கதவைத் தட்டிச் சத்தம் போடுகிறார்கள். "டாக்டர் வருகிறார். கதவைத் திறவுங்கள்!"

வந்தவர் கலிபோர்னியா பாக்ஸிங் கமிஷனைச் சேர்ந்த டாக்டர். என் அருகே வந்து, மென்மையாக என் தலையையும் கழுத்தையும் தொடுகிறார். என் முகத்தின் பக்கத்தையும் கழுத்தையும் மோவாயின் கூழேயும் தடவிப் பார்க்கிறார்.

அவர் முகம் சுருங்குகிறது.

"தாடை முறிந்திருக்கிறதா?" என்று அவரைக் கேட்கிறேன்.

அவர் ஒன்றும் சொல்லவில்லை. அறையில் நிசப்தம் நிலவுகிறது.

2

மறுபடியும் கேட்டுப் பார்க்கிறேன் : "மோசமாக இருக்கிறதா?"

"எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பின்பு தான் சொல்ல முடியும்" என்கிறார். பிறகு டாக்டர் பசிகோவைப் பார்க்கிறார். தாழ்ந்த குரலில் அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் கதவை யாரோ தட்டுவது எனக்குக் கேட்கிறது.

"எங்கே பெலிண்டா?" என்று கேட்கிறேன்.

யாரும் பதிலளிக்கவில்லை. என்னவோ விபரீதம் என்று எனக்குத் தெரிகிறது. எனக்கு அடிபட்டிருக்கும் போது எதுவும் அவளை என்னிடமிருந்து பிரிக்க முடியாதே?

கடைசியாக, காப்டன் ஜோசப் தெரிவிக்கிறார்: "அடுத்த அறையில் இருக்கிறார்."

"போய் அழைத்து வாருங்கள் அவளை" என்கிறேன்.

"வந்து... கீழே ஹாலில் ஓர் அறையில் இருக்கிறார்," என்கிறார். பிறகு: "உடம்பு சரியில்லை."

கலிபோர்னியா டாக்டர் சொல்வது என் காதில் விழுகிறது: "முகம்மது, கார் காத்துக் கொண்டிருக்கிறது. பிளாஸ்டிக் சர்ஜன் தயாராயிருக்கிறார். இப்போதே நீங்கள் புறப்பட்டாக வேண்டும்." -

ஆனால் நான் இடித்துத் தள்ளி அவரைக் கடந்து, ஹால் கதவின் வழியே கீழே பெலிண்டா இருக்கும் அறையை நோக்கி விரைகிறேன். இரண்டு டாக்டர்களும் பின் தொடர்ந்து

வருகிறார்கள். என் தோல்வியைக் கொண்டாடும் கும்பல் இப்போது இன்னும் அடர்த்தியாயிருக்கின்றன. அவர்கள் என்னைப் பார்த்ததும் ஒரு பெரும் ஆரவாரம் எழுகிறது.

"ஓட்டை வாயன் கதை முடிந்து போச்சு! கறுப்பனை நார்ட்டன் அடித்து விட்டான்! கறுப்பனை நார்ட்டன் அடித்து விட்டான்!" இன்று காலை வரை நார்ட்டனும் என்னைப் போலவே ஒரு கறுப்பனாகத் தான் இருந்தான். ஆனால் இன்று இரவு அவன் வெள்ளைக்காரனின் நம்பிக்கை நட்சத்திரம்!

கேலிக் கூச்சலும் சூழ்க்கைகளும் என்னைப் பின் தொடர்கின்றன. அறையில் நுழைந்து கதவைச் சாத்தியானதும் நான் சும்மா நின்றபடி பெலிண்டாவைப் பார்க்கிறேன். என் ஜம்பத்துக்கும் டம்பத்துக்கும் யாரெல்லாம் என்னைப் பழி தூக்க நினைத்தார்களோ இதோ தூத்து விட்டார்கள். இந்த அடிக்கு முன்னே, நார்ட்டன் கொடுத்த அடி ஒன்றுமேயில்லை. பெலிண்டாவைப் டிரெஸ்ஸிங் டேபிள் மூது கட்டிப் போட்டிருக்கிறார்கள். அவள் பிறாண்டிக் கொண்டு, முறுக்கிக் கொண்டு, கூச்சலிட்டுக் கொண்டு, தலையை இப்படியும் அப்படியும் திருப்பிக் கொண்டு கிடக்கிறாள். ஐந்து பேர் அவளை அமுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் நின்று கொண்டிருக்கையில் அவள் வெகு பலமாக நெளிந்து திமிறுகிறாள். கட்டுக்கள் அவிழ்ந்து விடுகின்றன. ஆட்கள் பரபரப்புடன் மறுபடி அவளைப் பிடித்து அமுக்கி, கட்டுக்களைத் திரும்ப முடிச்சிடுகிறார்கள்.

நான் மெல்ல ஒரு பெஞ்ச்சை அடைந்து அவளருகே உட்காருகிறேன்.

"ஸ்டிராங்கான தூக்க மருந்து கொடுத்திருக்கிறேன்." டாக்டர்

பாக்சிகோ விளக்குகிறார். 'அடங்க மறுக்கிறார்; மேலும் கொடுக்கப் பயமாயிருக்கிறது."

ஸூஸி கோமெஸ், பெலிண்டாவின் தோழி - இளம் மெக்ஸிகோ மாணவி. அவள் என் பக்கத்தில் உட்காருகிறாள்.

"என்ன நேர்ந்தது?" கேட்கிறேன்.

"எனக்குத் தெரியவில்லை," என்கிறாள் ஸ்ஸி. "நார்ட்டன் ஜெயித்துவிட்டதாக அறிவித்தவுடனே இவளுக்கு ஆவேசம் வந்துவிட்டது. முதலில் சும்மா அப்படியே உட்கார்ந்திருந்தாள். ரொம்ப அமைதியாக. ரொம்ப சாதுவாக. ஆனால் ஏதோ நேர்ந்து விட்டது என்று எனக்குத் தோன்றியது." அவள் நிறுத்திவிட்டு நெடுநேரம் பெலிண்டாவை நோக்குகிறாள். "குத்துச் சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னால், தனக்கு ஏதோ ஒரு துர்க்குறி தென்பட்டதாகச் சொன்னாள். ஆனால் என்னவென்று சொல்ல மறுத்து விட்டாள். தீர்ப்பு அறிவித்தானதும் கண்ணைப் பொத்திக் கொள்ளப் போகிறவள் மாதிரி தோன்றியது. ஆனால் கை அதுவரை உயரவில்லை ; அப்படியே அந்தரத்தில் நிறுத்திக் கொண்டாள். எழுந்து நிற்கப் போகிறாள் என்று நினைத்தேன். அவள் பக்கத்திலிருந்து ஒருவர் அவளுக்கு ஏதோ ஒத்தாசை செய்யப் போனார். ஆனால் அவரை அடித்து விட்டாள்."

பெலிண்டா இரண்டு வருட காலம் கராத்தே பயின்றவள். 'கறுப்பு பெல்ட்' பெற்றவளுக்கு இருக்கக்கூடிய திறமையுடனும் பலத்துடனும் அவள் சரமாரியாய்த் தாக்குவதைப் பார்த்திருக்கிறேன்.

"எங்கள் பின்னே ஜனங்கள் மூட்டுகளில் ஏறி நின்று குதித்துத் கூத்தாடிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்." ஸூஸி

தொடர்கிறாள். "அத்தனை பேரும் ஒருத்தரையொருத்தர் நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் அரங்கத்திலிருந்து கீழே இறங்குவதைப் பார்த்தோம். உங்களிடம் வர முயற்சி பண்ணினோம். பெலிண்டா முண்டி அடித்து உங்களிடம் வரப் பார்த்தாள். ஒரு போலீஸ்காரரை அடித்துவிட்டாள். 'முகம்மது அலி செத்து விட்டார்! அவரைக் கொன்று விட்டார்கள்!' என்று கத்திக் கொண்டேயிருந்தாள்."

"நான் இறந்துவிட்டேனென்றா நினைத்திருக்கிறாள்?" குனிந்து பெலிண்டாவைக் கைகளால் வளைத்து அணைத்து, அவளை அமைதிப்படுத்த முயலுகிறேன். நாங்கள் கல்யாணம் செய்து கொண்டோம். அப்போது அவளுக்குப் பதினேழு வயதுதான். நான் நாடு கடத்தப்பட்டவனாக இருந்தேன். எங்களுக்குக் கல்யாணமான முதல் மூன்று வருடங்களில் குத்துச் சண்டைக்காக உலகச் சுற்றுப் பயணம் எதுவும் கிடையாது; குத்துச்சண்டைக்களுக்கான முஸ்தீப்பு கிடையாது; சண்டைகளுக்கான பயிற்சி கிடையாது. தொழிலில் எனக்குப் படுமோசமான காலம் அது. என் குடும்பத்தில் மிகச் சிறப்பான காலமும் அதுவே.'

நான் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறேன். அனலாய்க் கொதிக்கிறது. அவள் கைகளை அறுக்கிறாற் போல் அழுந்தியிருக்கும் கட்டுக்களைத் தளர்த்தச் சொல்கிறேன்: பின்னர் அவளருகே குனிந்து, கிசுகிசுக்கும் குரலில் சொல்கிறேன்; "எல்லாம் சரியாகிவிட்டது. அழகுக் கண்ணே! முகம்மது அலி நல்லபடி இருக்கிறான்."

"முகம்மது அலி இறந்துவிட்டார்! அவர் இறந்து விட்டார்!" அவள் கதறுகிறாள்.

நான் இன்னும் குனிந்து அவள் காதின்மூது வாயை வைத்துக் கொள்கிறேன். "இல்லை! அவன் சாகவில்லை. அழகுக் கண்ணே! இதோ இங்கே இருக்கிறேன். நல்லபடி இருக்கிறேன்!" அவள் கண்களுக்குள் பார்க்கிறேன். அவை அகலத் திறந்திருக்கின்றன. எனினும் என்னைத் துளைத்துத் துருவிக் கொண்டு எங்கோ தொலைவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

கலிபோர்னியா டாக்டர் என்னிடம் வருகிறார்: "ஆஸ்பத்திரிக்கு நுங்கள் இப்போதே புறப்பட்டாக வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சூக்கிரமாக எக்ஸ்ரே எடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது."

"இவளும் என்னோடு வரட்டும்."

அவர் தலையை அசைக்கிறார். "இன்னோர் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதுதான் இவருக்கு ரொம்ப நல்லது. நுங்கள் தோற்றதைப் பார்த்த அதிர்ச்சி. நுங்கள் வேறு தான் வேறு என்று அவர் நினைக்கவில்லை. நுங்கள் தோற்று விட்டதற்காகச் சந்தோஷப்படுகிறவர்களுடன் அவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிற மாதிரி இருக்கிறது. அல்லது உங்களுக்காக நார்ட்டனுடன் சண்டை போடுகிறாற் போலிருக்கிறது."

'நான் பெஞ்ச்சிலிருந்து எழுந்து மேஜையில் அவள் பக்கத்தில் படுத்துக் கொள்கிறேன். கிசுகிசுக்கிறேன். "அழகுக் கண்ணே! நான் செத்துப் போகவில்லை. அவர்களால் என்னைக் கொல்ல முடியாது."

இரண்டு டாக்டர்களும் என்னை அப்பால் இழுத்துச் செல்ல முயலுகிறார்கள். ஆனால் அவள் அமைதியுறும் வரையில் நான்

நகரவில்லை. அவளுடன் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து எப்படி இருக்கிறாளென்று சொல்ல வேண்டுமென்று ஸூஸியைக் கேட்டுக் கொள்கிறேன்.

க்ளேர்மாண்ட் ஜெனரல் என்ற ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டு செல்கிறார்கள். அங்கே தனி அறை கிடையாது. எனக்கு அடுத்த படுக்கை காலியாயிருக்கும்படி பார்த்துக் கொள்வதுதான் அவர்களால் அதிக பட்சம் செய்ய முடிந்தது. எக்ஸ்ரே எடுத்து, டயக்னோஸ் செய்தானதும் என்னைச் சக்கர நாற்காலியில் ஆபரேஷன் அறைக்குத் தள்ளிச் செல்கிறார்கள். என்னைத் தூங்க வைப்பதற்காக அனஸ்தடிஸ்ட் வருகிறார்.

டாக்டர் சொல்கிறார்: "நீங்கள் கண் விழிப்பதற்குள் எல்லாம் சரியாகிவிடும்."

எனக்குள் நினைத்துக் கொண்டது ஞாபகம் வருகிறது: - 'நான் விழித்திருந்து, என்ன நடக்கிறதென்று கவனிக்கப் போகிறேன். ஊசியைச் செருகும்போது, பெலிண்டா செய்த மாதிரியே அதை எதிர்க்கப் போகிறேன். மயக்கத்துக்கு இடம் கொடுக்கப் போவதில்லை.'

அடுத்தபடி நான் கண் விழித்ததுதான் ஞாபகம் இருக்கிறது. வாய் பூரா முள் வேலி போட்ட மாதிரி ஓர் உணர்ச்சி. வலி போய்விட்டது. ஒரு டாக்டர் என் எக்ஸ்ரேயை உயர்த்திப் பிடித்தபடி, எலும்பு முறிவுகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார். "இங்கே சமீபத்தில் ஒரு பல்லைப் பிடுங்கிய இடத்தில், எலும்பில் ரொம்பப் பலஹீனமான பக்கத்தில் டைரக்டாய்க் குத்து இறங்கியிருக்கிறது உங்களுக்கு."

நான் கையை வாயருகே உயர்த்தி, எலும்புத் துண்டுகளைப்

பிணைத்துப் பல் வரிசையை ஒழுங்காகப் பிடித்திருக்கும் கம்பிகளைத் தடவிப் பார்க்கிறேன்.

"அது ஆறுவதற்கு மூன்று, ஏன் நாலு மாசம்கூட ஆகலாம்" என்கிறார் அவர். "ஆனால் புத்தம் புதிது மாதிரியே இருக்கும்."

நான் ஏதோ சொல்ல முயலுகிறேன்.

"ஆமாம், ஆமாம்," என்கிறார் டாக்டர் புன்சிரிப்புடன். "கொஞ்ச நாளைக்கு உங்களால் வாயைத் திறந்து பேச முடியாது. பல் இடுக்கால் தான் பேசலாம்."

என் வலுவையெல்லாம் திரட்டி வாயைத் திறக்கிறேன். "இதுதான் மிகக் கொடிய தண்டனை! பதிலுக்குப் பதில் நார்ட்டனுக்குத் திருப்பிக் கொடுத்துத் தான் தீருவேன்."

அவர்கள் சிரிக்கிறார்கள். ஆனால் நான் அறிவேன் - கொடிய தண்டனை பெற்றிருப்பது நானல்ல என்று. தொட்டுப் பார்க்கிறேன் - தாடை மரத்திருக்கிறது. என் ஆறு வயதுக் குழந்தை மரியமை நினைத்துக் கொள்கிறேன். துருதுருத்த வால். என் தலையை வளைத்து, கழுத்தை இறுக்கமாகக் கட்டிக்கொண்டு தொங்குவதில் அவளுக்கு ஆசை. அப்புறம் இரட்டைக் குழந்தைகள் - ஜமீலாவும் ரஷீதாவும், என் மகன் முகம்மது அலி ஜூனியர். இனி அவர்கள் பச்சைக் குதிரை தாண்டிக் கொண்டே ஓடி, சுற்றித் தவழ எத்தனை நாளாகப் போகிறதோ!

ஒவ்வொரு நாளும் பண்டினி வருகிறான் - லேடஸ்ட் செய்தியுடன். இன்று காலை அவன் சொல்கிறான் : "நீங்கள் குளோஸாம் ஹோவார்டு காஸல் ஆரூடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மூன்றரை வருடகால வெளிநாட்டு வாழ்க்கை உங்களை

பலஹீனப்படுத்தி விட்டதாம். நீங்கள் எத்தனை பெரிய ஆள் என்று நேற்று வரையில் சொல்லிக் கொண்டிருந்த பயல்."

"காஸெலைக் குற்றம் சொல்லாதே," என்று பல் இடுக்கு வழியே சிரமத்துடன் பேசுகிறேன் நான். 'என்னைக் குற்றம் சொல்லு. முட்டாள் தான் முழுகும் கப்பலில் ஒட்டிக் கொண்டிருப்பான்.'

ஊரிலே இருக்கிற சண்டான் முண்டான் உதிரிகளையெல்லாம் பொறுக்கியெடுத்துச் சேர்த்துக் கொள்கிறவனாகவே நான் இதுவரை இருந்து வந்திருக்கிறேன். இப்போது நார்ட்டன் பக்கம் காற்றடிக்கிறது. அங்கே எல்லோரும் ஓடுவதைப் பார்க்கிறேன். உடம்பைச் சில்லிட வைக்கும் உணர்வு அது. அதற்கு நான் தயாராயிருந்திருக்கிறேன் என்பதை அறிந்து எனக்கே ஆச்சரியம் ஏற்பட்டது.

என் படுக்கைக்கும் பெலிண்டா படுக்கைக்குமாகப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கும் ஹெர்பர்ட் இதெல்லாம் அற்பக் கவலை என்கிறான். பேசாமல் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்கிறான். காயங்கள் ஆறினால் போதுமாம்.

இரண்டாம் நாள் சாயந்தரம் நார்ட்டனின் மானேஜரான எட்டி ஃபட்ச் கூப்பிடுவதாகக் கில்ராய் சொல்கிறான்: "நார்ட்டன் உங்களை வந்து பார்த்து மரியாதை தெரிவிக்க விரும்புகிறானென்று சொல்கிறார். சரியென்று சொல்லலாமா?"

காப்டன் ஜோசப் சீற்றத்துடன் குதித்தெழுகிறார். "நார்ட்டனுக்கு இங்கே என்ன வேலை?" பண்டினியும் தலையை அசைத்து முணுமுணுக்கிறான். ஆனால் நான் அவன் வரட்டும் என்கிறேன். குத்துச்சண்டை போடத் தொடங்கிய இந்தப் பதினெட்டு வருட

காலத்தில், ஜெயித்த ஆள் என்னைப் பார்க்க வருவது இதுவே முதல் தடவை.

நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தேன். அன்று இரவு குத்துச் சண்டை முடிந்ததும் நார்ட்டன் ரொம்பப் பளபளப்பாக டிரெஸ் பண்ணிக்கொண்டானாம். உடம்பைப் பிடிக்கும் கறுப்பு பாண்ட்; தாழ வெட்டிய நெருப்புச் சிவப்பான இத்தாலிய ஷர்ட் - மார்பைக் காட்டுவதற்காக அகலத் திறந்தது - இந்த டிரெஸ்ஸில் வெராந்தாவெங்கும் பவனி வந்தானாம். என் தாடையை முறித்துவிட்டது பற்றி ஜம்பமடித்தபடி. புரிகிறது. இருக்கட்டும். ஜெயித்தவன் ஜெயித்த தினத்தை கொண்டாடத்தானே வேண்டும்?

3

"நீ நல்ல குத்துச்சண்டை வீரன்" என்கிறேன் நார்ட்டனிடம். "வெடிகுண்டுகளை வீசத் தெரிகிறது உனக்கு. ஹெவி வெயிட் டைட்டிலை ஜெயித்தாயானால் எல்லாருக்கும் செமர்த்தியாய்க் கொடு. நழுவாதே. ஒளியாதே."

நார்ட்டன் என் பயிற்சி முகாமுக்கு ஏற்கெனவே வந்திருக்கிறான். எனக்காகப் பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்ட கனமான குத்துப் பையைப் பார்த்து வியந்திருக்கிறான். அதைப் பற்றி இப்போது பேச்சு வரும்போது, "அதைக் குத்த எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்கிறான்.

"அதை என் பரிசாக எடுத்துக்கொள்" என்கிறேன். அதை உடனடியாக நார்ட்டனிடம் சேர்ப்பிக்குமாறு உத்தர விடுகிறேன். நான் அதை நார்ட்டனுக்குக் கொடுப்பதை என் முகாமில் அத்தனை பேரும் எதிர்க்கப் போகிறார்கள். இருந்தாலும் நான் வற்புறுத்துகிறேன்.

அவர்கள் புறப்படுமுன், என்னையும் நார்ட்டனையும் சேர்த்து ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும் என்று அவனது மானேஜர் ஆசைப்படுகிறார். "என் குடும்ப ஆல்பத்துக்காக, என் குழந்தைகளுக்காக."

"படம் கிடம் எதுவும் வேண்டாம்," என்று பண்டினி முணுமுணுக்கிறான். ஆனால் எனக்கு ஆட்சேபமில்லை. நார்ட்டன் என் தலைமாட்டில் உட்கார்ந்து போஸ் கொடுக்கிறான்.

அந்தப் படங்கள் எந்தக் 'குடும்ப ஆல்பத்துக்காகவும் இல்லை என்று

பின்னர் நான் தெரிந்து கொள்கிறேன். 'தற்செயலாக' அவர்கள் ஒரு புகைப்படக்காரரை அழைத்து வந்திருக்கிறார்கள். உலகமெங்குமுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் அந்தப் படம் வெளியாகுமாறு ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். ஜெயித்தவனும் தோற்றவனும். முகம்மது அலியின் தாடையை உடைத்தவன், தோற்றவனின் பக்கத்தில் நிற்பதைக் காணலாம்.

நான் தீர்மானம் செய்து கொள்கிறேன்: என்ன நேர்ந்தாலும் சரி. ஒரு பைசா வரும்படி இல்லாமல் இனாமாகக் குத்துச் சண்டை செய்வதாக இருந்தாலும் சரி, பதிலுக்குப் பதில் கொடுக்கப் போகிறேன்.

காலையில் எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. உலக ஹெவி வெயிட் சாம்பியனான ஜார்ஜ் ஃபோர்மனின் மானேஜர் ஸாட்லர் வருகிறார்.

"என்ன விஷயம்?" என்கிறேன்.

"உன் தாடை பழையபடி சரியானதும் வேறு யாருடனும் சண்டை செய்ய ஒத்துக் கொள்ளாதே. ஃபோர்மனுக்காகக் காத்திரு. அவனுடன் நீ சண்டை செய்வதைப் பார்ப்பதற்காக உலகம் இப்போதும் கூட ஐம்பது லட்சம் கொடுக்கும். குஷாலாய்ச் செலவழிப்போம்."

"நான் அடுத்தாற் போல் நார்ட்டனுடன் தான் சண்டை செய்யப் போகிறேன்."

"பாழாய்ப் போச்சு. ஐம்பது லட்சம் டாலர்! இன்னும் கூடக் கொடுப்பார்கள். இன்னும் அதிகமாய் வேணுமா?"

நான் தலையை அசைக்கிறேன். "நார்ட்டனுடன் நான் மறுசண்டை

செய்ய வேண்டும்."

"இதோ பார்," என்கிறார் ஸாட்லர். "நான் உன் நண்பன்"

படுக்கைக்கு நெருக்கமாக அவர் வருகிறார். பேசினால் எனக்கு வலிக்கிறதெனினும் நான் சொல்ல வேண்டியதொன்று இருக்கிறது. "ப்ளீஸ். நீங்கள் என் நண்பனென்றால், நார்ட்டனுடன் ஃபோர்மன் சண்டை செய்யுமுன் நான் மறுபடி நார்ட்டனுடன் சண்டை செய்ய ஏற்பாடு பண்ணுங்கள். அடுத்து நார்ட்டனுடன் சண்டை செய்வது ஃபோர்மனின் முறை என்று எனக்குத் தெரியும். எனக்கு ஒரே ஒரு சான்ஸ் கொடுங்கள். வேறெதுவும் எனக்கு வேண்டாம். இதுதான் வேண்டும்." என் தொண்டை கொதிப்படைந்திருக்கிறது. என் தலை வலித்துக் கொண்டிருக்கிறது.

"பணத்துக்காகத் தானே பாக்ஸிங் செய்வது? பழிக்குப் பழி வாங்குவதற்காக அல்ல," என்கிறார் ஸாட்லர். "நார்ட்டன் போன்ற ஒரு மடையனுக்கு எதற்காக இரண்டாவது சான்ஸ் கொடுக்கிறாய்? நான் சொல்வதைக் கேள். இன்றைக்கும் சரி, ஐம்பது லட்சம் டாலர் வசூலிக்கக்கூடிய குத்துச் சண்டைக்காரன் நீ ஒருவன்தான்."

"பணத்துக்காக இல்லை," என்கிறேன். "உங்களுக்குத் தெரியும், இது பணத்துக்காக இல்லையென்று. ஃபோர்மன் நார்ட்டனுடன் சண்டை செய்வதற்கு முன்னால் நான் அவனுடன் மறுபடி மோத வேண்டும்."

ஸாட்லர் தன் தட்டையான மூக்கை என் மூக்குக்கு நேரே நீட்டுகிறார். எனக்கு அவர் மனம் புரிகிறது. நார்ட்டன் என்னை இரண்டாம் முறையும் வீழ்த்தி விடுவான் என்றும், அப்புறம் பணம் மொத்தமும் சாக்கடையில் போன மாதிரிதான் என்றும்

நினைக்கிறார்.

"பணத்தைப் பற்றினது அல்ல. நான் பல்லைக் கடித்துக் கொண்டு சொல்கிறேன். "இது என் சொந்த விஷயம்." ஸாட்லர் எந்த நிமிடத்திலும் மாடிஸன் ஸ்கொயர் கார்டனுக்குச் சென்று ஃபோர்மன் - நார்ட்டன் சண்டையின் மூலம் பத்து லட்சம் பணம் பண்ண முடியும் என்பது எனக்குத் தெரியும். குறிப்பாக, நார்ட்டன் என்னை இந்த அடி அடித்த பிறகு அது சாத்தியமே.

மெதுவாக ஸாட்லர் முடிவுக்கு வருகிறார். "சரி. நீ விரும்புவது அதுதானென்றால் ஆல்ரைட். அடுத்து நீ நார்ட்டனுடன் சண்டை செய்கிறாய். நீ நார்ட்டனை விடத் திறமைசாலி என்று எனக்குத் தெரியும். ஆனால் ஸ்டைல்தான் முக்கியம். உனக்குத் தலைவலி தரக்கூடிய ஸ்டைல் அவனிடம் இருக்கிறது. ஆனால் அது ஃபோர்மனிடம் ஒன்றும் நடக்காது. பூச்சி நசுக்குகிற மாதிரி நார்ட்டனை நசுக்கி விடுவான். ஆனால் நீயும் அவனை அடித்து விடுவாய் என்று நம்புகிறேன்."

"நான் ரெடியாக இன்னும் எத்தனை காலமாகும் என்று நினைக்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்கிறேன். அவர் குத்துச் சண்டைக்காரராக இருந்திருக்கிறார்; மானேஜராக இருந்திருக்கிறார்; டிரெய்னராக இருந்திருக்கிறார். குத்துச் சண்டைக்காரரின் உடலைப்பற்றி, டாக்டர்களைக் காட்டிலும் நன்றாக அவருக்குத் தெரியும். நூற்றுக்கணக்கான குத்துச் சண்டைக்காரர்களை அவர் பார்த்திருக்கிறார். வீழ்த்தப்பட்டவர்களை, எலும்பு முறிந்தவர்களை, மண்டை பிளந்தவர்களை, காது கிழிந்தவர்களை, மூக்கு நசுங்கியவர்களை, பற்கள் உடைந்தவர்களை, கண் வெட்டுப்பட்டவர்களை, குத்துச் சண்டைக்காரர்களுக்கே உரிய முறையில், காயங்கள் ஆற எத்தனை

காலமாகும் என அவருக்குத் தெரியும்.

தன் சிறிய ஜாக்கிக் குல்லாயைத் திரும்பத் தலையில் மாட்டிக் கொண்டு கூரையைப் பார்த்தபடி விடைக்காக யோசிக்கிறார் ஸாட்லர். "நூ அமைதியாக இருந்தால், வாயை ரொம்பவும் அசைத்துக் கொள்ளாமல் இருந்தால், மூன்று மாசத்தில் குணமேற்பட்டு விடும். அல்லது நாலு மாசமாகலாம். இங்கிருந்து புறப்பட்டதும் நேரே வீட்டுக்குப் போ. ஒய்வெடுத்துக் கொள். அதுதான் மிகச் சிறந்த மருந்து. பத்திரிகைகள், விளையாட்டு அரங்கங்கள், குத்துச்சண்டை சமாசாரங்கள் இவை எல்லாவற்றையும் துப்புரவாய் விட்டு விட்டு நீண்ட நாளைக்கு ரெஸ்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். உனக்குத் தோன்றுகிற இடத்துக்குப் போ. சொந்த ஊரான லூயிவில்லுக்குப் போ."

சொல்லிவிட்டு, தன் ஜாக்கிக் குல்லாயை விருட்டென்று கழற்றிக் கொண்டு, நர்ஸ்களுக்கு, எனக்கு, என் உதவியாளர்களுக்குத் தாழ்ந்து வணக்கம் தெரிவித்துவிட்டு, வெளியேறுகிறார்.

பெலிண்டாவுக்கு எப்படி இருக்கிறது என்று அடிக்கடி எனக்குத் தகவல் வந்து கொண்டேயிருக்கிறது. தள்ளாடாமல் நிற்க முடிந்தவுடனே நான் படுக்கையிலிருந்து எழுந்து கொள்கிறேன். என் உடைகளை அணிந்து கொள்கிறேன். டிரெஸ் செய்து கொண்டிருக்கும் போது டாக்டர் உள்ளே வருகிறார். நான் அமைதியாகப் படுத்திருக்க வேண்டும் என்று எனக்கும் என் உதவியாளர்களுக்கும் ஞாபகப்படுத்துகிறார். அவர்கள் என் உடைகளைப் பறிக்கிறார்கள். நான் நிர்வாணமாகவே வெளியே நடக்கத் தொடங்கியதும் மனசை மாற்றிக் கொண்டு உடையணிந்து கொள்ள அனுமதிக்கிறார்கள்.

கில்ராய் என்னை ஆஸ்பத்திரிக்கு ஓட்டிச் செல்கிறான். எலிவேட்டர் மூலம் பெலிண்டாவின் அறையை அடைகிறேன். ஒரு நர்ஸ் கதவைத் திறந்து, "விஸிட்டர்கள் யாரும் பார்க்க அனுமதி கிடையாது. யார் நீங்கள்?" என்கிறாள்.

என் பற்களை இணைத்திருக்கும் கம்பிகள் தெரியுமாறு வாயைத் திறக்கிறேன். "நானா? ட்ராகூலா - ரத்தக் காட்டேரி."

பின்னர் அவள் என்னை அடையாளம் கண்டு கொள்கிறாள். அறைக்குள் நுழைகிறேன். பெலிண்டா துண்டுக் காகிதத்தில் குறிப்புகள் எழுதிக் கொண்டிருக்கிறாள் அவளைப் பார்ப்பதற்காகப் பறந்து வந்திருக்கும் அவள் அம்மாவிடமும் தங்கையிடமும் கொடுத்தவாறிருக்கிறாள்.

"பேச இஷ்டப்படுகிறாளோ இல்லையோ," என்று என் மைத்துனி சொன்னாலும், என்னை ஊக்குவிக்கும் வகையில் பார்க்கிறாள். அவள் குடும்பத்தில் நான் நுழைந்த நாள் தொட்டு என்னுடைய பலமான ஆதரவாளியாக இருந்து வந்திருக்கிறாள்.

ஆஸ்பத்திரியில் பெலிண்டாவை அனுமதித்தபோது, என்ன நடந்தது என்று அவள் தோழி என்னிடம் தெரிவித்த விஷயம் ஞாபகம் வருகிறது. "அவளுக்கு ஒரு சின்ன அறையைத் தரும்படி நான் சொல்லியிருந்தேன். அவளுக்கு ஆத்திரமூட்டக் கூடிய எதுவும் அங்கே இருந்தால் அப்புறப்படுத்தி விடும்படி சொன்னேன். ஆனால் உள்ளே நுழைந்ததும் பார்த்தால், ஒரு பெரிய சிலுவை இருக்கிறது. அதை அகற்றும் வரையில் பெலிண்டா கூச்சலான கூச்சல் போட்டாள்."

ஹெர்பர்ட், பெலிண்டா அமைதியடையும் வரை இரண்டு

ராத்திரிகளாக பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இரண்டு முறை அவளுக்கு மூச்சு நின்றுவிட்டது. முதல் தடவை அவள் மார்பிலே அடித்து மூச்சு வரும்படி செய்தார்கள். ஆனால் இரண்டாம் முறை 'ரெஸ்பிரேட்டர் யூனிட்' வரவழைக்கும்படி ஆகிவிட்டது. ஒரு மணிநேரம் வேலை செய்த பிறகுதான் தானாக அவளுக்குச் சுவாசம் வந்தது. அரை குறையாக நினைவு திரும்பிய போதெல்லாம் கண்ணைத் திறந்து, "சண்டையில் யார் ஜெயித்தார்கள்?" என்று கேட்கிறாள். முதலில் டாக்டர்களும் நர்சுகளும் அவளைக் குஷிப்படுத்துவதற்காக, "முகமது ஜெயித்தார். உன் கணவன் ஜெயித்தார்" என்று பதிலளித்தார்கள். ஆனால் அதிலே நிலைமை இன்னும் மோசமாகத்தான் ஆயிற்று. மறுபடியும் கூச்சலிடத் தொடங்கிவிட்டாள் "இல்லை! அலி செத்துப் போய்விட்டார்! முகமது அலி இறந்துவிட்டார்!" ஏதோ ஒன்று நேர்ந்து சரேலென அவள் விடுபட்டாலொழிய இந்தத் துன்பம் சரிப்படுத்த முடியாத அளவுக்கு ஆழமாக இறங்கிவிடுமோ என்று ஹெர்பர்ட் பயந்திருக்கிறான். இறுதியில் தன் தந்தை மேன்மை தங்கிய எலிஜா முகம்மதுக்கு டெலிபோன் செய்து நிலைமைகளைச் சொல்கிறான். அவர் பெலிண்டாவை டெலிபோனில் கூப்பிட்டு அவருக்கே உரிய முறையில், ஆறுதல் கூறி உறுதி சொல்கிறார். 'அவருடைய குரல், நான் எதற்காக உயிர் வாழ்கிறேன் என்பதை நான் ஞாபகம் கொள்ளும்படி செய்தது' என்று பிற்பாடு ஒருநாள் பெலிண்டா இதைப்பற்றி நினைவு கூர்வாள்: 'என் கணவரும் குழந்தைகளும் எனக்குத் தெளிவாகத் தெரியத் தொடங்கினர். -- பின்னர் நீங்கள் அறைக்குள் வருவதைக் கண்டேன்.'

நான் அவளைப் பார்த்தவாறே நிற்கிறேன். ஒன்று உணர்கிறேன்; ஒரு குத்துச் சண்டைக்காரன் அடிவாங்கும் போது அவனிடம் நம்பிக்கை வைத்திருக்கும் அத்தனை பேரும் அடி வாங்குகிறார்கள் -

அவனுடைய குடும்பம், அவனுடைய நண்பர்கள், அவனுடைய குழந்தைகள், நண்பர்கள், அவனுக்கு ஜே போட்டு உற்சாகமூட்டும் ஜனங்கள், அவனிடம் அன்பும் நம்பிக்கையும் பெருமையும் காட்டுகிறவர்கள் - அத்தனை பேரும் அடி வாங்குகிறார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில், எந்தக் குத்துச் சண்டைக்காரனும் தோல்வியடையும்போது தன்னைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தானானால் அப்புறம் பிழைக்கவே மாட்டான் என்று தெரியும். நான் ஒரு குத்துச் சண்டையை ஏற்றுக் கொள்ளும்போது அதன் விளைவுகளையும் ஏற்றுக் கொள்கிறேன். வெற்றி எனக்கே கிடைக்கும் படி என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்வேன். ஆனால் தோற்றுவிட்டேனானால், அந்தத் தோல்வி எத்தனை இழிவானதாயிருந்தாலும் சரி, நான் மீண்டும் எழுந்தாக வேண்டும்; கோதாவில் குதித்தாக வேண்டும்.

அவள் இன்னும் என்னைக் கொஞ்சமும் கவனிக்கவில்லையென்றாலும், நான் குனிந்து சொல்கிறேன்: "அழகுப் பெண்ணே! நான் செத்துப் போகவில்லை. என்னை அவர்களால் கொல்ல முடியாது. உனக்குத் தெரியாதா? முகமது அலியை அவர்களால் சாகடிக்க முடியாது, பேபி. நான் உனக்குச் சொல்லியிருக்கிறேனே? காதில் விழுகிறதைப் பற்றிக் கவலைப்படாதே. அவர்கள் சொல்வதைப் பொருட்படுத்தாதே. நான் சாக மாட்டேன். நான் திரும்பி எழுந்து அரங்கத்துக்குப் போவேன்," என்கிறேன்.

அவள் கண்கள் என்பால் திரும்புவதைக் கவனிக்கிறேன். அவளைக் கைகளால் அணைத்துக் கொள்கிறேன்.

4

பெலிண்டாவை அணைத்துக் கொண்டு சொன்னேன்: "இன்னும் சில தினங்களில் நாம் ஊர் திரும்புவோம். நீ தயார்தானே?"

அவள் என்னை ஏறிட்டுப் பார்க்கிறாள். நான் புன்னகை செய்கிறேன். என் வாயையே அவள் வெறித்து நோக்கிக் கொண்டிருக்கிறாள். பிறகுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. என் தாடை முறிந்தது பற்றி அவளிடம் யாரும் சொல்லவில்லை. ஒரு நிமிடம் என் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொள்கிறேன். அவளிடம் என்ன மாறுதல் ஏற்படுகிறது பார்க்கலாமென்று பின்னர் பற்களை இளித்துக் காட்டிவிட்டுச் சொல்கிறேன். "சினிமாவிலே ட்ராகுலா இப்படித்தான் முத்தமிடுகிறது." கவிந்து அவள் கழுத்தில் முத்தமிடுகிறேன்.

பல வாரங்களுக்குப் பின்னால், பெலிண்டா சொல்வாள்: "அனேகமாய் அவர் சண்டை போடுவதைப் பார்க்க இன்னொரு முறை நான் போகவே மாட்டேன் ஏனென்றால் அவரோடு என்னை ரொம்ப ஒன்றிக் கொண்டு விடுகிறேன். அவர் மீது அடி விழும்போது அது என் வயிற்றிலே விழுந்த மாதிரி இருக்கிறது. அத்தனை அடிகளையும் நானே உணர முடிகிறது. அவர் களைப்படையும்போது அவருடைய கையின் ஓட்டத்தையும் அவருடைய களைப்பையும் நான் உணர்கிறேன். அவர் மீது அடிகள் விழும்போது எனக்கும் களைப்பு ஏற்படுகிறது; என் இருக்கையை நோக்கி வந்து என்னையே அடிக்கிற மாதிரி இருக்கிறது. அவர் ஓர் குத்து விடும்போது அவருடைய கைக்கு ஏற்படுகிற வலியை என்னால் உணர முடிகிறது. வலிமில்லாமல் இருக்கும் என் கைகளை அவர் உபயோகித்துக் கொள்ளக் கூடாதா என்று ஆசைப்படுகிறேன். ஒரு குறிப்பிட்ட

முறையில் மெதுவாக அவர் குத்தினாரானால், அவருடைய கைகளில் வலி இருப்பதால்தான் அப்படிச் செய்கிறார் என்று எனக்குத் தெரிகிறது. நாமே மேடைக்குச் சென்று அவருக்குப் பர்த்தியாகக் குத்தக் கூடாதா என்று எண்ணிக் கொள்கிறேன். ஊகூம். அவருடைய குத்துச் சண்டைகளுக்கு அனேகமாய் நான் போகவே மாட்டேன்"

ஆனால் அவள் போவாள். அவளுக்கு அடிகள் விழாமல் தடுக்க நான் உதவுவேன். நார்ட்டனுடன் நான் மறுபடி குத்துச் சண்டை செய்யும்போது, எனக்கு வெற்றி நிச்சயம் என்று நிச்சயமாய் அறிந்தவள் போல அமைதியும் நம்பிக்கையுமாய் அவள் இருப்பாள். அதைத் தொடர்ந்து வரும் குத்துச் சண்டைகளில் அவள் என் பக்கத்தில் இருப்பாள். எனக்கு உற்சாகமூட்டியவண்ணம்.

"நான் வீழ்த்தப்படவில்லை," அவளிடம் கிசுகிசுக்கிறேன். "எனக்கு இது பாடம். அல்லாவின் கட்டளைகளுக்கு நான் கீழ்ப்படியாமல் இருந்தேன். ஆகையால் ஒரு சிறு தண்டனை கொடுத்தார். நான் சரியாகப் பயிற்சி செய்து கொள்ளவில்லை. ராத்திரி பூரா ஆட்டம் போட்டேன். குத்துச் சண்டை சீரியஸான விஷயம், அபாயமான விஷயம். அதை நான் லேசாக நினைத்தேன். அல்லா என்னை எழுப்பினார். என் தூய பணி என்ன என்பதை ஞாபகப்படுத்த விரும்பினார். நான் ஆற்ற வேண்டிய பணிகளை மறந்திருந்தேன். அல்லா நினைவூட்டி விட்டார். எனக்கு இதைக் காட்டிலும் நல்லது நடக்க முடியுமா?"

"என்னை யாராலும் வீழ்த்த முடியாதென்று நினைத்தேன். ஜெயிக்க வேண்டுமென்றால் நான் கஷ்டப்பட்டு உழைக்கணும், சிரமப்பட்டுப் பயிற்சி பெறணும். கட்டுப்பாடு ஒழுங்குடன் இருக்கணும். என்னையே அர்ப்பணம் செய்து கொள்ளணும்.

அதெல்லாம் நான் தேவையில்லையென்று எண்ணி விட்டேன். வரிசையாகத் தோற்றுக் கொண்டே போனால் எப்படி ஒரு குத்துச் சண்டைக்காரன் பாழாவானோ அது போலவே தான் வரிசையாக வெற்றிகள் சல்லிசாய்க் கிடைத்தாலும் பாழாவான். அது இப்போது எனக்குப் புரிகிறது. ஜிம்மி எல்லிஸைச் சுலபமாய் வீழ்த்தி விட்டேன். பஸ்டர்மத்திஸ், சரளமாய்; ஸ்விட்ஜர்லந்தில் ஜர்ஜன் ப்ளின், டோக்யோவில் மக் ஃபாஸ்டர், கனடாவில் ஜார்ஜ் சுவாலா, அயர்லாந்தின் ப்ளு லூயிஸ், பாப் ஃபாஸ்டர் - எல்லோரையும் சுளுவாய் அடித்தேன்: அவ்வளவு நீண்ட காலம், அத்தனை சண்டைகளில் வெற்றி பெற்றால் யாருக்கும் நினைவு பிசகிவிடும்: தன் பெயரொன்றே வெற்றியைத் தந்துவிடும் என்று எண்ணத் தோன்றும். ஜெயிப்பதிலே உள்ள பாடு, தியாகங்கள் மறந்துவிடும். இப்போது நான் கீழே விழுந்து விட்டேன் - ரொம்பக் கீழே. என் கதை தீர்ந்து விட்டதென்று சொல்கிறார்கள். விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இல்லை, நான் திரும்பி வருவேன். போராடி என் டைட்டிலைத் திரும்ப அடைவேன். அழகுப் பெண்ணே, கவலைப்படாதே. முகம்மது அலி சாகவில்லை. யாராலும் என்னைச் சாகடிக்க முடியாது.

"நாம் லூயிவில்லுக்குத் திரும்பிச் செல்லப் போகிறோம் கொஞ்ச நாள் ஊரிலே போய் இருக்க விரும்புகிறேன். என் பழைய திசைகாட்டிக் கருவியைத் தேடிக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். நான் யார் என்பதையும் எங்கிருந்து வந்தேன் என்பதையும் எங்கே போகிறேன் என்பதையும் இப்போதுள்ள இடத்துக்கு எப்படி வந்தேன் என்பதையும் கண்டறிய விரும்புகிறேன். நாம் லூயிவில்லுக்குத் திரும்பிச் செல்வோம். தங்கப் பதக்கத்தை எங்கே விட்டேனோ அங்கிருந்து ஆரம்பிக்கிறேன். பிறகு திரும்பி வந்து, அத்தனை பேருக்கும் மறுபடி சாட்டையடி கொடுக்கிறேன்."

இத்தனை நேரமும் மேஜை மூதிருந்த காகிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் இப்போது மெல்லத் தலையை உயர்த்தினாள். என்னை அடையாளம் கண்டு கொண்ட உணர்வு அவள் கண்களில் தெரிகிறது. வெகு சமூபத்தில்தான் அவளுக்கு இருபத்திரண்டாவது பிறந்த நாள் வந்தது. இப்போது மேலும் இளமையாகக் காட்சி தருகிறாள். என்னை இறுகக் கட்டிக் கொள்கிறாள்.

இறுதியில் டாக்டர்கள் என்னைக் கடைசி முறையாகப் பரிசோதனை செய்கிறார்கள். லண்டனைச் சேர்ந்த டாக்டர் மைக்கேல் ஜி. கில்ட்டியும் என் தாடைக்குக் கம்பிகள் போட்ட பிளாஸ்டிக் சர்ஜன் டாக்டர் லங்காஸ்டரும் எக்ஸ்ரேக்களைப் பார்க்கிறார்கள்.

"எப்படி இருக்கிறது உங்களுக்கு?" என்று ஒரு ஹவுஸ் சர்ஜன் கேட்கிறார்.

"என் தாடை. எப்போதும் இப்படி மரத்துப் போன மாதிரியேதான் இருக்குமா?" என்கிறேன்.

டாக்டர் லங்காஸ்டர் எக்ஸ்ரேயை எடுத்துக் காட்டி - முறிவைச் சுட்டுகிறார். "இங்கே எலும்பு வழியே ஒரு நரம்பு போகிறது. அது துண்டித்திருக்கிறது. அந்த நரம்பு இணைந்தாலொழிய, அது குணமானாலொழிய, அந்தப் பகுதியில் எப்போதும் மரத்தாற் போல் தான் இருக்கும்."

"இன்னும் எத்தனை நாளைக்கு என் சாப்பாட்டைக் குழாய் மூலம் சாப்பிட வேண்டியிருக்கும்?"

"மூன்று வார காலமாகலாம். சொல்லுவது கஷ்டம். பிலடெல்பியாவுக்குப் போனதும் சென்டர் ஹில் ஆஸ்பத்திரியில்

டாக்டர் லெஸ்ட்டர் கிரேமரைப் பாருங்கள். அவர் உங்களைக் கவனிப்பார்.

"முக்கியமான விஷயம், தாடைக்கு ஸ்ட்ரெயின் எதுவும் கூடாது. கம்பிகள் கெட்டியாய் இருக்கும்படி அவ்வப்போது டாக்டர் கிரேமர் சரி செய்வார். சரியாய் ஆறி வருகிறதா என்று எக்ஸ்ரேக்கள் எடுத்துப் பார்ப்பார். நல்லபடி குணமாகி விட்டால் பழையபடி வலுவாக முன்னெப்போதையும் காட்டிலும் வலுவாக ஆகிவிடும். அந்த இரண்டு உடைந்த பல்லுக்கும் வேறு பல் வைத்துக் கட்டும்போது உங்களுக்குப் பொருத்தமான வேறொரு மவுத்வாஸ் தேவையாயிருக்கும். முன்பே அதை மாற்றியிருந்தால் அனேகமாய் உங்கள் தாடை முறிந்து கூட இருந்திராது."

"எப்படி இருக்கிறது?" டாக்டர் கில்ட்டி அறிய விரும்புகிறார்.

"லாக்ஜா ஏற்பட்டவன் மாதிரி இருக்கிறது" என்றேன்.

"லாக்ஜா ஏற்படுகிறவர்களின் சமாசாரமே வேறே." என்கிறார் டாக்டர். "அனேகமாய்ப் பாதிப் பேர் இறந்து விடுவார்கள். நீங்கள் முன்னெப்போதையும் விட நன்றாக ஆகிவிடுவீர்கள். பிறகு என் எக்ஸ்ரே படத்தில் ஆட்டோ கிராப் செய்து தரும்படி கேட்கிறார். "அங்கே லண்டனில் சில டாக்டர்கள் இருக்கிறார்கள் - அலிக்காவது தாடை உடைவதாவது என்று நம்ப மறுக்கிறார்கள். நீங்களும் மனிதர்தான் என்பதை அவர்களுக்குக் காட்ட ஒரு ருசு வேண்டும்."

ஆஸ்பத்திரியை விட்டுப் புறப்பட நான் தயாரானபோது நர்ஸ்கள் ஒரு குவியல் தபால்களைக் கொண்டு வந்து தருகிறார்கள். ஒரு செய்தி எல்லாவற்றையும் மிஞ்சி நிற்கிறது; எனக்கு விலாசமிடப்பட்டு, ஒரு

பழுப்பு நிறப் பையின் பின் புறத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"பட்டாம்பூச்சிக்குச் சிறகு பிய்ந்துவிட்டது!

தேனீக்குக் கொடுக்கு அறுந்துவிட்டது!

அடே ஓட்டை வாய் பீற்றல்காரனே! உன் கதை முடிந்தது. என்றென்றும் திறக்க முடியாதபடி உன் வாய் அடைத்தாகி விட்டது. அமெரிக்காவுக்கு இது பொன்னான நாள். நீ தீர்ந்தாய்."

தர்ம சங்கடத்துடன் நிற்கும் நர்ஸ்களுக்கு அதை உரக்கப் படித்துக் காட்டினேன். அதிலே கவிதை மாதிரி ஏதோவொன்று எனக்குப் பிடித்திருக்கிறது. அதைத் திரும்பப் படிக்கிறேன்.

பட்டாம்பூச்சிக்குச் சிறகு பிய்ந்துவிட்டது! தேனீக்குக் கொடுக்கு அறுந்துவிட்டது!

பிற்பாடு உடற்பயிற்சி சாலையின் சுவரில் அதை ஒட்டி வைக்கிறேன். பட்டாம்பூச்சிக்குச் சிறகு திரும்ப வந்தாக வேண்டும் என்பதும், தேனீக்குக் கொடுக்கு திரும்பக் கிட்டியாக வேண்டும் என்பதும், பயிற்சி பெறுகிற ஒவ்வொரு நாளும் எனக்கு ஞாபகம் இருக்க வேண்டுமல்லவா! க்ளோர் மான்ட் ஆஸ்பத்திரியில் நான் இருந்த காலத்தில் வந்த கடிதங்களுக்குள் இதுதான் எனக்கு மிகவும் பிடித்தது. வேடிக்கை தான். என்னை யார் ரொம்ப வெறுக்கிறார்களோ அவர்கள்தான் சில சமயங்களில் என்னை மிகவும் உற்சாகம் கொள்ளச் செய்கிறார்கள். அவர்கள் என்னை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு இருக்கிற வரையில் கவலையில்லை.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுமுன் பண்டினி என்னைக் காண

வருகிறான். ஒரு பெரிய ஷாப்பிங் பையுடன் அவன் வந்து என் காலடியில் கொட்டுகிறான்.

"என்ன இது" என்கிறேன்.

"பொத்தான்கள் - உங்கள் பொத்தான்கள்."

ஒன்றைப் பொறுக்கி எடுக்கிறேன். 'மக்கள் சாம்பியன்' என்று பெரிய கறுப்பு எழுத்துக்கள் கூறுகின்றன.

"ஜார்ஜ் ஃபோர்மனுடன் இருக்கிறானே பெரிய மோ என்று போட்டோகிராபர்? மலிவாய்த் தருகிறேன், வாங்கிக் கொள்ளுகிறாயா?" என்று என்னைக் கேட்டான். பாதி விலைக்குக் கொடுத்தான். ஏன் அவ்வளவு மலிவாய் விற்கிறாய் என்று கேட்டேன். 'இனிமேல் யார் இதை வாங்குவார்கள்? உங்கள் கதைதான் முடிந்துவிட்டதே' என்றான். நம் கதை முடிந்துவிட்டதாம்! நினைத்துக் கொண்டிருக்கிறான்! நிஜமாகவே நினைக்கிறான் நம் கதை முடிந்துவிட்டதென்று!"

பண்டினி விழுந்து விழுந்து சிரிக்கிறான். இனி முன்னெப்போதையும் காட்டிலும் கடினமாக நான் பயிற்சி செய்வேன் என்று அவனுக்குத் தெரியும். பெரிய மோவுக்கும் சரி, என் மீது சந்தேகம் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் சரி, என்னைத் தூக்கிக்கட்ட முடியாது என்று காட்டியாக வேண்டும்."

என் வாழ்வின் மிக முக்கியமான குத்துச் சண்டையைச் செய்து முடித்திருக்கிறேன். உலக ஹெவி வெயிட் டைட்டிலை நான் திரும்பப் பெற ஏதோவொரு வகையில் அது உதவப் போகிறது என்பதை என்னால் உணர முடிந்தது. இந்தச் சண்டை மிக அபாயமானதாக இருந்திருக்கிறது. இது என்னை ஒரேயடியாக ஒழித்திருக்கவும்

கூடும். முன்னெல்லாம் நான் புறத்தே பார்த்தேன், புறத்தே பேசினேன், புறத்தே சிந்தித்தேன். என்னை நானே உள்நோக்காகப் பார்க்க வைத்திருக்கிறது இந்தச் சண்டை. ஃபிரேஸியரிடம் தோற்றபோது அதை நான் தோல்வியாகக் கருதவில்லை. அவனுக்கு மேல் நான் பாயிண்ட் எடுத்திருந்தேனென்றும், எனக்கு சாதகமாகத் தீர்ப்பு தரப்பட்டிருக்க வேண்டுமென்றும் உணர்ந்து கொண்டிருந்தேன். ஆனால் நார்ட்டனுடன் போட்ட குத்துச் சண்டை - தான் தோற்றாகிவிட்டது என்பதை ஒரு குத்துச் சண்டைக்காரன் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ள, உடைந்த தாடை ஒன்று போதுமே! நீள நெடுகக் கிடைக்கும் வெற்றிகள் ஒரு குத்துச் சண்டை வீரனின் யதார்த்த உணர்வை அழித்து விட முடியும் என்பதை எனக்கு இந்தச் சண்டை காட்டியது. ஜார்ஜ் ஃபோர்மனுடன் சண்டை செய்யும்போது இந்தப் பாடத்தை ஞாபகம் வைத்துக் கொள்வேன்.

அதிகப்படியாய்த் தீனி தின்றுவிட்ட சிங்கத்தைப் போல், வெற்றிகளினால் கொழுத்து, அதிகப்படி நம்பிக்கையுடன் இருக்கிறேன். என் பழைய பசி உணர்வு திரும்பியிருக்கிறது. இனிமேல் உலக ஹெவி வெயிட் டைட்டில் ஒன்றுதான் என் பசியைத் தணிக்க முடியும். ஃபோர்மனை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

லூயிவில்லுக்கு இன்னும் பத்து மைல்... வண்டியை அனேகமாய் முழு ஸ்பீடில் ஓட்டி வந்திருக்கிறேன். ராத்திரி பூரா, மைலுக்குப் பின் மைலாக, குத்துச் சண்டையை பற்றியே நினைத்தபடி, உள்ளுணர்வினாலேயே சாலையைக் கவனித்து ஓட்டி வந்திருக்கிறேன். நிமிர்ந்து பார்க்கையில் விடிகாலை வந்துவிட்டது. ஒஹையோ ஆற்றங்கரைக்கு வந்திருக்கிறேன். பாலத்தைத் தாண்டினால் லூயிவில். என் மகளும் பெலிண்டாவும் ஹெரால்டும்

கில்ராயும் - என் கோஷ்டியைச் சேர்ந்த அனைவரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். பாலத்தின் நடுவே நான் வண்டியை நிறுத்துகிறேன். வெளியே இறங்கி ஓரத்துக்குப் போகிறேன்.

பதின்மூன்று வருடமாகிறது, என் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்துடன் இங்கேதான் கடைசியாக நின்று, அன்று என் வாழ்க்கையில் திருப்பு முனை: தொடக்க முனையும் அதுதான்.

5

லூயிவில் திசையிலிருந்து ஒரு டிரக் வருகிறது. ஓட்டி வந்தவர், வண்டியை நிறுத்திக் கூவுகிறார்: "யாரது காஸியஸா?" போலீஸ் யூனிபாரம் அணிந்த வயோதிக வெள்ளைக்காரர் ஒருவர் டிரக்கிலிருந்து இறங்கி வருகிறார். வயதில் இளைய இன்னொருவன் - அவர் மகன் போலிருப்பவன் - பின்தொடர்ந்து வருகிறான்.

"யாரது, காஸியஸ் க்ளேயா?" - அந்தக் குரல் பழக்கமானதாகத் தோன்றுகிறது. (காஸியஸ் க்ளே, எனது முன்னாள் பெயர்.) சட்டென்று அடையாளம் தெரிகிறது - நான் சின்னப் பையனாயிருந்த போது நீக்ரோக்கள் வாழும் பகுதியில் ரோந்து பார்த்து வந்த வெள்ளைக்காரப் போலீஸ்காரர் அவர்: ஜான் மேபெர்ரீ என்று பெயர். எங்கள் கும்பலைப் பல முறை தெருவிலிருந்து விரட்டியடித்திருக்கிறார். இருந்தாலும் அவரைப் பார்ப்பதில் மகிழ்ச்சிதான் எனக்கு. அவர் தன்னுடன் வந்த இளையவனின் பக்கம் திரும்பி, "நான் சொல்லவில்லை, காஸியஸ் க்ளேதான் என்று" என்கிறார்.

என் 'அடிமைப் பெயரையே அவர் விடாமல் சொல்வதை நான் வெறுக்கிறேன்.

பையன் சாதுவாக, "இவர் முகம்மது அலி," என்கிறான்.

"காஸியஸ் க்ளே!" பெரியவர் தன் சந்தோஷத்தை ஒளிக்காமல் கூவுகிறார். "கடைசியில் ஒரு வழியாய் உன் தாடை முறிந்ததாக்கும்? டிவியில் நான் பார்த்தேன். உனக்குச் சரியான ஆள் வரத்தான் போகிறான் என்று நான் உனக்குச் சொல்லவில்லை?"

"எப்படி அது நேர்ந்தது?" என்று அவர் மகன் மிருதுவாகக் கேட்கிறான்.

மார்ட்டி மார்ஷலிடம் தாடையை முறித்துக் கொண்ட போது ஸன்னி லிஸ்டன் ஒரு ஜோக் சொன்னாராம். அந்தப் பழைய ஜோக்கை நானும் சொல்கிறேன்: "குத்துச் சண்டை மேடையில் ஒரு கோமாளி வந்தான் இல்லையா? நான் சிரிக்க ஆரம்பித்தேன். வாய் திறந்தபடியே நின்றுவிட்டது"

பையன் புன்னகை செய்கிறான்.

பெரியவர் மேபெர்ரிக்கு அதொன்றும் வேடிக்கையாய்த் தோன்றவில்லை. "ரொம்ப நாளைக்கு முன்பே இப்படி ஆகியிருக்க வேண்டியது. இனி குத்துச் சண்டைக்கு நீ கும்பிடு போட வேண்டியதுதான்."

"இப்போதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன்," என்று பதிலளிக்கிறேன். "என் ஜனங்களைப் பார்ப்பதற்காகத்தான் இப்போது ஊருக்கு வந்திருக்கிறேன்."

"எவ்வளவு நாள் தங்கியிருப்பதாக உத்தேசம்?" என்கிறார்.

"உடம்பு சரியாகிற வரையில். பிறகு டைட்டிலைப் பிடிக்கப் போகிறேன்," என்று பதிலிறுக்கிறேன்.

போக்குவரத்துக்கு நாங்கள் இடைஞ்சலாயிருப்பதால் கார் ஹாரன்கள் ஒலிக்கின்றன. பஸ்ஸில் திரும்ப ஏறிக் கொள்கிறேன். அவர்களைக் கடக்கும்போது மகன் கூவுகிறான்! "லூயிவில்லுக்கு வருக! உங்கள் வரவு நல்வரவாகுக!" ஆனால் பெரியவர், மழை மாதிரி சிலீரென்று பார்வையை என் மீது வீசிவிட்டு, காரைக்

கிளப்பிக் கொண்டு செல்கிறார்.

என் பழைய 'சர்ச்சைக் கிட்டத்தட்டத் தாண்டிச் சென்று விட்டேன் பார்க்காமலே. மவுண்ட்ஸியான் பாப்டிஸ்ட் சர்ச். நான் கிறிஸ்தவனாயிருந்த போது அங்கேதான் ஞானஸ்நானச் சடங்கு செய்தார்கள். அந்தச் சர்ச் இடிந்து சிதிலமாகி விட்டது என்று எண்ணியிருந்தேன். இன்று அதைப் பார்க்கும்போது ஆச்சரியம் சந்தோஷமாக மாறுகிறது. உள்ளே போக விரும்புகிறேன். ஆனால் பெலிண்டா தடுக்கிறாள். கிறிஸ்தவ சர்ச்சுகளுக்குச் செல்லக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருக்கிறாள்.

இருந்தாலும் பஸ்ஸை நிறுத்திவிட்டு, தனியாகவே வாசல்வரை செல்கிறேன். திறந்திருக்கிறது. உள்ளே குழந்தைகள் பாடிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். சின்னக் குழந்தைகள், கையில் பாட்டுப் புத்தகங்களுடன் அட்டென்ஷனில் நின்றபடி பாடுகிறார்கள். அவர்கள் வயதிருந்தபோது நான் பாடிய ஒரு பாட்டு.

நான் குழந்தைகளை நேசிக்கிறவன். அவர்களைப் பார்க்கும்போது ஏதாவது ஒரு வார்த்தை பேசாமல் என்னால் அந்தண்டை நகர முடியாது. வாழ்க்கையை மீண்டுமொரு முறை வாழ ஆரம்பிக்கலாம் என்று நம்மை எண்ணச் செய்பவர்கள் அவர்கள்தான். எனக்குத் தெரிந்ததனைத்தும் அவர்களுக்கு - சிறுவர் சிறுமியர்க்கு - கற்றுத் தர வேண்டுமென விரும்புகிறேன்.

எங்களுக்குப் பையன் பிறப்பதற்கு முன்பு, பெண்தான் பிறக்குமென்று டாக்டர் சொல்லிக் கொண்டேயிருந்தார். பெலிண்டாவுக்குப் பிறந்த முதல் பையன் குறைப் பிரசவமாகப் பிறந்து இறந்து விட்டான். மூன்று பெண் குழந்தைகள் பிறந்து விட்டதால் ஆண் குழந்தை வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுவது

டாக்டருக்குத் தெரியும். நான்காவது பிரசவ சமயம் வந்தபோது, "போய்ப் பிரசவத்தைப் பார்க்கலாம்," என்றார். எனக்கு ஒரு முகமூடியும் ஏப்ரனும் மாட்டி விட்டார்கள். நான் பார்த்துக் கொண்டு நிற்கிறேன், 'இதோ பெண் குழந்தை வருகிறது. இதோ வருகிறான் சின்னக் குட்டி' என்று டாக்டர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். சிசுவின் கீழ்ப் பகுதி வெளியே வந்ததும், அது பையன்தான் என்பதைக் கண்டுகொண்டேன். எனக்கு ஒரே பரபரப்பு; என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"உங்களை மட்டும் அந்தச் சமயத்தில் யாராவது போட்டோ பிடித்திருந்தால் அவருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பேன்," என்று பிற்பாடு பெலிண்டா என்னிடம் சொன்னாள். "ரத்தம் மாதிரி உங்கள் கண் சிவந்து போச்சு. கண்ணீர் கொட்டிற்று."

பிரசவ அறையை விட்டு வெளியேற முயன்றேன். வழி தெரியவில்லை. "எங்கேயும் போகாதீர்கள். இங்கே வந்து பேபியைப் பாருங்கள்," என்று என் கையை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு மெதுவாய்ச் சொன்னார் டாக்டர். கொஞ்ச நேரம் தங்கியிருந்தேன். கடைசியில் புறப்பட்டபோது, பெலிண்டாவின் அறைக்குப் போய்ப் படுத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. பிறகுதான் மனசில் அமைதியுடன் வீட்டுக்குப் புறப்பட முடிந்தது.

இப்போது அந்தச் சிறிய சர்ச்சுக்குள் நுழைகிறேன். நான் உட்காரும் வழக்கமான பெஞ்ச்சை என் கண்கள் தேடுகின்றன. சுவர்களில் என் தந்தை தீட்டிய ஓவியங்களுக்காகச் சுற்று முற்றும் பார்க்கிறேன். அந்த வேலைக்காக அவருக்கு 25 டாலரும் சிக்கன் டின்னரும் கொடுத்தார்கள். படங்கள் போய்விட்டன. ஆனால் நான் உட்காரும் மரப் பெஞ்சு இருக்கிறது - மரத்தில் நான் செதுக்கிய

'ஸி.ஸி' என்ற எனது பழைய இனிஷியலுடன்.

குழந்தைகள் பாடுவதை நிறுத்திவிட்டு என்னை நாணத்துடன் பார்க்கின்றன.

"இவர் தான் காஸியஸ் க்ளே," என்கிறாள். அவர்களுடைய பாட்டு லீடரான மிஸ் டேவிட்ஸன்.

ஒரு பையன் பளீரென்று சொல்கிறான்: "அவர் பெயர் : முகம்மது அலி."

"ஆம்," என்று ஒப்புக் கொள்கிறாள். "முகம்மது அலி - நமது மாபெரும் குத்துச் சண்டை வீரர் - லூயிவில்லில் அவர் வசித்தபோது இந்தச் சர்ச்சுக்குத்தான் வருவது வழக்கம்." பிறகு என் பக்கம் திரும்புகிறாள்! "நாங்கள் எங்கள் குழுவுக்கு 'புகழ் மொட்டுக்கள்' என்று பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறோம். உங்களுக்காக நாங்கள் ஏதாவது பாடட்டுமா?"

"நான் வரும்போது பாடிக்கொண்டிருந்த பாட்டையே பாடுங்கள். போதும். நானேகூட அதைப் பாடியது உண்டு." என்கிறேன்.

வெட்கத்துடன் குழந்தைகள் தங்கள் பாட்டுப் புத்தகங்களைப் பார்த்துக் கொள்கிறார்கள். முதலில் கிசுகிசுப்பாக, பிறகு பலமாக, சர்ச்சின் எல்லாப் புறங்களிலும் வியாபிக்கும் படி பாடுகிறார்கள்..

நான் மீண்டும் எட்டு வயதுச் சிறுவனாகி விட்டேன். அவர்களில் ஒருவனாக நானும் ஆகிறேன். கோஷ்டியோடு சேர்ந்து பாடிக் கொண்டு, நீண்ட ஸெர்மன்களையும் ஸிஸ்டர்கள் கூவுவதையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்...

இதெல்லாம் ஒரு வழியாய் முடிந்து வெளியே போய் என் கோஷ்டியோடு, ஊர் சுற்ற மாட்டோமா என்று காத்திருக்கிறேன்....

நான் இங்கே வந்திருக்கிறேன் என்று திடீரென எல்லாருக்கும் தெரிய வருகிறது. கடைகளை விட்டு வருகிறார்கள்; வீடுகளை விட்டு வருகிறார்கள். கார்கள் நிற்கின்றன. என் பஸ்ஸைப் பின் தொடர்கிறார்கள். தெருவிலே அதை நிறுத்தினால் அருகில் வந்து கூப்பிடுகிறார்கள். என்னைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

"முகம்மது அலி!" சில குழந்தைகள் கூச்சலிட்ட வண்ணம் தெருவோடு ஓடுகின்றன. "உலக ஹெவி வெயிட் சாம்பியன்!" நான் உதை வாங்கியதை டி.வி.யில் பார்க்காதவர்கள் போல் அவர்கள் கூவுகிறார்கள்.

நரைத்த கூந்தல் கொண்ட ஓர் ஒல்லியான பெண்மணி கூட்டத்தை விலக்கிக் கொண்டு என்னிடம் வரப் பலவீனமாக முயலுகிறார். அவர் மிஸ் மார்ஃபி. ஸெண்டிரல் ஹைஸ்கூலில் எனக்கு ஆங்கிலம் கற்பித்தவர். "அவரைக் காஸியஸ் என்று கூப்பிட்டால் தப்பாகிவிடுமா? காஸியஸ் என்று கூப்பிட்டால் அவருக்குக் கோபம் வந்துவிடுமா?" என்று அவர் விசாரித்துக் கொண்டிருப்பது எனக்குக் கேட்கிறது.

"மிஸ் மார்ஃபி, என்னை எப்படி வேண்டுமானாலும் நீங்கள் கூப்பிடலாம்," என்கிறேன் அவரிடம், "நீங்கள் எப்படிக் கூப்பிட்டாலும் எனக்குச் சந்தோஷம்தான்."

அவர் அருகில் வருகிறார். நான் கைகளை வளைத்து அவரை அணைத்துக் கொள்கிறேன்.

"உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஆகப் போவதாய் நீ எப்போதும்

சொல்லிக் கொண்டிருப்பாய்," என்கிறார் மிஸ் மர்பி, நான் துணுக்குறுகிறேன். நான் நார்ட்டனுடன் போட்ட குத்துச் சண்டையை இவர் பார்க்கவில்லையா?

என் பெற்றோர்கள் வசிக்கும் வீட்டை நோக்கி பஸ்ஸைச் செலுத்துகிறேன்.

நான் கேட்ட முதல் பயங்கரக் கதை என் அப்பா சொன்னதுதான். நான் எப்படிப் பிறந்தேன் என்பதை அவர் ரொம்பப் பயங்கரமாய்ச் சொல்வார்.

அப்பா சொன்னார்: "ரொம்ப நேரமாகியும் குழந்தை பிறக்கவில்லை. என்ன காரணம் என்று டாக்டர்களுக்கு விளங்கவில்லை. பிறகுதான் தெரிந்தது. இவனுடைய பெரிய தலை வெளியே வரவே முடியவில்லை! அவ்வளவு பெரிய தலை. என்னவெல்லாமோ பண்ணிப் பார்த்தார்கள். வெளியே இழுத்தார்கள். உள்ளே தள்ளினார்கள்.

"கடைசியில் போதுமான அளவு இவன் தலை வெளிப்பட்டது. உடனே டாக்டர்கள் ஆயுதம் போட்டு வெளியே இழுத்து விட்டார்கள். அவன் கன்னத்தில் வடு பதிந்துவிட்டது. இப்பவும் கூட இருக்கிறது."

அம்மா சொல்வாள்: "அதுகூடப் பெரிசில்லை. இவன் பிறந்த பிறகு ஒரு முறை இவனைப் பறிகொடுக்கிற மாதிரி ஆகிவிட்டது. வேறே ஒரு குழந்தையைக் கொண்டு வந்து என் படுக்கையில் விட்டு விட்டார்கள். நானும் அது என் குழந்தைதான் என்று கொஞ்ச நேரத்துக்கு நினைத்து விட்டேன். அப்புறம்தான் கவனித்தேன் - குழந்தைக்குக் கட்டியிருந்த சூட்டில் 'பிரௌன்' என்று பெயர் போட்டிருந்தது. 'க்ளே' என்று இல்லை. நர்ஸ்களைக் கூப்பிட்டேன்.

'எங்கே என் குழந்தை? இது வேறே யாருடைய குழந்தையோ' என்றேன். அவர்கள் போய், காஸியயஸைக் கொண்டு வந்தார்கள். என்னவோ கோளாறு என்று எனக்கு எப்படித் தெரிந்ததென்றால், அந்த இன்னொரு குழந்தை சாதுவாய், நல்ல குழந்தையாயிருந்தது. அதனால்தான் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது."

அம்மா ஜன்னல் வழியே வெளியே பார்த்து, நான் மறந்துவிட்டதாக அவர் நினைத்திருக்கும் பல விஷயங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

"ஒன்றும் பேசாதே, ஜி." (அவர் என்னைக் கூப்பிடுவது அப்படித்தான்.) "உன் தாடை ஆற வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார். நீ இங்கேயிருந்து போன பிறகு லூயிவில்லில் பல விஷயங்கள் மாறிவிட்டன. பழைய லூயிவில் அல்ல இது."

"எனக்கென்னவோ பழைய ஊர் போலவே இருக்கிறது, அம்மா "

"இல்லை ஜி. நீ பையனாக இருந்தபோது லூயிவில்லில் வெள்ளைக்காரர் - நீக்ரோ இரண்டு பேரையும் பிரித்திருந்தார்களே நினைவில்லை? 1960 ஆம் வருடம் வரை. ஓட்டலில் கறுப்பர்கள் தங்க முடியாதிருந்தது. நீக்ரோக்களுக்காக ஒரே ஒரு தியேட்டர்தான். டவுனிலுள்ள பல பெரிய கடைகளில் கறுப்பர்களுக்கு என்றால் உணவோ பானமோ எதுவும் கொடுக்க மாட்டார்கள். ஐந்து பைசா பத்துப் பைசா சில்லறைக் கடைகளில் கூட எதுவும் தரமாட்டார்கள்."

6

சில்லறைக் கடையொன்றின் முன்னே, சிக்னல் கிடைக்காததால் வண்டியை நிறுத்துகிறேன்.

"இந்தக் கடையைப் பற்றித் தெரியுமா?" என்கிறார் அம்மா. "நீ சின்னப் பையனாயிருந்தபோது, ஒரு நாள் தண்ணி வேண்டும் என்று அந்தக் கடைக்கு வெளியே அழுது கொண்டிருந்தாய். நான் உன்னை உள்ளே அழைத்துப் போய், அங்கிருந்த ஒரு பெண் குமாஸ்தாவிடம் கொஞ்சம் தண்ணீர் தரும்படி கேட்டேன். ஆனால் அவளுக்கு ஒரே பயம். "நீக்ரோக்களுக்கு ஏதாவது கொடுத்தோமானால் எங்கள் வேலை போய்விடும்' என்றாள் என்னிடம். ஸ்டோர் காவலாள் வந்து எங்களை வெளியே போகும்படி விரட்டினான். நீ அழுது கொண்டேயிருந்தாய். '

"ஆனால் அதைக் காட்டிலும் மோசமானது எவ்வளவோ பார்த்தாயிற்று. உனக்கு ஏழெட்டு வயதிருக்கும் போது உன்னை டவுனுக்கு அழைத்து வருவதென்றாலே எனக்கு மகா வெறுப்பாயிருக்கும். நீ சுற்றுமுற்றும் பார்ப்பாய். கடைகளிலும் அலுவலகங்களிலும் ஒரே வெள்ளைக்காரர் முகமாகவே இருக்கும். அழ ஆரம்பித்து விடுவாய். என்னிடம் திரும்பத் திரும்ப, 'ஏம்மா, கறுப்பு ஜனங்கள் எல்லாரும் எங்கே வேலை செய்கிறார்கள்? கறுப்பு ஜனங்களையெல்லாம் என்னம்மா பண்ணிவிட்டார்கள்?' என்று கேட்பாய். வீட்டுக்குப் போய்ச் சேருகிற வரையில் அழுது அழுது கண்ணெல்லாம் சிவந்து போய்விடும். நீ அப்படி அழுவதைப் பார்த்தால் எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கும்:

"உன் அப்பாவும் நானும் உன்னைப் பற்றிக் கவலைப்பட்டோம்.

நீக்ரோக்களுக்கு ஏதாவது அநீதி இழைத்தார்களென்று கேள்விப்பட்டால் போதும். நீ படுக்கையில் படுத்துக் கொண்டு ராத்திரி பூரா அழுவாய். நினைவிருக்கிறதா? நீ அழுகிறாய் என்பதால் தங்கையும் அழுவாள். அப்புறம் உன் அப்பா வேறே வீட்டுக்கு வந்து, என்ன நடந்ததென்பதை நடித்துக் காட்டி வர்ணனை செய்வார். நிலைமை இன்னும் மோசமாகி விடும்; உன்னொத்த வயதுக்காரனான எம்மெட் கொலையுண்ட சமாசாரம் அப்படித்தான் ஆயிற்று.

வெள்ளையர்கள் எம்மெட்டைத் தாக்கினார்களே, நினைவிருக்கிறதா? நீ ரொம்பக் கொதித்துப் போனாய். உன் அப்பா ராவும் பகலும் அதைப் பற்றியே பேசினார். உன்னை ஆத்திரப்பட வைக்க வேண்டாமென்று அவரிடம் சொன்னேன். எம்மெட்டுக்கு உதவி செய்ய ஒரு வழியும் கிடையாதா என்று நீ கேட்டுக் கொண்டேயிருந்தாயே, ஞாபகமில்லை? சின்னப் பள்ளிக்கூடத்திற்கு நீ போக ஆரம்பித்தது முதல் பெரிய பள்ளிக் கூடத்தின் படிப்பு முடிகிற வரையில் உன்னைப் பற்றி நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். குத்துச் சண்டைத் துறையில் மட்டும் நீ நுழையாமல் இருந்திருந்தால், என்ன ஆகியிருப்பாயோ... என்ன, ஏன் இங்கே நிறுத்துகிறாய்?"

பழைய ரயில் பாதையருகே பஸ்ஸை நிறுத்தி வெளியே இறங்குகிறேன்.

"இப்பல்லாம் ரயில் இங்கே நிற்பதில்லை," என்கிறார் அம்மா. "இந்த ஸ்டேஷனை மூடி ரொம்பக் காலமாகிறது."

எனக்கு அது தெரியும். தண்டவாளத்தைத் தாண்டிச் சென்று நிற்கிறேன். இருபது வருடங்களுக்கு முன்பு, வளைவில் ரயில்

வருவதைப் பார்த்துக் கொண்டு நிற்பேனே, அதே போல் இன்றும் பார்க்கிறேன்.

எம்மெட்டுக்கும் எனக்கும் ஏறத்தாழ ஒரே வயது. அவன் கொலை செய்யப்பட்டு ஒரு வாரம் இருக்கும். கறுப்பர்களின் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வந்திருந்த அவனுடைய படங்களைப் பார்த்துக் கொண்டு பையன்களின் கும்பலோடு நான் ஒரு மூலையில் நின்றிருந்தேன். ஒரு படத்தில் அவன் சிரித்துக் கொண்டு சந்தோஷமாயிருந்தான். இன்னொரு படத்தில் மண்டையில் அடிபட்டு வீங்கியிருந்தது. விழிகள் தெறித்து விழுந்து விடுகிற மாதிரி இருந்தன. அவன் உதடு கிழிந்து கோணியிருந்தது. அவனுடைய தாய் துணிச்சலாக ஒரு காரியம் செய்திருந்தாள். திறந்த சவப்பெட்டியில் அவனை வைத்து, லட்சக் கணக்கானோர் சிதைந்துபோன அவன் உடம்பைப் பார்க்கச் செய்தாள். நான் பிறந்த அதே வருடத்தில், அதே கிழமையில் அவனும் பிறந்திருக்கிறான் என்று தெரிந்தவுடன் அவனுடன் ஒரு நெருக்கமான உறவு ஏற்பட்ட மாதிரி இருந்தது எனக்கு. இரவு அவனைப்பற்றிச் சொல்லி, கொலை எப்படி நடந்தது என்று அப்பா நடித்துக் காட்டினார்.

எம்மெட்டை என்னால் மறக்க முடியவில்லை. கடைசியில் ஒருநாள் சாயங்காலம், அவனுடைய மரணத்துக்காக வெள்ளைக்காரர்களுக்குப் பதிலடி கொடுக்க ஒரு வழி தோன்றியது. அன்றிரவு நான் வீட்டை விட்டு நழுவி ரானி என்ற என் நண்பனின் வீட்டை அடைந்து என் திட்டத்தை அவனிடம் சொன்னேன். ரயில்வே ஸ்டேஷனை நாங்கள் அடைந்தபோது இரவு வெகு நேரமாகிவிட்டது. ஒரு சுவரொட்டி நினைவிருக்கிறது. கோடுபோட்ட பாண்டும் உயரமான தொப்பியும் அணிந்த ஒரு ஒல்லியான மனிதன் படம். கையை எங்களை நோக்கிச் சுட்டிக்

காட்டுவான். *அங்க்கிள் ஸாம் உன்னை அழைக்கிறார்' என்ற வாசகம் இருக்கும். அங்கே நின்று அந்தப் படத்தின் மீது கற்களை விட்டெறிந்தோம்: ஒரு ஷூ பாலிஷ் செய்யும் பையனின் கடையை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தோம். கால் வைத்துக் கொள்ளும் இரண்டு இரும்பு பாதம் தாங்கிகளைத் திருடி, ரயில் பாதைக்குக் கொண்டு சென்றோம். தண்டவாளத்தின் குறுக்கே அவைகளைப் பதித்து வைத்துவிட்டுக் காத்திருந்தோம். நீல நிறமான பெரிய டீசல் இஞ்சின் வளைவில் திரும்பி வருவது தெரிந்தது. ஷூ ரெஸ்ட்டின் மீது இடித்து, சுமார் முப்பதடி தூரத்துக்குத் தள்ளிக் கொண்டு சென்றது. ஒரு சக்கரம் சிக்கிக் கொண்டு பாதையிலிருந்து தெறித்துப் பறந்தது. ஸ்லிப்பர்கள் உடைபடும் சத்தம் பெரியதாகக் கேட்டது நினைவிருக்கிறது. நான் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தேன் - ராணி என் பின்னால் ஓடிவந்தாள். பிறகு திரும்பிப் பார்த்தேன். சுவரொட்டியில் கண்ட அந்த மனிதனின் கண்கள் என்னை வெறித்து நோக்கின - 'அங்க்கிள் ஸாம் உன்னை அழைக்கிறார்'. அதை நான் மறக்கவே மாட்டேன்.

அந்த இடத்துக்கு மறுபடி செல்வதற்குத் துணிச்சல் வர இரண்டு நாள் பிடித்தது. இடிபாடுகளை ஒரு குழு இன்னும் சீர்படுத்திக் கொண்டிருந்தது. அந்தச் சுவரொட்டி மனிதன் இன்னும் கையைச் சுட்டியபடியே இருந்தான். ஒருநாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவன் என்னோடு மோதப் போகிறான் என்றும் நான் அவனோடு மோதப் போகிறேன் என்றும் எனக்கு எப்போதும் தெரிந்தேயிருந்தது.

ஈவா அத்தையின் பார்பர் ஷாப் முன்னே பஸ்ஸை நிறுத்துகிறேன். புழுதி படிந்த கடை ஜன்னல் வழியே பார்க்கிறேன். நாலு நாற்காலிகளுள் ஒன்றில் தாடியும் மீசையுமாய் ஒரு கிழவர்

உட்கார்ந்திருக்கிறார் - அவருக்கு முக சவரம் செய்வதற்காக ஈவா அத்தை - என் தந்தையின் மூத்த சகோதரி - ரேஸரைத் தீட்டிக் கொண்டிருக்கிறாள். நான் உள்ளே நுழைந்ததும் கூவுகிறாள்: "காஷியஸ்! என் கண்ணையே நம்ப முடியவில்லையே!"

அவருடைய வாடிக்கைக்காரர் சட்டெனத் தலையைத் திருப்புகிறார். ஷூ பாலிஷ் பையன் என்னை மொய்த்துக் கொள்கிறான். அத்தை என்னை இறுக்கிக் கட்டிக் கொள்கிறாள். என் தாடையைப் பிணைத்திருக்கும் கம்பிகள் வலிக்கின்றன. நான் முகம் சுளிப்பதைக் கண்டதும், "குத்துச் சண்டையை நிறுத்திக் கொள்ளுகிற சமயம் வந்து விட்டதில்லையா? உனக்கு இவ்வளவு போதாதா? காஷியஸ், எத்தனை காலமாய் நீ குத்துச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயென்று உனக்குத் தெரியுமோ?"

"இருபது வருஷம்!" என்று ஷூ பாலிஷ் பையன் கூவுகிறான். "இருபது வருஷமாய் நீங்க சண்டை போடறீங்களாம். உங்க அத்தை சொன்னாங்க."

"இன்னும் எத்தனை நாள் போடப் போகிறாய்?" என்கிறாள் அத்தை.

"சாம்பியன் டைட்டிலைத் திரும்ப அடையும் வரையில்" என்கிறேன்.

"உனக்கு அது திரும்பக் கிடைப்பதற்கு விடவே மாட்டார்கள்!" என்கிறாள். "டைட்டில் இருந்தபோது அவர்கள் மிரண்டு போகும்படி நீ பண்ணிவிட்டாய். ராணுவத்தைப் புறக்கணித்தாய். 'கறுப்பு முஸ்லீம்' கட்சியில் சேர்ந்தாய். இன்னொரு முறை உனக்கு டைட்டில் கிடைக்கும் படி விடவே மாட்டார்கள்."

என் தந்தையின் குடும்பத்தில் எட்டுப் பையன்களும் நாலு பெண்களும் இருந்ததால், முடிவெட்டுவதற்கு ஈவா அத்தைக்குக்

கற்றுத் தந்தார்கள். அந்த நாட்களில் பெண்கள் தான் நீண்ட முடி வைத்துக் கொள்வார்கள். ஆனால் பையன்களுக்கும் முடி ரொம்ப சீக்கிரம் வளர்ந்து விடும். எட்டுத் தலைகளுக்குப் பார்பர் கட்டணம் ரொம்ப அதிகமா படியிருக்கிறதென்று என் தாத்தா சொன்னார். குடும்பத்தில் எல்லாருக்கும் முடிவெட்ட ஈவா அத்தை பயிற்சி பெற்றாள். அதைத் தொடர்ந்து லைசன்ஸ் பெற்ற பார்பராக ஆனாள்.

கோரெட்டா அத்தையின் வீட்டுக்கு - குடும்பத்தில் எல்லாரையும் சந்திப்பதற்காக - போய்க் கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். தானும் கடையைச் சீக்கிரம் மூடிவிட்டு வந்து சேர்ந்து கொள்வதாக ஈவா அத்தை சொன்னாள்.

கோரெட்டா அத்தையின் வீட்டுக்கு நான் போய்ப் பல வருடங்களாகின்றன. ஒரு குறுகலான தெருவில் அவளுடைய இரண்டு மாடி செங்கல் கட்டிடம் இருந்தது. முன்புறம் புல்வெளி உண்டு. ஓர் அறிவிப்புப் பலகை மாட்டியிருக்கும்: 'கோரெட்டா பலசரக்குக் கடை' ரொம்ப நாள் முன்பே அந்த இடத்தைப் பல வகையாக அவள் மாற்றியிருந்தாள் - ஸ்டோர், ரெஸ்டாரெண்ட், தங்கும் விடுதி, ரொட்டிக் கடை, தின்பண்டங்கள் செய்யும் சமையலறை. முன்புறத்தில் கோரெட்டா அத்தை வசிக்கிறாள். பக்கத்தில் இன்னொரு வாசல் உண்டு. அதன் வழியே வாடிக்கையாளர்கள் ரெஸ்டாரெண்டுக்கும் ரொட்டிக் கடைக்கும் போவார்கள்.

எல்லாப் பழைய நினைவுகளும் திரும்புகின்றன. நான் முதன் முதல் நடக்கவும் ஓடவும் பேசவும் கற்றது இந்த இடத்தில்தான். வேலைக்குப் போகும்போது அம்மா என்னை விட்டுவிட்டுச் செல்ல இதுதான் சிறந்த இடமாக இருந்தது. ஆகவே நான் எவ்வளவு நேரம் இங்கே கழித்திருக்கிறேன்.

கோரெட்டா அத்தை பல பல வகையான உணவு தயாரித்திருக்கிறாள். ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் நான் சுவை பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். முகாமுக்குத் திரும்பிப் போகும்போது கோரெட்டா அத்தையை என்னுடன் அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்று இங்கேதான் நான் முடிவெடுக்கிறேன். நான் குத்துச் சண்டைகள் செய்கிற வரையில் அத்தை எனக்குச் சமைத்துப் போடுபவளாக இருக்கட்டும்.

நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது கோரெட்டா அத்தை சொல்கிறாள். "எதைக் கண்டாலும் சாப்பிட்டு விடுவாய் - குதிரைக்குப் போடுகிற வைக்கோலையும் புல்லையும்கூட!" என் பழைய புகைப்படமொன்றைச் சுட்டிக் காட்டுகிறாள். குதிரைகளுக்குப் பயிற்சி கொடுப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது எடுத்த படம் அது. குதிரைகள் என்றால் எனக்குக் கொள்ளைப் பிரியம் அப்போது. "இது உனக்கு நினைவிருக்கிறதா?" என்கிறாள் அத்தை. "நீ குத்துச் சண்டை போட ஆரம்பித்த காலத்தில், தினம் காலையில் குதிரைகள் ஓடும் இடத்துக்குப் போய் குதிரைகளுடன் சேர்ந்து ரேஸ் ஓடுவாயே!"

டிரெய்னர்களுக்கும் முன்னதாக நான் ஓடுவேன். ஒருநாள் ஒரு குதிரை தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. என்மீது இடித்து விடக் கூடாதென்று அதை ஓட்டி வந்தவர் குதிரையைச் சட்டென்று திருப்பினார். குதிரை அவரைக் கீழே தள்ளி விட்டது. "டேய் பையா, இந்தப் பக்கம் வரக் கூடாதென்று உனக்குச் சொல்லியிருக்கிறேன் இல்லையா?" என்று சூபர்வைசர் என்னைப் பார்த்துக் கத்தினார். ஆனால் நான் குதிரை லாயங்களுக்குள் செல்வதை நிறுத்திக் கொள்ளவில்லை. குதிரைகளுக்கு அருகிலேயே வசிக்கவும் தூங்கவும் நான் விரும்பினேன். குதிரைகளின் மணத்தையும்

வைக்கோலின் மணத்தையும் குதிரைகளின் வனப்பான உடல்களையும் நான் நேசித்தேன்; மேலும் மேலும் கடினமான பயிற்சிகள் செய்து என் தேகத்தை அவைகளைப் போல வைத்துக் கொள்ள எனக்கு ஏதோவொரு வகையில் ஊக்கம் ஏற்பட்டது.

என் மாமா சொல்லிக் கொண்டிருப்பது கேட்கிறது: "நூ தோற்றுப் போன விதம் உன் தாடை முறிந்தது - வெட்கக் கேடு. டிவியில் நான் பார்த்தேன்."

"நூ அத்தனை மோசமாகச் சண்டை போட்டு நான் பார்த்ததேயில்லை" என்கிறாள் கோரெட்டா அத்தை. "நான் கேள்விப்பட்டேயிராத ஆள் உன்னை வீழ்த்திவிட்டானே!" அதுதான் ரொம்பப் பெரிய அவமானம் என்கிற மாதிரி!

"உன் காப்பியில் யாரோ ஏதோ கலந்து விட்டார்கள் என்றுதான் முதலில் நினைத்தேன். படுக்கையில் படுத்துக் கொண்டு டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்தேன். நூ உன் மாதிரியே இருக்கவில்லை. வீட்டில் அத்தனை பேரையும் கூப்பிட்டு, 'இங்கே வந்து பாருங்களேன்! காஷியஸ் உதை வாங்குகிறான்!' என்றேன்."

7

அத்தையின் வீட்டில் உறவினர்கள் கூடியிருக்கிறார்கள்.

"அடுத்து யாரோடு சண்டை போடப் போகிறாய்?" மாமா தெரிந்து கொள்ள விரும்புகிறார்.

"அதே ஆளுடன்தான்," என்கிறேன்.

"அடக் கடவுளே! இவனுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டியதுதான்!" என்கிறான் என் ஒன்றுவிட்ட சகோதரர்களில் ஒருவன். சொல்லி விட்டுச் சிரிக்கிறான் பெரிதாய்.

"அந்த விஷயத்தில் காஷியஸ் பிடிவாதக்காரன்," என்று கோரெட்டா அத்தை விளக்குகிறாள். "அவனுடைய தாத்தாவைப் போலிருக்கிறான்." சுவரில் மாட்டியுள்ள ஒரு படத்தைப் பார்த்துத் தலையை அசைக்கிறாள். என் பாட்டனார் தாட்டியான, திடகாத்திரமான மனிதர். கறுப்புப் பாண்ட்டும் வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கம்பீரமான, தசைப்பிடிப்பான தோள்களுடன் அதோ படத்தில் காணப்படுகிறார். "தன் குழந்தைகளில் யாரையும் அவர் அடித்ததே கிடையாது." என்று அத்தை தொடர்கிறாள். "அவர் ரொம்பப் பலசாலி. ஆகையால், எங்களை அடிக்கப் போய்க் காயப்படுத்தி விடப் போகிறோமே என்று அவருக்குப் பயம். அடி கொடுக்கிறதெல்லாம் என் அம்மாதான். ஆனால் அவர் வீட்டில் இருந்தால் அதற்கும் இடம் கொடுக்க மாட்டார். எங்களைப் பேசியே சரி கட்டுவார். பேசுவது அவருக்குப் பிடிக்கும். நீ அவரைத்தான் கொண்டிருக்கிறாய் என்பேன்."

பாட்டனார் ஹெர்மனை நோக்குகிறேன். கேள்வி கேட்கிற விதம் -

தெளிவாக, நேரடியாக, சுவையாக அவர் பேசும் விதம் - எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் ஒரு நல்ல பேஸ்பால் ஆட்டக்காரர். ஆனால் அந்த நாளில் பெரிய மாட்சுகளில் கறுப்பர்களை விளையாட அனுமதிக்க மாட்டார்கள். அவர் மரணம் எனக்கு நினைவிருக்கிறது. எவ்வளவு அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்தேன். நான் குத்துச் சண்டை போட ஆரம்பித்த வருடத்தில் அவர் காலமானார். நான் எத்தனை சிறந்த குத்துச் சண்டைக்காரன் என்பதை அவருக்குக் காட்ட ஆசை கொண்டிருந்தேன்.

"ரொம்பக் கஷ்டமான காலத்தில் நாங்கள் முன்னுக்கு வந்தோம்," என்கிறாள் கோரெட்டா அத்தை. "அந்த நாட்களில் லூயிவில்லில் அடிமைகளுக்குச் சம்பளம் கொடுக்கிற மாதிரிதான் கறுப்புத் தொழிலாளிகளுக்குச் சம்பளம் கொடுத்தார்கள். வாரம் இருபத்தைந்து காசு வீதம் பல வருடங்களுக்கு உன் தாத்தா துப்புரவு வேலை செய்து வந்தார். பிறகு சொந்த பிஸினஸ் ஆரம்பித்து ஐஸும் விறகும் விற்றார். வெள்ளைக்காரர்கள் தன்னை எப்படி நடத்தினார்கள் என்பதை அவர் ஒருநாளும் மறந்ததில்லை. எந்த வெள்ளைக் காரரையும் வீட்டுக்குள் விட மாட்டார்."

அவருக்கு அருகே பாட்டியின் படம் மாட்டியிருக்கிறது. அவளுடைய மருமகள் தீட்டிய படம். "கண்ணுக்கு ரொம்ப நன்றாயிருப்பாள் உன் பாட்டி," என்கிறாள் கோரெட்டா அத்தை.

நான் லிஸ்ட்டனைத் தோற்கடித்த கையோடு, மிக மூத்த உறுப்பினர் என்ற முறையில் சர்ச்சில் பாட்டியைக் கௌரவிக்க ஒரு விழா நடந்தது. அப்போது அவள் பக்கத்தில் நிற்க வேண்டும் என்பதற்காகப் பறந்து வந்திருந்தேன். என் அப்பாவின் கலைப் படைப்புகளில் அவளுக்கு ரொம்பப் பெருமை, அவரை ஊக்குவிப்பது வழக்கம். " நீ பெரிய ஆர்ட்டிஸ்டாக வந்ததும், தெற்கே இருக்காதே.

புறப்பட்டுப் போய்விடு. நியூயார்க்குக்கோ ஷிகாகோவுக்கோ எங்கானும் போ. தெற்குப் பகுதி நூக்ரோ ஓவியனுக்கு ஏற்ற இடமல்ல."

ஊரில் ஒவ்வொருவரும் என்னைப் பற்றிய ஏதாவதொரு விஷயத்தை - நான் மறந்து வெகு நாளாகிவிட்டதை - தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதை நினைவுபடுத்துகிறார்கள்.

"இங்கே தான், நூ முதன் முதல் 'நான் அழகானவன்' என்று பூற்றிக் கொள்ள ஆரம்பித்தாய்" என்கிறாள் கோரெட்டா அத்தை. பழைய சாப்பாட்டு மேஜையொன்றின் முனையைச் சுட்டிக் காட்டுகிறாள். "இந்த மேஜையில் ஒருநாள் நூ மோதிக் கொண்டாய். கண்ணுக்கு மேலே சதை கிழிந்து போய், ரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. உன் அப்பா அதைப் பார்த்ததும், 'கடவுளே! இந்த அழகான முகம் விகாரமாகி விடப் போகிறதே!' என்றார். உன் அப்பா எப்போது பார்த்தாலும் 'ஓவியம் மாதிரி அழகான முகம்' - 'அழகான முகத்தைக் கோரப்படுத்திக் கொள்ளாதே' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருப்பார். அவர் சொல்லி வாய்மூடு முன் நூ கண்ணாடி முன்னாலே போய் நின்று கொண்டு. 'அழகான முகம்! கோரப்படுத்திக் கொள்ளக் கூடாது' என்று சொல்லிக் கொண்டிருப்பாய்!"

சாயந்தரம் பூரா அவர்கள் பேசுவதைக் கேட்ட வண்ணம் இருக்கிறேன். ஊருக்குத் திரும்பியதைப்பற்றி எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. நாங்கள் ரொம்ப நெருக்கமான குடும்பம். அவர்களைக் குலுக்கியெடுத்து விட்ட ஒரே நிகழ்ச்சி, நான் கிறிஸ்தவ மதத்தைத் துறந்து மேன்மை தங்கிய எலிஜா முகம்மதைப் பின்பற்றுபவனாக ஆனதுதான். எப்படியோ அவர்கள் மனசைத் தேற்றிக் கொண்டு விட்டார்கள். ஓரளவு உற்சாகம்கூடக்

கொண்டிருக்கிறார்கள்.

புறப்படுவதற்கு முன்னால் கோரெட்டா அத்தையின் படுக்கையறை வழியே செல்கிறேன். படுக்கைக்கு மேலே கொட்டை எழுத்தில் அச்சிட்ட இந்த வாசகம் காணப்படுகிறது:

'இருப்பது ஒரே வாழ்க்கைதான்;

அதுவும் விரைவில் சென்றுவிடும்.

கிறிஸ்துவுக்காக என்ன செய்கிறாயோ அதுதான் நிலைக்கும்.'

லூயிவில்லில் கறுப்பர்களின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பது ரொம்பப் பேருக்குத் தெரியாது. நான் சாம்பியன் பட்டம் பெற்றபோது, 'நடுத்தரக் குடும்பத்தில் வளர்ந்த பையன்,' என்று என்னைப் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இப்படிக் கூட ஒரு கட்டுரையாளர் எழுதினார்: 'இவரொன்றும் குடிசைப் பகுதியிலிருந்து வந்த பையனல்ல. இவருடைய தாய், வெளிர் நிறச் சருமம் படைத்த வசீகரமான பெண்மணி; தந்தை, காரமாகப் பேசக்கூடிய அறிவாளி; க்ளே என்ற குடும்பப் பெயரில் பெருமை கொள்பவர்; ஹென்றி க்ளே என்ற வெள்ளைக்காரர் இவருடைய முன்னோர்; அவரால் குடும்பத்தில் வெள்ளை ரத்தம் கலந்திருக்கிறது. அதென்ன, லேசான விஷயமா...'

உண்மை என்னவெனில் லூயிவில்லில் நான் வாழ்ந்தது பெரும்பாலும் வறுமையில்தான் - அரைப்பட்டினி வாழ்க்கை. என் வாழ்க்கையின் பெரும் பகுதியில் எப்படிப்பட்ட சோதனைகள் என் முகத்தில் மோதின என்பதைக் கொண்டே நான் சேரிக் குழந்தையா இல்லையா என்பதைக் கணிக்க முடியும்.

லூயிவில் கறுப்பர்களில் நடுத்தர வகுப்பினர்களும் இருந்தது உண்டுதான். சில பணக்காரர்கள் கூட இருந்தார்கள். எங்கள் சுற்று வட்டாரங்களும் சில பெரிய நகரங்களில் உள்ளதைப் போல இருளடைந்த பயங்கரங்களாக இருக்கவில்லை. இருந்தாலும் கூட எனது குத்துச் சண்டைத் தொழிலில் போதுமான அளவு வருமானம் வரத் தொடங்கிய பிறகுதான் அந்த நடுத்தர வகுப்பில் ஒருவராக எங்கள் குடும்பம் ஆக முடிந்தது.

1956 ஆம் வருடத்துக் கோடை காலம் எனக்கு நினைவு வருகிறது. பள்ளிக்கூடம் இல்லை. நானும் ரூடியும் நாள் பூரா தெருவில் சுற்றிவிட்டுப் பசியுடன் வீடு திரும்புவோம். டவுனுக்கு மறுபுறத்தில் எங்கேயோ என் தந்தை விளம்பரப் பலகைகள் எழுதிக் கொண்டிருந்தார்; நிமிடத்துக்கொரு முறை தெருக்கோடியை ஆவலுடன் பார்ப்போம். மளிகை சாமான்கள் கொண்ட பையுடன் - ஒருவேளை தின்பண்டம், பலகாரங்களும்கூட இருக்கலாம் - அம்மா வருகிறாரா என்று. ஒரு கால், அன்றைய சம்பாத்தியம் முழுவதையும் செலவழித்துச் சிக்கனும் உருளைக்கிழங்கும் கூட வாங்கி வருகிறாரோ என்னவோ. ஹைலாண்ட்ஸில் ஒரு வெள்ளைக்காரியிடம் அவர் வேலை பார்த்தார். அந்த அம்மையாரை நான் பார்த்ததேயில்லை. மறுநாள் வேலைக்குச் செல்வதற்கான பஸ் கட்டணம் மட்டும்தான் அம்மா எப்போதும் மீதம் வைத்துக் கொண்டிருப்பாள். தினம் விடிகாலை எழுந்து கொள்வார். நாலு தெரு நடந்து பஸ்ஸைப் பிடிப்பார். வெள்ளைக்காரர்கள் வசிக்கும் பகுதியை அடைவார். வீடு கூட்டுவது, குளியலறைகளைச் சுத்தம் செய்வது, சமையல் பண்ணுவது, குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது - இவ்வளவுக்கும் தினசரி நாலு டாலர். சில சமயங்களில் மிகவும் களைத்துப் போய் வீட்டுக்கு வருவாராகையால் சமையல் செய்ய மாட்டார்.

ஸ்கூலுக்குப் பஸ்ஸில் போக எனக்கும் ரூடிக்கும் பணமே இருக்காது. இருவரும் ஒரே சமயத்தில் பஸ்ஸில் போக முடியாது. ஸ்கூல் பஸ்ஸுடன் நான் ஓட்டப் பந்தயம் வைத்துக் கொண்டு ஓடியதன் உண்மையான காரணம் அது தான். ஆனால் உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஆவதுதான் என் லட்சியமாயிருந்ததால், பஸ்ஸுடன் ரேஸ் ஓடுவதற்குக் காரணம் பணமில்லாதது அல்ல என்று சொல்லிக் கொள்ள முடிந்தது. சண்டைக்குத் தகுதியாக உடம்பை வைத்துக் கொள்வதற்காக ஓடுகிறேன் என்று சொல்லிக் கொண்டேன்.

எட்டு வருடமாக வீட்டின் முன்புறம் சரிந்து கொண்டிருந்தது. அதைச் சரி செய்ய இருநூறு டாலர் ஆகுமென்று அப்பாவிடம் கொல்லத்துக்காரர் சொல்லிவிட்டார். அது ரொம்ப அதிகம். ஆகவே, எந்த நிமிடத்திலும் விழுந்து விடக் கூடிய தலையிலுள்ள இடத்திலேயே நாங்கள் வசித்தோம்.

எங்கள் உடைகள் பெரும்பாலும் சாதாரணக் கடையில் வாங்கியதுதான். ஷூக்கள் ஸெகண்ட் ஹாண்ட் இரண்டொரு டாலர் விலை. அட்டையை வெட்டி, ஷூக்களின் அடிப் புறத்தில் பொருத்துவதில் என் அப்பா நிபுணராகிவிட்டார். எப்போதாவதொரு முறை ஒரு புதிய ஷர்ட் கிடைக்கும். ஒருமுறை நான் சர்ச்சுக்கும் ஸ்கூலுக்கும் செல்வதற்காக ஒரு மலிவான சிறிய சூட் வாங்கி வந்தது ஞாபகமிருக்கிறது.

தெருக்களின் வழியே பஸ்ஸைச் செலுத்திக் கொண்டு செல்லும் இந்தச் சமயம் அதெல்லாம் நினைவு வருகிறது. லூயிவில்லில் எங்கு பார்த்தாலும் அப்பா எழுதித் தந்த பெயர்ப் பலகைகளைக் காணுகிறேன் - அறிவிப்புப் பலகைகளில், சலவைக் கடை வண்டிகளில், ரொட்டிக் கடை வண்டிகளில், மதுபானக் கடைகளில், தொழிற்சாலைகளின் உச்சிகளில்,

ஒருமுறை என் தந்தை, ஸினாய் மலையுச்சியில் மோஸஸ் நிற்கும் ஓவியத்தை வரைந்தார். அது அபாரமாக அமைந்ததால் மற்ற சர்ச்சுகளும் அவரை அழைக்கத் தொடங்கின. ராத்திரி பூரா நான் கண் விழித்து அவர் அருகிலேயே இருந்து கொண்டு, ஜான் த பாப்டிஸ்டையும், லார்ட்ஸ் ஸப்பரையும், ஹோலி ஏஞ்செல்ஸையும், கன்னி மேரியையும் சுவர்ச் சித்திரங்களாக வரைவதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். சிலுவையில் அறையப்படும் காட்சியைக் கண்டு எனக்கு அழுகை வரும்.

ஒரு நாலு மாடிக் கட்டிடத்தைத் தாண்டிச் செல்கிறேன். அதன் உச்சியிலுள்ள அறிவிப்பு என் தந்தை எழுதியது. ஒரு மழைக் காலத்தில் பக்கெட் எடுத்துச் செல்லும் பையனாக அவருக்கு உதவி செய்தேன். பெயிண்ட் டப்பாவை எடுத்துக் கொண்டு ஏணியில் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்தேன். அறிவிப்புப் பலகை எழுதும் கலையைப் பற்றி அவர் எனக்குச் சிறிது சொல்லித் தந்தார்.

அவர் வேலை செய்வதைப் பார்த்து, அறிவிப்புப் பலகையோ, விஸ்கி புட்டியோ - மதுக் கடையில் சுவரோவியமோ, எந்த மாதிரி பெயிண்டிங் ஆனாலும் அதில் அவர் எடுத்துக் கொள்ளும் அக்கறையையும் பெருமையையும் கண்டு, எனக்கு அவரிடம் பெருமதிப்பு ஏற்பட்டது - அவருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றப் போவதில்லை என்று எனக்குத் தெரிந்திருந்த போதிலும். நான் அவரைப் பின்பற்ற வேண்டுமென அவரும் விரும்பவில்லை. "நீ வழக்கறிஞராக அல்லது ஆசிரியராக வரவேண்டும்," என்பார். ஆனால் என்னைக் குத்துச் சண்டை மேடையில் பார்த்த பிறகு அந்த எண்ணம் மாறிவிட்டது. "அடுத்த உலக ஹெவி வெயிட் சாம்பியனாக இவன் வரப் போகிறான்!" என்று முதல் முதல் கூவியவர் அவர் தான்.

அப்போது நான் ஒரே ஒரு சண்டைதான் போட்டிருந்தேன். அவர்

கூறியதைக் கேட்டு எனக்குத் திடுக்கிட்டது.

என் தந்தையின் உரத்த, ஆர்ப்பாட்டமான ஊக்குவிப்புகள் தான் என்னை மேலே மேலே தூண்டி விட்டன. அனேகமாக, லூயிவில்லில் நான் நடத்திய ஒவ்வொரு குத்துச் சண்டைப் போட்டிக்கும் அவர் வந்தார். வெளியூரில் நடைபெறும் சண்டைக்குத்தான் அவரால் வர முடியாது. காரணம், பிரயாணச் செலவு செய்ய எங்களுக்குச் சக்தியில்லை. என் வாழ்க்கையைப் படக் கதையாக எழுதிய ஒருவர் என் குழந்தைப் பருவம் பூரா என் தந்தை என்னை அடித்துக் கொண்டேயிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார். லூயிவில்லில் இருந்த க்ளே குடும்பத்தினர் அனைவரும் அதைப் படித்து விட்டுச் சிரித்தார்கள் வீட்டுக்குள்ளே யாகட்டும் வெளியே யாகட்டும் எங்கள் மீது யாரும் கை வைக்கக் கூடாது.

வேலை முடிந்து சாயந்தரம் வீடு திரும்பியதும் என் தந்தை பாட்டு சாதகம் செய்வது வழக்கம். இயல்பாகவே நடிப்பாற்றல் பெற்றவர் அவர். திரைப்பட நட்சத்திரங்களை - குறிப்பாகக் காதலர்களை - இமிடேட் செய்து காட்டுவார். நாட் கிங் கோல், பிங் கிராஸ்பி, ரஸ் கொலம்போ ஆகியோரின் குரல்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் அவரிடம் இருந்தது. நாலு பேர் கூடியிருக்கும்போது, அந்த மூன்று குரல்களும் கதம்பமாகச் சேர்ந்து ஒலிக்கும் லூயிவில்லிலேயே மிகக் கவர்ச்சியான நடனக்காரர் என்று பெயர் பெற்றவர்.

இவ்வளவு இருந்த போதிலும், அவரைக் கவனித்துக் கொண்டிருந்த இளம் பிராயத்தில்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன்: நீக்ரோ கலைஞர்களுக்கு லூயிவில்லில் எதிர்காலமே கிடையாது என்பதுதான் அது.

8

எனக்குத் தெரிந்த சிறந்த திறமைசாலிகளுள் ஒருவர் என் தந்தை. கறுப்பர்களுக்குச் சுதந்திரமும் சந்தர்ப்பமும் இருக்குமிடத்திலே அவர் வளர்ந்திருப்பாரானால் அவர் வாழ்க்கை எத்தனை வித்தியாசமாக மாறியிருந்திருக்கும் என்று நான் எப்போதும் நினைப்பேன். எனது வெள்ளை ஆதரவாளர்களை நான் விட்டு விலகிச் சென்றதற்கு அதுவும் ஒரு காரணம். இத்தனைக்கும் அவர்கள் நல்லவர்களாக, நியாய புத்தி படைத்த மிதவாதிகளாகத்தான் இருந்தார்கள். இப்போதெல்லாம் தெற்கு வித்தியாசமாக இருக்கிறது. மாறிக் கொண்டு வருகிறது. ஆனால் நான் பெரியவனாகிக் கொண்டிருந்த சமயத்தில் அங்கிருந்து வெளியேறவே விரும்பினேன்..

எந்த இடத்திலிருந்தும் 'வெள்ளை ரத்தம் வந்ததாக எங்கள் குடும்பத்தில் எவருக்கும் தெரியவில்லை. அடிமை முறை இருந்த காலத்தில், அடிமைகளை அவர்களுடைய எஜமானர்களின் பெயரால் அழைப்பது சகஜமாயிருந்தது: ஜோன்ஸ், வில்லியம்ஸ், ராபின்ஸன், ஸ்மித், டேவிஸ் இப்படி. வெள்ளைக்கார எஜமானரான க்ளேயின் பெயரோடு அவருடைய ரத்தமும் எங்கள் ரத்தக் குழாய்களில் பாய்ந்திருக்குமானால், அது கற்பழிப்பினாலும் பலாத்காரத்தினாலும் தான் வந்திருக்கும்.

பழங்காலத்தில், ஏதாவதொரு கறுப்பனின் சாதனையை வெள்ளைக்காரர்கள் ஒப்புக்கொள்ள நேரிடும்போது, அது கறுப்பர்களின் திறமை என்றோ, மேதை என்றோ, ஆற்றல் என்றோ சொல்ல மாட்டார்கள். அந்தக் கறுப்பனின் உடலில் "வெள்ளை ரத்தம்' இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் தேடுவார்கள். அதே

போல், ஒரு கறுப்பனிடம் எத்தனை தான் வெள்ளை ரத்தம் கலந்திருக்கட்டுமே - திருடனாகவோ குடிகாரனாகவோ, கஞ்சாக் குற்றவாளியாகவோ, ஓடிப் போனவனாகவோ அவன் இருக்க நேர்ந்தால், அவனுடைய "வெள்ளை ரத்தத்தை விட்டு விடுவார்கள். அப்போது அவன் வெறும் கறுப்பன்தான்.

வெள்ளை ரத்தத்துக்கு உயர்வுச் சிறப்பு உண்டென்பது உண்மையானால் நான் குத்துச் சண்டையிட்ட அறுபது வெள்ளையர்களும் என்னைக் கூழ் கூழாகத் துவைத்திருப்பார்கள். ஒலிம்பிக்ஸில் அந்த ரஷ்யர்களும் போலஷ்காரர்களும் என்னைக் கசாப்புப் போட்டிருப்பார்கள். ஜெர்ரி க்வாரியும் மில்டென்பெர்கரும் உலக ஹெவி வெயிட் சாம்பியன்களாக இருந்திருப்பார்கள்.

க்ளே என்கிற பெயரில் எனக்கிருந்த கொஞ்ச நஞ்சப் பெருமையும், எஜமானர் க்ளே கறுப்பர்களைப் பற்றி என்ன நினைத்திருந்தார் என்பதை அறிந்து கொண்டபோது மறைந்தே போய்விட்டது. (இவ்வளவுக்கும் க்ளே அடிமை முறையை ஒழிக்க வேண்டுமென்ற கட்சியைச் சேர்ந்தவர்.) ஸென்டிரல் ஹை பள்ளியில் என்னுடைய ஆசிரியர்களில் ஒருவருக்கு, நான் 'க்ளே' என்று பெயர் கொண்டிருப்பதில் பெருமை. இடைவிடாமல் அவர் என்னிடம் சொல்வார் : "ஆபிரகாம் லிங்கனின் மாபெரும் நண்பரும், நிற வேற்றுமையை எதிர்த்துப் போராடிய பெரியவருமான மனிதரின் பெயரை நீ வைத்துக் கொண்டிருக்கிறாய். நீ அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றினால் போதும்." இறுதியில் அந்த க்ளேயைப் பற்றி அறிய நான் ஆவல் காட்டியபோது, ஹோரஸ் க்ரீலி எழுதிய, 'காஷியஸ் எம். க்ளேயின் கட்டுரைகள்' என்ற புத்தகத்தைப் படிக்குமாறு சொன்னார்.

அடுத்த வாரம் அந்தப் புத்தகத்தை அவரிடமே திரும்ப எடுத்துச்

சென்றேன். இனங்களைப் பற்றி அந்த மாபெரும் க்ளே என்ன சொல்லியிருக்கிறார் என்பதை உரக்கப் படித்துக் காட்டினேன்: "காகேஸியன் அல்லது வெள்ளை இனத்தார் தான் மேம்பட்டவர்கள் என்பது என் அபிப்பிராயம். அவர்களுடைய மூளை இன்னும் பெரியது; இன்னும் வளர்ச்சி பெற்றது; தேக அமைப்பு மிகச் சிறந்தது; இன்னும் நேர்த்தியான உடற்கட்டு; பிரமிட் கோபுரங்களைக் கட்டியவர்களும், எகிப்தியர்களுக்கு எழுத்தும் குறியீடுகளும் கண்டுபிடித்துக் கொடுத்தவர்களும் வெள்ளையர்கள் தான் என்று நவீன காலத்துக் கண்டுபிடிப்புகள் நிரூபித்துள்ளன. வெகு நாளாக விவாதிக்கப்பட்டு வரும் இந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டுவிட்டது. கடந்த எல்லா நூற்றாண்டுகளிலும் காகேஸியன் இனத்தார்தான் நாகரிகத்தில் முதலிடம் பெற்றவர்கள் என்பதை எல்லா வரலாற்றாசிரியர்களும் இன்று ஒன்றுபட்டு ஒப்புக் கொள்கிறார்கள்."

புத்தகத்தை வாசித்துப் பார்த்த என் ஆசிரியருக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. வெள்ளைக்கார க்ளேயின் அடிச்சுவட்டைப் பின்பற்றும்படி எனக்கு அவர் அறை கூவியது அதுவே கடைசித் தடவை. க்ளே தன் அடிமைகளை விடுவித்தாரேயொழிய, வெள்ளையர்களே மேலானவர்கள் என்ற கருத்தை விட்டுவிடவில்லை.

இருந்தாலும் உண்மையில் அந்தப் பெயரின் ஒலி எனக்குப் பிடித்திருந்தது. கறுப்பர் வரலாற்றை இன்னும் ஆழமாகப் படிக்கும் வரை, மிஸ்டர் முகம்மதுவின் போதனைகளைப் பற்றிக் கேள்விப்படும் வரை, என் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. பிறகுதான், எதற்காக ஓர் அடிமை எஜமானர் வழங்கிய பெயரை - அவர் மிதவாதியாகவோ எப்படியோ

இருக்கட்டும் - நாம் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். என் அடிமை எஜமானர்களின் பெயர் வெளிப்படையாகத் தெரியும்படியும், என் கறுப்பு முன்னோர்கள் தெரியாமலும், அறியாமலும் கௌரவிக்கப்படாமலும் போகுமாறு நான் ஏன் செய்ய வேண்டும்?

கிராண்ட் தெருவில் நான் வளர்ந்து பெரியவனான வீட்டை நோக்கி பஸ்ஸைச் செலுத்துகிறேன். போகும் வழியில் நான் ஓடி விளையாடிய பழைய சுற்று வட்டாரங்களைச் சுட்டிக் காட்டுகிறார் அம்மா.

"அதோ அந்த வேலி - அங்கேதான் இவன் ஏறி உட்காருவது வழக்கம். பாட்டி வீட்டில்தான் முதன் முதல் நடக்க ஆரம்பித்தான். நான் வேலைக்குப் போகும்போது பாட்டி தான் இவனைப் பார்த்துக் கொள்வார். ரொம்பக் காலத்துக்கு முன் வெர்ட்னர் ஸ்மித் நிறுவனத்தில் நான் ஒருமுறை வேலை பார்த்தேன். அப்போது நான் சின்னப் பெண் - பதினைந்தே வயது...."

என் அம்மாவின் பழைய முதலாளியான வெர்ட்னர் ஸ்மித், லூயி வில்லின் கோடீசுவரர்களில் ஒருவராக ஆனார். என் குத்துச் சண்டை போட்டிகளை ஸ்பான்ஸர் செய்திருக்கிறார்.

ஒரு தெரு முனையில் கும்பலாகச் சில குழந்தைகள் நின்று கையை ஆட்டுகிறார்கள். அவர்களை ஏற்றிக் கொள்கிறேன். என் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவழித்த வீட்டைப் பார்ப்பதற்குச் செல்கிறேன். தெருவை அடைந்ததும் பஸ்ஸை விட்டிறங்கி, என் பழைய வீட்டின் முன்னே போய் நிற்கிறேன். அது விற்பனைக்கு வந்திருக்கிறது "நான் இதை வாங்கப் போகிறேன்" என்கிறேன். அதை ஒரு நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

பழைய தெருக்களிலே பஸ்ஸை ஓட்டிக்கொண்டு செல்கையில், இங்கே நடமாடவே நான் பயந்து கொண்டிருந்த காலம் ஞாபகம் வருகிறது. எனக்கு அப்போது பதினாறு வயது. உடற்பயிற்சி சாலையிலும், டூர்ணமெண்ட்களிலும், ஸெண்ட்ரல் ஹையிலும் நான் 'ராஜா' என்று கருதப்பட்டேன். எந்தச் சண்டைக்காரனானாலும் நான் எதிர்த்து நின்றேன். தலைநிமிர்ந்து பெருமிதத்துடன் தெருக்களில் நடப்பேன் - கார்க்கி தெருவுக்கு வந்திருக்கிறான் என்று கேள்விப்படுகிற சமயங்களைத் தவிர. கோஷ்டியுடனோ கோஷ்டி இல்லாமலோ நான் ஸ்னேக் டவுனிலும் வெஸ்ட் எண்டிலும் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில், கார்க்கிதான் பேட்டையின் முடிசூடா மன்னனாக விளங்கினான். போட்டி ஆள் எவனையும் அவன் சகித்துக் கொள்ள மாட்டான்.

கோல்டன் க்ளவ்ஸ், ஏ ஏ யு, ஒலிம்பிக்ஸ் ஆகிய போட்டிகளை நான் வெல்ல வேண்டியவனாயிருந்தேன். அவ்வளவையும் வெல்லுவேன் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். ஆயினும் குத்துச் சண்டைக்காரன் என்ற முறையில் எது எனக்கு மிக அதிகமான நம்பிக்கை ஊட்டுமோ அந்த மகுடத்தைக் கார்க்கி பிடித்து வைத்துக் கொண்டி இருந்தான். அத்தனை பேரையும் - என்னை உள்பட - நடுங்க வைத்துக் கொண்டிருந்தான் அவன். ஒவ்வொருவரையும் அடித்து வீழ்த்தினான். என்னையும்தான்.

உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஆகப்போகிறேன் என்று ஏற்கெனவே நான் அறிவித்திருந்தேன். அதைக் கேட்டுக் கார்க்கி சிரித்தான். குத்துச் சண்டைக்காரன் என்றால் சுத்தப் பொட்டைப் பையனாகத்தான் இருப்பானாம். "பெரிய வாயைத் தவிர வேறெதுவும் காஷியஸிடம் கிடையாது," என்று அனைவரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான். பார்க்கியைக் கண்டால் நழுவுவதை

என்றைக்கு விடுகிறேனோ அன்றைக்குத் தான் நான் ஒரு குத்துச் சண்டைக்காரன் என்கிற உண்மையான நம்பிக்கை எனக்கு ஏற்படும் என்று உணர்ந்தேன்.

கார்க்கி என்னைவிட மூத்தவன்; என்னைவிடக் குள்ளமானவன்; குண்டாயும் உள்பக்கம் வளைந்த காலுடனும் இருந்தான். ஆனால் இடுப்புக்கு மேல், 'பலசாலியாவது எப்படி?' என்ற விளம்பரங்களில் மிஸ்டர் அட்லாஸின் படம் போட்டிருக்குமே, அது போலிருப்பான். ஒழிந்த நேரங்களில் வெயிட் தூக்குவான். நாலு அங்குல கனமுள்ள புத்தகங்களைக் கையால் கிழிப்பான். முதல் தடவை அவனை நான் பார்த்த போது, மத்திய கால்பந்து கோஷ்டியைச் சேர்ந்த ஓர் ஆளைத் தலைகீழாகப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தான் - அவனுடைய பையிலிருந்து பணம் கீழே விழும் வரை...

கார்க்கியின் தெருப் பக்கம் போவதாயிருந்தால் சுற்றி வளைத்துக் கொண்டு வேறு வழியாகத்தான் போக வேண்டும். இல்லாவிட்டால் அவனைத் தாண்டிக் கொண்டு செல்வதற்காகத் 'தண்டல்' செலுத்த வேண்டும். அவனுடைய நிரந்தரமான வேலை, ஒரு மதுபானக் கடையில் 'வாத்தியார்'. ரௌடிகளையும் குடிகாரர்களையும் கழுத்தைப் பிடித்துத் தூக்கி வெளியே எறிவான். 'ஸைட்' வருமானமும் உண்டு. அசையாமல் நின்றபடி காடிலாக் காரின் முன்புறத்தை எத்தனை உயரம் தூக்க முடியும் என்று பந்தயம் கட்டுவான். பந்தயப் பணம் கணிசமாக இருக்குமானால் லாரியைத் தூக்குவதும் உண்டு.

அவனுடன் எனக்குப் பல மோதல்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு முறையும் நான்தான் உதை வாங்குவேன்; அது என்னை உலுக்கியெடுத்தது. பயிற்சி, கெட்டிக்காரத்தனம், பாக்ஸிங் அறிவு - இவ்வளவும் எனக்கு இருந்த போதிலும், கார்க்கியை

வீழ்த்தினாலொழிய குத்துச் சண்டையை ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்வதில் எனக்கு எவ்விதப் பயனும் கிடையாது என்று எண்ணத் தொடங்கினேன். கார்க்கியை மட்டும் வீழ்த்திவிட்டால், உலகத்தில் எவரையும் வீழ்த்திவிட முடியும் என எண்ணினேன்.

பாக்ஸிங் மேடைக்கு அவன் எப்போதாவது வந்தால் அவனை எப்படியும் உதைத்துக் காட்டுவேன் என்று பீற்றிக் கொண்டேன். அந்தமட்டுக்கு எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால் அது யார் காதிலோ விழுந்து, கார்க்கியின் காதிலும் போட்டு விட்டார்கள். அவனுக்கு ஆத்திரம்; அவமானம்; அவனுக்கு வெறியே பிடித்துவிட்டது உண்மையில். க்ளேக்கும் கார்க்கிக்குமிடையே ரத்தக்களரி நடக்கப் போகிறது என்ற வதந்திகள், பல வாரங்கள் வரை கறுப்பர் வட்டாரங்களில் உலவின. பல வருடங்களுக்குப் பிற்பாடு ஜோ ஃபிரேஸி யருக்கும் எனக்கும் நடந்த பெரும் குத்துச் சண்டைப் போட்டி எத்தனை பரபரப்பு ஏற்படுத்தியதோ அதே அளவுக்கு அன்று அந்தச் சின்ன ஊரிலும் ஏற்பட்டது. மன்னதைப் போலவே முன்னதும் எனக்கு முக்கியமானதாக விளங்கிற்று.

என் நண்பர்கள் என்னை உசுப்பியிராவிட்டால் அது நிகழ்ந்தே இருக்காது. கார்க்கி வேலை செய்யும் மதுக்கடையைக் கடந்து நான் போய்க் கொண்டிருந்தேன். டீ பர்ட்டைத் துருத்திக் கொண்டு மார்பு புடைக்க, தூண் போன்ற கைகளுடன் வாசலில் கார்க்கி நின்றிருந்தான். அவனைத் தாண்டிக் கொண்டு போனேன். மதுபானக் கடையில் இருந்தவர்களில் பாதிப்பேர் அவனைப் பிடித்துத் தடுத்திரா விட்டால் என்னை அவன் அக்கக்காய்க் கிழித்துப் போட்டிருப்பான்.

அவர்கள் பெரும் பந்தயம் கட்டினார்கள். நான் எத்தனை குத்துச் சண்டை மெடல் வாங்கியிருந்தால்தான் என்ன? ஒரே ரவுண்டில்

கார்க்கி என்னை வாழ்த்தி விடுவானாம். "என்ன, சரிதானா காஷ்? காதிலே விழுந்ததா?"

ஆரவாரம் ஓவென்று எழுந்தது. நான் பந்தயத்தை ஏற்றேன்.

9

சட்டதிட்டங்களோ, நடுவரோ, ஒழுங்குமுறைகளோ இல்லாத தெருச் சண்டையில் கார்க்கியுடன் மோதுவது தற்கொலைக்குச் சமானம் என்று எனக்குத் தெரியும். ஆகவே கொலம்பியா ஜிம்னேஷியத்தில் நடைபெறும் 'நாளைய சாம்பியன்கள்' பந்தயத்தில் அவனுடன் சண்டை செய்வதாக அறிவித்தேன். 'அது ஒன்றும் உண்மையான சண்டையாகாது' என்றான் கார்க்கி. ஆனால் தெருவில் கூடியிருந்தவர்கள் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். ஆகையால் சட்டென்று ஏற்றுக் கொண்டான். எங்களை மூன்று ரவுண்ட் போட்டியில் சேர்த்தார்கள். அதில் ஜெயிக்கிறவன் லூயிவில்லின் உண்மையான குத்துச் சண்டை சாம்பியன் என்று அறிவிக்கப்படுவான். "கார்க்கி இவன் முதுகெலும்பை முறித்து, மண்டையைப் பிளந்து, விலா எலும்புகளைக் கிழிக்கப் போகிறான்!" என்று மதுக்கடை அபிமானிகள் குஷியாகப் பேசிக் கொண்டார்கள். "இவன் ஓட்டை வாயைக் கார்க்கி அடைத்துவிடுவான்."

மணி அடித்தவுடனே கார்க்கி பாய்ந்து வந்தான். இடக்கையையும் வலக்கையையும் அவன் சுழற்றிக் கொண்டு வந்த வேகத்தில் நடுவரின் தலை கிட்டத்தட்டப் பறந்துவிடும் போலிருந்தது. ஆனால் என் தலையைத் தாக்கத் தவறி விட்டான். தாக்கப்படும் போது சட்டென்று பின்புறம் சாய்வது, எதிரி எதிர்பாராத சமயம் வேகமாக அவன் மீது சிறு குத்துக்கள் விடுவது, அவன் கைக்கு அகப்படாமல் சுற்றிச் சுற்றி வருவது ஆகிய தந்திரங்களை நான் கற்றுத் தேர்ந்திருந்தேன். சில நிமிடங்களிலேயே நான் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் இடக்கைக் குத்துக்களைச் சரமாரியாக அவன் முகத்தில் வீசினேன். ஆனால் அவன் விட்ட குத்து எதுவும்

என்மீது படவில்லை. ரொம்ப வேகமாயும் ரொம்ப ஆக்ரோஷமாயும் அவன் 'சண்டை' செய்தானாகையால் முதல் ரவுண்ட் முடியும்போது பத்து ரவுண்ட் சண்டையிட்டவன் போல மூச்சு வாங்கிற்று அவனுக்கு. குறுக்கு வசமாக நான் தொடுத்த வலதுகைக் குத்துக்கள் அவன் கண்ணைக் கறுப்பாக்கி, மூக்கை ரத்தம் கசிய வைத்தன. அவன் வாயிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

இரண்டாவது ரவுண்டு முடியும் முன்பு திடீரென்று நடுவே அவன் நிறுத்திக் கொண்டு கத்தினான்: "இல்லை, இல்லை! இது நியாயமில்லை!"

தள்ளாடியபடி அரங்கிலிருந்து வெளியேறி டிரெஸ்ஸிங் ரூமுக்குப் போய் உடைகளை மாற்றிக் கொண்டு ஜிம்னேஷியத்தை விட்டுப் போய்விட்டான்.

ஸென்ட்ரல் ஹை பள்ளியிலிருந்து வந்திருந்த என் வகுப்பு தோழர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

என்னைத் தங்கள் தோள் மீது ஏற்றிக் கொண்டார்கள். "செத்தான் ராஜா! நம் எல்லாருக்கும் இப்ப சுதந்திரம்!"

ஜிம்னேஷியத்திலும் சரி, தெருக்களிலும் சரி நான் புதிய 'ராஜாவாகிவிட்டேன்.

பணத்தைப் பொறுத்தமட்டில் அது முக்கியமான வெற்றியல்ல. ஆனால் பதினாறு வயதான எனக்குக் கார்க்கியுடன் நடத்திய குத்துச் சண்டை ரொம்பப் பெரியது. நான் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றை அது எனக்குச் சொல்லித் தந்தது.

என் பக்கத்து வீட்டில் வளர்ந்தவனும் பழைய தோழனுமான லாரன்ஸ்

மண்ட்கோமரியிடம் பிற்காலத்தில் ஒரு நாள் விசாரித்தேன் - இப்போது கார்க்கி எங்கே இருக்கிறான் என்று. அத்தனை வருடங்களும் என் வளர்ச்சியைப் பற்றி கார்க்கி கவனித்துக் கொண்டுதான் வந்திருந்தான். ஓரளவுக்குச் சினேகிதர்களாக நாங்கள் ஆகியிருந்தோம். ஆகவே நான் நார்ட்டனுடன் நடத்திய குத்துச் சண்டை பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று அறிய விரும்பினேன்.

"கார்க்கி இறந்து விட்டான்," என்றான் மண்ட்கோமரி. "ஒரு வாரம் முன்பு கொல்லப்பட்டு விட்டான்."

"என்ன!"

"வார்னர் தெருவில் உள்ள ஒரு மதுபானக் கடையில். போலீசாருடன் சண்டையிட்டதில் துப்பாக்கியால் சுட்டு விட்டார்கள். வந்த மாதிரியே போய்விட்டான் - தெருச் சண்டையில்."

வீட்டை நோக்கித் திரும்புமுன், ஒரு கத்தோலிக்கப் பள்ளிக்குப் பஸ்ஸைச் செலுத்துகிறோம். நான் அங்கே மாடிப் படிகளைக் கூட்டுவது, தரையைச் சுத்தம் செய்வது, நூல் நிலையத்தைக் கவனிப்பது முதலிய வேலைகளைப் பார்த்ததுண்டு. அப்போது அதற்கு நாஸரத் காலேஜ் என்று பெயர். ஸிஸ்டர் ஆலென் என்ற கன்னிகா ஸ்திரீ இருக்கிறாரா என்று விசாரிக்கிறேன். அவர் இப்போது இல்லை என்று வரவேற்பு அறையிலுள்ள ஸிஸ்டர் தெரிவிக்கிறார். ஸிஸ்டர் கிறிஸ்டினா இருக்கிறாரா என்று கேட்கிறேன்.

அழைத்து வருவதாகச் சொல்லிப் புறப்படுகிறார். போகுமுன், என்னைப்பற்றிப் படித்திருப்பதாகச் சொல்கிறார். காலேஜில் ஒரு

நாற்காலியின் படம் வைத்திருக்கிறார்களாம். அதனடியில் இங்கேதான் காஷியஸ் க்ளே தூங்குவது வழக்கம்' என்று குறிப்பு எழுதி வைத்திருப்பதாகச் சொல்கிறார்.

ஸிஸ்டர் கிறிஸ்டினா வருகிறார். "உன்னைப் பற்றி நன்றாய் நினைவிருக்கிறது - கண்ணாடியைப் பார்த்தால் போதும், கையை வீசிக் குத்துகிற மாதிரி பாவனை பன்னாமல் நீ போக மாட்டாய்!" என்கிறார்.

சிக்ஸா பூங்காவின் வழியே செல்கிறோம். ஒரு நாள் விடாமல் தினந்தோறும் காலையில் நான் ஓட்டப் பயிற்சி செய்தது இங்கேதான். தினம் ஐந்து முறை சுற்றிச் சுற்றி ஓடிய அதே பாதையில் செல்கிறேன்.

என் பெற்றோரின் வீட்டுக்கு நான் திரும்பிச் சென்ற போது நண்பர்களும் உறவினர்களும் என்னைக் காண வந்திருக்கிறார்கள். இவை என்னுடைய தெருக்கள். இவர்கள் என்னுடைய ஜனங்கள். இவர்களிலே நான் ஒரு பகுதி, என்னிலே இவர்கள் ஒரு பகுதி என்று நான் அறிவேன். என் தோல்வியா? "அது ஏதோ தப்புக் கணக்கு. எந்த விளையாட்டிலும் ஒரு தப்பு ஏற்படுவதுண்டு." என்கிறார் ஒரு நண்பர்.

இத்தனை வருடங்களாக நான் பார்த்திராத பல பேரைச் சந்திக்கிறேன்.

"குடும்பம் எப்படி இருக்கிறது? என்னென்ன விஷயம் நடந்தது? என்ன மாதிரியான வேலையில் நீங்கள் இப்போது இருக்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்கிறேன். அது ஒரு விசித்திரமான உணர்வு. நான் என்ன செய்கிறேனென்று அவர்கள் கேட்கத்

தேவையிருக்கவில்லை. எல்லாருக்கும் அது தெரியும். நான் யாருடன் வாழ்ந்து வளர்ந்தேனோ அந்த மக்கள் இவர்கள். என்னைப்பற்றி இவர்கள் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்களைப்பற்றி எனக்குக் கொஞ்சமும் தெரியவில்லை.

நாஸரத் காலேஜுக்கு எதிரே கொலம்பியா ஜிம்னேஷியம் இருக்கிறது. இங்கேதான் நான் முதன் முதல் குத்துச் சண்டை செய்ய ஆரம்பித்தேன். ஆனால் குத்துச் சண்டையை விஞ்ஞான பூர்வமாக நான் கற்றுக்கொண்ட இடம் இதுவல்ல.

என் சைக்கிள் திருட்டுப் போனது தான் குத்துச்சண்டைத் தொழிலில் இறங்கியதற்கான ஆரம்பமாகும் என்று ஒரு கதை உண்டு. அந்தக் கதை உண்மையேயாயினும், குத்துச் சண்டையை நான் தேர்ந்தெடுத்ததற்கு அது மட்டும் காரணமல்ல.

அப்போது என் வயது பன்னிரண்டு. நானும் எனது நெருங்கிய தோழனான ஜானியும் சைக்கிளில் சுற்றிக் கொண்டேயிருப்போம். தூவிரமான மழைக்காலம் வந்தபோது சுற்ற முடியவில்லை. வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தோம். ஜானிக்குத் தான் பார்த்த விளம்பரமொன்று - திடீரென ஞாபகம் வந்தது. நாலாம் தேதியன்று, நூக்ரோ தொழிலதிபர்களின் தொழில் கண்காட்சியொன்று கொலம்பியா ஆடிட்டோரியத்தில் நடைபெறப் போகிறதாம். ஒரு குத்துச் சண்டை அரங்கும் பந்து எறியும் மேடையும் கொண்ட அந்த ஆடிட்டோரியம் பெரும் பொழுது போக்கு இடமாகும். ஒவ்வொரு வருடமும், நகரிலுள்ள கறுப்பர்கள் 'லூயிவில் ஹோம் ஷோ' என்ற பெயரில் கொலம்பியா ஜிம்னேஷியத்தில் ஒரு பெரிய சந்தை நடத்துவார்கள்.

ஹோம் ஷோவுக்குப் போக முதலில் எனக்கு அவ்வளவாகப்

பிடிக்கவில்லை. பிறகுதான் நோட்டீசுகளைப் பார்த்தோம் - இனாமாகப் பாப்கார்ன், இனாமாகப் பஞ்சு மிட்டாய், இனாமாகத் தின்பண்டங்கள் உண்டு என்று தெரிந்தது. அத்துடன், கிறிஸ்மசுக்காக என் தந்தை எனக்கு ஒரு புது சைக்கிள் வாங்கித் தந்திருந்தார். சிவப்பு விளக்குகள், குரோம் கச்சிதம், முன்புறம் ஸ்பாட் லைட், வெள்ளை மூடியிட்ட டயர்கள், கிரோம் ஸ்போக்ஸ்கள், விளிம்புகள். இந்த சைக்கிளை நாலுபேருக்கு முன்னால் ஜம்பமாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

சாப்பாட்டில்தான் எங்களுக்கு ஆர்வம் இருந்தது. ஏழு மணிக்கு, எல்லாரும் வீட்டுக்குப் புறப்படும் நேரம் வரை நாங்கள் நின்று கொண்டேயிருந்தோம்.

வெளியே வந்தபோது பலத்த மழை. ஆகவே என் சைக்கிள் திருட்டுப் போய்விட்டது என்பதை அறியவே சிறிது நேரம் பிடித்தது. கோபத்துடனும், அப்பா என்ன பண்ணுவார் என்ற பயத்தாலும், தெருக்களில் குறுக்கும் நெடுக்கும் ஓடினோம், சைக்கிளைப் பார்த்தீர்களா என்று விசாரித்துக் கொண்டே கொலம்பியா ஜிம்னேஷியத்துக்குப் போகும்படி யாரோ சொன்னார்கள். "மார்ட்டின் என்று அங்கே ஒரு போலீஸ்காரர் இருக்கிறார். ரெக்ரியேஷன் ஸென்ட்டரில் இருப்பார். அவரைப் போய்ப் பார்," என்றார்கள்.

கீழே இறங்கி அழுது கொண்டே ஓடினேன். ஆனால் குத்துச் சண்டை நடக்கும் ஜிம்னேஷியத்தின் ஒளிகளும் ஓசைகளும் மணமும் என்னைப் பரபரப்பில் ஆழ்த்தியதால் பைக்கைப் பற்றி அனேகமாய் மறந்தே போனேன். பத்து குத்துச் சண்டைக்காரர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். சிலர் பைகளைக் குத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் மேடையில் சண்டை செய்து கொண்டிருந்தார்கள். சிலர் 'ஸ்கிப்பிங்' செய்து

கொண்டிருந்தார்கள்.

போலீஸ்காரர் மார்ட்டின், "விவரம் சொல்கிறாயா," என்றார். நான் சொன்னதைக் குறித்து வைத்துக் கொண்டார். பிறகு நான் புறப்படும் சமயம் என் தோளில் மெல்லத் தட்டி, "இங்கே திங்களிலிருந்து வெள்ளிவரை தினம் தினம் ராத்திரி குத்துச் சண்டை நடத்துகிறோம், ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை. நீயும் சேர விரும்பினால் இதோ விண்ணப்ப பாரம்," என்றார்.

அப்போது என் எடை சுமார் 112 பவுண்டு. நோஞ்சானாக இருப்பேன். குத்துச்சண்டை உறைகளை ஒருபோதும் என் கையில் மாட்டிக் கொண்டது கிடையாது. அவர் கொடுத்த காகிதத்தை மடித்துப் பையில் செருகிக் கொண்டேன். பைக்கைக் கோட்டை விட்டு விட்டு ஒரு பேப்பரையா கொண்டு போவது வீட்டுக்கு! என்னவோ போலிருந்தது. நான் அத்தனை அஜாக்கிரதையாக இருந்ததற்காக அன்றிரவு என் அப்பா கத்தித் தீர்த்துவிட்டார். முதல் தடவையாக எனக்கும் அவர் சொன்னது முழுக்க முழுக்கச் சரிதான் என்று தோன்றியது. 'ஸாரி' என்றேன் அவரிடம். அந்த ஸாரியை மனப்பூர்வமாகவே சொன்னேன்.

அந்தச் சனிக்கிழமை வீட்டில் டிவி பார்த்துக் கொண்டிருந்தேன். 'நாளைய சாம்பியன்கள்' என்ற அமெச்சூர் குத்துச் சண்டை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு மூலையில் மார்ட்டினின் முகம் தெரிந்தது - தன் சீடப் பிள்ளைகளில் ஒருவனைத் தயார் செய்து கொண்டிருந்தார்.

அம்மாவை மெல்ல இடித்து, "அம்மா, அதோ அவர்கிட்டே தான் என் சைக்கிளைப் பற்றிச் சொன்னேன். அங்கே வந்து குத்துச் சண்டையில் கலந்து கொள்ளணும் என்கிறார். அந்த விண்ணப்ப

பாரம் எங்கே?" என்றேன்.

என் துணிகளைத் துவைக்கும்போது சட்டைப் பையிலிருந்து அந்தக் காகிதத்தை எடுத்து வைத்திருந்தார் அம்மா. எழுந்து போய் அதைக் கொண்டு வந்தார். "நீ குத்துச் சண்டைக்காரன் ஆக விரும்புகிறாயா?" என்று கேட்டார்.

"ஆமாம், குத்துச் சண்டைக்காரன் ஆக ஆசைப்படுகிறேன்" என்றேன்.

"எப்படி அங்கே போவாய்? ரொம்பத் தூரமாச்சே? உன் பைக்கும் திருட்டுப் போய்விட்டது. பஸ்ஸுக்குக் காசு கிடையாது."

"யார்கிட்டேயாவது சைக்கிள் இரவல் வாங்கிக் கொண்டு விடுகிறேன்," என்றேன். "வேறே ஒன்றும் வேலையும் இல்லையே?"

என் அப்பாவால் நிச்சயமாக எதையும் சொல்ல முடியவில்லை. அதற்குள் யாரோ வந்து கதவைத் திறந்து, "இங்கே ஜானி காத்துக் கொண்டிருக்கிறான் காஷியஸுக்காக," என்று கூவினார்கள்.

அதிலே விஷயம் முடிந்துவிட்டது. "ஜானியோடும் அந்தக் கும்பலோடும் ஊர் சுற்றுவதைக் காட்டிலும் குத்துச் சண்டை எவ்வளவோ மேல்," என்று சொல்லிவிட்டார் அப்பா. "என்ன செய்தாலும் நல்லதுதான். அவன் போகட்டும்."

ஜிம்னேஷியத்தை அடைந்ததும் எனக்கிருந்த ஆர்வத்தில் மேடையில் ஏறிவிட்டேன் - என்னைக் காட்டிலும் மூத்தவரான ஒரு குத்துச் சண்டைக்காரனுடன், கன்னா பின்னாவென்று குத்து விடலானேன். ஒரு நிமிடம்தான். என் மூக்கிலிருந்து ரத்தம் வழிய ஆரம்பித்தது. என் வாயில் அடி. என் தலை கிறுகிறுத்தது.

இறுதியில் யாரோ என்னை மேடையிலிருந்து வெளியே இழுத்துப் போட்டார்கள்.

10

பயிற்சி சாலையை அடைந்ததும், குத்துச் சண்டை மேடையில் குதித்தேன். என்னைவிட மூத்தவரான ஒருவருடன் மோத ஆரம்பித்து, கை போனபடிக்குக் குத்த முயன்றேன். ஒரு நிமிடத்தில் என் மூக்கிலிருந்து ரத்தம் கொட்டத் தொடங்கிறது. உதடுகள் கிழிந்தன. தலை சுற்றிற்று. யாரோ என்னை வெளியே இழுத்துத் தள்ளினார்கள்.

அடிபட்டு வெளியே வந்த அந்தக் கணத்தில், பேசாமல் தெருக்களில் சுற்றிக் கொண்டு இருந்திருக்கலாமே என்று எனக்குத் தோன்றியது. ஆனால் ஒல்லியான குத்துச் சண்டைக்காரர் ஒருவர் என்னிடம் வந்து என் தோள்மீது கை போட்டு அணைத்தபடி சொன்னார்: "கவலைப்படாதே. எல்லாம் சரியாகிவிடும். முதன் முதல் சண்டை போடும் போது இவர்களோடு போடாதே. உன்னைப் போலப் புதிய நபர்களுடன் போடு. எப்படிச் சண்டை போடுவது என்று யாராவது ஒருவரிடம் கற்றுக்கொள்" என்றார்.

ஆனால் எனக்கு ஏதும் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆள் ஒருத்தரையும் காணோம். மார்ட்டினுக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தது. எப்படிக் காலை வைத்துக் கொள்ள வேண்டும், எப்படிக் குறுக்காகக் குத்தை வீசவேண்டும் என்பதை அவரால் எனக்குச் சொல்லித் தர முடிந்தது. அதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லை. சும்மா கன்னாபின்னாவென்று கையைச் சுழற்றிக் குத்துக்களை வீசிக்கொண்டு, பெண் பிள்ளை மாதிரி நான் சண்டை போட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் ஏதோவொன்று என்னை உந்திக் கொண்டிருந்தது. நான் தொடர்ந்து சண்டை போட்டுக் கொண்டிருந்தேன். தொடர்ந்து பயிற்சி செய்து

கொண்டிருந்தேன். இப்போதும் என் கோஷ்டியுடன் ஊர் சுற்றிக் கொண்டிருந்தேனென்றாலும் பயிற்சி சாலைக்குத் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தேன்.

ஒருநாள் மார்ட்டின் என்னிடம் சொன்னார்; "நீ செய்வது எனக்குப் பிடித்திருக்கிறது. நீ விடாப்பிடியாய் இருக்கும் விதம் எனக்குப் பிடித்திருக்கிறது. உன்னை டெலிவிஷன் காட்சிக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். அடுத்த டெலிவிஷன் குத்துச் சண்டையில் நீ இருப்பாய்"

மாநிலம் பூராவிலும் உள்ளவர்கள் என்னை டெலிவிஷனில் பார்ப்பார்கள்! உற்சாகம் பிய்த்துக் கொண்டு போயிற்று எனக்கு. வாரம் பூரா பயிற்சி செய்தேன். ரான்னி என்ற வெள்ளைக்காரனுடன் நான் சண்டை போடும்படி செய்தார்கள். மயிரிழையில் வெற்றி பெற்றேன்.

திடீரென்று எனக்குப் புது வாழ்க்கை ஏற்பட்டுவிட்டது. ஒரு குத்துச் சண்டைக்காரன் என்று என்னை எல்லாரும் ஒப்புக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். முதல் வெற்றியை நான் அடைந்தவுடன் என் தந்தை, "இன்னொரு ஜோ லூயி போல் என் பிள்ளை வரப்போகிறான். காஷியஸ் க்ளே, உலக ஹெவி வெயிட் சாம்பியன்!" என்று சோதிடம் சொன்னபடி தெருவில் குறுக்கும் நெடுக்கும் பவனி வரலானார். எனக்கு ஜோ லூயியின் சாயல் இருப்பதாக அம்மா கண்டுபிடிக்கத் தொடங்கினார். "ஜோ லூயியைப் போலவே இவனுக்கும் பெரிய உருண்டைத் தலை இல்லை?" என்று உறவினர்களிடம் சொன்னார்.

அம்மாவுக்கு வாயில் இரண்டு பல் விழுந்து பொக்கையாக இருந்தது. அதற்குக் கூட நான்தான் காரணம் என்று இப்போது

சொல்ல ஆரம்பித்தார். "குழந்தையாயிருந்த போதே அவனிடம் சண்டைக் குணம் இருந்தது. ஒருநாள் அவனை அடித்தேன். ஒரே வெறியாகி விட்டது அவனுக்கு. திரும்பி ஒரு குத்து விட்டான். என் இரண்டு பல்லும் விழுந்துவிட்டது. அப்போது அவன் ஒரு வயதுக் குழந்தைதான். எவ்வளவு பலமாய் அவனால் குத்த முடியும் என்பது ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டது."

ஒவ்வொரு வாரமும் 'நாளைய சாம்பியன்கள்' நிகழ்ச்சியில் மார்ட்டின் என்னைச் சேர்க்கலானார். ஏனெனில், களைத்துப் போன பிறகுகூட நான் வாங்கு வாங்கென்று வாங்கினேன். ஜெயித்துக் கொண்டிருந்தேன். நான் அத்தனை திறமைசாலி என்று அர்த்தமல்ல. ஒருபோதும் நிறுத்துவது கிடையாது. அதுதான் காரணம். மற்றச் சண்டைக்காரர்களானால் விட்டு விடுவார்கள்; அல்லது தைரியமிழப்பார்கள்.

ஆனால் அத்தனை காலமாக மார்ட்டினின் கீழே நான் குவித்த வெற்றிகள் சொல்லித் தராத ஒன்றை, கென்ட்டகி மாநில கோல்டன் க்ளவ்ஸ் டூர்ணமென்ட்டின் போது நான் அடைந்த ஒரு தோல்வி சொல்லித் தந்தது. அந்தப் போட்டியில், ஒரு கறுப்பர் என்னைத் திட்டவட்டமாக வீழ்த்தினார். நான் காயமுற்றேன். ஆனால் என்னைக் காட்டிலும் அவர் திறமைசாலி என்று புரிந்துகொண்டேன். அவர் எங்கிருந்து வருகிறார் என்பதையும் தெரிந்து கொண்டேன். நகரில் முழுக்க முழுக்க கறுப்பர்கள் வசிக்கும் பகுதியில் ஸ்டோனர் என்ற பயிற்சியாளரிடம் தயாரானவர்.

ஸ்டோனரின் ஜிம்னேஷியத்திலிருந்து வரும் பையன்கள் மார்ட்டினின் ஆட்களைக் காட்டிலும் திறமைசாலிகளாயிருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே நான் கண்டிருந்தேன். அவர்கள் மாற்றுக் குத்தில் வல்லவர்கள்.

எங்களைக் காட்டிலும் மேலான ஓர் ஒழுங்குடன் குத்துகிறவர்களாக இருந்தார்கள். சமயம் பார்த்துக் குத்தினார்கள். குத்துக்கள் கூர்மையாக இருந்தன.

ஸ்டோனருடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது மார்ட்டினின் கண்டிப்பான சட்டம். 'நாளைய சாம்பியன்கள்' நிகழ்ச்சியில் சண்டை போடும் ஒவ்வொரு முறையும் எனக்கு நாலு டாலர் கிடைத்துக் கொண்டிருந்தது. ஸ்டோனரின் பையன்கள் யாரும் இந்தப் போட்டியில் அனுமதிக்கப்படுவதில்லை. மார்ட்டின் பையன்களில் பெரும்பாலோர் வெள்ளையர்கள்.

ஒருநாள் மாலை. ஒரு கண்காட்சிக்காக மற்றொரு மாநிலத்திலிருந்து வந்திருந்த குத்துச் சண்டைக்காரர்களை ஸ்டோனரின் சூடர்கள் தரத்திலும் பாணியிலும் புறமுதுகிடப் பண்ணிக் கொண்டிருந்தார்கள். நான் அதிலே மனம் கவரப்பட்டு, ஒரு சான்ஸ் பார்க்கலாம் என்று தீர்மானித்தேன். ரூடியுடன் சென்று ஸ்டோனரைச் சந்தித்தேன்.

லேசான ஆகிருதி கொண்ட அமைதியான கறுப்பர் அவர். தன் வேலையில் அக்கறையாயிருந்தார். தனது குத்துச் சண்டைக்காரர்களின் ஒவ்வோர் அசைவையும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார். சுற்று முற்றும் பார்த்தேன். மார்ட்டினிடமுள்ள வசதிகள் இவரிடம் இருக்கவில்லை. குளிர் காலத்தில் இவருடைய பயிற்சிசாலையில் ரொம்பக் குளிரும். மார்ட்டினின் ஜிம்னேஷியம் கதகதப்பாயிருக்கும். மார்ட்டினிடமுள்ள கையுறைகளையும் கருவிகளையும் காட்டிலும் இவரிடத்தில் இருந்தவை தரத்தில் தாழ்ந்தவையாக இருந்தன.

"இங்கு சேர விரும்பினால் வா," என்றார்.

"என்னை டி.வி.யில் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அவர் தலையாட்டினார் - அசுவாரஸ்யமாக. "உன்னிடம் தைரியம் இருக்கிறது. உறுதி இருக்கிறது. ஆனால் திறமை இல்லை. ராத்திரி எட்டு முதல் பன்னிரண்டு மணி வரை நாங்கள் இங்கே பயிற்சி செய்கிறோம். உன்னால் வர முடியுமென்றால் எப்படிச் சண்டை போடுவது என்று சொல்லித் தருகிறேன்," என்றார்.

மறுநாள் காலை நான் எங்கள் ஜிம்னேஷியத்தை அடைந்தபோது மார்ட்டின் என்னைத் தனியே அழைத்தார், "நீ அங்கே ஸ்டோனரின் ட்ரெயினிங்குக்குப் போயிருந்ததாகக் கேள்விப்பட்டேன்."

என்ன காரணத்தாலோ நான் பயந்து போனேன். ஏதோ குற்றமிழைத்து விட்டது போல அவர் என்னிடம் பேசினார்.

"இந்தப் பயிற்சிசாலையின் சட்ட திட்டங்கள் உனக்குத் தெரியும்," என்றார். "யாரும் ஸ்டோனருடனும் இருந்து கொண்டு என்னுடனும் இருக்க முடியாது. நீயே தீர்மானித்துக் கொள். ஒன்று, ஸ்டோனரை விட்டு விடு. அல்லது நான் உன்னை விட்டு விடுகிறேன்."

நான் மனம் தளர்ந்து போனேன். குத்துச் சண்டைக்காக மார்ட்டின் தருகிற நாலு டாலர் எனக்கு அவசியமாயிருந்தது. ஆனால் ஸ்டோனர் கற்றுத் தரும் சாத்திரமும் திறமையும் கூட எனக்கு அவசியமாயிருந்தன.

வியர்வை கொட்ட, குன்றிப் போனவனாக மார்ட்டினின் முன்னிலையில் நின்றிருந்த எனக்கு நினைவிருக்கிறது. ஸ்டோனரின் ஜிம்னேஷியத்துக்குப் போவதில்லை என்று ஒப்புக்கொண்டேன்

ஆனால் அந்த வருடம் ஸ்டோனரின் சூடப்பிள்ளைகள் ஷிகாகோவுக்குப் போய், அமெச்சூர் டைட்டில்களில் பெரும்பாலானவற்றைத் தட்டிக் கொண்டு வந்துவிட்டார்கள். அழகாகச் சண்டை போடக்கூடியவர்கள். குத்தத் தெரிந்தவர்கள். நடனம் போல் ஆடிக் கொண்டே சண்டை போடுகிறவர்கள். குட்டிக் குத்து, தாக்கு, நழுவல் - எல்லாம், அறிந்தவர்கள். அவர்களது கால் வேலை அருமை. சட்டென்று குனிந்து கொள்வதிலும் பாய்ச்சல் காட்டுவதிலும் வல்லவர்கள். என்னைக் காட்டிலும் இளையவர்கள். இருந்தாலும் அவர்கள் உடம்பு திண்ணென்றிருந்தது. எப்படி இவ்வாறு உடம்பைத் தயார் பண்ணிக் கொண்டார்கள்? நான் கண்டுபிடித்தாக வேண்டும்.

நான் குத்துச் சண்டைக்காரனாகத் தான் ஆக விரும்புகிறேன் என்பது அந்த வருட முடிவுக்குள் தெரிந்துவிட்டது. கிரேஸ் கம்யூனிட்டி ஸென்ட்டருக்குப் போய், குத்துச் சண்டையின் சாத்திரத்தைப் பயிலுவதென்று தீர்மானித்தேன்.

பள்ளிக்கூடம் முடிந்ததும், நாலுமணி நேரம் கத்தோலிக்க ஸிஸ்டர்களுக்காக வேலை செய்வேன். பிறகு மார்ட்டின் ஜிம்னேஷியத்தில் மாலை ஆறு முதல் எட்டு மணி வரை பயிற்சி. இரவு எட்டு மணி முதல் பன்னிரண்டு வரை ஸ்டோனரின் ஜிம்னேஷியம் - உண்மையான பயிற்சி பெற வேண்டி...

ஸ்டோனரின் ஜிம்னேஷியத்தில் கடுமையான ஒழுங்குக் கட்டுப்பாடுகள். அரங்கத்திலே நான் தாக்குப் பிடிக்க வேண்டுமானால் எனக்குக் குறிப்பிட்ட சில தசைகள் வளர்ச்சியடைய வேண்டியது அவசியமென்று ஸ்டோனர் நம்பினார். அந்த விஷயத்தில் அவர் ஈவிரக்கம் காட்ட மாட்டார். ஒரே சமயத்தில், நிறுத்தாமல், இருநூறு இடதுகை சின்னக் குத்துக்கள்

- நேரான, கூரான குத்து வீசும்படி செய்வார். எங்களுக்குக் களைப்பு ஏற்பட்டால் மறுபடி ஆரம்பத்திலிருந்து தொடங்கச் சொல்லி, ஒன்று இரண்டு மூன்று என்று நூறு வரை எண்ணுவார். இருநூறு சிறு குத்துக்களையும், அதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் வீச முடிகிற வரையில் விடமாட்டார். பிறகு ஒரு ஹூக், ஒரு சிறு குத்து, இடது குத்து, ஜகா; அப்புறம், ஒரு நீண்ட குத்து, ஒரு சிறு குத்து, ஸ்கிப்பிங், ஒரு வலது குறுக்கு. திரும்பி வந்து ஒரு ஹூக், சிறு குத்து, இடது ஹூக், ஜகா. ஒரு சிறு குத்து, ஜகா வாங்கு. ஒரு சிறு குத்து, முன்னேறு. குத்துக்களைத் தடுக்கவும், வலது கிராஸ்கள் வீசவும், அவர் எங்களுக்குக் கற்றுத் தந்தார். திரும்பத் திரும்ப அதையே செய்தோம். நூறு தண்டால்களும், நூறு பஸ்கிகளும் செய்தோம்.

என்னுடைய குத்துச் சண்டையின் தோற்றுவாயைப் பற்றியும், ஆரம்ப காலத்தில் என் குத்துச் சண்டைத் திறமைகள் வளர்ந்ததைப் பற்றியும் கூறுகின்ற எல்லாப் பிரசாரப் புத்தகங்களும் மார்ட்டின் தான் என்னை அடை காத்தவர் என்று வர்ணிக்கின்றன. மார்ட்டினுடைய ஜிம்னேஷியத்தில் நாங்கள் செய்ய வேண்டியிருந்ததெல்லாம், பையைக் குத்துவது; ஒருவரையொருவர் தாக்கித் துரத்துவது - இவ்வளவே. என் ஸ்டைல், தாக்குப் பிடிக்கும் சக்தி, என் மொத்த சண்டை முறை எல்லாம் ஸ்டோனர் என்ற கறுப்பரின் பயிற்சி சாலையில்தான் உருவாயின.

11

எனக்கு வயது பதினாலு. என் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருக்கிறேன். ஜிம்னேஷியத்திலிருந்து மழையில் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன்.

மழை வலுத்துக் கொண்டிருக்கிறது. தலையைக் கவிழ்த்துக் கொண்டு, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கார்களை விஸ்ஸென்று கடந்த வண்ணமிருக்கிறேன். ஒரு காரில் ரேடியோ உரக்க ஒலிக்கிறது - கூட்டத்தினரின் பெரும் ஆரவாரம். பிரேக் போடுகிறேன். வளைத்துத் திருப்புகிறேன் வண்டியை. காரின் அருகே வருகிறேன். ஒரு ஹெவி வெயிட் குத்துச் சண்டைப் போட்டியின் நேர்முக வர்ணனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காருக்குள் ஏகப்பட்ட பேர் இருப்பதால் எனக்கு உள்ளே நுழைய இடமில்லை. ஆனால் நான் காருக்குள் தலையை நீட்டி நன்கு ரேடியோ கேட்பதற்கு அனுமதிக்கிறார்கள். நான் எட்டிப் பார்ப்பதற்கும், அறிவிப்பாளர், ஜனங்களின் கூச்சலுக்கு மேலே தன் குரலை உயர்த்தி, "இப்போதும் உலக ஹெவி வெயிட் சாம்பியனாக நீடிக்கிறார் - ராக்கி மார்ஸியானோ!" என்று அறிவிப்பதற்கும் சரியாயிருக்கிறது.

என் நரம்புகளினூடே ஒரு சிலிர்ப்பு! ஸ்கூட்டரில் மேலே செல்கிறேன். அந்த அறிவிப்பாளரின் குரல் காற்றில் மிதந்து வருவது கேட்கிறது : "இப்போதும் உலக ஹெவி வெயிட் சாம்பியனாக நீடிக்கிறார் - ஜீன் டன்னி, ஜோ லூயி, எஸ்ஸார்டு சார்லஸ், ராக்கி மார்ஸியானோ, ஃப்ளாயிட் பாட்டர்ஸன்... காஷியஸ் க்ளே!"

நான் கனவு காணத் தொடங்குகிறேன். என் அடுத்த

வீட்டுக்காரரிடம், 'உலக ஹெவி வெயிட் டைட்டிலுக்காக நான் தயார் செய்து கொண்டிருக்கிறேன்' என்று நான் சொல்லிக் கொண்டு புறப்படுவது போலவும், அடுத்த நாள் ராத்திரி திரும்பி வந்து, 'நான் இப்போது உலக ஹெவி வெயிட் சாம்பியன்!' என்று அறிவிப்பது போலவும் மனக்கண் முன் ஒரு காட்சி. மழை இன்னும் பலமாகக் கொட்டுகிறது. 'என்னால் முடியுமா?' என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். என் பயிற்சி சாலையிலேயே நான் இன்னும் சாம்பியன் ஆகவில்லையே! ஜோ மார்ட்டினைக் கேட்கிறேன். அவர் சந்தேகத்துடன் தலையசைக்கிறார். "சொட்டச் சொட்ட நனைந்திருக்கும் போதும் நீ நூற்றுப் பதினைந்து பவுண்டு கூட வரவில்லையே? ஹெவி வெய்ட் என்றால் எவ்வளவு பெரிய ஆளாக இருக்க வேண்டும் தெரியுமா? லைட் வெயிட்டாக வேண்டுமானால் நீ வரலாம்."

ஆனால் நான் 'ஹெவி வெயிட்'டாகத்தான் வர விரும்புகிறேன். என் குடும்பத்தில் அம்மா வழியிலும் சரி, அப்பா வழியிலும் சரி, யாரும் அந்த அளவுக்குத் தாட்டியான ஆளாக இருந்தது கிடையாது. இருந்தாலும்கூட, ஏனோ தெரியவில்லை, நான் வரமுடியும் என்று உணர்கிறேன். மறுநாள் மேலும் சிரத்தையுடன் பயிற்சி செய்யத் தொடங்குகிறேன். டெலிவிஷனில் காட்டப்படும் சண்டைகளை முன்னைக் காட்டிலும் அக்கறையாகக் கவனிக்க ஆரம்பிக்கிறேன். குத்துச் சண்டைக்காரர்கள் ஒருவருக்கொருவர் குத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் விதத்தை கவனிக்கிறேன். அவர்களது குறைகள் எனக்குத் தெளிவாகப் புலப்படுகின்றன. அவர் குத்துவார், அப்புறம் இவர் குத்துவார். அவர்கள் எப்படி நிற்கிறார்கள், எப்படி ஒரு குறிப்பிட்ட வகைக் குத்தையே உபயோகிக்கிறார்கள் என்பதைக் கவனிக்கிறேன். அவர்களை என்னால் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை முகிழ்க்கிறது. பாட்டர்ஸனைப் பார்க்கும் போதும்

அப்படித்தான். ஆர்ச்சி மூரைப் பார்க்கும்போது கூட அப்படியே. அவர்களுக்கு நகரத் தெரியவில்லை, வட்டமடிக்கத் தெரியவில்லை. சரியான சமயத்தில் பின்னோக்கிச் சாய்வதில்லை அவர்கள். நாம் அடிபடாமலேயே எதிராளிக்கு அடி கொடுப்பது எப்படி என்று அவர்களுக்குத் தெரியவில்லை. என்னால் அந்த வித்தையைக் கற்றுக் கொள்ள முடியும் என்பதை உணர்கிறேன். ஒவ்வொரு நாளும், குத்து என்மீது விழாமல் பின் வாங்குவதற்குப் பயிற்சி செய்து கொள்கிறேன். சிறு குத்து விடுகிறேன் - பின்னர் பின் புறம் வளைந்து கொள்கிறேன். பெரும்பாலான குத்துக்களிலிருந்து - அதுவும் இடைவெளி குறைவாக இருக்கும்போது - மற்றவர்கள் செய்வது போல் தலையை அசைப்பதாலோ, முன்னால் குனிவதாலோ தப்பிக்க முடியாது என்று கண்டு கொள்கிறேன்.

குத்துச் சண்டையைத் தொழிலாகக் கொண்ட அனுபவசாலிகள், "இப்படி நீ பின்னுக்கு வளைந்தால் உன் தலை ஒருநாள் பறந்துவிடப் போகிறது" என்று எச்சரிக்கிறார்கள். ஆனால் புத்திசாலிகளுக்கு நினைவு இருக்கிறது - அந்தக் கால சாம்பியன் ஜாக்ஜான்ஸன் கூடப் பின்புறம் சாய்வதுண்டு என்பது.

கொஞ்ச நாளில் எனக்குள்ளேயே ஒரு 'ராடார்' வளர்த்துக் கொண்டுவிட்டேன். எவ்வளவு தூரம் என்னால் பின்னே வளைய முடியும்.டகாரென்று குனிந்து கொள்வதற்கு எது சரியான நேரம் முதலியவற்றைத் தெரிந்து கொள்கிறேன். எதிராளியைக் களைப்படையச் செய்ய ஒரு முறை இருக்கிறதென்று கண்டு கொள்கிறேன். குத்து விழக்கூடிய அளவுக்கு எதிரிக்குக் கிட்டத்தில் முகத்தைக் கொண்டு செல்வது; குத்துமாறு எதிராளியை ஊக்குவது; பிறகு கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டு பக்கவாட்டில், வலதுபுறம் அல்லது இடதுபுறம்

நகர்ந்து கொண்டு விடுவது. பிறகு சிறு குத்து விடுவது, சட்டென்று மீண்டும், குத்து விழக்கூடிய கிட்டத்தில் என் தலையை நீட்டுவது வெறும் காற்றையே குத்திக் கொண்டிருந்தால் எப்படிப்பட்ட குத்துச் சண்டைக்காரனுக்கும் அயர்வு ஏற்படத்தானே செய்யும்? அவன் சக்தி உறிஞ்சப்பட்டு விடும்.

என் மீது குத்து வீசுவது எளிது என்று பழைய குத்துச் சண்டைக்காரர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் அது அவ்வளவு எளிதல்ல. தற்காப்பிலே நான் குறியாயிருக்கிறேன். நான் ஒரு குத்து விடும்போது எதிராளி ஒரு பஞ்ச் வீசுவானென்பது எனக்குத் தெரியும் - ஆகவே பின்னால் நகர்ந்து கொள்கிறேன்.

"இன்னும் கடினமாகப் பயிற்சி செய்யப் போகிறேன்," என்று ஒரு நாள் இரவு ஸ்டோனரிடம் கூறினேன். "உங்களுக்குத் தெரிந்த அத்தனையையும் எனக்குக் கற்று தர வேண்டும்."

ஸ்டோனர் என் கண்களை ஆழமாக நோக்குகிறார் - நான் எத்தனை ஸீரியஸாக இருக்கிறேன் என்பதைப் பார்ப்பது போல. பிறகு சொல்கிறார்: "உன்னிடம் வேகம் இருக்கிறது. திறமை இருக்கிறது. நாட்டிலுள்ள சிறந்த சண்டைக்காரர்கள் சிலபேர் இப்போது ஊருக்கு வந்திருக்கிறார்கள்: மளமளவென்று காரியத்தில் இறங்கு. டூர்ணமென்ட் நடத்தும்போது நீ சாம்பியனாக வருவாய்."

ஒரு நிமிட முன்னால் வரையில் என் கைகளில் எரிச்சல் ஏற்பட்டிருந்தது. என் புஜங்களும் கால்களும் வலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றின்மீது அயோடின் கொட்டி ஆற்றுவதைக் காட்டிலும் விரைவாக அவர் சொன்ன இந்த வார்த்தைகள் என் வலியைக் குணப்படுத்தின.

"கோல்டன் க்ளவ்ஸ் போட்டியில் நான் வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறீர்களா?" என்றேன்.

"கோல்டன் க்ளவ்ஸ் மட்டுமில்லை. ரோம் ஒலிம்பிக்கில் தங்க மெடல்கூட நீ வாங்கப் போகிறாய்," என்றார் ஸ்டோனர் - வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பது போல.

ஸ்டோனர் சொல்லிக் கொடுக்கு முன்னரே பெரும்பாலான பந்தயங்களில் நான் வென்று வந்திருந்தேன். ஸ்டோனரின் பாடங்களுக்குப் பிறகு அது சுலபமாயிற்று. 167 அமெச்சூர் குத்துச் சண்டைகளில் 161 நான் ஜெயித்தேன்.

மார்ட்டினும் ஸ்டோனரும் ஒலிம்பிக் பதக்கத்தின் தங்கப் பளபளப்பு என் கண்ணிலே மின்னும்படி தொடர்ந்து செய்து வந்தார்கள்; "ஒரு குத்துச் சண்டைக்காரனுக்கு அது பத்து லட்சம் டாலருக்கு சமானம். அதை நீ வென்று விட்டால் தேசிய வீரனாகி விடுவாய். லிண்ட்பெர்க் மாதிரி புகழ் பெற்றவனாவாய். கவர்னர், மேயர், போலீஸ், ஏன் ஜனாதிபதிகூட உன்னைக் கௌரவிப்பார்கள். உன் வாழ்நாள் பூரா நீ ஞாபகம் வைத்துக் கொள்ளக்கூடிய ஒன்று அது."

அவர்கள் சொன்னதும் சரியே. கோல்டன் க்ளவ்ஸ் டூர்ணமென்ட்களிலும் ஏஏயு விருதுகளிலும் ஜெயித்தது நினைவிருக்கிறது. ஆனால் மிக அதிகமாக என் நினைவில் இருப்பது 1960 ஆம் வருடத்துக் கோடைக்காலம் தான். ரோமிலிருந்து திரும்பிய என்னை வெற்றி வீரனாக ஊர் வரவேற்றது.

ரோமிலிருந்து திரும்பியபோது, நான் என் மானேஜராக நியமித்துக் கொள்ள விரும்பியது முன்னால் சாம்பியனும் கறுப்பருமான ஜோலூயியைத்தான். ஆனால் லூயிக்கு அதிகமாகப் பேசப்

பிடிக்காது. ஜம்பமடித்துக் கொள்ளும் ஓட்டை வாயர்களான குத்துச் சண்டைக்காரர்களைப் பிடிக்காது. நான் போட்ட அத்தனை சண்டைகளிலும் தோற்றுப் போவேன் என்று ஆளூடம் கூறியிருந்தார்.

அதன் பின்னர் மற்றொரு கறுப்பர் சாம்பியனான ஷுகர் ரே ராபின்ஸனை அமர்த்திக் கொள்ள விரும்பினேன். அவர் கூழே இருக்க நான் தயார் என்று தெரிவிப்பதற்காக அவரைத் தேடி நியூயார்க் சென்றேன். ரே அவருடைய தொழில் வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் இருந்தார். ஆகவே என்னை ஏற்றுக் கொள்வார் என்று நினைத்தேன். ஆனால் அவர் என்னை ஒதுக்கித் தள்ளிவிட்டார். "இதோ பார் தம்பி, அப்புறமாய் வா. இரண்டு வருஷங்கள் கழித்து வேண்டுமானால் வா, பார்க்கலாம். ஒகே?"

பல வருடங்களுக்குப் பிற்பாடு, நாங்கள் நண்பர்களாக ஆன பிறகு, வருத்தத்துடன் தலையை ஆட்டிக் கொண்டே, என்னை ஏற்றுக் கொண்டிருந்தால் எப்படியெல்லாம் ஆகியிருக்கும் என்று அவர் சொன்னார்.

12

நான் அப்போது பதினெட்டு வயதுப் பையன். நல்ல உயரம். ஸ்வெட் ஷர்ட்டும் காக்கிப் பாண்ட்டும் அணிந்து கொண்டு, கென்ட்டகியில் ப்ரிட்ஜ் டவுனிலுள்ள வில்லியம் ரெயினால்ட்ஸின் எஸ்டேட்டில் வாசல் கேட்டுக்கு வெளியே நிற்கிறேன். மிக வளம் கொழிக்கும் லூயிவில் சுற்றுப் புறங்களில் அதுவும் ஒன்று. ரெயினால்ட்ஸுக்கு என்னிடம் அக்கறை உண்டு என்றும் எனக்கு ஒரு வேலை போட்டுத் தருவாரென்றும் கூறி ஜோ மார்ட்டின் என்னை அங்கே அனுப்பியிருந்தார். காலை ஐந்து மணிக்கே எழுந்து, நாலு மைல் நடந்து, பிறகு பஸ் பிடித்து ப்ரிட்ஜ்டவுனுக்கு வந்திருந்தேன்.

ரெயினால்ட்ஸிடம் எனக்கு வேலை கிடைக்குமென்று மார்ட்டின் முதன் முதல் அறிவித்தபோது, ஜிம்னேஷியம் பூராவிலும் ஒருவகைப் பரபரப்பு பரவியது. அந்தக் கோடீசுவரர் என்னை நிர்வகித்து, என்னைக் 'கவனித்துக் கொள்ளப் போகிறார்' என்று அதன் பொருள். ஒரு குத்துச் சண்டைக்காரனைத் 'தூக்கிவிட' ஒரு கோடீசுவரர்! ஜிம்னேஷியத்தில் ஒவ்வொருவரும் காணுகின்ற கனவு!

நான் மிகச் சிறந்த குத்துச் சண்டைக்காரனாக இருக்கலாம். ஆனால் மிகவும் ஏழையும்கூட. ஒரு டீ ஷர்ட், இரண்டு ஜதை பான்ட்கள், ஓட்டைகள் உள்ள பல ஜதைச் செருப்புகள் - இவைதான் எனக்குச் சொந்தம். என் மேல் சட்டைகள் கிழிந்து போய் ஒட்டுப்போட்டிருக்கும். அனேகமாய் என் பாண்ட்கள் தினம் ஏதாவதொரு இடத்தில் தையல் விட்டுக் கொள்ளாமல் இருக்காது. ஏறத்தாழ என்னுடைய எல்லாச் சண்டைகளிலுமே நான் வெற்றி பெற்றிருந்த போதிலும், குத்துச் சண்டையைத் தொழிலாக

மேற்கொள்ளும் தறுவாயில் இருந்தபோதிலும், என் பற்களைக் காத்துக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல 'மவுத் பீஸ்' வாங்கக்கூட ஒரு போதும் எனக்கு வசதி ஏற்பட்டதில்லை. மற்றக் குத்துச் சண்டைக்காரர்களின் தலைக் கலசத்தையோ, நிஜார்களையோ பாண்டேஜ்களையோ ஓசி வாங்கிக் கொள்ளும் பொருட்டு அவர்களுடைய சண்டை முடியுமட்டும் காத்திருக்க வேண்டியவனாயிருந்தேன்; சொந்தமாகக் கையுறைகள், சொந்தமாக உடைகள் வாங்கிக் கொள்ள விரும்பினேன்.

ரெயினால்ட்ஸின் இல்லம் எஸ்டேட்டின் மத்தியில் இருந்தது. பழுப்பு நிறமான மூன்று மாடிக் கட்டிடம். விசாலமாக மேலேறும் மாடிப்படிகள். பிரம்மாண்டமான வெள்ளைத் தூண்கள் கொண்ட வெராந்தா. அந்த இடத்தின் வனப்பும் அளவும் நம்மை மூச்சடைக்கச் செய்யும். 'கான் வித் த விண்ட்' நாவலில் வருமே, அது மாதிரி. அடிமைகள் பருத்தி பறிப்பதும், குன்றுகளின் அடிவாரத்தில் வரிசையாகக் குடிசை வீடுகள் இருப்பதும் என் கண்ணெதிரே இருக்கிற மாதிரி பிரமைகூட ஏற்படும்.

மணியடிக்கும் கயிற்றைத் தொடர்ந்து இழுத்தபடி இருந்தேன். ஒருவரும் வரவில்லையாதலால் இரும்புக் கேட்டைத் தள்ளினேன். சுலபமாகத் திறந்து கொண்டது. அந்தப் பழைய பழுப்பு நிற வீட்டை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்தேன்.

ஒரு கனமான குரல் என்னை வெட்டியது: "டேய், யாரடா அவன் நீக்ரோப் பயல்! மிஸ்டர் ரெயினால்ட்ஸுக்குச் சொந்தமான இடம் இது, தெரியுமா?"

திரும்பிப் பார்த்தேன். ஒரு வாட்டசாட்டமான, சிவப்புத் தலை வெள்ளைக்காரர் கையில் ஒரு மண்வெட்டியுடன் என்னை நோக்கி

வந்து கொண்டிருந்தார். அவர் பின்னால், கூனல் விழுந்த வயதான ஒரு கறுப்பர் வந்து கொண்டிருந்தார். அவர் அங்கே தோட்டக்காரர் என்று பிற்பாடு தெரிந்தது.

"அதோ பார், சாலை அந்தப் பக்கம் போகிறது." நான் வந்த வழியைச் சுட்டிக் காட்டினார் வெள்ளைக்காரர்.

ஆனால் என் பார்வை அவர் பார்வையைக் கவ்வ, நான் அசையாமல் நின்றேன். அவர் மண்வெட்டியை ஓங்கித் தூக்கியபடி என்னை நோக்கி வந்தார். அதற்குள் அந்தக் கறுப்பர் முன்னால் வந்து, மென்மையாக, "இது காஷியஸ் க்ளே என்று நினைக்கிறேன் சார்," என்று தெரிவித்தார்.

வாட்டசாட்டமான மனிதர் தோட்டக்காரன் பக்கம் திரும்பி, "ஜான், உனக்கு இந்த நீக்ரோ பையனைத் தெரியுமா?" என்றார்.

"ஆமாம் சார்." தோட்டக்காரர் தலையை ஆட்டினார். "மிஸ்டர் ரெயினால்ட்ஸ் இவனை வரச் சொல்லியிருக்கிறார். இவனை வேலைக்கு அமர்த்திக்கப் போகிறார்." மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறவர் மாதிரி பேசினார் அவர். ஏதாவது சொல்லப்போய் - அது உண்மையாகவே இருந்தால்கூட - வெள்ளைக்காரருக்குக் கோபம் வந்து விடக்கூடாதே என்று நினைக்கிறவர் மாதிரி இருந்தது. "ஆமாம் சார். இவன்தான் அந்தக் குத்துச்சண்டைப் பையன்." கறுப்பரின் கண்ணில் பெருமை மின்னியது. தன் பின்னே வரும்படி சாடை காட்டினார். ஒரு நிமிடம் நாங்கள் தனித்து இருந்தபோது, "அவர் மண்வெட்டியைத் தூக்கியதில் நீ பயந்துவிட்டாயா?" என்றார்.

"இல்லை " என்றேன்.

முன் வெராந்தாவைத் தாண்டுகையில் நான், "மிஸ்டர் ரெயினால்ட்ஸ் இன்று வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

தோட்டக்காரர் தலையை அசைத்தார். "இருக்கிறார், ஆனால் இன்னும் கீழே இறங்கி வரவில்லை. அந்தக் கார்களைப் பார்த்தாயா?" காரேஜைச் சுட்டிக் காட்டினார் "இங்கே இருக்கிற கார்கள் அத்தனையும் அவரது கார் தான். மிஸ்டர் ரெயினால்ட்ஸ் உனக்கு என்ன மாதிரி வேலை தரப் போகிறார்?"

நான் என்ன எதிர்பார்க்கிறேனென்று என்னால் சொல்ல இயலவில்லை. மெகானிகல் டிராயிங் எனக்கு நன்கு வரும். என் தந்தையிடமிருந்து டிராஃப்டிங்கும் சித்திரமும் சிறிது கற்றிருந்தேன். ரெயினால்ட்ஸுக்கு இருக்கிற எத்தனையோ வகை பிஸினஸ்களில் எனக்கு ஏற்றதாக ஏதாவதொன்று இருக்கும் என்று எண்ணியபடி தோட்டக்காரருடன் நடந்தேன். ஒருகால் டிராஃப்டிங் கற்றுக் கொள்ளலாம்."

"மிஸ்டர் ரெயினால்ட்ஸை நான் பார்க்க எத்தனை நேரமாகும்?"

தோட்டக்காரர் தலையை அசைத்தார். "அதைப்பற்றி நீ கவலைப்படாதே. ரெயினால்ட்ஸின் அத்தை தான் மானேஜர். உனக்கு ஏற்ற வேலை எது என்று ஏற்கெனவே யோசனை பண்ணி வைத்திருக்கிறார்."

சமையலறைக்குச் செல்லும் படிக்கட்டை அடைந்தோம். உயரமான ஒல்லியான, தலை நரைத்த வயோதிகப் பெண்மணியொருவர் வெளியே வந்தார், "நீ என்ன செய்யணும் என்பதைக் காட்டுகிறேன், வா."

அவர் எனக்குக் காட்டினார், தினந்தோறும் காலையில் எந்த

இடங்களில் தூசி தட்ட வேண்டும், எந்தக் குப்பைகளை அள்ளவேண்டும், எந்தத் தரைகளைக் கழுவி மெழுக வேண்டும், எந்தக் கழிவறைகளைச் சுத்தப்படுத்த வேண்டும், எந்தப் படிகளைக் கூட்ட வேண்டும் என்று.

13

ஒரு நாள் நான் ரெயினால்ட்ஸ் வீட்டின் பின்புறத்தைக் கூட்டிக் கொண்டிருந்த போது யாரோ கூவுவது என் காதில் விழுந்தது. "அடுத்த உலக ஒலிம்பிக் சாம்பியன்! அடுத்த ஒலிம்பிக் சாம்பியன், காஷியஸ் க்ளே!"

கூவியவர் ரெயினால்ட்ஸ், நான் நினைத்திருந்ததைவிடக் குள்ளமாயும் குண்டாயும் இருந்தார்.

"மிஸ்டர் ரெயினால்ட்ஸ் -" என்று நான் வாயெடுத்தேன்.

"உலக ஹெவி வெயிட் சாம்பியனின் வருங்கால நிர்வாகி என்று என்னைக் கூப்பிடு" என்றார்.

ஏற்கெனவே நான் உற்சாகமாக இருந்தேன். அந்த வாரம் தரைகளை இன்னும் துப்புரவாக மெழுகினேன். புதர்களையெல்லாம் கத்திரித்தேன். எல்லா ஜன்னல்களையும் கழுவினேன். என் 'நிர்வாகி'யைப் பார்க்கக்கூடிய அரிய சந்தர்ப்பங்களை முடிந்தால் அவருடன் பேசுவதற்காக - ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தேன். அவர் வருவார், போய் விடுவார். ஒரு வாய் சாப்பிடுவார், ஆபீசுக்குப் பறந்துவிடுவார். எப்போதாவதொரு முறை என்னைக் கண்டு கையை வீசிக் காட்டுவார். "நீ முன்னேறிக் கொண்டிருப்பதாக மார்ட்டின் சொன்னான்," என்பார். அல்லது, "ஒலிம்பிக் சாம்பியன்ஷிப்பில் நீ கட்டாயம் ஜெயிக்க வேண்டும். தெரிகிறதா? அது பத்து லட்சம் டாலர் பெறுமானம்!" என்பார்.

"தாங்க் யூ மிஸ்டர் ரெயினால்ட்ஸ்," என்பேன். "ஆனால் தங்களுடன் ஒரு நிமிஷம் நான் பேச முடியுமா?"

"இப்போது வேண்டாம், இன்னொரு சமயம் பார்க்கலாம்."

ஒரு நாள், அவருக்குச் சிறிது நேரம் கிடைத்தது. கூப்பிட்டனுப்பினார். "காஷியஸ், பல குத்துச் சண்டைக்காரர்களுக்குக் கிடைக்காத ஒரு வாய்ப்பு உனக்குக் கிடைக்கும்படி செய்யப் போகிறேன். உனக்கு ஸ்பெஷலாய் ஏதாவது தேவையா?"

அவருக்கு நன்றி கூறிவிட்டு, "பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறேன். இங்கே என்ன மாதிரியான வேலை நான் செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்றேன்.

அவர் ஏற்கெனவே அவசரமாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார். தன் அத்தையைச் சுட்டிக்காட்டி, "என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று அவர் சொல்லுவார், காஷியஸ். எல்லாம் திட்டம் போட்டு வைத்திருப்பார்... இந்தப் பையன் எப்படி வேலை செய்கிறான், அத்தை? உனக்கு இவனைப் பிடித்திருக்கிறதா?" என்றார்.

அந்த அம்மாள் என்னைப் பார்த்த பார்வையில் குறிப்பிடுகிறாற் போல் கனிவு எதுவும் தென்படவில்லை. "பூனை மாதிரி சுற்றுகிறான்," என்றாள். "ஏதோ காட்டுமிருகம் மாதிரி நடைகூட வீட்டு வேலைக்காரன் மாதிரி இருக்கிறதில்லை. ஆகாயக் கோட்டை கட்டுவதை விட்டு விட்டானானால் உருப்படுவான். கோட்டை கட்டுவது ரொம்ப ஜாஸ்தி."

ரெயினால்ட்ஸ் சிரித்தார். "இவனுக்கு நல்லா சாப்பாடு போடு. இவனுக்கு அது தேவை. குத்துச் சண்டைக்காரன் ஆயிற்றே?"

எனக்கு நல்ல சாப்பாடு போட்டார்கள். உண்மை. தினந்தோறும்

அத்தையம்மாள் ஒரு தட்டில் என் சாப்பாட்டை எடுத்து வந்து முற்றத்தில் வைப்பாள். நாய்களுக்கும் பூனைகளுக்கும் வைத்த அதே மாதிரி. ஒரு வித்தியாசம்: என் உணவு, அழகிய பளிங்குச் சுவர்களாலான சமையலறையில், விலையுயர்ந்த பாத்திரங்களில், ருசிகரமாகச் சமைக்கப் பட்டதாகும். நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், "சீக்கிரம் சாப்பாட்டை முடி, காஷியஸ். கீழே சாக்கடை அறையில் கழிவறை ஸ்டூல்களைக் கழுவிவிட வேண்டும். நேற்றுக் கழுவ மறந்துவிட்டாயே," என்பாள் அத்தை.

எனக்குத் தண்ணீர் வேண்டுமென்றால் ஒரு வாளியில் கொண்டு வந்து வெளியே வைப்பார்கள். "நீ உள்ளே சமையலறைக்கு வரக்கூடாது என்பதில்லை," என்று கறுப்புத் தோட்டக்காரர் சமாதானம் சொல்வார். "உன் உடை தான் ரொம்ப அழுக்கும் வியர்வையுமாய் இருக்கிறது. இது நல்ல காற்றோட்டமான இடம். இங்கே சாப்பிடுவது தான் நல்லது."

இப்போது நினைத்துப் பார்த்தால் விசித்திரமாயிருக்கிறது. ஆனால் அப்போது நான் பொருட்படுத்தவில்லை. மிக உன்னதமான ஜாதி நாய்களுடன் நான் சினேகம் செய்து கொண்டேன். ஆனால் என்னை ஒரு நல்ல பிராணிபோல - நல்ல பந்தயக் குதிரை மாதிரி - வளர்க்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தது. தீனி போட்டுப் பராமரித்தால் நான் ஒரு நல்ல முதலீடு என்கிற மாதிரி.

பெரும்பாலான விளையாட்டுக்காரர்களைவிட நான் நல்ல நிலைமையில் இருந்தேன். ஆனால் தினசரி காலை ஐந்து மணிக்கு எழுந்து கொள்வது, சிக்ஸா பார்க்கைச் சுற்றி ஓடுவது, ஒரு மணி நேர பஸ் சவாரி, ஜிம்னேஷியத்துக்குப் பறந்து இரண்டு மணி நேரம் பயிற்சி, பிறகு திரும்பி வேலைக்காரப் பையன் என்கிற முறையில் கடமைகளை முடிப்பது முதலிய செக்கு மாடு மாதிரியான

வாழ்க்கையைப் பொறுத்துக் கொள்ள வைத்தது ஒன்றுதான்: உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஆகப் போகிறோம் என்ற கனவு. அதை என் கண் முன்னேயே நிறுத்திக் கொண்டேன்.

ஒரு நாள் மிஸ்டர் ரெயினால்ட்ஸின் கறுப்பு ஃப்ளீட்வுட் கார் பாதையை அடைத்துக் கொண்டு நின்றிருந்தது. அதை ஷெட்டில் கொண்டு போய் விடுவதற்காக உள்ளே ஏறினேன். அவ்வளவு பெரிய, அழகான காருக்குள் நான் அதுவரை ஏறியது கிடையாது. வெளியே வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஆகவே கண்ணாடியை மேலே ஏற்றி ஏர்கண்டிஷன் கருவியை இயக்கினேன். ஸீட்டில் சாய்ந்து கொண்டு அந்தச் சுகத்தில் லயித்தேன். மெத்தென்று ஸீட் உறைகளின்மீது கைகளைத் தேய்த்துக் கொண்டேன். உட்புறத்திலுள்ள கறுப்புத் தோல்களைத் தடவிப் பார்த்தேன். ஷெட்டை நோக்கிப் பின்புறமாகச் செலுத்தினேன் - எத்தனை சுலபமாக அது இயங்குகிறது என்று பிரமித்துப் போன வண்ணம்.

திடீரென்று யாரோ கூச்சலிட்டார்கள் : "ஐயோ! ஐயையோ! வாருங்கள்! அவனைப் பிடியுங்கள்! யாராவது பிடித்து நிறுத்துங்கள்!"

பிரேக்கைச் சட்டென்று அழுத்தினேன். தோட்டத்தில் ஒரு திருடன் ஓடிவந்து கொண்டிருக்கிறான் என்றும், மடேலென்று கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்து அவனைப் பிடித்து, களவாடிச் செல்லும் நகைகளை மீட்க வேண்டும் என்றும் நினைத்தேன்.

"நீக்ரோ பையா! என்ன துணிச்சல் உனக்கு! இறங்குடா காரிலிருந்து!" ரெயினால்ட்ஸின் அத்தை என்னைப் பார்த்துக் கத்தினாள். "மிஸ்டர் ரெயினால்ட்ஸின் பிரைவேட் கார் அது. ஒருத்தரும் அதைத் தொடக்கூடக் கூடாது!"

அவள் போட்ட கூச்சல் கிழத் தோட்டக்காரனை ஓடிவரும்படி செய்தது. "காஷியஸ் தப்பாக எதுவும் செய்யப் பார்க்கவில்லை, அம்மா. உங்கள் பிளட் பிரஷர் பற்றி டாக்டர் என்ன சொல்லியிருக்கிறார்? மறந்துவிட்டீர்களா? உங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்கிற அளவுக்கு இந்தக் கார் ஒரு பொருட்டா?"

"இந்த நீக்ரோப் பையன் ஆயுள் பூரா சம்பாதித்தால்கூட இந்தக் கார் பெறுமானம் கிடைக்குமா? அதிலே போய் இவன் உட்காருவதாவது! பார்க்கவே சகிக்கவில்லை."

நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவள் ஆத்திரமாயிருந்தாள். "நீ என்ன வேலை செய்யணுமோ அதைச் செய்வதற்கென்ன? அதை விட்டுவிட்டு ஒரு வெள்ளைக்காரரின் காருக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு ஆகாசக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறாயே?"

குளியல் தொட்டிகளின் வளையங்களைச் சுத்தம் செய்வதற்காக நான் சென்றுவிட்டேன். அந்த அம்மாளைக் குறித்து எனக்கு வெறுப்பு ஏதும் ஏற்படவில்லை. ஆனால் "உலக ஹெவி வெய்ட் சாம்பியனின் நிர்வாகியைப் பற்றி எனக்கு மனசில் உறுத்தல் ஏற்பட்டுவிட்டது. பிறகு அது என்னைவிட்டு விலகவேயில்லை.

14

நான் ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றபோது ரெயினால்ட்ஸ் குதூகலமடைந்தார். நியூயார்க் விமான நிலையத்தில் நான் வந்து இறங்கியபோது, அவருடைய சொந்த ஆளும் மார்ட்டினும் என்னை அழைத்துச் சென்று வால்டார்ஃப் ஓட்டலில் ரெயினால்ட்ஸின் சொந்த அறையில் என்னைத் தங்க வைத்தார்கள். வேல்ஸ் இளவரசரின் அறைக்கு அடுத்ததாக, ஜெனரல் மக்ஆர்தரின் அறைக்கு மேலாக, முன்னால் ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவெரின் அறைக்குப் பக்கமாக அந்த அறை இருந்தது. அப்படிப்பட்ட இடத்தில் என்னைத் தங்க வைத்த ரெயினால்ட்ஸ், உண்மையான ரெஜினால்ட்ஸ் என்று எனக்குத் தோன்றவில்லை. வெளிமுற்றத்தில் நாய்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டபோது நான் பார்த்த ரெயினால்ட்ஸ் தான் அசலானவர் என்று தோன்றியது.

அவருடைய ஆள் என்னிடம் ஓர் ஒப்பந்தத்தை நூட்டினார். "இதை வூட்டுக்கு எடுத்துப் போய் உன் அப்பாவிடம் கொடு. நல்ல காண்டிராக்ட்"

வூட்டுக்கு எடுத்துச் சென்றேன். அப்பாவுக்கு ரெயினால்ட்ஸிடம் ஈடுபாடு இல்லாதிருந்த போதிலும், அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்றார். "வந்திருப்பதற்குள் சிறந்த காண்டிராக்ட் இதுதான். இதைக் காட்டிலும் சிறப்பான காண்டிராக்ட் கிடைக்க முடியாது," என்றார்.

ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

குத்துச் சண்டை அரங்கத்தில் எதிராளியை வூழ்த்தத் தேவையான தன்னம்பிக்கையும் அகங்காரமும் சக்தியும் ஒருவனிடம் பேணி

வளர்க்கப்பட வேண்டுமானால், தன்மானமும் ஒரு புலியின் வலுவும் தேவை. அப்படிப்பட்ட புலியை நிர்வகிக்க விரும்புகிற ஒருவன் அதை ஒரு சங்கிலியில் கட்டி நாய் மாதிரி வீட்டுக்கு அழைத்துப் போக ஆசைப்படுகிறானே! வேடிக்கையாயிருந்தது எனக்கு.

நான் தொழில் முறை குத்துச் சண்டைக்காரனாகி விட்டேன். லூயிவில்லைச் சேர்ந்த பத்துக் கோடீசுவரர்களின் ஒப்பந்தம் என் பையில் இருந்தது. எங்களது 'திருமணக் காண்டிராக்ட்' அது - அடுத்த ஆறு வருடத்துக்கு. உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஒருநாள் வரத்தான் போகிறோம் என்று நான் தெள்ளத் தெளிவாக நிச்சமாயிருந்தேன். ஆனால் வெள்ளைக்காரர்களுடன் நான் கொண்டிருந்த தேனிலவு முடிந்துவிட்டது. அதற்குள் அந்த மாறுதலை உலகத்தாருக்கு வெளியிட நான் விரும்பவில்லை.

எங்கள் ஊரின் விமான நிலையத்தை என் விமானம் தொட்டபோது அந்தத் தேனிலவு ஆரம்பமாகியது. கதவைத் திறந்தார்கள். என் அம்மா ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டார்கள். அடுத்து என் சகோதரர் ரூடியும் என் தந்தையும். 21 நாட்களாக நான் வெளிநாடு போயிருந்தேன். பிறந்தது முதல் அத்தனை காலம் நான் வெளியூரில் தங்கியிருந்தது கிடையாது.

அடுத்து வந்தது, கொண்டாட்டங்கள்; ஊருக்குப் போய்ச் சேரும் வழி நெடுக எனக்கு நூண்ட போலீஸ் பாரா. தெருவிலும் சந்துமுனைகளிலும் கறுப்பர்களும் வெள்ளையரும் அடங்கிய கூட்டங்கள். என் பள்ளித் தோழர்கள் 'வருக காஷியஸ் க்ளே!' என்று கட்டியிருந்த வரவேற்பு வளைவுகள். நான் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தைப் பெற்றது நகரத்தின் திறவுகோலைப் பெற்றது போலாகும் என்று மேயர் கூறிய வாசகங்கள். ஜனாதிபதி ஐஸனோவரையும் என்னையும் சேர்த்து வைத்துப்

படமெடுப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த திட்டங்கள்.

'டைம்' பத்திரிகை எழுதியது: 'காஷியஸ், தன் தங்கப் பதக்கத்தின் மீது வைத்துள்ள பார்வையை ஒருபோதும் அகற்றுவதில்லை. தூங்கும்போதுகூட அதனுடன்தான் துங்குகிறான்.'

ஆம். அவர்கள் சொன்னது சரியே. அதை அருகில் வைத்தபடிதான் உணவு சாப்பிட்டேன். தூங்கும்போது அதைப் பக்கத்தில்தான் வைத்துக் கொண்டேன் - புரளுகையில் அதன் கூரிய விளிம்பு என் முதுகைக் குத்தியபோதிலும். என்ன வந்தாலும் சரி, அதை நான் பிரிய மாட்டேன். 'தங்கம்' வெளிறத் தொடங்கி, உள்ளேயிருந்த மங்கலான காரீயம் பல்லைக் காட்டத் தொடங்கியபோதுகூட நான் விடவில்லை. உலகத்திலேயே மிகச் செல்வக் கொழிப்பான, மிகச் சக்தி வாய்ந்த ஒரு நாடு, தனது ஒலிம்பிக் சாம்பியன்களுக்கு அசல் தங்கத்திலே பதக்கம் செய்து தர முடியவில்லையா என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

என்னை 'நிர்வகிப்பதாக வந்த பல விண்ணப்பங்களை நாங்கள் பரிசீலனை செய்தோம். கடைசியில் ஒரு வழக்கறிஞர் வந்து, லூயிவில்லைச் சேர்ந்த பத்துக் கோடீசுவரர்கள் (பிற்பாடு இது பதினொன்றாயிற்று) சேர்ந்து ஒரு காண்டிராக்ட் தருவதாகக் கூறினார். அதை என் தந்தையும் குடும்பத்தாரும் ஏற்றுக் கொண்டார்கள். 1960 முதல் 1966ஆம் ஆண்டு வரை அந்தக் காண்டிராக்ட் அமுலில் இருந்தது. அச்சாரமாகப் பத்தாயிரம் டாலர் தருவோம் என்றார்கள். அதுதான் அந்தக் காண்டிராக்டின் பிரதான அம்சம். அதே சமயம், குத்துச் சண்டை அரங்கத்துக்கு உள்ளேயோ வெளியேயோ நான் என்ன சம்பாதித்தாலும் அதில் 50 சதவிகிதம் அந்த லூயிவில் குழுவுக்குச் சேரும். அந்தக் காலத்தில் பத்தாயிரம் டாலர் என்பது பிரம்மாண்டமான தொகையாக எனக்குத்

தோன்றியது. எனக்குத் தெரிந்த 'பெரிய' தொகையெல்லாம் நாங்கள் வசித்து வந்த, இடிந்து போன சிறிய வீடுதான். தவணையாக 4500 டாலர் கட்ட வேண்டுமென்ற நிபந்தனையின் மீது அது எங்களுக்கு விற்கப்பட்டிருந்தது. அதைச் செலுத்துவதில் என் தந்தைக்கு உயிரே போய்க் கொண் டிருந்தது. பத்தாயிரம் டாலரில் பெரும் பகுதி அந்த வீட்டை ரிப்பேர் பார்ப்பதற்கும் கடனை அடைப்பதற்கும் சரியாகி விட்டது.

காண்டிராக்ட் பேசுவதற்கான முதல் கூட்டத்தில் அந்தக் கோடீசுவரர்களைப் பார்த்தேன். பிறகு பெரும்பாலும் என் குத்துச் சண்டைப் போட்டிகளின் போது, அடுத்த ரவுண்டுக்கு மணியடிப்பதற்காகக் காத்துக் கொண்டு என் இடத்தின் முக்காலியில் உட்கார்ந்திருக்கையில் தான் அவர்கள் என் கண்ணில் பட்டார்கள். அரங்கத்துக்கு அருகிலுள்ள ஸூட்டில் யாராவது ஒருவர் உட்கார்ந்திருப்பார். என்னைக் கண்டு கையை வீசுவார். அல்லது சுருட்டை வீசுவார், அல்லது தன் பக்கத்தில் உட்கார்ந்துள்ள தோழரையோ 'சினேகிதி'யையோ மெல்ல இடிப்பார் - 'அதோ பார்த்தாயா, அதுதான் நம்ம பந்தயக் குதிரை' என்று சொல்வதைப் போல. நானும் அரங்கத்திலே பாய்வேன் - அந்த இன்னொரு வெள்ளைக்காரனின் குதிரையை ரத்தக் களரியாக்குவதற்காக. அந்தக் குதிரையும் என்னைப் போலத்தான் - சவாரி செய்யும் எஜமானிடம் உண்மையான, தனிப்பட்ட அல்லது சமூக ரீதியான உறவு எதுவும் அதற்கும் கிடையாது.

இந்தக் கோடீசுவரர்களின் குழுவைப் பற்றி நான் மிக நெருக்கமாக அறிந்து கொண்டது அந்த முதல் சந்திப்பின் போதுதான். என் அப்பாவும் அம்மாவும் சகோதரரும் முகத்திலே ஆனந்தம் பரவ வந்திருந்தார்கள். ஹோவார்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த

பெண் வழக்கறிஞரான ஆல்பர்ட்டா ஜோன்ஸ் என்ற அட்டர்னி, ஒப்பந்தம் பற்றிய விவரங்களைப் பிற்பாடு தயாரிப்பதாக இருந்தார். என்னை அறிமுகப்படுத்தும் போது, வந்திருப்பவர்கள் யார் யார் என்ற தகவல்களை ஒரு முன் யோசனையுள்ள செக்ரட்டரி என்னிடம் கிசுகிசுத்திருந்தார். அவர்களுடைய போன் நம்பர்களையும் பிஸினஸ் தொடர்புகளையும் ஒரு காகிதத்தில் டைப் அடித்துத் தந்திருந்தார் - நான் பேசும்போது குறிப்பிடுவதற்கு உதவியாக.

"எங்களைக் கூப்பிடு. எப்போது என்ன தேவைப்பட்டாலும் எங்களைக் கூப்பிடு" என்பார் பில்ஃபேவர்ஷாம் - இங்கிலீஷ் நடிகர் ஒருவரின் மகன் இவர். குழுவின் உண்மையான இணைப்பாளர் இவர்தான். மற்றவர்களெல்லாம் ஆமாம் போடுவார்கள். "எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் கூப்பிடு. உனக்கு உதவி செய்வதற்காகவே நாங்கள் இருக்கிறோம்."

15

இன்னொரு கோடீசுவரர் சொன்னார்:.

"காஷியஸ் மார்ஸெலஸ் க்ளே என்று பெயர் வைத்திருப்பவனுக்கு உதவி செய்வதில் நான் பெருமைப்படுகிறேன். பாவம், மெலிந்து பசி பட்டினியுடன் இருக்கிறான்..."

அவர்களுடைய பெயர்களை என் சட்டைப் பையிலேயே வைத்திருந்தேன். பெரும் புள்ளிகளை ஆதரவாளர்களாகக் கொண்ட குத்துச் சண்டைக்காரன் என்ற என் அந்தஸ்துக்குச் சான்று அது. அதை வெளியே எடுத்துக்காட்டத் தயாராக வைத்திருந்தேன். என் தங்கப் பதக்கத்தைப் போலவே அதையும் பூற்றிக் கொள்ள நினைத்திருந்தேன்.

ஒருநாள் சாயங்காலம், வெளியூரிலிருந்து வந்துள்ள சில பிரமுகர்களுக்கு என் தங்கப் பதக்கத்தைக் காட்டுவதற்காக மேயரின் அலுவலகத்துக்கு என் புதிய மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருந்தேன். கோடீஸ்வரர்களின் பட்டியலையும் காட்டுவதற்காக வைத்திருந்தேன். என்னுடன் என் நெருங்கிய தோழன் ரானல்டு கிங்கும் வந்திருந்தான். நல்ல மாணவன் அவன். வகுப்பில் அவனைப் பார்த்துத் தான் நான் பாடங்கள் காப்பியடிப்பேன்.

மேயர் என்னை அறிமுகப்படுத்தினார். "காஷியஸ் க்ளே-அசல் லூயிவில் தயாரிப்பு," என்றார். "எங்கள் அடுத்த உலக சாம்பியன்."

வந்திருந்தவர்கள் கைதட்டினார்கள்.

"ரோமில் இருந்தபோது ஒரு ரஷ்யக் கிழவன்கிட்டே காஷியஸ் என்ன

சொன்னான் தெரியுமா?" மேயருக்குக் குஷி பிறந்துவிட்டது. "பத்திரிகையில் நீங்கள் படித்திருப்பீர்களே? அந்த ரஷ்யக் கிழவன் திமிர் பிடித்தவன். அமெரிக்காவிலே நீக்ரோக்கள் எப்படி இருக்கிறார்கள் என்று நம்ம பையன்கிட்டே கேட்டானாம். சொல்லு, காஷியஸ், நீயே இவர்களிடம் சொல்லு. வெட்கப்படாதே."

அடுத்து என்ன வரப்போகிறதென்று எனக்குப் புரிந்து விட்டது. ரோமில் இருந்தபோது நான் வாய் தவறிச் சொல்லி விட்ட விஷயம். அதைப் பற்றிப் பிற்பாடு நான் வருந்தினேன். ஆனால் மேயர் தொடர்ந்து சொன்னார் :

"அந்த ரஷியப் பத்திரிகை நிருபரை அழுக்கைத் தட்டி விடுகிற மாதிரி ஒதுக்கித் தள்ளினான் காஷியஸ். மார்பை நிமிர்த்திக் கொண்டான். 'இதோ பாரய்யா கம்யூனிஸ்டு! அமெரிக்கா உலகத்திலேயே சிறந்த நாடு. உங்கள் நாட்டையும் சேர்த்துத்தான். ஆப்பிரிக்காவில் இருப்பதைக் காட்டிலும் அமெரிக்காவில், லூயிவில்லில் இருப்பதையே நான் விரும்புகிறேன். ஏனென்றால், நாம் பாம்புகளோடும் முதலைகளோடும் போராடிக் கொண்டு மண் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை," என்றான். ஆமாம் என்கிறேன். அப்படியே சொன்னான்." மேயர் என்னை அணைத்துக் கொண்டார். "இவன் எங்கள் பையன் - காஷியஸ் க்ளே. எங்கள் அடுத்த உலக சாம்பியன். இந்த ஊரில் எது வேண்டுமானாலும் கேள். உனக்குத்தான். என்ன, சொல்வது கேட்கிறதா?"

அவர் சொன்னது கேட்டது. அத்தோடு எனக்குள்ளிருந்து இன்னொன்றும் கேட்டது. அதுகுறித்து நான் அவமானப்பட்டேன். ஒலிம்பிக் கிராமத்தில் இருந்தபோது நான் பேசிய எல்லா விஷயங்களிலும் இந்த ஒன்றுதான் மிக அதிகமாகப்

பத்திரிகைகளிலும் டிவியிலும் ரேடியோவிலும் ஒலிபரப்பாயிற்று. மாதத்துக்குப் பின் மாதம் இதைத்தான் திருப்பிப் திருப்பிச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். அந்தப் பேச்சை நான் வெளியிட்ட அந்தக் கணத்திலேயே உணர்ந்து கொண்டேன் - ஏதோவொரு பெரும் வெள்ளைக்கார வலையில் நான் சிக்கிவிட்டேன் என்பதை. ஒரு கறுப்பு விளையாட்டு வீரன் என்ன சொல்லிக் கேட்க வேண்டுமென்று வெள்ளைக்கார ரிப்போர்ட்டர்கள் விரும்பினார்களோ அதை நான் சொல்லி விட்டேன். ரஷ்யாவைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஆப்பிரிக்காவைப் பற்றி - டார்ஜான் சினிமாக்களில் பார்த்திருப்பதைத் தவிர - வேறொன்றும் அறியேன். இருந்தும், என் பேச்சினால் ஏற்பட்ட விளைவு! லூயிவில்லில் கால் வைத்த முதல் நாளே புரிந்தது அது. நான் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு நைஜீரிய வாலிபன் என்னை நெருங்கி, நான் சொன்னதாக வந்திருக்கும் செய்தியைப் பத்திரிகைக்காரர்கள் சரியாய்த்தான் போட்டிருக்கிறார்களா என்று கேட்டான். சரிதான் என்று நான் சொன்னதும், "நாமெல்லாம் சகோதரர்கள் என்று நினைத்தேன். உங்களுக்கு அது தெரியவில்லை," என்றான்.

அதற்கு முன்னோ அதற்கு அப்புறமோ அவனை நான் சந்திக்கவில்லை. ஆனால் அவனுடைய சோகம் என்னை உலுக்கிவிட்டது. தப்பான திசையில் என்னைத் திருப்பி வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேன். பிற்காலத்தில் பலமுறை ஆப்பிரிக்காவில் நான் பிரயாணம் செய்தபோது இன்னும் அதிகமாக எனக்கு வெட்கம் ஏற்பட்டது - எந்த மக்களின் வழித்தோன்றலாக நான் வந்திருக்கிறேனோ அந்த மக்களின் சரித்திரத்தையும் வாழ்க்கையையும் பற்றி மூளைச் சலவை செய்யப்பட்டவனாக வாழ்ந்து வந்திருக்கிறோமே என்று.

நான் சந்தித்து, கலந்து பழகிய ஆப்பிரிக்கர்களில் பெரும்பாலோர் என்னைக் காட்டிலும் எவ்வளவோ படித்தவர்கள். சிலர் ஐந்தாறு மொழி பேசத் தெரிந்தவர்கள். எல்லாருமே என்னைக் காட்டிலும் சிறப்பாக ஆங்கிலம் பேசினார்கள். நான் நவீன நகரங்களைக் கண்டேன். திறமை வாய்ந்த, கலையறிவு படைத்த மக்களைச் சந்தித்தேன். அதன் மூலம் புராதன உலகத்துக்கும் சரி, நவீன உலகத்துக்கும் சரி ஆப்பிரிக்கா தந்துள்ள கலாசாரத்தையும் உதவிகளையும் பற்றிச் சிறிதளவு என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. ஐரோப்பாவும் அமெரிக்காவும் நூற்றாண்டு நூற்றாண்டாக ஆப்பிரிக்க மக்களை எப்படிக் கொள்ளையடித்திருக்கின்றன, எப்படிக் கற்பழித்திருக்கின்றன, எப்படி அடிமைப்படுத்தியிருக்கின்றன என்று அறிந்து கொண்டேன். ஆப்பிரிக்காவின் ஐசுவரியங்களை இன்றைக்கும்கூட எப்படிச் சூறையாடிக் கொண்டு வற்றச் செய்து கொண்டிருக்கின்றன என்று தெரிந்து கொண்டேன்.

அந்த நைஜீரிய வாலிபனின் புகார் என்னை எச்சரிக்கையடையச் செய்தது. அறிந்தோ அறியாமலோ வெள்ளையர்களின் 'நம்பிக்கை நட்சத்திரமாக என்னை ஆக்குவதற்கு இடமளிப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன்.

வெள்ளையர்கள் தங்கள் நம்பிக்கை நட்சத்திரம் ஒரு வெள்ளையனாக இருப்பதைத்தான் விரும்புவார்கள்; உண்மை. ஆனால் குத்துச் சண்டை உலகத்தில் வெள்ளை நட்சத்திரங்களுக்குப் போதாத காலம். ஆகவே ஒரு கறுப்பு நட்சத்திரத்தோடு திருப்தியடையத் தயாராயிருந்தார்கள். ஆனால் ஒன்று. அவர்கள் நம்புவதைக் கறுப்பன் நம்ப வேண்டும் அவர்கள் பேசுகிற மாதிரி பேச வேண்டும். அவர்கள் வெறுக்கும் மனிதர்களை

வெறுக்க வேண்டும். எல்லாம் ஒரு உண்மையான வெள்ளை நட்சத்திரம் உதயமாகும் வரையில்.

அன்று மாலை மேயரின் அலுவலகத்திலிருந்து திரும்பிய போது நான் ஓர் உறுதி செய்து கொண்டேன். வாய் தவறி விட்டுவிட்ட ஒரு பேச்சை என்னால் மாற்ற முடியவில்லையெனில், என்னை நானே மாற்றிக் கொள்கிறேன். அதுதான் என் தீர்மானம்.

பைக்கிலிருந்து இறங்குவதற்கு முன்பே இந்தத் திருத்தத்தின் முதல் அங்கத்தைச் செயல்படுத்த நேரிடும் என்று நான் நினைக்கவேயில்லை.

வானம் இருண்டு கொண்டிருந்தது. லூயிவில்லை நோக்கி நானும் ராணியும் மோட்டார் பைக்கில் பறந்து கொண்டிருந்தோம். புதிதாக மாற்றியமைக்கப்பட்டிருந்த ஒரு ரெஸ்டாரெண்ட்டை நாங்கள் தாண்டிக் கொண்டிருந்த போது தூறல் விழத் தொடங்கியது.

நான் வேகத்தைக் குறைத்தேன்.

"அங்கே வேண்டாம்! அங்கே வேண்டாம்!" ராணி எச்சரிக்கை செய்துவிட்டு, மோட்டார் பைக்கில் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

16

நான் அந்த வெள்ளையர் ஓட்டலுக்குள் சென்றேன். ரானியும் திரும்பி வந்தான். மூலையில் இரண்டு இடம் காலியாயிருந்தது. மெனு சூட்டை எடுத்தேன். ஓர் இளம் வெயிட்ரஸ் விரைவாக வந்து நாப்கின், வெள்ளிப் பாத்திரங்கள், ஒரு கிளாஸ் தண்ணீர் ஆகியவற்றை எங்கள் முன் வைத்தாள்.

"இரண்டு ஹாம்பர்கர். இரண்டு மில்க் ஷேக், வனிலா," என்றான் ரானி. வெயிட்ரஸ் சமையலறையை நோக்கி நடந்தாள். அதற்குள், கல்லாப் பெட்டிக்குச் சமீபமாக உட்கார்ந்திருந்த ஒரு தொப்பை ஆசாமி அவளைத் தன்னருகே வருமாறு கையை ஆட்டினான்.

அவன் என்ன வார்த்தைகள் சொன்னானோ தெரியாது. சொல்வதைச் சுருக்கமாகச் சொன்னான். வெகு நேரம் கழித்தே வெயிட்ரஸ் வெளியே தலை காட்டினாள் - சமையலறையில் உதவியாளராக உள்ள ஒரு நீக்ரோக் கிழவியுடன் ஏதோ பேசிய வண்ணம். அந்தக் கிழவி அறை வாசலில் நின்று எங்களைப் பார்த்தவாறிருந்தாள் - ஏதோ சொல்ல முயலுகிற மாதிரி.

அந்த நாட்களில் லூயிவில்லில் - தென்னகத்தில் எல்லா இடங்களையும் போலவே - ரெஸ்டாரண்டுகள், ஓட்டல்கள், சினிமாக்கள் ஆகியவற்றுக்குள் கறுப்பர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அல்லது அவர்களுக்குத் தனியான இடம் ஒதுக்கி வைத்திருப்பார்கள்.

அந்த வெள்ளைக்கார வெயிட்ரஸ் கடைசியில் என்னிடம் வந்தாள். கிசுகிசுப்பான குரலில் சொன்னாள் : "உங்களுக்கு இங்கே எதுவும் கொடுக்க இயலாது'

ரானியும் நானும் வெளியூர்களில் உள்ள 'வெள்ளையர் மட்டுமே' ஓட்டலில் நுழைவது உண்டு. ஆனால் உள்ளூர் ஓட்டலில் இப்போதுதான் நுழைகிறோம். ஒருமுறை ஒரு தையல்காரர் எங்களுக்காக ஆப்பிரிக்கத் தலைப்பாகைகளும் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை புரண்டோடும் அங்கிகளும் செய்து தந்திருந்தார். பல மாதங்கள் வரை அதை அணிந்து கொண்டு மாறு வேடமாக டவுனுக்குச் சென்றிருக்கிறோம். அன்னிய உச்சரிப்போடு இங்கிலீஷ் பேசுவோம். எங்களுக்குள் சொந்த மொழியில் வெகு வேகமாகப் பேசிக் கொள்வோம். அயல் நாட்டினர் என்றெண்ணி எங்களை 'வெள்ளையருக்கு மட்டுமே உள்ள இடங்களில் அனுமதிப்பார்கள்.

ஒருமுறை ஒரு சினிமாத் தியேட்டரில் வாசல் காவல்காரருக்குச் சந்தேகம் ஏற்பட்டு எங்களை நிறுத்தினான். ஆனால் வெள்ளைக்கார மானேஜர் அவனைக் கூப்பிட்டு, "அவர்கள் நீக்ரோ இல்லை. உள்ளே விடு." என்றார்.

இப்போது நான் பெரிய ஆள். அயல்நாட்டான் போல வேடம் போட வேண்டிய அவசியம் இப்போது கிடையாது. அன்னிய நாட்டார்கள் அத்தனை பேரையும் முதுகில் மண் காட்டி அமெரிக்காவுக்குத் தங்கப் பதக்கம் கொண்டு வந்திருக்கிறவன் நான்.

வெயிட்ரஸ் விஷயம் தெரியாததால் அப்படிச் செய்கிறாள் என்று நம்பியவனாக, "மிஸ்" என்று மரியாதையாக ஆரம்பித்தேன். "நான் காஷியஸ் க்ளே. ஒலிம்பிக் சாம்பியன்."

என்னுடைய டீ ஷர்ட்டுக்குள்ளிருந்த பதக்கத்தை ரானி பெருமையுடன் வெளியே எடுத்துவிட்டு, சிவப்பு வெள்ளை நீல ரிப்பன்களைச் சரி செய்தான். இத்தாலிய வார்த்தையான

'ப்யூஜிலாட்டோ' என்ற சொற்கள் தெரியும்படி அதை அசைத்துக் காட்டினான்.

வெயிட்ரஸுக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டது. சிறிதும் தயங்காமல் கல்லாவை நோக்கி ஓடினாள். கிசுகிசுவென்று அவசரமாக முதலாளியிடம் சொன்னாள்.

அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை "அந்த ஆள் பெயாராயிருந்தாலென்ன? எனக்கு அக்கறையில்லை!" அவன் குரலில் இருந்த சத்தம், சாப்பிட்டுக் கொண்டிருந்த அத்தனை பேரும் திடுக்கிட்டுத் தலை நிமிரும்படி செய்தது.

"ஒரு தரம் சொன்னால் காதிலே விழாது உனக்கு? நூக்ரோப் பசங்களுக்கு நாங்கள் சர்வ் பண்ணமாட்டோம்!"

திரும்பி என்னிடம் அவசரமாக வந்தாள். அவன் சொன்னதைத் திரும்ப என்னிடம் சொல்லத் தொடங்கினாள். பரிபூரண நிசப்தம் நிலவியது.

என் இதயம் தடக் தடக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. ஒரு நிமிடம் முந்தி இந்த இடம் - ஏறத்தாழ முப்பது வாடிக்கையாளருக்கு மேல் நிறைந்து, சளசளவென்று பேச்சும் அரட்டையுமாயிருந்த அதே இடமா இது? மேஜையைத் தள்ளிக் கொண்டு எழுந்தேன். சேர்ந்து ஒத்திகை செய்தவன் மாதிரி ரானியும் என்னைப் போலவே செய்தான். நான் நிமிர்ந்து நின்றேன். கத்திகள், முள் கரண்டிகள், பேச்சு - எல்லாச் சப்தமும் நின்றன.

எல்லாக் கண்களும் என்னையே நோக்கின. என் வாய்க்குள் ஒரே வெப்பமாயும் உலர்ந்தும் இருந்தது. நூற்றுக்கணக்கான குத்துச் சண்டைகள் போட்டிருந்தாலும் அப்போது மாதிரி ரத்தம் தலைக்குள்

பாய்ந்து நான் உணர்ந்ததில்லை.

கூடம் நெடுகிலும் உள்ள வெள்ளையர்களின் கண்களைச் சந்திக்க முயன்றேன். ஆனால் சமையலறை வாசலில் நின்றிருந்த நீக்ரோ கிழவியொருத்தி தான் என் கண்களை நேராக நோக்கியவாறிருந்தாள். பிரார்த்தனைப் புத்தகம் போன்று தோன்றிய ஒரு சிறிய புத்தகத்தை வீசிக் காட்டி என் கவனத்தைக் கவர முயற்சி செய்தபடி கதவு வழியே அவள் வந்தாள். அவள் கழுத்தில் ஒரு பெரிய சிலுவை தொங்கிக் கொண்டிருந்தது.

அடுத்து, 'முதலாளி' என்னிடம் தனிப்பட்ட ஏதோ ஒன்று சொல்லப் போகிறவன் போல எழுந்து வந்தான். அவனுடைய தொப்பையில் ஒரு ரைட் கிராஸ் வீசி, பிறகு வாயிலே ஒரு லெஃப்ட் ஹூக் விட்டு, அடுத்து ஒரு அப்பர் கட் - ஒரு வினாடி நேரம் எனக்கு அப்படியொரு வெறி ஏற்பட்டது. அதன்படி செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று இன்றுவரை நான் எண்ணுவதுண்டு.

ஆனால், இம்மென்றால் போதும், அதுதான் சாக்கு என்று தெருவிலும் பள்ளி மைதானங்களிலும் நான் சண்டையில் இறங்கிக் கொண்டிருந்த காலம் போய்விட்டது. 'சண்டை'யைப் பற்றிய என் கண்ணோட்டம் தலைகீழாக மாறியிருந்தது. தொழில்முறையில் முதன் முறையாகக் குத்துச் சண்டை செய்ய ஒப்பந்தமாகியிருக்கிறேன். உண்மையான தொழில்முறைக் குத்துச் சண்டைக்காரன் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, அடி தடி கலாட்டாவில் மாட்டிக் கொண்டு உயிரை விடக் கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, நான் இன்னோர் வழியைக் கையாள எண்ணியிருந்தேன். அது ரொம்ப நிச்சயமான வழி. அவர்களுடைய

செயலைப் பற்றி அவர்களே வெட்கப்படும் படி செய்யப் போகிறேன். என்ன நேர்ந்தாலும் சரி இங்கேயே இருப்பது. என்னைச் சிறைக்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும்.

என் மனத்தில் இருப்பது அத்தனையையும் அவர்களுக்குச் சொல்ல என்னைத் தயார் செய்து கொண்டேன். "இந்த நாட்டைத் தைரியசாலிகளின் பூமி என்றும் சுதந்திர மனிதர்களின் மண் என்றும் சொல்கிறார்கள். உங்கள் செய்கையின் மூலம் அதை இழிவுபடுத்துகிறீர்கள். உங்கள் எல்லாருக்கும் என்னைத் தெரியும். இதோ அடுத்த தெருவிலிருக்கும் ஜெனரல் ஹாஸ்பிடலில்தான் நான் பிறந்தேன். இங்கேதான் வளர்ந்தேன். ஸென்ட்ரல் ஹை பள்ளியில் படித்தேன். இப்போது ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை ஜெயித்து வந்திருக்கிறேன். லூயிவில் மக்கள் அனைவருக்குமாகச் சேர்த்து. என் நாட்டின் கீர்த்திக்காக நான் சண்டை போட்டேன். நீங்கள் செய்கிற காரியம் உங்களுக்கே வெட்கமாயில்லையா? எந்த அன்னிய நாட்டானுக்கும் இங்கே சிற்றுண்டி தருகிறீர்கள் - ஆனால் ஓர் அமெரிக்க நீக்ரோ பிரஜைக்குக் கிடையாது. என்னை நீங்கள் சிறைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால் என் உரிமைகளை அடைகிற வரையில் நான் இந்த இடத்தைவிட்டு நகரப் போவதில்லை. நீங்கள் வெட்கப்பட வேண்டிய விஷயம்......."

ஆனால் நான் வாயே திறக்கவில்லை.

வார்த்தைகள் வெளிவர மறுத்தன. ஏதோவொன்று அவை வெளிவராமல் தடுத்தது. அவர்களை வெட்கப்படச் செய்வதற்குப் பதிலாக நான் தான் வெட்கத்தை உணர்ந்தேன். அவமானம், அதிர்ச்சி, தனிமை.

17

வெள்ளைக்கார ஓட்டலில், கறுப்பராகிய எங்களுக்குச் சிற்றுண்டி தர மறுத்துவிட்டதைத் தொடர்ந்து அந்தச் சமையலறைப் பெண் ஏதோ அழப் போகிறவளைப் போல் தன் முகத்தை அங்கியினால் துடைத்துக் கொண்டிருந்தாள். மோட்டார் சைக்கிள் கும்பலொன்று அங்கிருந்தது. அத்தனை பேரும் வெள்ளைக்காரர்கள். அவர்களில் சிலர், முதலாளியைப் பாதுகாக்கும் பொருட்டு அவர் உட்கார்ந்திருக்கும் கல்லாவை நோக்கிச் சென்றார்கள். மேஜை மீது கை ஊன்றிக் கொண்டார்கள். ரானி தன் கையை வலதுபக்கப் பைக்குள் நுழைப்பதைக் கண்டேன். அங்கேதான், அவன் தனது முத்துக் கைப்பிடி போட்ட நீளமான கூரிய கத்தியை வைத்திருப்பான். குத்துச் சண்டையில் நான் எத்தனை மணி நேரங்கள் பயிற்சி பெற்றிருந்தேனோ அதே அளவு நேரத்துக்கு நண்பன் ரானி தன் கத்தியைக் கையாளுவது எப்படி என்று பயிற்சி பெற்றிருந்தான். அதிலே அவனுக்குப் பயங்கர ஆற்றல்.

"முதலாளியை நீ கவனி. நான் இந்தக் கும்பலின் வாத்தியாரைப் பார்த்துக் கொள்கிறேன்," என்று என்னிடம் கிசுகிசுத்தான்.

நான் அவனை உலுக்கினேன். ஒன்றுக்கு ஒன்றியாக அல்லது இருவருக்கு ஒருவனாக, ஏன், மூன்று பேருக்கு ஒருவனாகக் கூட நான் அவர்களுக்கு மண் காட்ட முடியும். ஆனால் நான் பட்டிருந்த அவமானம் மிக வேதனையானது; மிக ஆழமானது. வெறும் கைச் சண்டையாலோ கத்திக் குத்தாலோ அதைத் துடைத்துவிட முடியாது.

நான் நின்றிருந்த நேரம் ஒரு நிமிடத்துக்கும் குறைவானது தான்.

ஆயினும் அது ஒரு வருடம் போல் தோன்றியது. ரானி, அது ஏதோ நம்ப முடியாத விஷயம் போல, "உண்மையில் அவர்களுக்கு நூ யார் என்று தெரியவில்லை. நூ சாம்பியன் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அதை அவர்களுக்குச் சொல்ல நான் ஏன் பயப்பட வேண்டும்?" என்று சொல்லிக் கொண்டிருந்தான். பிறகு, குத்துச்சண்டை மேடையில் அறிவிப்பாளர் தெரிவிக்கிற மாதிரி,

"நண்பர்களே! இவன் தான் சாம்பியன்! லூயிவில்லின் ஒலிம்பிக் சாம்பியன்! இப்போதுதான் இத்தாலியிலிருந்து வந்திருக்கிறான்!" என்றான்.

எனக்கு அடிவயிற்றைப் பிசைந்தெடுத்தது. "ரானி! மூடு வாயை! பிச்சை கேட்காதே! பிச்சை கேட்காதே!"

"உனக்கு வெள்ளைக்காரக் கூட்டாளிகள் இருக்கிறார்களே! அவர்களை வரவழை!" என் சட்டைப் பையில் கையை விட்டு, அந்தக் கோடீசுவரர்களின் பட்டியலை வெளியே எடுத்தான். "உம், போ. அவர்களை போனில் கூப்பிட்டு இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லு. இந்த ஓட்டைக் கடையை வாங்குவதும் விற்பதும் அவர்களுக்கு வெறும் பாக்கெட் சில்லறை மாதிரி! அப்புறம் இவர்கள் மூஞ்சியைப் பார்க்க வேண்டும்!"

என் கையில் காசை வைத்து, சுவரிலிருந்த டெலிபோனுக்குப் போகும்படி நெட்டினான்.

கையில் பட்டியலை வைத்துக் கொண்டு நான் தடுமாறினேன். யார் என் துணைக்கு வரக்கூடும் என்று ஆராய முயன்றேன்.

பட்டியலின் கடைசியில் ஸட்க்ளிஃப் என்ற பெயர் இருந்தது.

யு.எஸ். ஸ்டீல் கம்பெனியை அவருடைய குடும்பம் நடத்துவதாக செக்ரட்டரி சொல்லியிருந்தார்.

போன் செய்தேன். சற்றுப் பொறுத்து, மென்மையான மரியாதையான குரலொன்று பதிலளித்தது. "ஸட்க்ளிஃப் வீடு. என்ன வேணும்?"

காகிதத்திலுள்ள பெயரைப் படித்து, "மிஸ்டர் எல்பர்ட் க்ரே ஸட்க்ளிஃப் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

"யார் கூப்பிடுவதாகச் சொல்லட்டும் சார்?"

"காஷியஸ் க்ளே."

ரானியின் முகத்தில் திருப்தி பரவியது. புன்னகை செய்தான்.

சற்றைக்கெல்லாம் மிஸ்டர் ஸட்க்ளிஃப்பின் குரல் கேட்டது. விரைவான, பிஸினஸ்லைக்கான, எஃகுக் குரல். "என்ன காஷியஸ்?"

"மிஸ்டர் ஸட்க்ளிஃப் " என்று ஆரம்பித்தேன். உடனே நிறுத்திக் கொண்டேன். மிஸ்டர் ஸட்க்ளிஃப் என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்?

"காஷியஸ், என்ன வேண்டும்?"

"மிஸ்டர் ஸட்கிளிஃப்..." என்று மறுபடி ஆரம்பித்தேன். என் தொண்டை உலர்ந்து வறண்டது.

"உனக்கு ஏதாவது செலவுக்குப் பணம் வேணுமா, பையா? அப்படியானால் பில் என்பவரைக் கூப்பிட்டுச் சொல்லேன். இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் அவர்தான் பார்த்துக் கொள்கிறார்."

"சரி சார், மிஸ்டர் ஸட்க்ளிஃப்." போனை வைத்து விட்டேன்.

ரானி என்னை அருவருப்புடன் நோக்கினான். "அவரிடம் எதுவுமே சொல்லாமலிருந்து விட்டாயே! என்ன ஆச்சு உனக்கு?"

என்ன ஆச்சா! ஒரு சாதாரண சிற்றுண்டி எனக்குக் கிடைப்பதற்கு உதவி செய்யும்படி ஸட்க்ளிஃப்பைக் கேட்பதா? இயலாத காரியம். அதை எப்படி இவனுக்கு விளக்குவேன்?

"என்ன ஆச்சு உனக்கு?" என்று ரானி மறுபடி மறுபடி கேட்டுக் கொண்டேயிருந்தான்.

எப்படி அதை நான் விளக்குவேன்? என் கோடீசுவரர்கள் லூாயிவில்லின் உண்மையான ராஜாக்கள். ஆனால் அவர்கள் "தங்கள்' பையன் என்று என்னைக் கருதுவது எனக்குப் பிடிக்கவில்லை.

அவர்களிடம் அனுமதி வாங்கியா நான் தங்கப் பதக்கத்தைச் சம்பாதித்தேன்? அவர்கள் தயவு எனக்குத் தேவையில்லை என்பதைக் காட்டுவதாக அந்தப் பதக்கம் திகழ வேண்டும். எனக்கு நான் தான் எஜமானன் என்பதை அந்தப் பதக்கம் குறிக்க வேண்டும். டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்வது, ஒரு எஜமானரிடமிருந்து மாறி இன்னொரு எஜமானரிடம் தஞ்சம் புகுகிற மாதிரிதான்.

சரி, அவர்கள் என் உதவிக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். என்ன ஆகும்? 'வெள்ளையர்களுக்கு மட்டுமே' உள்ள இடங்களில் நான் போக முடியும், வர முடியும். ஆனால் மற்ற நீக்ரோக்களுக்கு முடியாது. அப்புறம் நான் எதற்கு?

கதவுக்கு அருகில் சென்றேன். முதலாளியை விட்டுக் கண்ணை எடுக்கவில்லை. என் தலையிலும் வயிற்றிலும் சகிக்க முடியாத வலி ஏற்படுவதை உணர்ந்தேன். திருப்பித் தர முடியாத நிலையில் குத்துக்களை வாங்கிக் கொள்ளும்போது ஏற்படுகிற வலி.

18

அமெரிக்கா மொத்தத்துக்கும் நாம் ஹீரோவாகத் திகழப் போகிறோம் என்று ரோமாபுரியில் நான் கட்டியிருந்த கோட்டை இடிந்து விழுந்தது. என் ஒலிம்பிக் தேனிலவு முடிந்துவிட்டது. நான் பழைய கென்ட்டகி நீக்ரோ பையனாகி விட்டேன்.

ஓட்டல் முதலாளி நிம்மதியடைந்தவராகக் கல்லாவில் சாய்ந்து கொண்டார். மோட்டார் பைக் கும்பலைச் சேர்ந்த வெள்ளைக்காரத் 'தவளை' முதலியவர்களுக்கு சிகரெட்கள் நீட்டினார். அவர்கள் பற்ற வைத்துக் கொண்டார்கள். ஏதோ பெரிய ஜோக்கைக் கண்டுவிட்டாற் போல இடி இடியென்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். நான் வாசல் கதவை அடைந்தபோது யாரோ என் கையைப் பற்றினார்கள். அந்தச் சமையலறை நீக்ரோப் பெண்தான். நீர் தளும்பிய அவள் கண்கள் முன்னைவிடப் பெரியதாயும் என்னையே நோக்குவதாயும் இருந்தன. "தம்பி, நம்பிக்கை இழந்து விடாதே," என்றாள் மன்றாடும் குரலில்.

"மேரி!" அவளை ஏதோ சதிக் குற்றத்திலே கையும் களவுமாய்ப் பிடித்துவிட்ட மாதிரி ஓட்டல் முதலாளி கத்தினார். "மேரி! சமையலறைக்குப் போ!"

அவள் பயந்து போனவளாக உத்தரவுக்குக் கீழ்ப் படிந்தாள். யாரோ சிரிக்கத் தொடங்கினார்கள். ரெஸ்டாரெண்டில் பழைய சந்தடியும் சளசளப்பும் திரும்பின. ரானி தொடர்ந்து கன்னாபின்னாவென்று திட்டிக் கொண்டிருந்தான். அவனை வெளியே இழுத்துக் கொண்டு வண்டியை நிறுத்தியிருக்கும் இடத்துக்குப் போனேன்.

மோட்டார் சைக்கிள் கும்பல் வந்தது. அவர்களும் தங்கள் வண்டியை எடுக்க வந்திருந்தார்கள். 'தவளை' தன் சினேகிதியை ஒரு கையால் அணைத்துக் கொண்டு, "டேய் ஒலிம்பிக்! உன் மில்க் ஷேக்கை நான் வாங்கிக்கிட்டேன்!" என்றான்.

அவர்கள் குதித்தார்கள், கூச்சலிட்டார்கள். 'தவளை' ஆட்டியபடியெல்லாம் ஆடினார்கள். தவளை தன் சினேகிதியைப் பைக்கில் ஏற்றிக் கொண்டபின் தன் கூட்டாளி ஒருவனைப் பார்த்து ஏதோ சொன்னான். பிறகு அவர்கள் வேண்டுமென்றே தங்கள் மோட்டார் பைக்குகளில் ஏகப்பட்ட சத்தம் எழுப்பிக் கொண்டு புறப்பட்டார்கள். எங்களைத் தாண்டிக் கொண்டு திட்டுவதும் பயமுறுத்துவதும் ஊளையிடுவதுமாக ஒருவர் பின் ஒருவராகச் சென்றார்கள்.

நாங்கள் எங்கள் மோட்டர் பைக்கை ஸ்டார்ட் செய்துவிட்டு ஆனால் நகராமல் உட்கார்ந்திருந்தோம் - அந்தக் கும்பலின் மீது வைத்த கண்ணை எடுக்காமல். ஸ்லிம் என்பவன், அவர்களிடமிருந்து பிரிந்து, பைக்கைத் திருப்பிக் கொண்டு எங்களை நோக்கி வந்தான். ஏதோ ஸிக்னல் காட்டுகிற மாதிரி கையை உயர்த்தியபடி வந்தான். ரானி தன் பைக்கை எடுத்து எனக்கும் ஸ்லிம்முக்கும் நடுவில் நிறுத்திக் கொண்டான்.

ஸ்லிம் இழுத்து இழுத்து மூக்கால் பேசினான்: "க்ளே, நீ தவளையை ரொம்ப ஆத்திரமூட்டி விட்டாய். ரெஸ்ட்டாரண்டிலேயே உங்கள் இரண்டு பேரையும் தீர்த்துவிட வேண்டுமென்றான். நான் தான் கூடாது என்று தடுத்து விட்டேன். அவனைச் சமாதானப்படுத்துவதற்கு ஏதாவது சின்னதாய் அடையாளச் சின்னம் கொடு. என்ன?"

அவன் என்ன சொல்கிறானென்று எனக்குப் புரிந்து விட்டது. அடுத்த ரவுண்டுக்கு மணியடித்துவிட்ட மாதிரி என் தசைகள் இறுகி, எனக்குள் கதகதப்பு ஏறியது.

"அடையாளச் சின்னமெல்லாம் தூர்ந்து போச்சு," என்றான் ரானி அலட்சியமாகப் பல் குத்தியபடி.

ஸ்லிம் என் கழுத்தைச் சுட்டிக் காட்டினான்: "அந்த மெடலும் ரிப்பனும் தவளைக்கு வேணுமாம் - அவன் சினேகிதிக்காக. கொடுத்துவிட்டு நீ பாட்டுக்குப் போய்ச் சேர்." பதிலுக்குக் காத்திருந்தான். "என்ன சொல்கிறாய்?"

ரானி அமைதியாக நிதானத்துடன் அவனுக்குப் பதில் கொடுத்தான்: "ஸ்லிம், தவளைகிட்டே போய்ச் சொல்லு. மெடலைக் கொடுக்கிறோம் - பர்த்திக்கு அவனோட அம்மாவைக் கொடுத்தால்."

ஸ்லிம்முக்கு வாய் பிளந்துவிட்டது. கண்களில் நம்ப முடியாத மிரட்சி. ரானியை ஒதுக்கிக் கொண்டு என்னிடம் பேசினான். "க்ளே, உன்னுடையது மெடல். இவனுடையதில்லை. நீ என்ன சொல்கிறாய்?"

"நான் வர்றேன்" பைக்கில் நான் புறப்பட்டு விட்டேன்.

ஆத்திரமும் அவமானமும் தாளமாட்டாமல் தன் வண்டியை அழுத்திக் கொண்டு திருப்பினான் ஸ்லிம். போகும் போதே கழுத்தைத் திருப்பி, "தவளை உங்களைத் தூக்கித் கட்டிடப் போறான். பாருங்க! டேய் நீக்ரோ கோமாளிங்களா! பொறுத்திருந்து பாருங்க!" என்று கத்தினான்.

ஏற்கெனவே அதிக காலம் பொறுத்திருந்து பார்த்தாயிற்று என்று நினைத்துக் கொண்டேன். ஏகப்பட்ட நூக்ரோ இளைஞர்கள் வெள்ளையர் பகுதிகளில் பிடிக்கப்பட்டு இதே கும்பலினால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். செயினினால் சாட்டையடி தரப்பட்டிருக்கிறார்கள்; சில பேர் இறந்து போயும் இருக்கிறார்கள்.

"நான் இந்தப் பக்கமாகப் போய் அவர்களுக்குப் பாய்ச்சல் காட்டுகிறேன். நூ இந்தப் பக்கமாய் நழுவிவிடு" என்றான் ரானி. போயும் இருப்பான். அதற்குள் ஹாண்டில்பாரைப் பிடித்து அவனை நிறுத்தினேன்.

நான் ஒரு திட்டம் வைத்திருந்தேன். நேரே நூக்ரோக்கள் வசிக்கும் பகுதிக்குத்தான் நான் போவேனென்று அவர்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால் வேறு வழியாகச் சென்று இண்டியானா பகுதிக்குள் செல்லும் பாலத்தைக் கடந்து சில மைல் தூரம் ஆற்றை ஒட்டினாற்போல் போய், பிறகு இன்னொரு பாலத்தின் வழியே லூயிவில்லுக்குள் திரும்ப நுழைந்து கொள்ளலாம் என்று திட்டமிட்டேன்.

பைக்குளில் ஏறிச் சந்திலும் பொந்திலும் புகுந்து நாங்கள் பறந்தோம். மழையையும் காற்றையும் எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளாமல் போய்க் கொண்டிருந்தோம்.

கடைசியில் ஒரு வழியாய்ப் பாலம் கண்ணில் பட்டது. மழை சற்று ஓய்ந்திருந்தது. மெயின் தெருவிலிருந்து பாலத்துக்குள் நுழைந்தோம்.

மறுகணம் - "விடாதே! பிடி! இதோ இருக்காங்க நூக்ரோ சோமாறிங்க!" என்ற பயங்கரக் கூச்சல்கள் வானைப் பிளந்தன.

19

முதலில் என் கண்ணில் பட்டது 'தவளை'யின் மோட்டார் பைக் தான். நாங்கள் நூக்ரோப் பகுதிக்குத் தான் போவோம் என்று ஊகித்து, அங்கே தன் ஆட்களை அனுப்பியிருந்தான் எங்களைப் பிடிப்பதற்காக. அதே சமயம் நாங்கள் பாலத்தின் வழியே இண்டியானாவுக்குள் நுழைந்து, மறுபகுதியால் எங்கள் பேட்டைக்குப் போகக்கூடும் என்பதையும் தந்திரமாகத் தெரிந்து வைத்திருந்தான். ஆகவே அந்தப் பாலத்தின் வழியை அடைப்பதற்காக வந்துவிட்டான். கொஞ்சம் முன்னேறினாலும் எங்களை மடக்கித் தாக்குவது நிச்சயம்.

ரானி என் பக்கம் குனிந்தான். என் முகத்தைப் போலவே அவன் முகமும் மழைத் தூறலால் மட்டுமின்றி வியர்வையாலும் நனைந்திருந்தது. "அவர்கள் உன்னைத்தான் அடிக்க விரும்புகிறார்கள். நீ முன்னால் போ. நான் பின்னால் வருகிறேன். உன்னால் அவர்களை டபாய்க்க முடியும். இல்லையா?' என்றான்.

நான் சமாளித்தேன். பாலத்தில் குபீரென்று புகுந்து பைக்கை இப்படியும் அப்படியும் வளைத்துப் பறந்தேன். பின்னாலேயே ரானி வந்தான். தலையைச் சற்றுத் திருப்பிப் பார்த்தபோது, தவளையுடன் ஸ்லிம்மும் இருப்பது தெரிந்தது.

ரானி சொன்னது சரிதான். தவளை ரானிக்குச் சரிக்குச் சரியாய் வந்தும் அவனை விட்டுவிட்டு என்னையே குறி வைத்து வந்து கொண்டிருந்தான். கையில் நீண்ட செயினைச் சுழற்றிக் கொண்டே கத்தினான் : "டேய் ஒலிம்பிக் நீக்ரோ! நீயாடா குத்துச் சண்டைக்காரன்!"

அதற்கு மேலேயும் அவன் கத்தியிருப்பான். ஆனால் ராணி பிரமாதமாய் ஒரு வேலை செய்தான். ரொம்பக் கச்சிதமாய்க் கணக்குப் பார்த்து, தன் பைக்கில் ஒரு பாய்ச்சல் பாய்ந்து தவளையுடைய பைக்கின் முன் சக்கரத்தின்மீது டமாலென்று மோதினான். அவன் வருவதைத் தவளை கவனிக்குமுன் காரியம் மிஞ்சிவிட்டது. இடது பக்கம் ஒதுங்கப் பார்த்தவன் நடைபாதையின் சிமெட்டி மேடையில் மோதிக் கொண்டு கவிழ்ந்து விழுந்தான். சரியான அடி. அவன் சினேகிதி இன்னொரு புறம் விழுந்து, வலி தாங்காமல் கூச்சலிட்டாள். உடம்பெல்லாம் காயத்துடன் ரத்தம் ஒழுக, பிளவுஸ் கிழிந்து தொங்க, தட்டித் தடுமாறி எழுந்து கொண்டு, கைப்பிடியில் சாய்ந்து அரை மயக்கமாய்க் கிடந்த தவளையை எழுப்பினாள்.

அவர்களுக்குப் பின்னே ஸ்லிம் வந்து கொண்டிருந்தான். அவனும் அதே அளவு நீளமுள்ள செயினை, என் தலையைக் குறி வைத்துச் சுழற்றிக் கொண்டே வந்தான்.

செயினை இரண்டாக மடித்து என் தலையை நோக்கிச் சுழட்டி அடித்தான் ஸ்லிம். என் முகத்தை நொறுக்கியிருக்க வேண்டிய அந்தச் செயின் என் தோளைச் சுற்றிக்கொண்டது. என்னையே அறியாமல் சரேலென்று என் கையை உயர்த்திச் செயினைப் பிடித்துக் கொண்டேன். என் பலம் கொண்ட மட்டும் அதைத் தட்டிவிட்டேன். அந்தத் தட்டல் ஸ்லிம்மை மோட்டார் பைக்கிலிருந்து இழுத்து வெளியே தள்ளியது. நாங்கள் இருவரும் சேர்ந்து எகிறி ஒருவர் மீதொருவர் மோதிக் கொண்டோம். அவன் தலை என் தலைமீது மோதிய விதம் என்னை ஒரு கணம் கல்லாக்கிவிட்டது. ஆனால் உடனே சுதாரித்துக் கொண்டு அவன் முகத்தில் என் முட்டியால் ஒரு குத்துவிட்டேன். அவன் தரையில் விழுந்தான்.

மூக்கிலிருந்து ரத்தம் கொட்டியது. அவன் பைக் கைப்பிடிக்கு அப்பால் போய் விழுந்தது.

அந்தப் பெண் கத்திக் கொண்டிருந்தாள் : "ஐயோ! தவளையைக் கொல்லப் பார்க்கிறானே! கொல்லப் பார்க்கிறானே!

ரானி தவளையின் கழுத்தைச் சுற்றி ஒரு கத்திரிப் பிடி போட்டு மடக்கிக் கத்தியைப் பிடித்து அவன் கழுத்தை அழுத்தியிருந்தான். "போ அந்தண்டை! இவன் கழுத்தை வெட்டிவிடுவேன் இல்லாட்டி! போ அப்பாலே!" என்று அந்தப் பெண்ணிடம் கூவினான்.

பிறகு தவளையின் லெதர் ஜாக்கெட்டை, ஏதோ சவ்வுக் காகிதத்தைக் கிழிக்கிற மாதிரி கிழிக்கவும் ஆரம்பித்தான்.

அந்தப் பெண் மண்டியிட்டு விம்மிக் கொண்டு கெஞ்சலானாள். அதற்குள் இன்னும் இரண்டு பேர் மோட்டார் பைக்குகளில் வருவதைக் கண்டேன்.

ஒருவன் சிவப்புத் துண்டு கழுத்தில் கட்டியிருந்தான். இன்னொருவன் ஹெல்மெட் அணிந்திருந்தான்.

நான் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கத்தினேன் : "அவர்களை வர வேண்டாமென்று சொல்லு! பாலத்தை விட்டு இறங்கிப் போகச் சொல்லு!"

அவள் விருட்டென்று எழுந்து பாலத்தின் கோடிக்குப் போய், "திரும்பிப் போங்கள்! எல்லாரும் திரும்பிப் போங்கள்!" என்று கூவினாள்.

அவர்கள் வேகம் குறைந்தது. ஆனால் எச்சரிக்கையுடன் ஊர்ந்து

வரலானார்கள்.

"தவளையே சொல்லட்டும்! பிடியைக் கொஞ்சம் தளர்த்தி அவனைச் சொல்லவிடு" என்று ராணியிடம் கூறினேன்.

ராணி பிடியைத் தளர்த்தினான். மூச்சுத் திணறிக் கொண்டிருந்த தவளை தன்னால் இயன்றளவுக்கு இழுத்து சுவாசித்தான். பிறகு, நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் பலமாக, "போங்கடா! போங்க!" என்று கத்தினான்.

அவனுடைய ஆட்கள் ஒரு நிமிடம் பாலத்தின் அடியில் தயங்கினார்கள், குழப்பமடைந்தவர்களாக. "தவளை, நாங்க என்ன செய்யணும் என்கிறாய்?"

அந்தப் பெண் திருப்பிக் கத்தினாள் : "தவளை சொல்கிறபடி செய்யுங்க. காதிலே விழவில்லை?"

ஹெல்மெட்டுடன் வந்த மோட்டர் பைக் ஆள் எதையோ வெளியே எடுத்தான். கைத் துப்பாக்கி. நான் அவன் முகத்தை விட்டு என் பார்வையை அகற்றவேயில்லை.

20

"தவளையைப் பிடித்திருக்கிற பிடியைக் கொஞ்சம் தளர்த்து," என்று ரானியிடம் கிசுகிசுத்தேன். தவளைதான் எங்களுக்கிருந்த ஒரே நம்பிக்கை. ஆகவே "தவளையைப் பேச விடு," என்றேன்.

தவளை கூச்சலிட்டான். மூச்சுக்கூட விடமுடியாமல் ஒரு கூச்சுக்குரலில் கத்தினான். "எல்லோருக்கும் நான் சொல்றேன்! திரும்பிப் போங்கடா. வீட்டுக்குப் போங்க. ஸ்லிம்! நீயும்தான்! திரும்பிப் போ!"

ஸ்லிம் குடிகாரனைப் போல் தள்ளாடிக் கொண்டே எழுந்தான். தன் மோட்டார் பைக்கைத் தள்ளிக்கொண்டு நொண்டியபடியே தன் பட்டாளத்திடம் போய்ச் சேர்ந்தான். தங்களுக்குள் சுருக்கமாக ஆலோசனை செய்தார்கள். எங்களை நிமிர்ந்து ஒருமுறை பார்த்துவிட்டு, தெருவில் இறங்கித் திரும்பிச் சென்றார்கள்.

நான் நகரவில்லை. பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். அதற்குள் அந்தப் பெண் சொன்னாள். "அவங்கதான் போயிட்டாங்களே! இனிமேல் எங்களை என்ன பண்ணப் போறே?"

ரானி தவளையை விடுவித்து, அவன் தனது பைக்குக்கு ஊர்ந்து செல்லுமாறு செய்தான். ஒரு வேட்டைக்காரன், ஏதோ முயல் குட்டி என்று எண்ணித் துரத்திக் கொண்டுவந்து, அதை மடக்கிய பிறகு பார்த்தால் அது புலி என்று தெரிகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு அப்போது எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தது தவளைக்கும். அவனுடைய ஒரே எண்ணம் எப்படித் தப்புவது என்பதே. வண்டியில் ஏறி உட்காரவே தடுமாறினான்.

அவனுடைய தோழி அவனுக்கு உதவி செய்தாள். அப்படியும்கூட வழுக்கி வழுக்கி விழுந்தான். அவர்களைப் பார்த்துக் கொண்டே நான் நின்றேன். என் மனத்தில் கோபம் இல்லை; இரக்கமோ துவேஷமோ இல்லை. ஒரே இறுக்கமாக இருந்தது. எங்கள் ஒத்தாசை இல்லாமல் அவர்களால் பைக்கைக் கிளப்புவது முடியாத காரியம். அந்தப் பெண்ணை நோக்கிச் சென்றேன். அவள் மிரண்டு ஒதுங்கினாள், நான் அவளை அடிக்க வருவதாக எண்ணி...

"வண்டியைக் கிளப்ப உதவி பண்ணுங்கள்," என்று மிகத் தாழ்வான குரலில், மிகப் பதற்றமாகச் சொன்னாள். "நாங்கள் திரும்பி வர மாட்டோம். சத்தியமாய். போய்க் கொண்டே இருப்போம்."

வண்டியில் வளைந்திருந்த கம்பிகளை நேராக்கினேன். சக்கரங்களுடன் அவை உரசாதபடி சரிப்படுத்தினேன். தவளையின் கைகளைப் பிடித்து ஹாண்டில்பாரின் மீது வைத்துப் பிடித்துக் கொள்ளச் செய்தேன். பலஹீனமாய்த் தள்ளாடிக் கொண்டு இருந்தான். இன்னும் ராணியின் பிடியிலே கழுத்து இருக்கிற மாதிரி இருமிக் கொண்டிருந்தான். ராணியின் கத்தி அவன் மேல் சட்டையைக் கிழித்தபோது ஏற்பட்ட கீறல்களில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நான் ஒத்தாசை செய்தபோது அது என் 'டி.ஷர்ட்' முழுவதையும் நனைத்தது.

சரிவில் இறங்கிச் செல்ல வாகாக, அந்தப் பைக்கை நானும் ராணியும் ஆளுக்கொரு பக்கம் பிடித்துக் கொண்டு கும்மென்று தள்ளிவிட்டோம். மின்சார ஸ்டார்ட்டர் உடைந்திருந்தது. ஆனால் வண்டி தட்டித் தடுமாறிக் கொண்டு கிளம்பியது. கொஞ்சம் தள்ளாடியபடியே ஓடியது. தவளை திரும்ப கோஷ்டிகள் சேர்க்கிறானா என்று கொஞ்ச நேரம் நின்று கவனித்தோம். ஆனால் அந்தப் பெண் சொன்னபடியே நடந்தது. தவளை அவர்களைத்

தாண்டிக் கொண்டு செல்ல மற்றவர்கள் பின்தொடர்ந்தார்கள். மறையும் வரை நின்றிருந்தோம். மழை ஓசையும், ரயில்கள் கடகடத்துக் கொண்டு செல்லும் சப்தமும் தவிர வேறெதுவும் கேட்கவில்லை.

ரானி, வயலின் வில்லைத் துடைக்கிற மாதிரி தன் கத்தியை ஷர்ட்டில் துடைத்துக் கொண்டு, "இங்கிருந்து போய்த் தொலைவோம்" என்றான். "என் பைக் குட்டிச் சுவராகி விட்டது" என்றபடி வளைந்து நொறுங்கிக் கிடக்கும் வண்டியை ஆராய்ந்தான். திடீரென்று என் முகத்தில் எதையோ கவனித்தவனாகக் கிட்டே வந்தான். "உனக்கும் காயம் பட்டிருக்கிறதா என்ன? அயோக்கியப் பசங்கள் - உன்னை அடித்தார்களா?"

நான் தலையை அசைத்தேன். உடம்பைப் பொறுத்த மட்டில், நான் காயமில்லாமல் தப்பிவிட்டேன். ஆனால் ரெஸ்டாரண்டில் தலையிலும் வயிற்றிலும் அனுபவித்த வலி திரும்பிவிட்டது. தவளையின் கூட்டத்தோடு மோதும் போது கிடைக்கும் குத்துக்கள் - அடிக்கு அடி - பொறுத்துக் கொள்ளக் கூடியவை. ஆனால் அந்த ரெஸ்டாரண்ட் முதலாளியிடமும், மேயரிடமும், கோடீசுவரர்களிடமும் வாங்கிய அடிகளின் வேதனையை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

"இந்தக் காயத்தையெல்லாம் நல்லா துடைத்துக் கழுவணும். அப்புறம்தான் உனக்குச் சரியாயிருக்கும்," என்றான் ரானி. என் பைக்கிலேயே நாங்கள் இருவரும் செல்ல முடியுமா என்று பரிசோதித்தோம்.

அவனைப் பின் தொடர்ந்து ஆற்றங்கரைக்குப் போனேன். ஆற்றங்கரை சட்டத்தில் ஒலிம்பிக் மெடலைத் தொங்க விட்டேன்.

சிவப்பும் வெளுப்பும் நூலுமான ரிப்பன் தவளையின் ரத்தத்தில் தோய்ந்திருந்தது. பதக்கத்திலும் ரத்தக் கறை படிந்திருந்தது.

ரானி அதை மென்மையாகக் கையிலெடுத்தான். தன்னைக் கூடக் கழுவிக் கொள்ளாமல் பதக்கத்தைக் கழுவினான். தங்கப் பதக்கத்தைப் பழையபடி பளபளக்கப் பண்ணினான். ரிப்பனை அலசி ரத்தக் கறையைப் போக்கி, தன் கழுத்திலேயே ஆசையாக அதை மாட்டிக் கொண்டான்.

நான் நின்று கவனித்தேன். அன்று ஒலிம்பிக் மைதானத்தில், எனக்கு இடது பக்கம் ஒரு ரஷ்யரும் வலது பக்கம் ஒரு போலந்துக்காரரும் இருக்க, நான் வெற்றி மேடையில் நின்றிருந்தபோது, ஒலிம்பிக் நீதிபதி எனக்கு அணிவித்தாரே, அதற்குப் பின் இன்றுதான் முதன் முறையாக அந்தப் பதக்கம் என் மார்பை விட்டு நீங்கியிருக்கிறது. அது உள்ளபடி எப்படி இருக்கிறதோ அப்படி இன்றுதான் அதைப் பார்த்தேன். சாதாரணமானது. ஒரு வெறும் பொருள். தன்னுடைய மாய சக்தியை அது இழந்துவிட்டது.

இந்த மலிவான உலோகத் துண்டை, இந்தக் கந்தல் ரிப்பனை என்ன செய்ய வேண்டுமென்று திடீரென எனக்குத் தெரிந்துவிட்டது. தெரிந்து கொண்டேனோ இல்லையோ என் வயிற்றிலிருந்த வலியும் மறைந்துவிட்டது.

நாங்கள் விரைவாகக் கை கால்களைக் கழுவிக் கொண்டோம். ரானி அந்தப் பதக்கத்தைத் திரும்ப என் கழுத்தில் மாட்டினான். பைக்கை எடுப்பதற்காகப் பாலத்துக்குச் சென்றோம்.

பாலத்தின் நடுவுக்கு நான் சென்றேன். ஒருவரையொருவர் நீண்ட

காலமாக நேசித்துப் புரிந்து கொண்டிருப்பவர்களுக்கே உரிய அந்த அலாதியான, சூட்சும புத்தியைக் கொண்டு ரானி நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை ஊகித்துவிட்டான். பைக்கைக் கீழே போட்டுவிட்டு, என்னை நோக்கி ஓடிவந்தான், கத்திக்கொண்டே. ஆனால் நான் அதற்குள் கழுத்திலிருந்து ரிப்பனை அறுத்துவிட்டேன். பாலத்தின் இடுக்கு எதிலும் சிக்கிக் கொண்டு விடாதபடி பதக்கத்தை எட்டப் பிடித்துக் கொண்டேன்.

ஓஹையோ நதியின் கறுத்த நீரில் அதை விட்டெறிந்தேன். வெள்ளை, நீல, சிவப்பு ரிப்பன்களையும் தன்னோடு இழுத்துக் கொண்டு ஆற்றின் ஆழத்தில் அது அமிழ்வதைக் கண்டேன்.

திரும்பியபோது, ரானியின் கண்களில் ஒரு பீதி படர்ந்திருப்பதைப் பார்த்தேன். "ஜீஸஸ்! கடவுளே!" பின்னர் அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. "கடவுளே! என்ன காரியம் செய்தாயென்று உனக்குத் தெரிகிறதா?"

"அது அசல் தங்கமில்லை. போலி!" அவனைக் கைகளால் அணைத்துக் கொண்டேன். அவன் ஈரமாயும் சில்லென்றும் விறைப்பாகவும் இருந்தான். "அது போலி."

அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "ஏன் ஆற்றில் எறிந்தாய்? ஏன்?"

21

என்னவென்று ரானிக்கு நான் சமாதானம் சொல்வேன்? எனக்குக் கிடைத்த பொருள்களிலேயே மிகவும் அருமையானது அந்த ஒலிம்பிக் தங்கப் பதக்கம்தான். அதை நான் பூஜித்தேன். செயலாற்றலுக்கு அது ஓர் அத்தாட்சி: ஒரு சமூகத்தை நான் சேர்ந்தவன், ஒரு நாட்டைச் சேர்ந்தவன், ஓர் உலகத்தைச் சேர்ந்தவன் என்பதற்கு, ஓர் அந்தஸ்துக்கு அது சான்று. ஸென்டிரல் ஹை பள்ளியைச் சேர்ந்த மாணவர்களின் முன்னே, ஆசிரியர்களின் முன்னே என்னைத் தலை நிமிர வைத்தது அது. படிப்பிலே நான் வெற்றிகள் பெறாவிட்டாலும், வெற்றிகள் பெறக்கூடிய ஏதோ ஒன்று என்னுள்ளே இருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்தது அது.

ஆனால் இதெல்லாவற்றையும் விட மேலான வேறொன்றை விரும்புகிறேன் என்பதை எப்படி ரானிக்குச் சொல்வேன்? நான் அதைப்பற்றிப் பெருமைப்படுகிற மாதிரியே அது என்னைப் பற்றிப் பெருமைப்படக்கூடிய ஒன்று - நான் எப்படி இருந்தாக வேண்டுமென்று நினைக்கிறேனோ அது போல் என்னை இருக்க அனுமதிக்கக் கூடிய ஒன்று - என் வழியில் நான் சாம்பியனாக ஆகும்படி செய்கின்ற ஒன்று - அதையே நான் எல்லாவற்றுக்கும் மேலாக விரும்பினேன்.

"அந்தப் பதக்கம் நமக்குத் தேவையில்லை! தேவையில்லை," என்றேன்

"நீ ஒரு முட்டாள்! கிறுக்கன்!" அதுவரை என்பால் காட்டியிராத ஒரு குரோதத்துடன் அவன் என்னை முறைத்தான். என் ஸ்வெட்டரின்

கழுத்துப் பட்டியை மூர்க்கத்தனமாகப் பிடித்தான். "உன்னைப் போன்ற ஒரு அடிமடையன் சாம்பியனாவதற்காக அவர்கள் உதவி செய்யப் போகிறார்கள்? அந்தக் கோடீசுவரர்களிடம் என்ன சொல்லப் போகிறாய்? நீ பதக்கத்தை மாட்டிக் கொண்டு அவர்களோடு நிற்கிற மாதிரி போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே? பத்திரிகைகளெல்லாம் என்ன எழுதும்?"

என் ஸ்வெட்டரிலிருந்து அவன் பிடியைத் தளர்த்தி, அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டேன். " நீயும் யாரிடமும் சொல்ல வேண்டாம். நானும் யாரிடமும் சொல்ல மாட்டேன். எதுவுமே சொல்லமாட்டேன்," என்றேன்.

பதக்கம் போய்விட்டது. ஆனால் அத்துடன் அந்தச் சோக்கும் போய்விட்டது. அமைதியாக, பதற்றமில்லாமல், நம்பிக்கையாக இருந்தது எனக்கு. வெள்ளையர்களின் நம்பிக்கை நட்சத்திரமென்கிற விடுமுறைக் காலம் முடிந்து விட்டது. புதிய ரகசியமான பலமொன்று ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

ரானியைத் தேற்ற முயன்றேன்: "உண்மையான உலக ஹெவி வெயிட் சாம்பியன்ஷிப் பெல்ட்டை நான் ஜெயிக்கிற வரையில் பொறுத்திரு" என்றேன். சாம்பியன்ஷிப் பெல்ட்டைப் பற்றி முன்பு ஒரு குத்துச் சண்டைப் பயிற்சிக்காரர் என்னிடம் சொல்லியிருந்த வர்ணனைகளை அப்படியே ரானியிடம் ஒப்பித்தேன்: "அது அசல் தங்கம். வைரங்களும் ரத்தினங்களும் பதித்திருக்கும். எடை இருபது பவுண்டு. பெரிய பெரிய ஹெவி வெயிட் சாம்பியன்களின் வழிவழியே வந்தது. மாபெரும் சாம்பியன்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. சும்மா போலித் தங்கமில்லை."

வழியெல்லாம் மழை. ரானியை விட்டுவிட்டு, வீடு திரும்பினேன். எல்லோரும் படுத்துத் தூங்கி விட்டார்கள். என் தம்பி ரூடியிடம் நடந்த விஷயத்தைச் சொல்ல என் அறைக்குச் சென்றேன். அவன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். படுக்கையருகே நின்று சிறிது நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் அவனுக்குப் பதின்மூன்று மாதமே மூத்தவன். அவன் பிறந்தது முதல் அவனிடம் எனக்கு உயிர். நாங்கள் பிரிந்தே இருப்பதில்லை. அவனும் பாக்ஸிங் கற்றுக் கொண்டிருந்தான். பயிற்சியின் போது அவனோடு தான் குத்துச் சண்டை பழகுவேன். சாலையில் உடற்பயிற்சிக்காக ஓடும்போது அவன்தான் கூட வருவான்.

அவனை எழுப்ப நான் விரும்பவில்லை. காலையில் சொல்லிக் கொள்ளலாம் என்று ஓசைப்படாமல் அறையை விட்டு வெளியே வந்தேன். உடலும் உள்ளமும் துரு துருவென்று இருந்தன. தூக்கம் எங்கே வரப் போகிறது? பொழுது விடியும்வரை விழித்திருக்க வேண்டியதுதான். காலையில், சிக்ஸா பூங்காவைச் சுற்றி வழக்கம் போல ஓட வேண்டும். ஹன்ஸேகர் என்பவனுடன் நான் செய்யப்போகும் குத்துச் சண்டைப் போட்டிக்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

பழையதாகிவிட்ட எங்கள் சோபாவில் உட்கார்ந்து, சிற்றுண்டி விடுதியில் அந்தப் பெண் தந்த கவிதைத் தொகுதியை எடுத்துப் பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. குறிப்பாக ஒரு கவிதையைக் கோடிட்டு வைத்திருந்தாள்.

"நானும் அமெரிக்காவைப் பாடுகிறேன். நான் கறுப்புத் தம்பி. விருந்தினர் வரும்போது, என்னை மட்டும் அடுப்படியில் உட்கார வைத்து விடுகிறார்கள்."

"ஆனால் நான் சிரிக்கிறேன், நன்றாக உணர்கிறேன், பலம் சேர்த்துக் கொள்கிறேன்."

"நாளைக்கு, விருந்தினர் வரும்போது நானும் மேஜையில் அவர்களோடு உட்காருவேன்."

"என்னிடம், "போ, போய் அடுப்படியில் உட்கார்," என்று சொல்ல எவனுக்கும் துணிச்சல் வராது."

"தவிர, நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன் என்பதை அவர்கள் பார்ப்பார்கள். வெட்கப்பட்டுப் போவார்கள் -"

"நானும் அமெரிக்காதான்"

மறுநாள் காலை, ஓட்டப்பயிற்சி முடித்துக் கொண்டு வந்தபோது எனக்கு உற்சாகமாக இருந்தது. ஹன்ஸேகரோடு நான் செய்யவிருந்தது தான் எனது முதலாவது தொழில்முறைப் போட்டி.

நான் தன்னம்பிக்கையோடு இருந்தேன். சண்டைக்கு ஒரு மணி முன்னால், வயிறாரச் சாப்பிடும் அளவுக்குத் தன்னம்பிக்கையோடு இருந்தேன். அந்தத் தவறுக்கான விலையை மூன்றாவது ரவுண்டில் கொடுக்க வேண்டி நேர்ந்தது. ஹன்ஸேகர் விட்ட ஒரு வலுவான குத்து என் வயிற்றைத் தாக்கிற்றே, பார்க்க வேண்டும்.

அரங்கத்தில் அங்கேயே வாந்தி எடுத்து விடுவேனோ என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். வயிற்றில் ஏற்பட்ட கலக்கம் அமைதியடையும் வரை அவன் கைக்கு அகப்படாமல் சமாளிப்பதற்குள் பெரும்பாடாகி விட்டது.

இறுதி ரவுண்டுகளில் என் கை ஓங்கலாயிற்று. நான் உலுக்கிய

உலுக்கலில் அவன் குடித்தவன் போல் தள்ளாட ஆரம்பித்துவிட்டான்.

எனது முதல் தொழில்முறைப் போட்டியில் நான் ஜெயித்து விட்டேன். டிரெஸ்ஸிங் ரூமுக்குத் திரும்பியபோது, என்னைப் பாராட்ட என் கோடீசுவரப் புரவலர்கள், என் குடும்பத்தினர், என் நண்பர்கள் எல்லோரும் இருந்தனர். வில்மாவும் இருந்தாள்.

வில்மாவிடம் எனக்கிருந்த ஆழ்ந்த காதலை நான் ரகசியமாக வைத்திருந்தேன். அவள் ஓட்டப் பந்தய சாம்பியன். மூன்று தங்கப் பதக்கங்கள் வாங்கியிருந்தாள். ஒலிம்பிக் பந்தயத்துக்காக ரோம் சென்றிருந்தபோது அவள் கவனத்தைக் கவர, என்னவெல்லாமோ செய்தேன். எனது குறை : கூச்சம் - கோழைத்தனம். 'என்னை மிஞ்ச யாருமில்லை!' என்று கூச்சல் போட்டபடி ஒலிம்பிக் கிராமத்தில் நான் பவனி வரும் அதே நேரத்தில், வில்மா முன்னிலையில் ஒரு வார்த்தை சொல்ல எனக்கு நா எழும்பாது. வில்மா என்றில்லை, எந்த அழகான பெண் விஷயத்திலும் அப்படித்தான்.

ஒலிம்பிக்கில் நான் பெற்ற வெற்றிகள் பத்திரிகைகளின் கவனத்தைக் கவர்ந்தன. ஆனால் நானோ, அந்தச் சாக்கலேட் நிற அழகியின் கவனத்தைக் கவர ஆசைப்பட்டேன்.

22

ஹான்ஸேகர் சண்டை முடிந்த மறுதினம் லூயிவில் கோடீசுவரர்களைச் சந்தித்தேன். எனக்குப் பயிற்சியளிக்கும் டிரெய்னராக யாரை நியமிப்பது என்பது பற்றி விவாதித்தோம். நான் புகழ்பெற்ற கறுப்பு வீரரான ஆர்ச்சி மூரின் பெயரைப் பிரஸ்தாபித்தேன். ரிங்கிலும் சரி, வெளியிலும் சரி, அவரது பாணி எனக்குப் பிடித்திருந்தது.

ராக்கி மார்ஸியானோ சாம்பியனாக இருந்தபோது அவர் ஆர்ச்சி மூரை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. தன்னுடன் சண்டை செய்யச் சம்மதிக்கவில்லை. அப்போது ஆர்ச்சி என்னவெல்லாம் சுவையான விளம்பரத் தந்திரங்கள் செய்தார் என்பது எனக்கு நன்றாக நினைவு இருந்தது. மார்ஸியானோவைக் கைதி உடையில் இருக்கிற மாதிரி ஒரு புகைப்படம் எடுத்துப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். "போலீஸ் அதிகாரியான ஆர்ச்சி மூருடன் மார்ஸியானோவைச் சண்டை போடச் சம்மதிக்க வைப்பவருக்கு ஒரு லட்சம் டாலர் இனாம்" என்று அதற்குத் தலைப்புப் போட்டார். அதைக் கண்டு சிலிர்த்தெழுந்த மார்ஸியானோ சண்டை செய்ய ஒப்புக் கொண்டார்.

எனது லூயிவில் புரவலர்கள் ஆர்ச்சி மூருடன் தொடர்பு கொண்டார்கள். அவர் என்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளவும், தனது அனுபவ அறிவை எனக்கு வழங்கி, சிறந்த குத்துச் சண்டைக்காரர்களின் வழியில் என்னை உருவாக்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

என்னை விமானத்தில் புறப்பட்டு வருமாறு ஆர்ச்சி தெரிவித்தார்.

ஆனால் அந்த நாட்களில்தான் முடிந்தமட்டில் விமானப் பயணங்களைத் தவிர்த்து வந்தேன். முழுக்க ரயில் பிரயாணமாகவே செய்து ஸான்டீகோவை அடைந்தேன்.

ஸான்டீகோ நெடுஞ்சாலையில் ஆர்ச்சிக்குப் பெரிய நவீனமான வீடு இருந்தது. நான் போனதும் அவர் வெளியே வந்து என்னைத் தழுவிக் கொண்டார். "உன் லக்கேஜை எடுத்துக் கொண்டு என் பின்னால் வா," என்றார். இரண்டாம் மாடிக்குச் சென்றோம். ஒரு சின்ன அறையில் என்னைத் தங்க வைத்தார். "நீ சாம்பியனாகும் வரை இது போதும்," என்றார்

எனக்கு நினைவிருக்கிறது: வீட்டைச் சுற்றி நடந்து கொண்டே இருப்பேன். நெடுஞ்சாலையைப் பார்த்தபடி நிற்பேன். கார்கள் ஹாரன் அடித்தபடி போகும். ஆர்ச்சியைப் பார்த்துப் பலர் கை வீசிக் கொண்டே செல்வார்கள்.

மறுநாள் காலை அவருடைய அரை டன் டிரக் வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டோம். குன்றுகளை நோக்கி, இருபது முப்பது மைல் நீண்ட மண் சாலையில் சென்றோம். கடைசியில் பயிற்சி முகாமை அடைந்தோம் குத்துச் சண்டைக்காரர்களுக்கு என்றே ஏற்படுத்தப்பட்ட முகாம் அது. அந்த இடத்தைச் சுற்றிப் பெரும் பாறைகள் சூழ்ந்திருந்தன. அவற்றில் ஜாக் ஜான்ஸன், ராக்கி மார்ஸியானோ, ஷுகர் ரே, ஜோ லூயி போன்ற சாகா வரம் பெற்ற வீரர்களின் பெயர்களை அவர் பொறித்து வைத்திருந்தார். பல வருடங்களுக்குப் பிற்பாடு நான் என் சொந்த முகாமை நிர்மாணித்தபோது இதே ஐடியாவைப் பின்பற்றினேன்.

"பயிற்சி சாலையை அடைவதற்கு இன்னும் கொஞ்ச தூரம் நடக்கணும்," என்றார் ஆர்ச்சி பெல்ட்டை இறுக்கி

விட்டுக்கொண்டு.

அவருடன் கூடக் குன்றுகள் மீது ஏறுவதே எனக்குக் கிளுகிளுப்புத் தந்தது. சரித்திரத்தின் மாபெரும் குத்துச் சண்டை வீரர்களில் ஒருவரோடு தோளோடு தோள் உராய உலாவுகிறேனே! ஆர்ச்சி என்னை ஏதோ சாதாரணமானவன் என்று எண்ணிக் கொண்டிருப்பது தெரிந்தது. நான் சாதாரண அமெச்சூரல்ல என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்பினேன். எப்போது அவருடன் குத்துச் சண்டை அரங்கத்துக்குள் நுழைந்து அவரை வீழ்த்துவோம் என்று நான் துடித்துக் கொண்டிருந்தேன். அவர் மனத்தில் என்னைப் பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படுத்துவதற்கு அது ஒன்றுதான் வழி என்று நினைத்தேன்.

"மலையுச்சி வரை ஓடலாம் வா," என்று அழைத்தார் "ஓகே" என்று ஓடினேன். அரை மைல் தூரத்துக்கு தான் வேகமாயும் நேராயும் ஓடினேன். அவர் என்னைப் பின் தொடர்ந்தார், சீராக அடியெடுத்து வைத்தபடி. திடீரென்று எனக்குப் பெரும் களைப்பு ஏற்பட்டது. சுருண்டு விழுகிற மாதிரி ஆகிவிட்டேன். திரும்பிப் பார்த்தால் அவர் அமைதியாக தாளம் போடுகிற மாதிரி டக் டக் என்று ஓடி வந்து கொண்டிருக்கிறார். என்னை அணுகியதும், "முதல் பாடம். ஓட்டம் சீரானதாக இருந்தால் இன்னும் அதிக தூரம் போகலாம்," என்றார்.

உடற்பயிற்சிக் கூடத்தில் ஒரு கொட்டகை இருந்தது. முன்புறத்தில் ஒரு பெரிய பக்கெட் ஆணி அடித்து மாட்டியிருந்தது. ரத்தம் வழிந்து வெளியே சொட்டுகிற மாதிரி அதில் படம் வரையப்பட்டிருந்தது. சிவப்பான எழுத்தில் 'ரத்த பக்கெட்' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

23

நான் உடைகளைக் களைந்தேன்.

அங்கிருந்த குத்துச் சண்டைக்காரர்களுடன் - முக்கியமாக ஆர்ச்சி மூருடன் - குத்துச்சண்டை அரங்கத்தில் இறங்க ஆர்வமாக இருந்தேன். ஆனால் ஆர்ச்சி அனுமதிக்கவில்லை. "கொஞ்ச நாள் போகட்டும். முதலில் கட்டுப்பாடான பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். உன்னைச் சரியானபடி டிரெய்ன் பண்ணுவதாக லூயிவில் கோடீஸ்வரர்களுக்கு உறுதியளித்திருக்கிறேன். படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும். நடக்கப் பழகுவதற்கு முன்னால் தாவிப் பாய வேண்டுமென்று நீ ஆசைப்படுகிறாய். குத்துச் சண்டையைத் தவிர வேறு சில காரியங்களும் இருக்கின்றன. தினம் ஒரு முறை நாம் இங்கே சாப்பிடுவோம். சாப்பிட்டானதும் தட்டுக்களைக் கழுவுவோம். தரையைக் கூட்டி, இடத்தைச் சுத்தமாகச் செய். டிஸிப்ளினைக் கட்டி வளர்க்க இதுதான் வழி. நாலு வருஷ காலத்தில் நீ தயாராகி விடுவாய்" என்றார்.

கடைசியில் ஒரு நாள் என்னுடன் சண்டையிட ஆர்ச்சி கையுறைகளை மாட்டிக் கொண்டார். அங்கே தங்கியிருந்த அத்தனை வாரங்களில் நான் என் விருப்பத்துக்கு மாறாகக் கூட்டியதையும் கழுவியதையும் மெழுகியதையும் நினைத்துக் கொண்டேன். அந்தக் குரோதம் மொத்தத்தையும் அவர் மீது காட்டினேன். குத்தினேன், பாய்ந்தேன், வட்டமடித்தேன், கைகளைச் சாட்டையாய்ச் சுழற்றினேன்; அவரை அயரச் செய்தேன்.

இப்போது நினைக்கும்போது அதிலே ஜம்பமடித்துக் கொள்கிறாற்போல என்ன இருந்தது என்று தோன்றுகிறது.

ஏனெனில் ஆர்ச்சி கிழவர். என்னைக் காட்டிலும் இரண்டு மடங்கு வயதானவர். ஆனால் எனக்கு வாழ்க்கை அங்கே அலுத்துப் போயிருந்தது. நான் தயார் ஆவதற்கு இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும் என்று ஆர்ச்சி நினைத்திருந்தார். ஆனால் எனக்கு உண்மை தெரியும். அங்கே டிரெயினிங் செய்து கொண்டு சும்மா கிடப்பது எனக்குப் பிடிக்கவில்லை. காட்டிலும் மலைகளிலும் சுற்றலானேன். பறவைகளின் கூதத்தைச் செவி மடுத்தேன். நெடுஞ்சாலையைக் கடக்கும் முயல்களையும் நடுநடுவே வானத்தின் வழியே செல்லும் ஜெட் விமானங்களையும் பார்த்தேன். வேறு வேலையே இல்லை.

குத்துச் சண்டை வீரனாக வர வேண்டுமென்றால், மக்களுக்கு மத்தியில்தான் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பக்கத்தில் நான் இருக்க வேண்டும். முடி வெட்டும் சலூன்களுக்கருகே இருக்க வேண்டும். ஜனங்கள் தங்கள் ஷூக்களுக்குப் பாலிஷ் போட்டுக் கொள்வதைப் பார்க்க வேண்டும். கடைகளுக்குள்ளே போவோரையும் வெளியே வருவோரையும் கவனிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, பயிற்சி பெற வேண்டிய கட்டத்தையெல்லாம் தான் எப்போதோ தாண்டியாகிவிட்டது.

நான் சண்டையிட விரும்பினேன். சண்டையிட மட்டுமே விரும்பினேன்.

அடுத்த வாரம் நான் 'ரத்தம் ஒரு பக்கெட்' முகாமை விட்டுப் புறப்பட்டுவிட்டேன். அதற்கு முக்கியக் காரணம், ரத்தம் இன்னும் நிறையக் கொட்டக் கூடிய இடத்துக்கு நான் போக விரும்பியதுதான். எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக லூயிவில்லுக்குத் திரும்ப நினைத்தேன். குத்துச் சண்டையில்

என்னுடைய பாணி என்ன என்பதையும் எனக்கென ஒரு சிறிய குத்துச் சண்டை ஏற்பாடு செய்து கொள்வது எப்படி என்பதைப் பற்றியும் ஏற்கெனவே நான் திட்டங்கள் வகுத்திருந்தேன்.

எனக்கு விமானப் பிரயாணத்திலுள்ள பயம் பற்றி ஸேட்லருக்குத் தெரியும். "மகனே, சிறந்த குத்துச் சண்டைக்காரனாக வர விரும்பினால், நீ விமானத்தில் செல்லும்படி தான் இருக்கும். உலகத்தின் பல பாகங்களுக்கும் பறக்க வேண்டும். உன் பயம் விசித்திரமானது. ஒன்று அந்தப் பயத்தை நீ வெல்ல வேண்டும். அல்லது குத்துச் சண்டையை விட்டு விடவேண்டும்," என்றார்.

இந்தப் பயம் எப்படி எனக்கு உதித்தது என்று பல சமயங்களில் என் மனத்தை நானே ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். இதே பயத்தை என் தந்தை நாடகமாக நடித்துக் காட்டியிருப்பார். அவரிடமிருந்தே எனக்கு வந்திருக்கக் கூடும். அல்லது, முதல் தடவையாக நான் லூயிவில்லிலிருந்து சிகாகோவுக்கு விமானப் பயணம் செய்தபோது ஏற்பட்ட அனுபவம் காரணமாக இருக்கலாம். அது சிறிய இரட்டை இஞ்சின் விமானம். அப்போது ஒரு புயல் வீசியது. விமானம் ஆட்டம் கண்டது. தரையுடன் பொருத்தியிருந்த ஆணிகள் கழன்று விட்டதால் ஸீட்கள் பிய்ந்துவிட்டன. எனக்கு ஏற்பட்ட பயம்! ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஒலிம்பிக் டெஸ்டுக்கான நேரம் வந்தபோது, நான் விமானத்தில் செல்ல மறுத்துவிட்டேன். ரயில் டிக்கெட்டுக்காக ஜோமார்ட்டினிடம் பணம் கடன் கேட்டேன். "விமானத்தில் போவதானால் போ. இல்லாவிட்டால் நட!" என்றார் அவர். "இந்த பயத்தை நீ விட்டாக வேண்டும்" என்று கூறிவிட்டு என்னை விட்டு விட்டுத் தான் மட்டுமே விமானத்தில் போய்விட்டார்.

எனக்கு வந்திருந்த பரிசுகளில் ஒரு தங்கக் கைக் கடியாரம் இருந்தது. ரயில் டிக்கெட்டுக்காக அதை அடகு வைத்து

லூயிவில்லுக்குத் திரும்பினேன். இப்படியொரு பயம் நமக்கு இருக்கிறதே என்று சங்கடமாயிருந்தது. அதை எப்படி ஒழிக்கப் போகிறோம் என்று குழப்பமாயிருந்தது.

24

சில வருடங்களுக்கெல்லாம் விமானப் பயணம் என்பது சர்வ சகஜமாகி விட்டது. பைலட்டுகளுடன் காக்பிட்டில் போய் உட்கார்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சிகரமான அனுபவமாகி விட்டது. சொந்தமாகவே ஒரு விமானமும் ஒரு ஹெலிகாப்டரும் வாங்கிக் கொள்ளத் திட்டமிடலானேன்.

"விமானத்தில் பயணம் செய்யத் தயாராயிருந்தால் வயிறு நிறையச் சாப்பிடலாம். இல்லாவிட்டால் வீட்டிலேயே தங்கியிருந்து பட்டினி கிட," என்றார் ஸேட்லர்.

நான் லூயிவில்லுக்கு விமானத்திலேயே திரும்பினேன்.

சில குத்துச் சண்டைக்காரர்கள் மோசமாகத் தோல்வியடையும் போது அவரது உதவியாளர்கள், டிரெய்னர்கள், மானேஜர்கள் எல்லாரும் தலையை வருத்தத்துடன் ஆட்டிக் கொண்டு, "நன்றாய் வேணும் அவனுக்கு! 'அந்த விஷயத்தின் பக்கம் தலை வைத்துப் படுக்காதே என்று எவ்வளவோ சொன்னேன்," என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். அதைக் கேட்டுக் கேட்டு நான் ஸெக்ஸ் விஷயத்தை எப்பாடு பட்டேனும் தவிர்ப்பது என்று தீர்மானமாயிருந்தேன். 1958 ஆம் ஆண்டு 'கோல்டன் க்ளவ்ஸ்' போட்டி நடக்கும்வரை அந்த உறுதியில் வெகு வெற்றிகரமாக இருந்தேன் - ஒரு சின்னப் போராட்டம் கூட இல்லாமல், வாழ்க்கையில் நான் விரும்பியதெல்லாம் பிரமிக்கத்தக்க, வெற்றிகரமான குத்துச் சண்டைக்காரனாக விளங்க வேண்டும் என்பதுதான். ஸெக்ஸை உதறுவது அதற்கு உதவி செய்யக் கூடுமென்றால் நான் கன்னிகா ஸ்திரீயாக இருக்கத் தயார்.

செக்ஸையும் விளையாட்டு வீரர்களையும் பற்றி ஆராய்ந்த டாக்டர்களும் ஆராய்ச்சியாளர்களும் முற்றிலும் வேறுவிதமான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் முதன் முதல் போட்டிகளில் நுழைந்தபோது பழைய குத்துச் சண்டை வீரர்கள் ஸெக்ஸின் தீமை பற்றி அறுதியிட்டுக் கூறும் விஷயங்களைக் கண்ணும் கருத்துமாகச் செவிமடுத்து வந்தேன். சிலர் தான் தோல்வி அடைந்ததற்கு - அல்லது கிட்டத்தட்ட அந்த நிலைமை ஏற்பட்டதற்கு - ஓர் எதிர்பாராத அழகியின் சந்திப்புத்தான் காரணம் என்ற வெகு சுவாரஸ்யமான கதையை விவரிப்பார்கள். பக்கத்திலேயிருக்கும் டிரெய்னர்களும் மானேஜர்களும் ஆமாம் பாட்டுப் பாடுவார்கள்.

சூடப் பிள்ளைகளான நாங்கள் எந்தப் பெண்ணுடனாவது குழைந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் எங்களைத் தனியே அழைத்துச் சென்று, "நீ ஒரு மரக்கட்டை என்று அவள் நினைக்கும்படி நடந்துகொள். எட்டிப் போய்விடும். இல்லையோ, தொலைந்தாய்!" என்று சொல்வார்கள். பிறகு அந்தப் பெண்ணிடம் போய்க் கொஞ்சிக் குலாவி அழைத்துச் செல்வார்கள். எங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும் - ஏன் ஸெக்ஸ் என்பது எங்களுக்கு மோசமானதாயும் அவர்களுக்கு ஜாலியாகவும் இருக்க வேண்டுமென்று.

"அதை எப்படிச் சமாளிப்பதென்று உனக்கு இன்னும் தெரியவில்லை," என்று டானி ஹால் பொறுமையுடன் எனக்கு விளக்கினான். பழைய குத்துச் சண்டைக்காரனான அவன் எனக்குச் சிறந்த நண்பன். எதிராளிகளை எத்தனை சுலபமாக வீழ்த்துகிறானோ அதே அளவு சுலபமாக மிக அழகான பெண்களைப் பிடித்து விடுவான்.

"நூ எப்படி சமாளிக்கிறாய்" என்று, கோல்டன் க்ளவ்ஸ் போட்டிக்காக நாங்கள் தயார் செய்து கொண்டிருந்தபோது ஒரு நாள் அவனைக் கேட்டேன். லூயிவில் ஹெவி வெயிட் பிரிவில் அவனும் லைட்-ஹெவி பிரிவில் நானும் வெற்றி பெற்றிருந்தோம்.

டானி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். தன் பேச்சை யாரும் கேட்காமல் இருக்கிறார்களா என்று. "சிகாகோவுக்குப் போனதும் உனக்குக் காட்டுகிறேன்" என்றான். கண் சிமிட்டினான். "இப்போதைக்கு வாலைச் சுருட்டிக் கொண்டு இரு. பெண்களிடம் குழையடிக்காதே. பலத்தைத் திரட்டி வைத்துக்கொள்."

அவன் எனக்கு எச்சரிக்கை செய்யவே தேவையில்லை. நான் அப்போதுதான் பதினாறு வயதைத் தாண்டியிருந்தேன். சகிக்க முடியாத அளவுக்குக் கூச்சமும் வெட்கமும் கொண்டவன். ஒரு பெண்ணின் அருகே போவதற்குக் கூட என் தைரியத்தையெல்லாம் ஒருங்கு கூட்டி வரவழைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

1958-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் எங்கள் குழு கிகாகோவை அடைந்தது. நல்ல குளிர் காலம். ஸெயின்ட் கிளேர் ஓட்டலில் நாங்கள் சுருட்டி முடங்கிக் கொண்டோம். அருகில் இருந்த மிஷிகன் ஏரி பனியில் உறைந்து போயிருந்தது. எங்களில் ஆறு பேர் தொழில் முறை குத்துச் சண்டைக்காரர்களாக ஆக விரும்பினோம். எச்.விட்டேகர், டேவி ஹில்டன், எல்மர் டென்னிஸன், பில் விக்ஸ்ட்ராம், டானி ஹால், நான். கோல்டன் க்ளவ்ஸ் போட்டியில் வெற்றி பெற்று 'மாஸ்டர்ஸ் டிக்ரி' வாங்க வேண்டியது எங்களுக்கு அவசியமாயிருந்தது.

போன வருடமே லூயிவில்லில் நான் சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன் - என் இருதயத் துடிப்பில் ஏதோ முறைகேடு இருப்பதாக டாக்டர்

கூறிவிட்டதால். பிற்பாடு அந்தச் சந்தேகம் தீர்ந்துவிட்டது. ஆனால் டூர்ணமெண்ட்டில் கலந்து கொள்வதற்கு நாள் கடந்துவிட்டது. எனவே, இந்த ஆண்டு சாம்பியன் பட்டத்துடன் ஊர் திரும்ப வேண்டுமென்பது ஒன்றே எனக்குக் குறியாயிருந்தது.

எனது ஆரம்பப் போட்டிகள் முடிவடைந்து டானியின் அறைக்குச் சென்றேன். கண்ணாடியின் முன்னால் வெற்றுக் காலுடன் நின்றிருந்தான் அவன். குனிந்து தன் பாதங்களைத் தொட்டு உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தான். மறுநாள் இரவு நான் போட வேண்டிய குத்துச் சண்டையைப் பற்றி வெளி வந்திருந்த ஒரு கட்டுரையை என்னிடம் காட்டினான். "கென்ட் க்ரூலுடன் காஷியஸ் க்ளே போடப் போகும் சண்டை ரொம்ப முக்கியமானதாகும்," என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

டானி என் முதுகில் தட்டிச் சிரித்தான். "இந்த ஆளை நீ ஒரே கையால் மண் கவ்வ வைத்துவிடலாம். என் விஷயமும் அப்படித்தான். வா, வெளியே போகலாம்."

எங்கே போகிறோம் என்று கேட்டேன். "செக்ஸ் விஷயம் பழக்கம் உண்டு, இல்லையா?"

"ஓ" என்றேன் - 'அது' எனக்குத் துளிகூடத் தெரியாது என்பதை ஒப்புக் கொள்ளத் துணிச்சல் இல்லாமல்.

25

பயிற்சி சமயத்தில் அதைக் கெடுக்கக்கூடிய ஸெக்ஸ் விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை என்று என் உறுதியை அன்று நான் ஏன் மீறினேன் என்பது எனக்கே புரியவில்லை. ஒரு போட்டிக்கும் அடுத்த போட்டிக்கும் இடையே ஒரு குத்துச் சண்டைக்காரன் சுமக்க வேண்டிய பெரும் பளு 'போர்' தான் - காத்திருந்து காத்திருந்து சலிப்புத் தான். அதுதான் ஒருவேளை நான் அத்தனை ஆர்வத்துடன் டானியின் பின்னே சென்றதற்குக் காரணமோ என்னவோ.

மிஷிகன் அவென்யூவில் ஒரு டாக்ஸி பிடித்தோம். எங்கே போக வேண்டும் என்று டிரைவர் கேட்டதற்கு, "பெண்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே," என்றான் டானி.

டிரைவர் எள் என்பதற்கு முன்னால் எண்ணெயாயிருந்தான். "எவ்வளவு காசு தருவதாக இருக்கிறீர்கள்?" என்றான்.

"வந்து.." எப்படிப் பேச வேண்டும் என்று டானிக்குத் தெரிந்திருக்கிறது. "உனக்குத் தெரியாதா.... சிறந்த இடமாக அழைத்துப் போயேன்."

"இதற்கு எக்ஸ்டிரா தரணும்," என்று கூறி மீட்டர் போட்டான் டிரைவர். ஸௌத் ஸைடுக்கு அழைத்துப் போய் 7ஆவது தெரு அருகே இறக்கி விட்டான். டானி டாக்ஸி கட்டணம் கொடுத்தான். எக்ஸ்டிராவும் சிறிது தந்தான். "நேரே போங்க," என்றான் டிரைவர்.

தெரு மூலையில் ஒரு அடமானக் கடையின் முன்னே நாங்கள் நின்றிருந்தோம். ரயிலைப் பிடிப்பதற்காக ஓடிக் கொண்டிருந்த

ஜனங்களை நோக்கிப் பைபிள் உபதேசங்களை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார் வயதான பெண்மணியொருத்தர். நாங்கள் மேலே நடந்தோம்.

சில வீடுகள் தள்ளிச் சென்றதும் இரண்டு 'அழகிகள்' எங்கள் பின்னால் வந்தார்கள். ஒருத்தி வெள்ளைக்காரி, ஒருத்தி நீக்ரோ. வெள்ளைக்காரி என்னைப் பார்த்து, உயிரில்லாத புன்னகையுடன், "என்ன, ஜாலியாய் இருக்கணுமா?" என்றாள்.

"வந்து... ஆமாம்... இல்லை... சும்மா இப்படி வந்தேன்...." என்றேன்.

ஆனால் டானி என் பேச்சை வெட்டினான். "ஆமாம் டார்லிங். ஜாலிக்காகத்தான் வந்தோம். என்ன செலவாகும்.?"

சகஜமாக, தன்னம்பிக்கையோடு அவன் பேசிய விதம் எனக்குப் பொறாமையாயிருந்தது. நாமும் அப்படிச் சமாளிக்கத் தெரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

"சரி. நீ எவ்வளவு கொடுப்பாய்?" என்றாள் அவள்.

டானி பேரம் பேசினான்: "உனக்கு எவ்வளவு வேணும்?"

"ஏழு - இரண்டு - " என்றாள் அவள்.

டானி என் பக்கம் திரும்பினான். ஏதோ நான் தான் எஜமானன் என்கிற மாதிரி, "ஏழு - இரண்டு என்றால் பரவாயில்லையா?"

"ஓ." என்றேன் - அதற்கு என்ன அர்த்தம் என்பது கொஞ்சம்கூட விளங்காமல். சில நிமிடங்கள் கழித்துத் தெரிந்தது: ஏழு டாலர் அவளுக்கு : இரண்டு டாலர் ரூம் வாடகை. இவ்வளவு அதிகக்

கட்டணம் இருக்கும் என்று என்னால் நம்ப முடியவில்லை:

நாங்கள் தாண்டி வந்த ஒரு கட்டிடத்துக்கே எங்களைத் திரும்ப அழைத்துச் சென்றார்கள். ஓட்டை உடைசலான மரப் படிகளின் வழியே மூன்றாம் மாடிக்குப் போனோம். வராந்தாவில் ஒரு வெள்ளைக்காரக் கிழவன் உட்கார்ந்திருந்தான். அவன் முன்னே காஷியர் கூண்டு மாதிரி ஒன்றிருந்தது. நாங்கள் அருகில் சென்றதும் அதன் ஜன்னலை இறுக்க மூடினான்.

வெள்ளைக்காரப் பெண் அவனைச் சமாதானப்படுத்தினாள். "மாமா, இது ஆல்ரைட்," என்று அவள் சொன்னதும் நாங்கள் முன்னே சென்று ஏழு - இரண்டு என்று பணம் கொடுத்தோம்.

டானி விரலை உயர்த்தி ஆட்டி, "எவள் உனக்கு வேணும்?" என்று உரத்த குரலில் கேட்டான்.

அத்தனை உரக்கப் பேசுவதற்கு ரொம்ப வெட்கமாயிருந்தது எனக்கு. அது சரியென்று தோன்றவில்லை. தன்னை முதலில் தேர்ந்தெடுக்கவில்லையே என்று மற்றவள் அவ மதிப்பாய் நினைக்க மாட்டாளோ? ஆகவே டானியின் காதோடு சொன்னேன்: "நான் நீக்ரோ பெண்ணை எடுத்துக் கொள்கிறேன்."

இரண்டு பேரில் அவளே அழகானவளாகத் தோன்றினாள். வயதிலும் இளையவள் முப்பதுதான் இருக்கும். இன்னும் சற்றுச் சுத்தமாக இருந்தாள். ஆனால் ஹாலின் கோடியிலிருந்த அறையை நோக்கி அவள் நடக்க ஆரம்பித்ததும், டானியிடம், "நான் ஹோட்டலுக்குத் திரும்பிப் போகிறேன்" என்றேன். "நாளைக் காலை சீக்கிரம் எழுந்து கொள்ள வேண்டும். உடற்பயிற்சி இருக்கிறதே..!"

அந்தப் பெண் நான் பின் வாங்குவதைக் கண்டு கொண்டாள். "வா,

டார்லிங், ஒன்றும் ஆகாது, எல்லாம் சரியாகிவிடும். கவலைப்படாதே," என்றாள். அவள் நடந்து கொண்ட முறை ஸெக்ஸியாகவே இல்லை. "சின்ன ஆபரேஷன்தான், பயப்பட வேண்டாம்" என்று புது நோயாளியிடம் ஒரு நர்ஸ் சொல்கிற மாதிரி இருந்தது.

மாடிப்படியை ஒட்டினாற் போல் இருந்த ஓர் அறைக்குள் என்னுடையவள் நுழைந்து விட்டாள். அவள் பின்னே செல்லும்படி எனக்குச் சொல்லிவிட்டு டானி ஹாலின் கோடியிலிருந்த அறைக்குச் சென்றான். நான் என் அறையின் வாசலுக்கு வெளியே நின்றேன். வியர்த்தது. உடம்பு வெட வெடத்தது.

மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டேன். உள்ளே சென்று கதவைச் சாத்தினேன். அவள் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள், ஒரு சிகரெட் பாக்கெட்டைத் திறந்தபடி.

"சூக்கிரம் ஆகட்டும். ராத்திரி பூரா இல்லை," என்றாள்.

"என்ன சூக்கிரமாகட்டும்?" என்றேன்."

"சட்டை பாண்ட்டெல்லாம் கழற்று"

அறையின் மறுபக்கம் விளக்கு ஸ்விட்சுகள் இருந்தன. அங்கு சென்று எல்லா விளக்குகளையும் அணைத்தேன்.

"ஏன் விளக்குகளை அணைத்தாய்?" என்றாள்.

"பாண்ட்டைக் கழற்ற வேண்டும்."

"பாழாய்ப் போச்சு! எனக்கு அது தெரியாதா? ஏன் விளக்கை அணைக்க வேண்டும் என்கிறேன்."

நான் உண்மையைத்தான் சொன்னேன்: "நான் பாண்ட் இல்லாமல் இருக்கிறதை நீ பார்க்கக் கூடாது."

26

அவள் எதிரில் பாண்ட்டைக் கழற்ற மாட்டேனென்று நான் சொன்னதும் அவள் கல்லாய்ச் சமைந்து போனாள். சிகரெட் பற்ற வைப்பதற்காக அவள் ஒரு தூக்குச்சியைக் கொளுத்தினாள். அதற்குள் நான் ஸாக்ஸையும் ஷூக்களையும் எப்படியோ கழற்றிவிட்டேன்.

"சிகரெட் பிடிக்கிறாயா?" என்றாள் பாக்கெட்டை நீட்டி.

"வேண்டாம், மேடம். நான் சிகரெட் பிடிப்பதில்லை. குத்துச் சண்டைக்காரர்களுக்கு சிகரெட் பிடிக்க அனுமதி கிடையாது மேடம்," என்றேன். தூக்குச்சியின் ஒளியில் அவள் முகம் தெரிந்தது. அகன்று கறுத்த அவளது கண்கள் ஆச்சரியத்துடன் என்னை நோக்குவதைக் கண்டேன். ஏதாவது பழக்கமான விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டால் அவளும் நானும் சகஜமாகப் பேசுவதற்கு உதவியாயிருக்கும் என்று, "நான் கோல்டன் கிளவ்ஸ் போட்டியில் கலந்து கொள்ள வந்திருக்கிறேன்," என்று தொடர்ந்தேன். "முதலில் லைட் ஹெவி வெய்ட் சாம்பியனாக ஆகப் போகிறேன். பிறகு.

"பலே," என்றாள் அவள். "ரெடியா?"

தூக்குச்சி எரிந்து அணைந்து விட்டது. மீண்டும் இருள் கப்பியது. எனது நீண்ட அண்டர்வேரைக் களையவிருந்தேன். ஆனால் ஜன்னல் இடுக்கிலிருந்து ஒரு பொட்டு வெளிச்சம் வருகிற மாதிரி தோன்றியது. ஜன்னலை இழுத்து அடைத்து அந்த வெளிச்சத்தையும் நிறுத்தினேன்.

"என்ன இழவுக்காக இப்படி ஜன்னலையெல்லாம் அடைக்கிறாய்? நீ வந்து ஒரு.." அவள் குரலில் ஆச்சரியம் தொனித்தது. சிறிது பயந்திருக்கவும் கூடும்.

நான் சொன்னேன்: "நான் என் அண்டர்வேரைக் கழற்ற வேண்டாமா?"

நான் சுவரைப் பார்த்தாற்போல் நின்று கொண்டேன். இருட்டுக்கு என் கண்கள் பழக்கமாகிவிட்டன. அவள் தன் உடைகளைக் களைந்துவிட்டு, கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டேன். என் மண்டைக்குள் ரத்தம் ஏறியது. ஒரு பெண் நிர்வாணமாய்ப் படுத்திருப்பதை நான் பார்ப்பது அதுதான் முதல் தடவை. நான் என்ன செய்ய வேண்டும்?

கட்டிலில் படுத்திருந்தவள் கேட்டாள்: " நீ என்ன செய்வதாக இருக்கிறாய்? என்ன பண்ணப் போகிறாய் என்று ஒரு முடிவுக்கு வா."

என்னால் நகர முடியவில்லை. என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியாதென்பதை எப்படி அவளிடம் சொல்லுவது? நான் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறாள்?

"வா, நாம் ஆரம்பிக்கலாம்," என்றாள்.

"சரி, மேடம்."

அவள் என்னைப் படுக்கையில் இழுத்துக் கொண்டு, என்மீது குனிந்து என் கழுத்தில் கடித்தாள். என் காதுக்குள் நாக்கைச் செலுத்தினாள். என் முதுகில் கடிக்கத் தொடங்கினாள். "சரி, வா, வா," என்றாள்.

அவளை அணைத்துப் படுத்துக் கொண்டேன். அப்போதும் என்ன செய்வதென்று தெரியவில்லை. கலவரமடைந்தேன்.

"நூ கொஞ்சம் ஒத்துழைக்கக் கூடாதா?" என்று கேட்டாள் அவள்.

நான் உண்மையைச் சொன்னேன்! எந்தப் பெண்ணையும் நான் நெருங்கியது கிடையாது என்று.

என்னை அவள் இரண்டு கைகளாலும் வாரிக் கொண்டாள், தன் பக்கமாக. சரேலென என் கலவரம் விடைபெற்றது. நான் ஆண் என்பதை உணர்ந்தேன்.

"உனக்கு ஒரு கிளுகிளுப்பு உணர்ச்சி ஏற்படவில்லை? ஒரு பரவசம்?" என்றாள். "இல்லை." என்றேன். சொல்வதற்கு வேறொன்றும் தெரியவில்லை.

என்னைத் தள்ளி விட்டாள். நான் உடனே எழுந்து கொண்டு பாண்ட்களைப் போட்டுக் கொள்ளத் தொடங்கினேன். அவள் எழுந்து விளக்குகளைப் போட்டாள்.

நான் கத்தினேன்: "நிறுத்து! நிறுத்து' விளக்குகளைத் திரும்பவும் அணைத்தேன்

"என்ன வந்தது உனக்கு?" என்று அவள் இரைந்தாள்.

"நான் இன்னும் உடைகளை மாட்டிக் கொள்ளவில்லை" என்று விளக்கினேன். அவளை என்னால் பார்க்க முடியவில்லை.

டிரெஸ் அணிந்து கொண்டு மாடிப்படி வழியே இறங்கிச் சென்று ஹாலை அடைந்து டானிக்காகக் காத்திருந்தபோது எனக்கு மூண்டும் துன்பமாக இருந்தது. நான் என்ன தப்பு செய்துவிட்டேன்?

அரை மணி கழித்து டானி இறங்கி வந்தான்.

"எப்படி?" என்றேன்.

"அவள் என்னைப் பிழிந்தெடுத்து விட்டாள்," என்றான் மகிழ்ச்சியுடன்.

"பிழிந்தெடுப்பது என்றால் என்ன?" என்றேன்.

அடுத்த நாள் கென்ட் க்ரூலுடன் நான் போட்ட குத்துச் சண்டையின் முடிவுக்கும் இந்தக் காதல் அனுபவத்துக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் இரண்டாவது ரவுண்டில் நான் தோற்றுப் போனேன்.

27

கோல்டன் க்ளவ்ஸில் வெற்றி பெற வேண்டுமென்று உண்மையிலேயே நான் ஆசைப்பட்டேன். நாலு பேருக்குத் தெரிந்தவனாக இருப்பதை ஏற்கெனவே நான் விரும்பத் தொடங்கி விட்டேன். லூயிவில்லில், பத்திரிகைகளில் முதல் முதலாக என் பெயர் வெளிவர ஆரம்பித்தபோது அக்கம் பக்கத்துக்கு ஓடிச்சென்று, "என்ன, பார்த்தீர்களா? பேப்பரில் என் பேர் வந்திருக்கிறது. என் படம்கூட வந்திருக்கிறது!" என்று கூறுவது வழக்கம்.

ஒருமுறை கோல்டன் க்ளவ்ஸ் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறவர்களின் குரூப் போட்டோவை ஒரு கிழவியிடம் காட்டினேன்.

"இதிலே நீ இருக்கிறாயா?" என்று கேட்டாள், கண்ணாடியைச் சரி செய்தபடி. "நூறு பேர் போல இந்தப் படத்தில் இருக்கிறாங்களே? எது நீ?"

"தெரியலை உங்களுக்கு? இதோ இருக்கிறேனே, நட்ட நடுவிலே!" என்றேன். என்னை அவளுக்கு அடையாளம் தெரியவில்லையே என்று ஆச்சரியமாயிருந்தது. நூற்றிலே ஒருத்தனாகத்தான் இருக்கட்டுமே! நான் இருக்கிறேனா இல்லையா?

அந்த வருடம், கோல்டன் க்ளவ்ஸ் போட்டியில் நான் வெற்றி பெறவில்லையென்றாலும் ஸென்ட்ரல் ஹை பள்ளியின் ஹால்களில் ஒரு புதிய பெருமையுடன் நடை போட்டேன். முன்னே பார்த்த அதே பெண்கள் - ஆடையில்லாத போது இவர்கள் எப்படி இருப்பார்கள் என்று முன்னெல்லாம் எனக்குள் நினைத்துக் கொள்வேன். எப்படி இருப்பார்கள் என்று இப்போது எனக்கு ஓரளவு ஐடியா

ஏற்பட்டிருந்தது. 'இப்போ எனக்குத் தெரியுமாக்கும்!' என்று எண்ணிக் கொண்டேன். 'எனக்குத் தெம்பாயிருக்கிறது. நான் ஒரு பெண்ணுடன் இருந்துவிட்டேன், எனக்குத் தெரியும்.'

கொஞ்ச நாள் வரை இந்த நினைப்பே போதுமானதாயிருந்தது. ஆனால் இன்னொரு பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் என்னையறியாமலே மெல்ல மெல்ல வரலாயிற்று. நான் பார்த்த விபசாரியைப் போலவே விபசாரியல்லாத பெண்களும் இருப்பார்கள் என்று எப்படி என்னால் நிச்சயமாயிருக்க முடியும்? ஏனெனில், நான் பார்த்தவள் உண்மையிலேயே மிகவும் வயதானவள். வயதில் சின்னவர்களான இந்தப் பெண்கள் நிஜமாகவே அழகாயிருக்கிறார்கள். பெண்களைக் கண்டால் ஆண்கள் ஏன் இப்படிக் கிறுகிறுத்துப் போகிறார்கள் என்று முன்னெல்லாம் நான் ஆச்சரியப்படுவேன். ஐஸ்கிரீம், பாப்கார்ன், ஹாம்பர்கர் - இவையெல்லாம் இன்னும் எவ்வளவோ சுவையானவையாயிற்றே என எண்ணுவேன். ஆனால் இப்போது என்னையறியாமலே பார்ட்டிகளுக்குப் போனேன். என் கூச்ச நாச்சங்களைத் துறந்து, அரட்டையடிக்கக் கற்றுக் கொண்டேன்.

ஒருநாள் எல்லிஸிடம் உதை வாங்கினேன். லூயிவில்லில் நான் அடைந்த முதல் அமெச்சூர் தோல்வி அது. மறுநாள் காலை என் கால்களைத் தடவிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த சமயத்தில் உண்மை உறைத்தது - இந்தத் தடவையும், சண்டைக்கு முந்தின இரவு ஒரு பெண்ணுடன் கழித்திருக்கிறேன் என்பது.

உலக ஹெவி வெய்ட் டைடிலுக்கான போட்டிக்கு மூன்று நாள் இருக்கும். அந்தக் காலை எனக்கு நினைவிருக்கிறது. என் வீட்டிலிருந்து புறப்பட்டேன், ஐந்தாவது தெருவிலுள்ள உடற்பயிற்சி சாலைக்குச் செல்வதற்காக. என் வாழ்வில் திருப்பு முனையாக

ஏதோவொன்று நேரப் போகிறதென்று என்னுள் என்னவோ ஓர் அமானுஷ்யமான உணர்வு தோன்றிக் கொண்டேயிருந்தது. இன்னும் சில மணி நேரத்தில் அது என்னவென்று எனக்குத் தெரிந்துவிடும்.

ஆறு மாதங்களுக்கு முன் நான் ஷிகாகோவில் ஒரு பஸ் வாங்கி நேரே அதை லூயிவில்லுக்கு ஓட்டிச் சென்றேன். ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள், நூல வண்ணங்களில் அது பெயின்ட் செய்யப்பட்டிருந்தது. ஆனால் சிவப்புத்தான் அதிகம். பெயிண்ட் செய்தவர் எனக்குத் தெரிந்து உலகத்திலேயே தலைசிறந்த கலைஞராவார் - என் தந்தை. பஸ்ஸின் ஒரு பக்கத்தில் - 'உலகிலேயே சுவாரசியமிக்க குத்துச் சண்டைக்காரர்' என்றும், மறுபுறத்தில் -

ஸானி லிஸ்டன் மகத்தானவர்.

ஆனால் எட்டாவது ரவுண்டில் மண் கவ்வுவார்.

- என்றும் எழுதியிருந்தது.

அந்த பஸ்ஸுக்குச் 'சிவப்பு அண்ணன்' என்று பெயர் சூட்டி, நாட்டின் குறுக்கும் நெடுக்கும் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஓட்டிக்கொண்டு திரிந்தேன். லிஸ்டனின் வீழ்ச்சியைப் பற்றிக் கவிதைகள் இயற்றி, போகும் இடங்களிலெல்லாம் பாடிக் காட்டினேன். ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்பவர்கள் நடத்தக்கூடிய பிரசாரத்தைக் காட்டிலும் தீவிரமாக இந்த டைட்டில் சண்டைக்கான இயக்கத்தை நான் நடத்தினேன்.

ஆறு மாத காலமாக நான் லிஸ்டனின் ஒவ்வோர் அசைவையும் கண்குத்திப் பாம்புபோல் கவனித்து வந்து கொண்டிருந்தேன். அவருக்குச் சவால்மேல் சவாலாக விட்டேன். அவர் வீழ்ச்சி நிச்சயம் என்று ஆரூடம் கூறினேன். 'கோரமான கறுப்புக் கரடி' என்று

அவரை அழைத்தேன். அவரோ பத்திரிகைகளோ என்னை அலட்சியம் செய்ய முடியாதபடி என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தேன்.

என் வாழ்க்கையின் மற்ற நாட்களைப்போல அன்றையத் தினம் இருக்கப் போகிறதில்லை என்பதும் ஏதோ வித்தியாசமான ஒன்று நேரப்போகிறது என்பதும் அன்று காலையிலேயே எனக்குத் தெரிந்துவிட்டது. அதற்கு அறிகுறிபோல, ஆஞ்செலோ என் டிரெஸ்ஸிங் ரூமுக்குள் ஓட்டமாய் ஓடிவந்தான். அவன் முகத்தில் பயங்கரமான அச்சம் தென்பட்டது.

28

"அங்கே யார் வந்திருக்கிறார்கள் தெரியுமா? போய்ப் பார்!" என்று பதறினான் ஆஞ்செலோ. கதவைப் பாதி திறந்து காட்டினான்.

குத்துச்சண்டை அரங்குக்கு அருகே மால்கம் 'எக்ஸ்' நின்றிருக்கிறார் - பழைய சுவரொட்டிகளைப் பார்த்தபடி.

"இது பத்திரிகைக்காரர்களின் கண்களில் பட்டால் உன் கதி என்ன ஆகும் தெரியுமா?" என்றான் ஆஞ்செலோ. "உன்னைக் கை விட்டு விடுவார்கள். உன்னைத் தாக்குவார்கள். குத்துச் சண்டையைக் குட்டிச் சுவராக்கி விடுவார்கள்! ப்ளூஸ்! ப்ளூஸ்!" பயத்தினால் அவன் கண்கள் விரிந்தன "அவரை எப்பாடுபட்டாவது வெளியே போகும்படி பண்ணி விட வேண்டும். மால்கம் 'எக்ஸ்' போன்ற கறுப்பு முஸ்லீம்களுடன் உனக்குத் தொடர்பு இருப்பதாகப் பத்திரிகைக்காரர்கள் நினைத்தார்களோ - நூ தொலைந்தாய். உன் எதிர்காலம் அவ்வளவுதான். நான் சொல்வது உன் காதில் விழுகிறதா?"

இதுவரை எந்த வெள்ளைக்காரனுடனும் நெருங்கிப் பழகாத அளவுக்கு நான் ஆஞ்செலோவுடன் பழகி வந்திருக்கிறேன். அவனுக்கு ஒரு விஷயம் மட்டும் இன்னும் தெரியாது: உடற்பயிற்சி சாலையில் மால்கத்தைத் தவிர வேறு 'எக்ஸ்'களும் உண்டு என்பது. நான் காஷியஸ் எக்ஸ். மேன்மை தங்கிய எலிஜா முகமதுவைப் பின்பற்றுவோரில் நானும் ஒருவன்.

நானொன்றும் அதிர்ச்சியடையவில்லை என்று ஆஞ்செலோவுக்குத் தெரிகிறது. சரேலென்று திரும்பி என்னைவிட்டுச் செல்கிறான். தன்

சகோதரன் கிறிஸ்ஸிடம் விஷயத்தைச் சொல்வதற்குத் தான் போனான் என்று எனக்குப் பிற்பாடு தெரிந்தது. கிறிஸ் உடனடியாக அந்தத் தகவலை பில் மக்டானல்டுக்குத் தெரியப்படுத்தினான். மக்டானல்டு தான், 'குத்துச் சண்டை வரலாற்றிலேயே மிகப்பெரிய ஹெவி வெயிட் டைட்டிலுக்கான போட்டி' என்ற விளம்பரத்துடன் இந்தச் சண்டையை ஏற்பாடு செய்து, அதன் பொருட்டு லட்சக்கணக்கான டாலர்களைத் திரட்டியிருப்பவர்.

கிறிஸ் என்னிடம் வந்தான். "காஷியஸ், ஒரு நிமிடம் வருகிறாயா? மக்டானல்டு உன்னை ஆபீஸ் அறைக்குக் கூப்பிடுகிறார்."

"என்ன விஷயம், கொள்ளைக்காரா?" என்றேன் நான். கிறிஸ்ஸும் ஆஞ்செலோவும் எனக்கு டிரெய்னர்கள் மட்டுமல்ல. நண்பர்களும் கூட நான் கிறிஸ்ஸை வேடிக்கையாகக் 'கொள்ளைக்காரன்' என்றே கூப்பிடுவது வழக்கம். அதற்கு முக்கிய காரணம், அவன் குத்துச் சண்டையில் கொட்டி முழக்கிக் கொண்டிருந்த காலத்தில் அந்த உலகத்தைக் கொள்கைக்காரர்கள் தான் இறுக்கிப் பிடித்து வைத்திருந்தார்கள்.

"ஒரு நிமிடத்துக்கு மேல் ஆகாது," என்கிறான் கிறிஸ். அவன் குரல் மிகவும் தாழ்ந்திருந்தது - தான் பேசுவது என்னைத் தவிர வேறு யாருக்கும் கேட்டு விடக் கூடாது என்பது போல.

உடைகளை மாட்டிக் கொள்கிறேன். கிறிஸ்ஸையும் என் சகோதரனையும் அழைத்துக் கொண்டு, வாஷிங்டன் தெருவைக் கடந்து கன்வென்ஷன் ஹாலை அடைகிறேன்.

அலுவலகத்தை அடைந்ததும் என் சகோதரன் முன்னே போகட்டும் என்று வழிவிட்டு ஒதுங்குகிறேன். ஆனால் கிறிஸ் அவனைத்

தடுத்து நிறுத்துகிறான். "மக்டானல்டு உன்னைத் தான் பார்க்கணும் என்கிறார். உன் தம்பியை அல்ல," என்கிறான் என்னிடம்.

கிறிஸ்ஸும் நானும் அலுவலகத்திற்குள் நுழைகிறோம்.

மக்டானல்டு, பெரிய சிவந்த முகமும் பழுப்பு முடியும் கொண்ட வாட்ட சாட்டமான பேர்வழி. கதவைச் சாத்தும் படி கிறிஸ்ஸிடம் சொல்கிறார். பிறகு என் பக்கம் திரும்புகிறார்: "காஷியஸ்," என்று ஆரம்பிக்கிறார், கிறிஸ் கொடுத்த ஒரு கொழுத்த சுருட்டைப் பற்ற வைத்தபடி. "ஒரு வாரம் நூ நியூயார்க்குக்குப் போயிருந்தது உண்மையா? நேஷன் அப் இஸ்லாம் சங்கத்துக்குச் சொந்தமான நியூயார்க் மசூதிக்குப் போனாயாமே? நூக்ரோ முஸ்லிம்கள் உன்னைப் பகிரங்கமாகச் சூழ்ந்து கொண்டார்களாமே? ஒருநாள் பூரா அங்கே கழித்தாயாமே? பத்திரிகைக்காரர்கள் கேட்டபோது நூக்ரோ முஸ்லிம்களைப் பற்றிப் பரிந்து பேசினாயாமே? இதெல்லாம் நிஜம்தானா?"

"உண்மைதான்," என்கிறேன்.

மக்டானல்டு தனது மேஜையின் பின்னே போகிறார். அவர் முகத்தில் கருமை படருகிறது. குரலில் உறுதி தொனிக்கிறது.

"அங்கே குத்துச் சண்டை அரங்கத்துக்குப் பக்கத்தில் வந்து நின்றிருக்கிறானே மால்கம் எக்ஸ்? அந்த ஆள் நூ அழைப்பு அனுப்பித்தான் வந்திருக்கிறான் என்பது உண்மையா?"

"ஆமாம் சார்," என்கிறேன். அவரை நேரடியாகப் பார்க்கிறேன். அவர் கண்ணில் கடுகத்தனை நிஜமான அச்சம் மின்னுவதைக் காணுகிறேன்.

மால்கம் எக்ஸ் என்பவர், அந்தச் சமயம், மேன்மை மிக்க எலிஜா முகம்மதுவின் தலைசிறந்த சூடர்களில் ஒருவராகத் திகழ்ந்து வந்தார். நாடெங்கும் அவருடைய முகமும் குரலும் பழக்கமானவை.

29

மேன்மைதங்கிய எலிஜா முகம்மது அவர்கள், ஏராளமான டெலிவிஷன் விவாதங்கள் நடத்தி நாடெங்கும் பிரபலமானவர். வெள்ளைச் சாத்தானை வாங்கு வாங்கென்று வாங்குகிறவர். கறுப்பு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சாடுபவர். பல திட்டங்களை நடத்தி வருபவர்.

அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கும்போது - பத்து வருடங்கள்தான் இருக்கும் - அதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத மாதிரி தோன்றும். மேன்மை தங்கிய எலிஜா முகம்மது அவர்களின் சூடர்களை எதிர்த்துக் கடும் வேட்டையாடினார்கள். வெள்ளை இனம்தான் மேலானது என்ற தத்துவத்தைக் கூறிக்கொண்டு, கறுப்பு இனத்தாரை நிறப் பிரிவினை செய்து கொடுமைப்படுத்துவோருக்கு எதிராக, அத்தனை அநீதிகளுக்கும் பழிவாங்கும் பொருட்டு நீக்ரோக்கள் ஒன்று கூடியுள்ள இயக்கம்தான் 'நேஷன் ஆஃப் இஸ்லாம்' என்று சில வெள்ளையர் நினைத்தார்கள். அந்த இயக்கத்தின் பெரும்புள்ளியாக மால்கம் எக்ஸைக் கருதினார்கள்.

மக்டானல்டு தொடர்கிறார்: "உன் முகாமில் சாமுவேல்ஸ் என்று ஒரு காப்டன் இருப்பதாயும், உன் புரவலர்களின் செலவில் நீ ஒரு பாதுகாப்பு ஆள் போட்டுக் கொண்டிருக்கிறாயென்றும், உன் கோஷ்டியில் 'கறுப்பு முஸ்லிம்' சமையற்காரிகள் இருப்பதாயும் கேள்விப்பட்டேன்? அதெல்லாம் உண்மைதானா?"

மக்டானல்டிடம் நான் சொல்கிறேன். "எனக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் செய்வதில் பயிற்சி பெற்றவர்கள் அந்த முஸ்லிம்

சகோதரிகள். அதனால்தான் அவர்களை அமர்த்திக் கொண்டிருக்கிறேன். அவர்களைப் போகச் சொல்லமாட்டேன்."

மக்டானல்டு என்னை மசிய வைக்க வேறு வழியைக் கையாளுகிறார் : "உனக்கு ஒரு வேளை தெரியவில்லையோ என்னவோ, உலக ஹெவி வெய்ட் டைட்டில் என்பது விளையாட்டு அரங்கிலேயே மாபெரும் பரிசு. ஜெயிப்பது இருக்கட்டும் - அதிலே பங்கு பெறச் சான்ஸ் கிடைத்தாலே போதும், பெரும் புகழ் கிடைத்துவிடும். அந்த வினாடியே உலக சரித்திரத்தில் இடம் பெற்றுவிடுவாய். கோடிக்கணக்கான டாலர்களை நானே செலவு செய்து உனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறேன். ஏன் அப்படிச் செய்கிறேன் என்று உனக்குத் தெரியுமா?"

நன்றாக எனக்குத் தெரியும்.

"குத்துச் சண்டை உலகத்தில் நீ புத்தம் புதிய தென்றல் போல நுழைந்தாய். பளபளப்பாய் இருந்தாய். ஆமாம். வசீகரமானவனாக, தலைக் கனத்துடன், தன்னம்பிக்கையுடன் இருந்தாய். நீ ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றவுடன், "ஸ்போர்ட்ஸ் இலஸ்ட்ரேடட்' பத்திரிகையில் மார்ட்டன் ஹார்னிக் உன்னை எப்படி வர்ணித்தாரென்று உனக்குத் தெரியுமா? நீ தான் 'உண்மையான அகில அமெரிக்கப் பையன்' என்றார். நீ மொத்த அமெரிக்காவின் செல்லப் பிள்ளை. அத்தனை பேரும் உன்னை நேசித்தார்கள். நீ ஒரு ஜாக் ஆம்ஸ்ட்ராங். கவர்ச்சி உனக்குத் தண்ணிபட்ட பாடு. அவ்வளவு பேருக்கும் ஹீரோ. அதையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் நான் இந்தப் போட்டியை நடத்துகிறேன். இது, நல்ல பையனுக்கும் கெட்ட பையனுக்கும் சண்டை. லிஸ்டனின் பின்னணி எல்லாருக்கும் தெரியும், அவன் ரௌடி. அபாயமானவன். ராட்சசன். ரெட்ரைடிங்

ஹூட் என்ற சிறுமி வருவாளே, அவள் மாதிரி நீ. அவன் உன்னை விழுங்க வரும் ஓநாய். இப்படி இருக்கும் வரையில், நல்ல பணம் வரக்கூடிய சண்டையாக அமையும். ஆனால் நீ 'கறுப்பு முஸ்லிம்' என்று தெரிந்ததோ, ஓநாய் ஜெயிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய ஆரம்பிப்பார்கள். குத்துச் சண்டையைப் பார்க்க வராமல் ஒதுங்கி விடுவார்கள். நான் செலவழித்ததெல்லாம் பாழாகும்.

"மால்க்கம் எக்ஸ் உன் முகாமில் இருக்கிறாரென்ற செய்தி வெளிப்பட்டதிலிருந்து 'கறுப்பு முஸ்லிம்கள்' உன்னை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கதைகள் கிளம்பி விட்டன. உனக்கு அது தெரியுமா? இந்தப் போட்டி இப்போதே ஆட்டம் கண்டுவிட்டது. போட்ட பணத்துக்கு லாபம் கிடைக்க எனக்கு வாய்ப்பு கிட்டியாக வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை நீ செய்தாக வேண்டும்.'

30

மக்டானல்டு சொல்கிறார் :

"கறுப்பு முஸ்லிம்களின் இயக்கத்திலிருந்து நீ தொடர்பை வெட்டிக் கொள்ள வேண்டும். அதை இன்றைக்கே செய்ய வேண்டும். உன் கோஷ்டியைச் சுத்தம் பண்ணியாக வேண்டும். முதலில் அந்த முஸ்லிம் சமையல்காரர்களையும், கறுப்பு முஸ்லிம் காவல்காரர்களையும், காப்டன் சாமுவேல்ஸையும் மற்றவர்களையும் ஒழித்துக் கட்டு. பிறகு ரேடியோவிலும் டெலிவிஷனிலும் நீ பேசியாக வேண்டும் - இன்றிரவு. "கறுப்பு முஸ்லிம்' இயக்கத்தில் நீ ஓர் உறுப்பினனல்ல என்பதை வலியுறுத்த வேண்டும். பிரசாரத் துறை நபர் ஒருவரை உனக்குத் துணையாகத் தருகிறேன். நீ சொன்னதைத் திரித்துப் போட்டு விட்டார்கள் என்றும், அதெல்லாம் தப்பு என்றும் நீ சொல்லி விட வேண்டும். நீ சுத்தமானவன் என்பதை அறிவித்து விடும். அதன் பிறகு ஆகவேண்டியதைக் கவனிக்கலாம்."

போனை எடுத்து அவர் டயல் செய்யத் தொடங்குகிறார். "நீங்கள் சொன்னபடி நான் செய்யாவிட்டால்?" என்கிறேன்.

அவர் என்னை நோக்கித் திரும்புகிறார். என்னைப் பார்க்கிறார். போனைக் கீழே வைக்கிறார். அவர் முகத்தில் தீவிரமும் கடினமும் தெரிகின்றன. துளிக்கூட வழ வழா கொழ கொழா இல்லை. "இந்தப் போட்டி கிடையாது. ரத்து செய்து விடப் போகிறேன். அத்தோடு நீ தீர்ந்தாய். உன் வாழ்க்கை முடிந்தது."

மக்டானல்டு தொடர்ந்தார் :

"ஆனால் நீ அறிவுள்ள பையன் என்று எனக்குத் தெரியும். இந்தச்

சாம்பியன்ஷிப் பட்டத்துக்காக நீ வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வந்திருக்கிறாய். இப்பவும் ஒன்றும் குடி முழுகி விடவில்லை. என் பிரசாரத் துறை ஆள் உனக்கு உதவி செய்வான் என்று சொன்னேன். இன்று இரவு டெலிவிஷனில் ஒரு பேட்டி கொடு. நீ 'கறுப்பு முஸ்லிம்' அல்ல என்று உலகத்துக்கு அறிவித்துவிடு. எந்த இயக்கத்திலும் நீ சேரவில்லை. நீ சொன்னதைத் தப்பாகப் போட்டு விட்டார்கள். நீ தேசபக்தி மிக்க, விசுவாசமான அமெரிக்கன். எப்போதும் அப்படித்தான் இருந்தாய். இனியும் அப்படித்தான் இருந்தாய். எதிலாவது தந்திரமாக உன்னிடம் கையெழுத்து வாங்கினார்களோ என்னவோ அந்த விஷயத்தைப் பற்றி உனக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது. எதுவானாலும் அதெல்லாம் முடிந்து போன சமாசாரம். இப்படி அறிவிக்கிற மாதிரி ஒரு பத்திரிகை நிருபர் கூட்டம் ஏற்பாடு செய்வோம். எல்லாருடைய சந்தேகங்களையும் ஒழித்துக் கட்டுவோம். அதற்குப் பின் குத்துச் சண்டை நடக்கும்..."

நான் எழுந்து நின்று அவரைப் பார்க்கிறேன். தலையை அசைக்கிறேன். "என்னால் அப்படிச் செய்ய முடியாது. லிஸ்டனுடன் சாம்பியன்ஷிப் சண்டை நடத்த எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். சந்தோஷம். லிஸ்டனை என்னால் தோற்கடிக்க முடியும். சண்டையை ரத்து செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் என்னுடைய மதத்துக்காக வேண்டி நீங்கள் ரத்து செய்ய விரும்பினால் தாராளமாய்ச் செய்யுங்கள்."

கிறிஸ் தர்மசங்கடத்துடன் குறுக்கிடுகிறான்: "குத்துச் சண்டை நடந்து முடியட்டுமே? அதுவரை இதையெல்லாம் மறந்திருப்போம்......"

"சண்டை கிண்டை எதுவும் கிடையாது!" என்று மக்டானல்டு இறுதியாகக் கூறுகிறார். அவருடைய டெலி போன் அடிக்கிறது.

எடுத்துப் பேசுகிறார் : "சாம்பியன்ஷிப் போட்டி ரத்தாகி விட்டது. பத்திரிகைகளுக்குத் தெரியப்படுத்துங்கள். சண்டை கிடையாதென்று எல்லாரிடமும் சொல்லுங்கள்."

அவர் போனில் பேசிக் கொண்டிருக்கிறார். நான் வாசலை நோக்கிச் செல்கிறேன். கிறிஸ் என்னைப் பிடித்துத் தடுக்கிறான். இருக்கச் சொல்லி மன்றாடுகிறான். ஆனால் நான் மக்டானலடின் முகத்தைக் கவனித்துவிட்டேன். சும்மா சவடாலுக்காக அவர் பேசவில்லை என்று எனக்குத் தெரிந்து விட்டது. நானும் சவடாலுக்காகப் பேசவில்லை.

வெளியே என் சகோதரனைச் சந்திக்கிறேன். என் மண்டை வெடித்து விடும் போலிருக்கிறது. நான் எதுவும் பேசவில்லை. நேரே உடற்பயிற்சி சாலைக்குச் செல்கிறேன். அங்குள்ள என் பொருள்களைச் சுருட்டி எடுத்துக் கொள்கிறேன். வீடு திரும்புகிறேன்.

என்னை உலுக்கி விட்டது இந்த நிகழ்ச்சி. காரணம், மக்டானல்டு நிஜமாகவே சண்டையை ரத்து செய்ய விரும்புகிறார் என்பது என் உள் மனத்துக்குப் புரிந்துவிட்டது.

அவர் சொன்னது அத்தனையும் நிஜமாகவே சொன்னார் என்பது தெரிந்துவிட்டது.

ஆனால் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தேனோ இல்லையோ போன் மணியடிக்கிறது. எனது லூயிவில் புரவலர்களில் ஒருவரான ஒர்த் பிங்காம் கூப்பிடுகிறார். சண்டை ரத்தானது அவருக்குத் தெரிந்துவிட்டது.

"இதோ பார் காஷியஸ்," என்கிறார். "உன் கட்சி என்ன என்று எனக்குத் தெரியும். எதுவானாலும் சரி, சாம்பியன்ஷிப் போட்டி

நடத்தும்படி பண்ணு. மக்டானல்டு நூ என்ன செய்யணுமென்கிறார்!"

"என்னுடைய மதத்தை நான் உதறிவிட வேண்டுமென்கிறார்." என்றேன். "அதைப்பற்றி அறிக்கை வெளியிட வேண்டும் என்கிறார்."

"அப்படியே செய்யேன்! உடனே செய். இப்போதே ஆகட்டும். என்ன நஷ்டம் உனக்கு ஏற்பட்டுவிடப் போகிறது? இந்த மாதிரி ஒரு சான்ஸ் இன்னொரு முறை உனக்கு ஒரு நாளும் கிடைக்கும்படி விடமாட்டார்கள். இந்தச் சண்டையிலிருந்து கழற்றிக் கொண்டுவிட வேண்டுமென்று ரொம்ப நாளாக மக்டானல்டு முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறான். அதற்கு இடம் தராதே. அவனுக்கு ஒரு சாக்கு தேடிக் கொடுக்காதே."

"நான் என் மதத்தைத் துறக்கப் போவதில்லை - சாம்பியன்ஷிப் சண்டைக்காகக் கூட மாட்டேன்!"

31

என் புரவலர்களில் ஒருவரான ஓர்த் பிங்காம் சொன்னார்: "நான் சொல்வதைக் கேள். பொது மக்களின் எண்ணம் உனக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது. டைட்டிலை ஜெயித்துவிடு. எல்லாம் மாறிவிடும். நீ என் புத்திமதியைக் கேட்கிறதாயிருந்தால் சொல்கிறேன். மக்டானல்டு சொல்கிறபடி செய். நான் தான் சொல்கிறேனே, அவர் கழற்றிக் கொள்ளப் பார்க்கிறார். அதற்கு இடம் தராதே. அந்த ஆளைக் காலை வாரி விடு. உன் மதம் என்னவென்பதைப் பொது மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பதில்லையே? உன் இதயத்துக்குள் கடவுள்..... வந்து..... அல்லா......... இருப்பதைப் பற்றி யாருக்கு என்ன தெரியப் போகிறது. நீ மதம் மாறிக் கொஞ்ச நாள்தான் ஆகிறது. அல்லா புரிந்து கொள்வார்" இவ்வாறு சொல்லிவிட்டு பிங்காம் டெலிபோனை வைத்துவிட்டார்.

நான் தன்னந்தனியே இருப்பதாக உணர்கிறேன், பலப்பல வருடங்களுக்குப் பிற்பாடு. இந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தபோது, அப்போது என் உணர்ச்சிகள் எப்படி இருந்தன என்று யோசித்துப் பார்த்தேன். ஒரு விரக்தி மனப்பான்மை என்னுள் நிலவியது ஞாபகம் வருகிறது. நான் 'மதம் மாறிக் கொஞ்ச நாள் ஆகிறது' என்று அவர்கள் எண்ணுகிறார்கள். உண்மையில் அது இன்னும் ஆழமானது. நீக்ரோ மக்களை அடிமைத்தனத்திலிருந்தும் இழிவிலிருந்தும் விடுவித்து சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் நீதிக்கும் அழைத்துச் செல்லக் கூடிய இயக்கமாக நேஷனல் இஸ்லாம் இயக்கத்தை நான் கருதினேன். என் லூயிவில் புரவலர்களிடமோ மக்டானல்டிடமோ அதை விளக்க முடியாது.

என் குழுவில் பெரும்பாலோர் டெலிபோன் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதை எதிர்த்து நான் போராடுகிறேன் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. பண்டினி கதவின் குறுக்காக நின்றிருக்கிறான். "இப்ப என்ன பண்ணப் போகிறோம் வாத்தியாரே?" என்கிறான்.

"புறப்பட்டுப் போகிறோம்," என்கிறேன். "சாம்பியன்ஷிப் சண்டை எதுவும் கிடையாது. வீட்டுக்கு மூட்டை கட்டப் போகிறோம்."

"வீட்டுக்குப் போவதென்றால் என்ன அர்த்தம்?"

"உனக்குப் பைசா கிடைக்காது என்று அர்த்தம்," என்கிறேன்.

"இல்லை. நீ போலியான ஆள் அல்ல என்று அர்த்தம், எனக்குப் பைசா கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி, நான் உன்னுடன்தான் இருக்கப் போகிறேன். யாரப்பா அங்கே, சூட்கேஸ்களைக் கட்டுங்கள்," என்று கத்துகிறான். "புறப்படுங்கள் ஊருக்கு! கட்டுங்கள் மூட்டையை! பஸ் கிளம்பப் போகிறது மறுபடி!"

குழுவினர் டிரங்க் பெட்டிகளையும் சூட்கேஸ்களையும் எடுத்துக் கொண்டார்கள். என் பொருள்களைத் திரட்டி எடுத்துக் கொண்டு போய் வைத்தார்கள்.

அம்மாவைப் போனில் கூப்பிட்டு, சண்டை ரத்தாகி விட்டதென்றும் நான் ஊருக்குத் திரும்புகிறேன் என்றும் தெரிவிக்கிறேன். அவர் குரலிலிருந்தே தெரிகிறது - மனம் உடைந்து விட்டாரென்று. எங்கள் எல்லாருக்குமே ஒரு நீண்ட பயணத்தின் முடிவு அது. பாக்ஸிங் கருவிகள் நிறைந்த ஒரு கனமான பெட்டியைத் தூக்க பண்டினிக்கு உதவி செய்கிறேன். பஸ்ஸில் ஏறியமர்ந்து ஸ்டியரிங்கைப் பிடிக்கிறேன். எப்படி இவ்வளவு ஆரம்பமாயிற்று என்பதைப் பற்றி

சிந்திக்கிறேன்.

லிஸ்டனுடன் உலக ஹெவி வெயிட் சாம்பியன் போட்டிக்காகச் சண்டையிடுவதற்கு வெகு காலமுன்பே நான் வீழ்த்த வேண்டிய குத்துச் சண்டைக்காரன் அவன்தான் என்று எனக்குத் தெரியும். நான் என்னைப் பற்றி அறிவித்துக் கொண்டுள்ள 'மாபெரும் வீரன்' - 'கிரேட்டஸ்ட்' என்ற பட்டம் அப்போதுதான் உண்மையாக முடியும் என்று எனக்குத் தெரியும்.

குத்துச் சண்டை வீரர்களுடன் எப்போதுமே நான் மோத முயற்சி செய்து வந்திருக்கிறேன். அவர்களுடைய உடற்பயிற்சி சாலைகளில் புகுந்து விடுவேன், சண்டைக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று. லிஸ்டனைக் கவனித்துக் கொண்டேயிருப்பது என் பழக்கம். அவருடன் பயிற்சி செய்ய அவருடைய மானேஜர்கள் என்னை அனுமதித்ததில்லை. சும்மா நின்று பார்த்துக் கொண்டேயிருப்பேன். அவரைப் பற்றி என்னவெல்லாம் சொன்னார்களோ அத்தனையும் உண்மை. மஸில்ஸ், சக்தி, வேகம் - அத்தனையும் உருவான மலை அந்த ஆள். 'குத்துச் சண்டை உலகத்தின் கிங்காங் அவர்,' என்று ஒரு இங்கிலாந்து விமரிசகர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். "பளபளக்கும் கண்களையுடைய ஆக்ரோஷமான கொரில்லா. வலுவான தசைகள் கொண்டவர். ஆயுதமேந்தாத சண்டை வரும்போது அவருக்கு மிஞ்சி ஆள் இல்லை. மனித உருவில் வந்திருக்கும் நாசகாரிக் கப்பல். எலும்புகளை முறிக்கும் அந்த முட்டியின் சுற்றளவு பதினாறு அங்குலம்! நம்பவே முடியாது. அதை மூடுவதற்கு ஸ்பெஷலாய் உறை தயாரிக்கிறார்கள். 'பாறாங்கல் முகம்' என்கிறார்கள் அவரை. அந்தக் கடினமான பழுப்பு நிறக் கண்களில் இரக்கம் சிறிதளவும் இல்லை."

ரெவரண்ட் வில்லியம்ஸ் என்ற பழைய டிரெய்னர் ஒருவர் லிஸ்டனைப்

பற்றிச் சொன்னது : "டினோஸார் என்ற கற்காலத்து ராட்சத மிருக வகைகளுக்குள் மிகக் கொடியதும் மிகப் பெரியதுமான ப்ரன்ட்டோஸாஸ் மிருகம் அவர்."

ஃப்ளாயிட் டாட்டர்ஸன் சாம்பியனாகத் திகழ்ந்த காலத்திலேயே லிஸ்டனுக்கு 'முடிசூடா சாம்பியன்' என்ற பட்டம் உண்டு. அவரைக் கண்டு முதன் முதல் எனக்கு ஏற்பட்ட பயமும் பக்தியும் கொஞ்ச நாளில் தேய்ந்து விட்டன பயிற்சி சாலையில் இன்னும் கூர்மையான கண்களுடன் கவனிக்கலானேன். அந்த நாளில் பத்திரிகைகள் ஒரே ஒரு விஷயத்தில் தான் அவரைப் பற்றிப் புகார்கள் கூறி வந்தன; சட்ட விரோதமான பண மோசடிக் கும்பலுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது. 'லிஸ்டன் ஜெயித்தால், உலக சாம்பியன்ஷிப் போட்டி பழைய மோசடிக் கும்பலின் கைக்குச் செல்லக் கூடிய அருவருப்பான நிலைமை ஏற்படும்' என்று செனட்டர் ஒருவர் சொல்லியிருந்தார். ஆனால் ஒரு கறுப்பு முஸ்லிம் ஜெயித்தால் அதைக் காட்டிலும் மோசம் என்று இவர்கள் நினைக்கிறார்கள் என்பது இப்போது புரிந்தது. வெள்ளைக்கார பயங்கரவாதியா, கறுப்பு முஸ்லிமா என்று வரும்போது, பயங்கரவாதியே தேவலை என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் லிஸ்டனைத் தேகப் பயிற்சி சாலையில் கவனிக்கக் கவனிக்க மற்றவர்கள் பார்க்காத ஒன்றை நான் பார்க்கலானேன்: அவரை என்னால் வீழ்த்த முடியும் - எப்போது வேண்டுமானாலும் வீழ்த்த முடியும் - என்று கண்டு கொண்டேன்.

32

இப்போது என் பஸ்ஸில் உட்கார்ந்திருக்கிறேன் மூட்டை முடிச்சுக்களோடு, சாம்பியன்ஷிப் சண்டை எதுவுமில்லாமல் மையாமியை விட்டுப் புறப்பட்டு விட்டேன். சாம்பியன்ஷிப் டைட்டிலுக்கான இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்க இனி பல வருடங்களாகும் என்று எனக்குப் புரிகிறது. இப்படியொரு சந்தர்ப்பத்தைப் பெறுவது பெரும் கடினமாக இருக்கப் போகிறது. என்னைத் தாண்டிக் கொண்டு முன்னேறி விட்ட மற்றப் போட்டியாளர்களுடனும் நான் சண்டையிட வேண்டியிருக்கும். எட்டி மாஷென், ஹாரல்ட் ஜான்ஸன், க்ளீவ்லாண்ட் வில்லியம்ஸ், ஜோரா ஃபாலி எல்லாருமே சில சமயங்களில் அற்புதமாகச் சண்டையிடக் கூடியவர்கள்.

பேசிப் பேசியே நான் சாம்பியன்ஷிப் போட்டியில் இடம் பிடித்ததாக மக்டானல்டு சொன்னார். அது ஓரளவு உண்மைதான். பதினாலாவது வயது முதல் நான் அப்படித்தான் செய்து வந்திருக்கிறேன். அப்போது நான் அமெச்சூர் குத்துச் சண்டைக்காரன். அரங்கத்தின் மத்தியில், இன்னொரு பையனுடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பேன். பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் என் எதிராளியிடம் கத்துவார்கள்: "அவன் வாயை அடையேன்! ரொம்பத்தான் பேசுகிறான்! நிறுத்து அவனை!"

கூட்டத்தினர் என் பேரைச் சொல்லிக் கத்தினார்கள். என்னை எதிர்த்துச் சத்தம் போட்டார்கள். என்னை அவர்கள் பொருட்படுத்துகிறார்கள் என்பதுதான் எனக்கு முக்கியமாக இருந்தது. சண்டை ஆரம்பிக்கும் முன்பு நான் பகிரங்கமாகவே பேசுவேன் - எதிராளியை வீழ்த்தப் போகிறேன் என்று. எதிராளியை

மட்டுமல்ல. அத்தனை பேரையும் தோற்கடிக்கப் போகிறேன் என்று சொல்வேன். 'காஷியஸ் ஜம்பமடித்துக் கொள்கிறான்' என்ற பேச்சு பரவலாயிற்று. உடற்பயிற்சி சாலைக்கு நான் வரும்போது எனக்குப் பெருமளவு உபசாரம் செய்தார்கள். 'நான் மகத்தானவன்! என்னை யாராலும் தோற்கடிக்க முடியாது!' என்று நான் திரும்பத் திரும்பக் கூவிக் கொண்டிருந்தேன். நல்ல பல சண்டைக்காரர்கள் ரத்தக் களரியாக அடித்துக் கொண்டதை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் யார் ஜெயித்தாலும், யார் தோற்றாலும் ஒருத்தனும் அக்கறை காட்டமாட்டார்கள். ஆனால் அனைவரும் என் சண்டைகளில் சுவாரசியம் காட்டத் தாடங்கினார்கள். நான் தோற்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் கூட, என்னை கவனிக்கும் அளவுக்கு நயர்கள் மூது எனக்கு ஆதிக்கம் ஏற்பட்டு விட்டது. பெரிய (நாவன்மை என்னவென்றால் எனக்கே என் குத்துச் சண்டையில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. ஒலிம்பிக்ஸ் போட்டியின்போது, பெரும்பாலான குத்துச் சண்டை வீரர்களைக் காட்டிலும் என் பெயர் அதிகப் பிரபலமாகி விட்டது.

உன் எதிராளியிடம் பேசிக் கொண்டே சண்டையிடுவது எப்படி என்ற கலையை நான் ஒலிம்பிக்ஸ் போட்டியின்போது ஆலன் ஹட்ஸனிடம் தெரிந்து கொண்டேன். சண்டை நடந்த நேரம் மொத்தமும் அவர் என்னுடன் பேசிக்கொண்டேயிருந்தார். என் தவறுகளைக் கேலி செய்தார். இதன் பின்தான், "உலகத்திலேயே மிக வேகமான குத்துச் சண்டைக்காரன்! எத்தனாவது ரவுண்டில் எதிராளி விழுவான் என்பதை முன்கூட்டியே ஆரூடம் சொல்லக் கூடிய ஒரே வீரன் நான் தான்!" என்று என்னைப் பற்றி நானே அறிவித்துக் கொள்ளத் தொடங்கினேன். மறுநாளே அத்தனை பேரும் நான் சண்டை போடுவதைப் பார்க்க வேண்டுமென்று துடிக்கலானார்கள்.

லா வேகாவுக்கு விமானத்தில் போய் இறங்கியபோது அந்த ஊரின் பளபளப்பும் பெண்களும் சூதாட்டக்காரர்களும் என்னைப் பிரமிக்க வைத்தார்கள். ஆனால் கார்ஜியஸ் ஜார்ஜ் தான் என்னை மிகவும் கவர்ந்தான். ஏனெனில் நான் என்ன செய்து கொண்டிருந்தேனோ அதை அவனும் செய்தான்.

என் எதிராளியான ட்யூக் சபேடாவையும் என்னையும் டெலிவிஷனில் அறிமுகம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஸ்டுடியோவுக்குள் கார்ஜியஸ் உள்ளே நுழைந்தான். திரையுலக மன்னன் மாதிரி தன் நூண்ட நூலக் கூந்தலைச் சூப்பினால் வாரிக் கொண்டவாறே அவன் வந்தான். பத்தடி நூளத்துக்கு சால்வை போர்த்தியிருந்தான். அது தரையில் இழுபடாதபடி இரண்டு அழகான பெண்கள் அதன் நுனியைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

33

என்னுடைய மைக்ரபோனை கார்ஜியஸ் ஜார்ஜ் பிடித்தவுடன், அறிவிப்பாளர், "இரு, கார்ஜியஸ். இது உன் ஷோ இல்லை," என்றார்.

"இது என் ஷோ தான்," என்று கார்ஜியஸ் அரங்கத்தின் முன்னே போய் நின்றான். மைக்கில் சொன்னான்: "ஸ்போர்ட்ஸ் பாலஸுக்கு நீங்கள் எல்லாரும் சீக்கிரமே வந்து சேர்ந்து விட வேண்டும். என் எதிராளியைக் கொண்டு நான் தரையை மெழுகப் போகிறேன். அவன் மட்டும் என்னைத் தோற்கடித்தானோ, என்னுடைய பொன் கூந்தல் மொத்தத்தையும் வெட்டி, ஆடியன்ஸ் மத்தியிலே முடியை எறிந்துவிட்டு மொட்டையாகவே இருப்பேன்!"

அன்று இரவு நான் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதற்கு மறுநாள் எனக்குக் குத்துச் சண்டை இருந்தது. இருந்தாலும் ஸ்போர்ட்ஸ் பாலஸுக்குப் போனேன் - ஜார்ஜுக்கு என்ன நேருகிறது என்று பார்ப்பதற்காக. நிற்பதற்குத்தான் இடம் இருந்தது. அத்தனை கூட்டம். என்னுடைய உத்தியைப் போலவே அவனுடைய உத்திக்கும் பலன் இருந்தது.

அவன் மேடைக்கு வந்தபோது கூட்டத்தினர் கேலிக் கூச்சல் போட்டார்கள். அவனுடைய வாயை அடைக்கும்படி அவன் எதிராளியிடம் கூவினார்கள். அவனைத் திட்டினார்கள். பேப்பர் பந்துகளை அவன் மீது விட்டெறிந்தார்கள்.

ஆனால் இறுதியில் அவன் தான் வென்றான்.

லா வேகாவுக்குப் பிறகு நான் உலக ஹெவி வெயிட் போட்டிக்குப்

போவதற்கான திட்டங்கள் மும்முரமடைந்தன. அதுவரை செய்து கொண்டிருப்பதையே இன்னும் கொஞ்சம் கூடுதலாக நான் செய்ய வேண்டியிருந்தது. அவ்வளவுதான். எத்தனையாவது ரவுண்டில் என் எதிராளி வீழ்வான் என்று ஒவ்வொரு சண்டையின் போதும் நான் கனகச்சிதமாக ஆரூடம் கூறிக் கொண்டிருந்தேன். அது அப்படியே பலிப்பதைக் கண்டு பத்திரிகைகளால் நம்பவே முடியவில்லை. ஒவ்வொரு எதிராளிக்கும் ஒரு கவிதை இயற்றினேன். 'நான் சொல்கிற ரவுண்டில் எதிரி மண்ணைக் கவ்வுவான் பாருங்கள்!' என்று கூவினேன்.

ஆர்ச்சி மூருடன் சண்டையிட்ட வரை, உலகத்தின் கவனத்தைக் கவரக்கூடிய எவருடனும் நான் போட்டியிட்டது கிடையாது. அவருடன் நான் சண்டையிட வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். உடனே நான் தெரிந்து கொண்டு விட்டேன் - உலக ஹெவி வெய்ட் போட்டிக்கான வாய்ப்பு நெருங்கிவிட்டது என்று. ஆர்ச்சி மூர் தான் உலகப் புகழ்பெற்ற முதல் பெரிய குத்துச் சண்டைக்காரர். நான் சண்டையிடும் முதல் முன்னாள் சாம்பியன்.

சண்டையைப் பற்றி நான் ஆரூடம் கூற வேண்டியதாயிற்று - பலிக்கக்கூடியதாக. என் டிரெஸ்ஸிங் அறைக் கரும்பலகையில் 'நாலாவதில் மூர்' என்று எழுதினேன். பிறகு டெலிவிஷனில் என் கவிதைகளைப் படித்தேன்.

சண்டையைப் பார்க்க வரும்போது ஹாலில் வழியை அடைத்துக் கொண்டு நிற்காதீர்கள். கதவுகளை அடைத்துக் கொண்டு நிற்காதீர்கள். எல்லாருமே நாலாவது ரவுண்டில் வீட்டுக்குப் போகலாம்.

ஸானி லிஸ்டன் அரங்கத்தின் அருகேயுள்ள ஸூட்டில் இருப்பார்

என்று எனக்குத் தெரியும். மூரைத் தோற்கடித்த பின்னர் லிஸ்டனை எட்டாவது ரவுண்டில் தோற்கடிப்பேன்.

லாஸ் ஏஞ்செலஸ்ஸில் குத்துச் சண்டை போடுவது ஆர்ச்சி மூரின் சொந்த ஊரில் போடுவது போலத்தான். ஜனங்கள். என்னை எதிர்த்துக் காச்சு மூச்சென்று கத்தினார்கள். என்னை ஒழித்துக் கட்டும்படி ஆர்ச்சியிடம் சொன்னார்கள். "ஆர்ச்சி! அவன் வாயை அடை! அந்த ஓட்டை வாயில் ஒரு குத்து விடு!" என்று கூவினார்கள்.

ஆனால் ஆர்ச்சி இளமைப் பிராயத்தைத் தாண்டி ரொம்பக் காலமாகியிருந்தது. எனவே, அவரை வீழ்த்தியதில் எனக்கொன்றும் பெரிய பெருமை இல்லை.

நான் சொல்லியிருந்தபடியே நாலாவது ரவுண்டில் வீழ்ந்தார்.

என் பிரசாரத்தைத் தொடர்ந்தேன். "மாபெரும் குத்துச் சண்டை வீரர்களில் நானும் ஒருவன் என்பதை யாரால் இனி மறுக்க முடியும்?" என்றேன். "நான் சொன்னபடியே நடந்ததா இல்லையா? பெரியவரை நான் முதல் ரவுண்டிலேயே வீழ்த்தியிருக்க முடியும். ஆனால் அது அந்தந்த வேளையில் நடக்க வேண்டும் என்று விரும்புகிறவன் நான். ஆனால் மூர் மற்றப் பலரைக் காட்டிலும் நன்றாகவே சண்டை போட்டார். என்னுடன் நாலாவது ரவுண்டு வரை தாக்குப் பிடிக்க ரொம்பப் பேரால் முடியாது," என்றேன்.

அடுத்து ஸானி லிஸ்டன்.

34

"ஏய் ஓட்டை வாயா! உன்னை கேலி பண்ணி ஊளையிடுகிற போது உனக்கு எப்படி இருக்கு?" என்று யாரோ கத்தினார்கள்.

"ஆயிரக்கணக்கான பேர் ஊளையிடுவதைக் கேட்டுக் கொண்டே அரங்கத்தில் நுழைவது குஷியான அனுபவம்," என்றேன். "அதுவும் குறிப்பாய், சொன்னால் சொன்னபடியே ஜெயிக்க முடியும் என்று நமக்குத் தெரிந்திருக்கிறபோது ரொம்ப ஜோர். ஸானி லிஸ்டனை எதிர்க்க நான் ரெடி!"

"லிஸ்டன்

ராஜாவாக இருப்பான் -

காஷியஸ் கிளேயைச்

சந்திக்கும் வரை.

நாலாவது ரவுண்டில்

மூர் விழுந்தான்.

ஸானி லிஸ்டன்

எட்டாவதில்"

இந்தப் பாட்டை, வெற்றி விழாவின் போது - லிஸ்டன் பார்த்துக் கொண்டிருக்கையில் - பாடினேன். என்னை மிக முறைப்பாகப் பார்த்துவிட்டு லிஸ்டன் சொன்னார். "பையா! என்னோடு எட்டு

செகண்டு தாக்குப் பிடி, போதும், டைட்டிலை உனக்கே விட்டு விடுகிறேன்!"

இப்படிக் கூறிவிட்டு அவர் வெளியேறினார். போட்டியை ஏற்பாடு செய்கிறவர்களுக்கும் இது காதில் விழுந்திருக்கும் என்று எனக்குத் தெரியும்.

"எத்தனாவது ரவுண்டில் எதிராளி விழுவானென்று எப்படி உன்னால் ஆருடம் சொல்ல முடியும்? எல்லாம் ரகசிய ஏற்பாடு! மோசடி! நீ ஒரு கோல்மால்!" - இப்படி ஒரு நீக்ரோ இளைஞன் - ஒல்லியாய், டீ ஷர்ட்டும் நீல ஜீன்ஸும் அணிந்திருந்தவன் - ஓட்டல் அறையில் என்னிடம் சொன்னான். டக் ஜோன்ஸுடன் சண்டை போடுவதற்கு முந்தின இரவு அது. அவன் வாயில் நீண்ட சுருட்டு இருந்தது. ஷுகர் ரே ராபின்ஸனின் மைத்துனனான பாபி நெல்ஸன் அவனை என்னிடம் அனுப்பியிருந்தான். 'பண்டினி' என்று இவனைக் கூப்பிடுவார்கள். ஷுகர் ரேயுடன் ஐந்து வருஷமாக இருந்து வருகிறான். ஆனால் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் இவனுக்கு மிகவும் வியப்பு.

"ரவுண்ட் விஷயத்தில் எப்போதும் எப்படிக் கரெக்டாய்ச் சொல்ல முடிகிறது? என்னிடம் உண்மையைச் சொல்லு. நீங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து பேசி, சண்டை எப்படி நடக்கணும் என்று முன் கூட்டியே தீர்மானிக்கிறீர்கள். உண்டா இல்லையா?" என்றான்.

இப்படி எதிர்பாராத விதமாக எதையாவது சொல்வது அவனுக்கு வழக்கம். நமக்குச் சுருக்கென்று கோபம் வரும். முறைத்துப் பார்ப்போம். ஆனால் அவன் ஒரு இளிப்புடன் பேசாமல் நிற்பான்.

"நீ நிச்சயமாய்ப் பேசி வைத்துத் தான் இதெல்லாம் செய்கிறாய்.

இல்லாவிட்டால் ஆர்ச்சி மூர் எத்தனையாவது ரவுண்டில் விழுவானென்று உன்னால் எப்படிச் சொல்ல முடிந்தது? நிச்சயம் நீ மோசக்காரன் தான்!" என்றவன், வாயிலிருந்து சுருட்டை எடுத்துச் சாம்பலைத் தட்டிவிட்டு என்னைக் கூரிய கண்களால் துளைத்தான், எக்ஸ்ரே எடுக்கப் போகிறவன் போல.

"ஒன்று, நீ கோல்மால். இல்லையென்றால் கடவுள் உன் பக்கம் இருக்கிறார், நான் ஷுகர் ரேயிடம் இருந்திருக்கிறேன். ஜானி பிராட்டனிடம் இருந்திருக்கிறேன். எந்த ரவுண்டில் ஜெயிக்கப் போகிறோம் என்பதைப் பல வாரங்களுக்கு முன்பே யாரும் சொல்லி நான் பார்த்ததில்லை. உண்மையைச் சொல்லு!"

நான் அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டேன். "உண்மை என்ன தெரியுமா?" என்றேன். "குத்துச் சண்டை மேடையில் நுழைகிற ஒவ்வொரு முறையும் பயத்தில் எனக்கு உயிர் போய்விடுகிறது. அதுதான் உண்மை!"

அதிர்ச்சியடைந்த மாதிரி என்னை அவன் பார்த்தான். அவன் கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடியது. "கடவுள் உன் பங்கில் இருக்கிறாரென்று எனக்குத் தெரியும். கடவுள் உன் பக்கம்தான் இருந்தே ஆக வேண்டும்." என்னைக் கட்டியணைத்து, தாடையில் முத்தமிட்டான். "குத்துச் சண்டை மேடையில் நுழைகிறபோது பயம் நடுக்குகிறது என்று நிஜமாகவேயா சொல்கிறாய்? ஏன்?"

"சொல்லட்டுமா, ஏன் பயப்படுகிறேனென்று?" என்றேன். "அத்தனை வாய்ச் சவடாலாகப் பேசிய பிறகு, அத்தனை ஆரூடம் சொன்ன பிறகு, நான் மண்ணைக் கவ்வுவதைப் பார்க்க வேண்டுமென்று அத்தனைபேர் காத்திருக்கும் போது, சரியானபடி மாட்டிக் கொண்டு விட்டோம் என்று எனக்குத் தெரிகிறது. நான் தோற்றேனோ, நாட்டை

விட்டே என்னை விரட்டி விடக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஜெயித்துத்தாக வேண்டும், இல்லாவிட்டால் அவ்வளவு தான் என்று எனக்குப் புரிகிறது. அதை நினைக்கும் போது உயிரே போகிற மாதிரி பயம் ஏற்படுகிறது, இதுதான் உண்மை. உனக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம் இது!"

"உனக்கும் எனக்கும் கடவுளுக்கும்," என்றான் பண்டினி.

35

பண்டினி ரகசியமான குரலில் கேட்டான். "சரி, நாளை சண்டையைப் பற்றி என்ன ஆரூடம் சொல்லப் போகிறாய்? டஃப் ஜோன்ஸைத் தோற்கடிப்பாயா?"

"ஆறாவது ரவுண்டு"

"குத்துச் சண்டை மேடையில் உன் மூலையில் என்னை உட்கார்த்தி வை."

"எதற்காக?" என்று கேட்டேன்.

"ஏனென்றால், உன்னிடம் உடம்பு வலு இருக்கிறது. என்னிடம் ஆன்ம வலு இருக்கிறது. அடுத்த சாம்பியனாக நீ தான் வரப்போகிறாய். ஸானி லிஸ்டனைத் தோற்கடிக்கப் போகிறாய். நிச்சயம். எனக்கு உன் மூலையில் இடம் கிடைக்குமா?"

"ஆல்ரைட்," என்றேன் அவனிடம்.

ஆனால் மறுநாள் இரவு, டஃப் ஜோன்ஸ் பற்றி நான் சொன்ன ஆரூடம் பலிக்கவில்லை. நான் தான் மகத்தானவன்! நான் தான் மிக அழகானவன்! என்னை எவராலும் தோற்கடிக்க முடியாது!' என்றெல்லாம் நான் வெளியிட்டிருந்த அறிவிப்புக்களும், ஆரூடங்களும், சவடால்களும் எனக்கு எதிராக வெறுப்பு ஏற்படுத்தி, சுமார் இருபதாயிரம் மக்களை மேடிசன் ஸ்கொயர் கார்டனுக்கு வரவழைத்து விட்டது. நான் மேடையேறியதும், என் பெயரை அறிவித்தது கூடக் கேட்காதபடி அவர்களுடைய ஊளைச் சத்தம் அமுக்கியது. அது ஜோன்ஸுக்கு உற்சாகம் அளித்திருக்க

வேண்டும். என் வாழ்க்கையில் நான் சந்தித்த மிகக் கடுமையான குத்துச் சண்டை அதுதான் என்று ஆகிவிட்டது. ஜோன்ஸை ரொம்ப லேசாக நான் எடுத்துக் கொண்டு விட்டது தப்பு.

ஆரூடப்படி ஆறாவது ரவுண்டில் நான் எதிராளியை வீழ்த்தத் தவறிவிட்டேன். அவ்வளவு தான். ஸ்டேடியம் மொத்தமும் அமளி துமளி! 'பிடி அவனை, ஜோன்ஸ்! அவன் ஓட்டை வாயை அடை!' என்று கூவினார்கள்.

என்னை ஜோன்ஸ் இடைவிடாமல் திணறச் செய்து கொண்டேயிருந்தான்.

பண்டினி என்னை நோக்கிக் கத்துவது காதில் விழுந்தது. "கொடு நல்லா அவனுக்கு, சாம்பியன்! கொடு நல்லா!"

எட்டாவது ரவுண்டில் நான் ஜோன்ஸின் மீது சிறு குத்துக்கள் வீசத் தொடங்கினேன். "அடித்துத் தள்ளு அவனை! அடித்துத் தள்ளு!" என்றான் பண்டினி.

சண்டை முடிந்தது. நான் ஜெயித்துவிட்டேன். ஆனால் மயிரிழையில் தான் வெற்றி.

கூட்டத்தினர் கைக்கு அகப்பட்டதையெல்லாம் எடுத்து மேடை மீது எறிந்தார்கள் - கோப்பைகள், புட்டிகள், பட்டாணிக் கடலைகள், ஏன், ஒரு கத்திகூட!

டிரெஸ்ஸிங் ரூமுக்கு நான் போகும் வழியெல்லாம் ஊளையிட்டார்கள். என் மேலங்கியைப் பிடித்து இழுத்தார்கள். என் எதிரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டு விட்டேன். இத்தனை பேரும், நான் மீண்டும் சண்டை போடுவதைப்

பார்க்க வருவார்கள்.

"உன்னுடைய அடுத்த குத்துச் சண்டை யாருடன்? நமக்கு இப்போ சாய்ஸ் ஏராளமாய் இருக்கிறது," என்றார் ஃபேவர்ஷாம் மகிழ்ச்சியுடன். "ஸ்வீடன் நாட்டு சாம்பியனுடன் நீ சண்டை செய்ய வேண்டுமென்று மேடிசன் ஸ்கொயர் கார்டன்காரர்கள் விரும்புகிறார்கள். வேறு சிலர் டஃப் ஜோன்ஸ்டன் மறுபடி சண்டை போட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எட்டி மேஷனுடன், தாட் ஸ்பென் ஸருடன், எர்னி டெர்ரெலுடன்..."

"எனக்கு வேண்டியெதல்லாம் ஸானி லிஸ்டன்தான்," என்றேன். "லிஸ்டன்தான் வேணும்."

"இப்போது நான் சொல்வதைக் கேள். ஹென்றி கூப்பரை முதலில் மடக்கு. அடுத்தது லிஸ்டன்தான். அமெரிக்காவுக்கு வெளியே நீ இன்னும் சண்டை நடத்தவேயில்லை. வெளி உலகத்தை நீ பார்க்கவும் உன்னை வெளி உலகம் பார்க்கவும் இதுதான் தருணம்."

நான் லண்டனுக்குப் பறந்தேன். இங்கிலாந்து மக்களின் பால் நான் காதல் கொண்டுவிட்டேன். அவ்வளவு அன்பாக, அவ்வளவு சினேக பாவமாக என்னை அதுவரை யாரும் நடத்தியது கிடையாது. இங்கிலாந்து எனது இரண்டாவது தாயகம் என்று எப்போதுமே நான் சொல்லி வந்திருக்கிறேன். அவர்களுடைய சாம்பியனை முறியடிப்பதற்காக நான் போயிருந்தேன். இருந்தபோதிலும், நான் லூயிவில்லிலோ அமெரிக்காவில் எந்த நகரத்திலுமே உணர்ந்திராத ஒரு அன்பையும் மரியாதையையும் எனக்கு இங்கிலாந்து மக்கள் வழங்கினார்கள். ராணியாரைக் கூடக் கண்டித்தார்கள் - ஹென்றி கூப்பரைச் சந்தித்தவர் என்னைச் சந்திக்காமல் இருந்துவிட்டார் என்பதற்காக.

கூப்பருடன் குத்துச் சண்டை நடப்பதற்கு முந்தின இரவு. நான் முடிசூடா ஹெவி வெயிட் மன்னன் என்று என்னைப் பற்றி அறிவித்திருந்தேன். என் குத்துச் சண்டையை ஏற்பாடு செய்திருந்த ஜாக் சாலமன்ஸ் என்ற கிழவர் என்னை ஒரு நாடக மேக்கப் நிறுவனத்துக்கு அழைத்துச் சென்றார். என் தலைக்கேற்ற ஒரு மணி மகுடமும் ராஜ உடைகளும் தயார் செய்தார்.

36

அந்த அரச உடைகளை நான் அணிந்து கொண்டு, கூட்டத்தினரை நோக்கி அறிவித்தேன் : "நான் தான் ராஜா. ஹென்றி கூப்பர் சண்டை சும்மா ஒரு ஒத்திகைக்காக. என்னுடைய உண்மையான மகுடத்தை அடைவதற்கு அந்த ஆள் ஒரு படிக்கல். நான் தான் அடுத்த ராஜா - குத்துச் சண்டை உலகத்தில் ராஜா! பார்த்துக் கொண்டேயிருங்கள்!"

பிரிட்டிஷ்காரர்களுடைய ஹாஸ்ய உணர்ச்சி எனக்கு வியப்பைக் கொடுத்தது. சொந்த ஊரில் என் ஜனங்கள் என்னைப் புரிந்து கொண்டதைக் காட்டிலும் நன்றாக இவர்கள் என்னைப் புரிந்து கொண்டார்கள். நான் பிரசாரத்துக்காகவே இப்படியெல்லாம் பேசுகிறேன் என்பதை ரசித்தார்கள். "ஐந்தாவது ரவுண்டில் - ஹென்றி கூப்பர் அவுட்!" என்று நான் பாட்டுப் பாடினேன். '5' என்று ஒரு பெரிய அட்டையில் எழுதி வைத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடை போட்டேன். ஐந்து விரல்களை உயர்த்திக் காட்டினேன். "ஹென்றி கூப்பர் ஐந்தாவது ரவுண்டு!"

ஆனால் அடுத்த நாள் இரவு சண்டையின் போது கூப்பர் தன் பலமனைத்தையும் திரட்டி என் மூது செலுத்தினார். அவர் குத்துக்களை என் குத்துக்கள் மிஞ்சின. என் வலது கை அவரது தலையில் சாட்டையாகப் பாய்ந்தது. பலவித காம்பினேஷனுடன் சிறு குத்துக்கள் விட்டேன். அவருடைய கண்ணுக்கு மேலே ரத்தம் பீரிட்டது.

மூன்றாவது ரவுண்டு வந்தது. ஐந்தாவது ரவுண்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன்.

ஆனால் அரங்கை அடுத்தாற்போல் ஒரு பெண் வீரிட்டலறும் சத்தம் கேட்டபோது நான் கொஞ்சம் எச்சரிக்கை தவறி அந்தத் திசையில் பார்வையை செலுத்தினேன். அந்தப் பெண் எலிஸபெத் டெய்லர். கணவர் ரிச்சர்டு பர்ட்டனுடன் வந்திருந்தார்.

திடீரென என் தாடையில் ஒரு பூகம்பம் வெடித்தது. நான் தரையில் கிடந்தேன். தலை கிறுகிறுத்தது. கண் மங்கியது. ஸ்டேடியம் மொத்தமும் ஒரே ஆரவாரம். ரெஃபரி ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணலானார். ஆனால் நாலு என்று அவர் எண்ணுமுன் மணி அடித்தது.

என் மூலையை அடைந்தேன். என் கையுறையில் தையல் பிரிந்திருப்பதை ஆஞ்செலோ கண்டான். உள்ளிருக்கும் பஞ்சு பிதுங்கி வந்து கொண்டிருந்தது. குத்துச் சண்டையில் விதிமுறைகள் ரொம்பக் கறார். கையுறைகள் ரொம்பக் கண்டிஷனில் இருந்தாக வேண்டும். வேறு ஒரு கையுறை வரவழைத்து மாட்டிக் கொள்ள ஏறத்தாழ ஒரு நிமிடம் சென்றது.

அன்று அந்த ஒரு எக்ஸ்டிரா நிமிடம் எனக்குத் தேவையாயிருந்ததா என்று பல பேர் என்னைக் கேட்டதுண்டு. உண்மையில் நான் ஒன்றும் அந்த அளவுக்கு ஆடிப் போயிருக்கவில்லை. வாடிக்கையாக ரெஸ்ட்டுக்காகத் தரப்படும் ஒரு நிமிட அவகாசமே எனக்குப் போதுமானதாக இருந்திருக்கும், சுதாரித்துக் கொள்ள. ஆயினும் அன்று கிடைத்த அந்த எக்ஸ்டிரா நிமிடம் எனக்குப் புதிய வலுவைத் தந்தது. நான் திரும்பப் பாய்ந்தேன். சிறு குத்துக்களை, அழுத்தமான, நேரான, கூர்மையான வலது குத்துக்களை அவர் நெற்றியில் வீசினேன். கூப்பரின் கண்ணுக்கு மேலிருந்த வெட்டு மறுபடி திறந்தது. இறுக்கிக் பிடிக்கும் சமயங்களில், ரத்தம் குப் குப்பென்று பீரிடுவதைக் கண்டேன். அது ஒரு கதகதப்பான இரவு.

எங்கு பார்த்தாலும் ரத்தம். என் மார்பிலும் காற் சட்டையிலும் அவருடைய முகத்திலும் தெளித்தது.

எலிஸபெத் டெய்லரும், அவருடன் இருந்த பெண்களும், உரக்க அலறினார்கள், "நிறுத்துங்கள்! இதை நிறுத்துங்கள்!" என்று. ஆனால் கூட்டத்தில் சிலர் இன்னும் கூடக் கூப்பரிடம் நம்பிக்கை வைத்திருந்தார்கள். "விடாதே! விடாதே! அவனை மடக்கு!" என்று கூப்பரை உற்சாகப்படுத்தினார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் சண்டை முடிந்து விட்டது. கூப்பர் தாளமாட்டார். அதற்கு மேல் சண்டை போடுவதில்லை என்று நான் முடிவு செய்துவிட்டேன். இறுதியில் ரெஃபரியும் வந்தார். சண்டையை நிறுத்தி, நான் ஜெயித்ததாக அறிவித்தார்.

டிரெஸ்ஸிங் ரூமில் ரத்தக் கறைகளைத் துடைத்துக் கொண்டிருந்தபோது ஃபேவர்ஷாம் உள்ளே வந்தார், ஸானி லிஸ்டனின் மானேஜரான ஜாக்நிலானை அழைத்துக் கொண்டு. "லிஸ்டனிமிருந்து ஏதோ செய்தி கொண்டு வந்திருக்கிறார் இவர்," என்றார் ஃபேவர்ஷாம்.

"லிஸ்டன் உங்களுக்கு ஒரு சமாசாரம் சொல்லச் சொன்னார். அதைச் சொல்வதற்காகவே மூவாயிரம் மைல் பறந்து வந்திருக்கிறேன்," என்றார் நிலான். "உங்களை ஆரஞ்சு ஜூஸ், மில்க் ஷேக் எல்லாம் நல்லா சாப்பிடும்படி சொல்லச் சொன்னார். நல்லபடியாய் ஆரோக்கியமாய் இருக்கச் சொன்னார். பேசிப் பேசியே உலக ஹெவி வெயிட் போட்டியில் இடம் கிடைக்கிற மாதிரி நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்களாம். உங்கள் மனைவி பணக்கார விதவையாவது நிச்சயம் என்று சொல்லச் சொன்னார்."

37

அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்று காலை, லிஸ்டனின் பயிற்சியாளர்களில் ஒருவரான வில்லி ரெட்டிஷூடன் டெலிபோனில் பேசினேன். தண்டர்போர்ட் என்னுமிடத்துக்கு லிஸ்டன் வந்திருப்பதாயும், காசு வைத்து சூதாடிக் கொண்டிருப்பதாயும் அவர் சொன்னார். "நீயும் அங்கே போய்க் கொஞ்சம் காசு செலவழியேன்" என்றார்.

சூதாட்டத்தில் பயன்படுத்துவதற்காக என்னிடம் புரவலர்கள் பணம் தந்திருந்தார்கள், அது பிஸினஸை ஊக்குவிக்க உதவட்டும் என்று. நான் ஸானிக்காகவே காத்துக் கொண்டிருந்தேன். ஒரு புதிய பாட்டுத் தயாரித்திருந்ததால், அதை அவரிடம் வாசித்துக் காட்ட விரும்பினேன். "ஒரு மணி நேரத்தில் அங்கே வருகிறேன்." என்றேன் ரெட்டிஷிடம். "ஆனால் காசு வைத்து ஆடுவதற்காக நான் போகப் போவதில்லை. அந்தக் கேளிக்கை விடுதியிலிருந்து ஸானியை விரட்டியடிக்கப் போகிறேன்."

தண்டர்போர்டை நான் அடைந்தபோது லிஸ்டன் ஒரு பகடையாட்டத்தில் ஆழ்ந்து மூழ்கியிருந்தார். அவரைப் பார்த்து நான் கத்தத் தொடங்கினேன். "வாய்யா, கோரக் குண்டுக் கரடி! ஒரு கை பார்க்கலாம், வாய்யா!"

லிஸ்டன் தன் பாட்டுக்குப் பகடைக்காய்களை உருட்டிக் கொண்டிருந்தார். என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

நான் தொடர்ந்து கூவினேன்:

"இந்த வினாடியே உன்னை மண் கவ்வ காட்டுவேன் பாட்டர்ஸன் ஒரு சாதா

ஆள். அவனை நீ தோற்கடித்தது பெரிய காரியமில்லை. நான் தான் உண்மையான சாம்பியன். என்கிட்டே உன் கதை நடக்காது. அது உனக்கும் தெரியும். உன் பணம் மொத்தத்தையும் எடுத்து வைத்துக் கொள். ஸானி! எனக்கு மண் காட்ட முடியும் என்று நினைத்தால் எழுந்து வாய்யா!"

அப்போதும் லிஸ்டன் அமைதியிழக்காமல், பகடைகளை உருட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ஆனால் எல்லாச் சூதாட்டங்களும் நின்று விட்டன. ஸ்லாட் மெஷினில், ப்ளாக்ஜாக் மேஜையில், கேனோ பகுதியில் - சூதாட்டம் ஆடிக்கொண்டிருந்த அனைவரும் அவைகளை விட்டுவிட்டு என்ன நடக்கிறதென்று பார்ப்பதற்காக எங்களை நெருங்கி வந்தார்கள்.

நேரே லிஸ்டனை நோக்கிச் சென்றேன். அவர் பகடைக்காய்களை உருட்ட முயன்று கொண்டிருந்தார்.

கௌபாய் பாணியில் நான் பேசினேன். "நாளை சூரியோதயத்துக்குள் உன்னை இந்த ஊரிலிருந்து விரட்டியடிக்கப் போகிறேன். நாம் இரண்டுபேரும் சேர்ந்து இருக்க லா வேகா கொள்ளாது."

திடீரென்று லிஸ்டன் தன் பாக்கெட்டில் கையை விட்டார். ஒரு நீண்ட கறுப்பான பிஸ்டலை வெளியே எடுத்தார். என் தலையைக் குறிவைத்து நீட்டினார். குதிரையை அழுத்தினார்.

டுமீல்! டுமீல்!

நான் குபுக்கென்று தலையைக் குனிந்து கொண்டேன். என் நாடி நரம்பெல்லாம் சில்லிட்டது.

டுமீல்! டுமீல்

இன்னும் என்னைக் குறிவைத்தே அவர் சுட்டுக் கொண்டிருந்தார். நான் தாண்டிக் குதித்து ஓடினேன் - சூதாட்ட மேஜைகள், நாற்காலிகள், பகடையாடும் மேஜைகள் - அனைத்தையும் தாவினேன். பகடைக் காய்களும் சீட்டுக்களும் தரையெங்கும் சிதறித் தெறித்தன. பதுங்கிக் குனிந்து தெருவுக்கு ஓடினேன்.

என் பின்னால் பிஸ்டல் சீறிக் கொண்டேயிருந்தது.

என் ஓட்டல் அறையை அடைந்ததுதான் எனக்குத் தெரியும். பொத்தென்று கட்டிலில் விழுந்தேன். மூச்சு இரைத்தது. இருதயம் வெகு வேகமாக அடித்துக் கொண்டது. என் கைகள் வெடவெடத்துக் கொண்டிருந்தன.

நானாவது கிறுக்குப் பிடித்தவன் மாதிரி சும்மா நடிக்கிறேன். ஆனால் லிஸ்டன் நிஜமாகவே கிறுக்குப் பிடித்தவன்.

38

ஜாகைக்குத் திரும்பி வந்து இரண்டு மணி நேரமாகியும் என் உடம்பு நடுங்குவது நின்றபாடில்லை. அப்போது ஒரு பத்திரிகை நிருபர் உள்ளே வந்தார். லிஸ்டனின் உதவியாளரான ரெட்டிஷ் அங்கே விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறார் என்று அந்த நிருபர் தெரிவித்தார்.

என்ன விஷயம் என்றால், வேண்டுமென்றே என்னைக் கலாட்டா செய்திருக்கிறார்களாம்! லிஸ்டனின் துப்பாக்கியில் இருந்ததெல்லாம் அசல் தோட்டா அல்ல, பொம்மையாம்!

ரெட்டிஷ் தான் அந்தக் கலாட்டாவை ஏற்பாடு செய்திருக்கிறார். நான் லிஸ்டனைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருந்ததால் அவரைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கிறார்.

நானும் சிரித்து வைத்தேன். ஆனால் என் பிரசாரத்துக்கு அது ஒரு அடிதான் - லிஸ்டன் என்னை விட ஒரு பாயிண்ட் கூட எடுத்துவிட்டாரே! அவரைத் திருப்பித் தாக்குவதென்று உடனே நான் தீர்மானித்தேன். ஆனால் அதற்குள் பத்திரிகைகள் எங்களுக்குள் ஏற்படும் ஒவ்வொரு பூசலையும் எடுத்துப் போடத் தொடங்கி விட்டன. 'சரித்திரத்திலேயே மிகப் பெரிய பூசல்' என்று தலைப்பும் கொடுக்கலாயின.

சிகாகோவுக்குத் திரும்பியவுடனே க்ளே டைஸன் என்ற நீக்ரோ நகைச்சுவை நடிகரிடம் சென்றேன். அவர் என் நண்பர். லிஸ்டன் இருக்கும் டென்வர் நகருக்கு என்னுடன் காரில் வரும்படி கூப்பிட்டேன். "லிஸ்டனை விடுவதில்லை என்று நான் ரொம்பத் தீவிரமாக இருப்பதாக உலகம் நினைக்கும்படி நாம்

பண்ணவேண்டும். அப்போதுதான் எங்கள் இரண்டு பேருக்கும் குத்துச் சண்டை நடக்க வேண்டுமென்று எல்லாருக்கும் ஆர்வம் ஏற்படும். போதுமான அளவு பொது மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டுவிட்டால், டைட்டிலுக்கான சண்டை நடந்துதானே ஆக வேண்டும்?' என்றேன்.

க்ளே எனக்கு உதவி செய்யச் சம்மதித்தார். ரூடி, ரானி கிங், பிங்ஹாம் என்ற என் புகைப்படக்காரர் ஆகியோருடன் என் சிவப்பு வேனில் புறப்பட்டேன். நள்ளிரவு இரண்டு மணி இருக்கும். டென்வர் எல்லையை அடைந்தோம். டெலிபோன் கூண்டை அடைந்தேன். சில பத்திரிகைக்காரர்களின் போன் எண்களை என் லூயிவில் புரவலர்கள் எனக்குத் தந்திருந்தார்கள். அவர்களைக் கூப்பிட்டேன். "காஷியஸ் க்ளே தன் வேனில் டென்வருக்கு வந்திருக்கிறார். ஸானி லிஸ்டன் வீட்டுக்குப் போயிருக்கிறார். கதவை உடைத்து உள்ளே நுழையப் போகிறார்," என்று தெரிவித்தேன்.

லிஸ்டன் வீட்டுக்குப் போகும் வழியை ஒரு பெட்ரோல் பங்க் நீக்ரோ உதவியாளர் எனக்குச் சொல்லியிருந்தார். சுகவாசிகளான வெள்ளையர் வசிக்கும் பகுதி அது. அங்கே வேனை ஓட்டிக் கொண்டு சென்றோம். நேரம் கணக்குப் பண்ணியிருந்தது ரொம்பக் கச்சிதம். லிஸ்டனின் வீட்டு வாசலை நாங்கள் அடைவதற்கும் ஊளையிட்டபடி போலீஸ் வண்டிகள் வருவதற்கும் சரியாயிருந்தது. வீட்டுக் கதவைத் தட்டி அவரை வெளியே வரும்படி கூவுமாறு ஹோவார்டை முன்னே அனுப்பினேன். எவ்வளவு ஓங்கித் தட்ட முடியுமோ அவ்வளவு ஓங்கித் தட்டினான் ஹோவார்டு. நாங்கள் இங்கே வேன் ஹாரனை எவ்வளவு சத்தம் போட முடியுமோ அவ்வளவு சத்தம் போட வைத்தோம். அண்டை அசல் மொத்தமும் விழித்துக் கொண்டுவிட்டது.

லிஸ்டன் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினார். அவர் போட்ட உறுமல் சிங்கம் கர்ஜனை செய்கிற மாதிரி இருந்தது. "யாரடா அவன். அப்பன் பெயர் தெரியாத நீக்ரோ! வெளியே போறியா இல்லையா?"

அவருடைய வெள்ளைக்கார அக்கம் பக்கத்தார்கள் ஜன்னல்களிலும் வாசல் படிகளிலும் தலை நீட்டினார்கள். நான் ஹாரனை மேலும் மேலும் சப்தித்தேன். ஹோவார்ட் கதவை இன்னும் பலக்கத் தட்டினார்.

லிஸ்டன் குபீரென்று கதவைத் திறந்து கொண்டு பாய்ந்து வேனண்டை வந்தார். பைஜாமா உடுத்தியிருந்தார். கணப்பைத் தூண்டிவிடும் இரும்புக்கழி அவர் கையில் இருந்தது. சரேலென வேனில் ஜன்னல்களைத் தாளிட்டேன். அதற்குள் அவர் ஒரு ஜன்னலை உடைத்து நொறுக்கி மற்றவைகளின் மீது அடிக்கத் தொடங்கினார்.

ஒரு போலீஸ் வேன் ஊளையிட்டுக் கொண்டு வந்து நின்றது. ஒரு போலீஸ்காரர் அவருடைய நாயுடன் வெளியே குதித்தார். இரண்டு போலீஸ்காரர்கள் விரைந்து சென்று லிஸ்டனை அவருடைய வீட்டுக்குள் கொண்டு போய்த் தள்ளிக் கதவைச் சாத்தினார்கள். ஒரு போலீஸ்காரருக்கு என்னை அடையாளம் தெரிந்துவிட்டது. "பையா! இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் நீ இந்த ஊரை விட்டு வெளியேறவில்லையென்றால் நீ ஜெயிலுக்குத்தான் போவாய்!" என்றார்.

நான் வேனை ஸ்டார்ட் பண்ணினேன். புறப்படத் தயாரானேன். ஆனால் அதற்கு முன் வீட்டு வாசற்படியில் நின்றிருக்கும் லிஸ்டனைப் பார்த்துக் கூவினேன்: "இந்தாய்யா, கோரக் குண்டு

கரடி! போலீஸ்காரர்களும் நாயும் வந்ததால் நீ தப்பினாய்! நீ சாம்பியன் இல்லை. மண்ணாங்கட்டி! எட்டாவது ரவுண்டில் நீ மண்ணைக் கவ்வுவாய். ஏனென்றால் நான் மகத்தானவன்!"

பத்திரிகைக்காரர்கள் கிட்டே வந்தார்கள். "நான் மகத்தானவன்!" என்று லிஸ்டனைப் பார்த்துக் கத்திக் கொண்டே போனேன்.

பனியும் குளிருமான அந்த இரவில் நான் வேனை ஓட்டிக் கொண்டு திரும்பினேன். ஆனால், லிஸ்டனின் முகம் போன போக்கை நினைக்க நினைக்க என்னுள் கதகதப்பாயிருந்தது.

மறுநாள் இந்தச் செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் விரிவாக வெளியாயிற்று.

39

ஸானி லிஸ்டனின் வீட்டை நான் விடிகாலை இரண்டு மணிக்கு முற்றுகையிட்டேன் என்பதும் அக்கம் பக்கத்தாரை எழுப்பினேன் என்பதும் எங்களைக் கலைக்கப் பத்துப் போலீஸ்காரர்களும் ஆறு போலீஸ் நாய்களும் தேவைப்பட்டது என்பதும், என்னை டவுனிலிருந்து விரட்டியடித்தார்கள் என்பதும் எல்லாப் பத்திரிகைகளிலும் மறுநாள் விரிவாக வெளியாயிற்று.

எனக்குப் பெரும் திருப்தி! என்னுடைய பெரிய வாயை லிஸ்டன் அடைக்க வேண்டுமென்பதில் ஜனங்கள் ஆர்வம் காட்டுவார்கள். நிச்சயம்.

ஒரு வழியாக 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சண்டை ஒப்பந்தமாயிற்று. அது எனக்கு நன்கு நினைவிருக்கிறது. ஒரு கனவு நனவாயிற்று என்று மகிழ்ந்தேன்.

ஸானியிடம் உங்களுக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டார்கள். அவர் சொன்னார்: "அந்த ஆள் மேடைக்கு வந்ததும், அவனுடைய பெரிய ஓட்டை வாய்க்குள்ளிருந்து எப்படி என் கையை வெளியே எடுக்கப் போகிறேன் என்பது ஒன்றுதான் எனக்குக் கவலை. ஏனெனில் அவன் தொண்டைக்குள் அத்தனை ஆழமாக என் கை இறங்கிவிடும். அதை வெளியே எடுக்க எனக்கு ஒரு வாரம் பிடிக்கும். அந்த ஓட்டை வாய் - அதுதான் என் ஒரே தலைவலி. மற்றப்படி அவனால் எனக்கு எக்கச்சக்கமான வருமானம்தான். அவன் சண்டையன்று உடல் நலத்தோடு நல்லபடி வந்து சேர வேண்டும் என்று விரும்புகிறேன்."

லிஸ்டனுடன் நான் போட்ட முதல் சண்டையில், சர்ச்சைக்கிடமான

பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டதுண்டு. அவற்றுள் எடை போடும் நிகழ்ச்சியைப் பற்றி யாருமே சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லை. பயத்தில் எனக்கு உயிர் போய்க் கொண்டிருந்தது என்றும், நடுங்கிக் கொண்டிருந்தேன் என்றும், பீடி பிடித்து அலறினேன் என்றும் பலவாறாகச் சொன்னார்கள்.

ஆனால் உண்மை என்னவென்றால் அன்றைய நிகழ்ச்சியை ஒவ்வோர் அங்குலமும் நான் திட்டமிட்டு ஒத்திகை பார்த்து நடத்தியிருக்கிறேன்.

பொதுவாக, எடை போடும் நிகழ்ச்சி என்பது கமிஷனின் அலுவலகத்தில் நடைபெறும் மந்தமான சம்பிரதாயமான சின்னச் சடங்குதான். ஆனால் முதல் ரவுண்டிலேயே என்னை ஒழித்துக் கட்டிவிடப் போவதாக லிஸ்டன் அறிவித்திருந்தாராகையால், முதல் ரவுண்டு வரையில் காத்திருப்பதில்லை என்று நான் தீர்மானித்திருந்தேன். எடை போடும் சடங்கின் போதே அவரைத் தாக்குவது என்று முடிவு செய்தேன். சுத்தக் கிறுக்குத்தனமாகச் செய்வது என்று தீர்மானித்தேன். பண்டினியும் அப்படி முடிவு செய்திருந்தான். கிறுக்குத் தனத்தில் அவன் எக்ஸ்பர்ட்.

"நான் லிஸ்டன் மீது பாய்கிறேன். பாய்ந்தவுடன் நீங்கள் தடுத்துப் பிடியுங்கள்," என்று என் சகோதரனிடமும் ரானியிடமும் சொல்லி வைத்தேன்.

எடைபோடும் அறைக்குத் திட்டப்படி நடப்பதற்காகச் சென்றேன். ஷுகர் ரே என் அருகில் இருப்பதற்காகவே பறந்து வந்திருந்தார். ஆனால் அவருக்கு என் திட்டம் பற்றி எதுவும் தெரியாது. நடந்த விஷயங்களைப் பார்த்து ரொம்பச் சங்கடப்பட்டு விட்டார் பாவம்.

முன்னூறு புகைப்படக்காரர்களும் நிருபர்களும் எங்களை நெருங்குவதற்காக நெருக்கியடித்துத் தள்ளிக் கொண்டு வந்தார்கள். அவர்களை முண்டி விலக்கிக் கொண்டு முன்னேறினோம். 'தொலைத்துக் கட்டப்போகிறோம்! தொலைத்துக் கட்டப்போகிறோம்!' என்று நாங்கள் கூவுகிறோம். 'பட்டாம்பூச்சி போல் பறப்போம்!' என்று நாங்கள் சேர்ந்து கூவுகிறோம். 'கோரக் குண்டுக் கரடி, இதோ வந்து விட்டோம்,' என்று கத்துகிறோம்.

லிஸ்டன் வெள்ளை உடையணிந்தவராய்த் தராசினருகே வந்ததும் என் முஷ்டியை அவர் முகத்தருகே உயர்த்துகிறேன். "எல்லாம் முடிந்து போச்சு ஐயா! நாளை இரவு உன்னைச் சட்டினி பண்ணிவிடப் போகிறேன் உன்னுடன் நான் விளையாடிக் கொண்டிருக்கப் போவதில்லை. எல்லாம் முடிந்து போச்சு!"

லிஸ்டனின் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காணப் படவில்லை. பாறை மாதிரி இருக்கிறது. நான் அவர் மீது பாய்கிறேன். என் கோஷ்டியினர் என்னை இழுத்துப் பிடிக்கிறார்கள். அவர்களை மீறிக்கொண்டு தாவப் பெரிதும் முயலுகிறேன். "தூக்கி விடுவோம்!" என்று கத்துகிறேன். "இப்பவே தூக்கிவிடுவோம்!"

லிஸ்டனின் முகத்தில் குழப்பம் ஏற்படுவதைப் பார்த்து எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தாழ்ந்த குரலில் அவர் பேசுகிறார் - எனக்கு மட்டும்தான் கேட்கிறது. "நீ எப்படிப்பட்ட முட்டாள் என்பது எல்லாருக்கும் தெரிகிற மாதிரி நடந்து கொள்ளாதே" என்கிறார்.

எனக்கு ஏகப்பட்ட குஷி. நான் முட்டாள் என்று நிஜமாகவே இவர் நம்புகிறார்.

தராசினருகே செல்கையில் தொடர்ந்து கூவிக் கொண்டிருந்தேன்.

பின்னர் நானும் அவரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டோம். பத்து வினாடி காலத்துக்கு நிசப்தம். பத்திரிகை நிருபர்களும் புகைப்படக்காரர்களும் பின்னால் நகர்ந்து கொண்டார்கள் - மோதல் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்ப்பவர்கள் போல். கடைசியில் நான் மௌனத்தைக் கலைத்தேன். "இந்தக் கோரக் கரடியைப் பார்த்தூங்களா?" என்றேன்.

லிஸ்டன் பின் வாங்கினார்.

"நூ சாம்பியன் இல்லை. மக்கு! நாளை ராத்திரிதான் உனக்குக் கடைசி ராத்திரி!" என்றேன்.

என்னோடு சேர்ந்து கொண்டு பண்டினியும் கத்துகிறான். ரானி கூவிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்கிறான்.

நான் தராசில் எடை பார்க்கிறேன். என் நாடியையும் ரத்த அழுத்தத்தையும் டாக்டர் பரிசோதிக்கிறார். ஆச்சரியத்தால் அவர் கண்கள் விரிகின்றன. "உன் நாடித் துடிப்பு நூற்றிருபது இருக்கிறதே. நார்மலைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கு மேலே!" என்கிறார்.

மையாமியில் 'ஹெரால்ட் ரிபோர்ட்டர்' பத்திரிகையின் நிருபராக இருக்கும் ஜிம்மி கானன் தன் பென்சிலையும் நோட்டையும் எடுத்துக் கொண்டு முன்னே வந்தார். "ஏன் டாக்டர், அப்படியென்றால் இவர் பயந்து போயிருக்கிறார் என்று அர்த்தமா?" என்று கேட்டார்.

40

என் ரத்த அழுத்தத்தைப் பற்றிப் பத்திரிகை நிருபர் கேட்டதும் டாக்டர் தலையசைக்கிறார். "இவர் ஒரே மரண பயத்தில் இருக்கிறார். அல்லது உணர்ச்சிவசப்பட்டு இருக்கிறார். குத்துச் சண்டை மேடையில் ஏறுவதற்கு முன்னால் இவருடைய பிரஷர் இறங்கியாக வேண்டும். இல்லா விட்டால் சண்டையை ரத்து செய்ய வேண்டியதுதான்," என்கிறார்.

என் கோஷ்டியினர் கூவிக் கொண்டும் கத்திக் கொண்டும் அறையை விட்டு வெளியேறுகிறார்கள். நான் என் வீட்டுக்குத் திரும்பினேன். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வணக்கத்துக்குரிய எலிஜா முகம்மதுவின் பேச்சுக்களை நான் டேப் செய்து வைத்திருக்கிறேன். அதைப் போட்டுக் கேட்டபடி ஓய்வாகச் சாய்கிறேன் படுக்கையில். சிந்தனை செய்கிறேன். அமைதியாக நான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயம் டாக்டர் பாச்சிகோ உள்ளே வருகிறார். என் ரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்கிறார். நார்மலாக இருக்கிறது. அவருக்கு ஒரே திகைப்பு.

நான் சொல்கிறேன் : "உயிரோடு இருக்கும் எந்த மனிதனிடமும் தனக்குப் பயம் கிடையாது என்று லிஸ்டன் சொல்வது வழக்கம். அதாவது புத்தி சுவாதீனமுள்ள எந்த மனிதனிடமும் அவருக்குப் பயம் கிடையாது என்று அர்த்தம். ஆனால் பைத்தியம் என்றால் லிஸ்டன் பயப்பட்டுத் தானே ஆகவேண்டும்?"

இவ்வாறு சொல்லிவிட்டு நான் நித்திரையில் ஆழ்ந்தேன்.

இதோ என்னை வெளியே வரச் சொல்லி ஆரவாரம் செய்கிறார்கள்.

ஸ்டேடியமெங்கும் பெரும் கூச்சல் அலைமோதுகிறது. அவ்வளவு ஆரூடங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் பண்ணிய நான் உண்மையில் தாக்குப் பிடிப்பேனா என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள் அவர்கள். ஆரூடம் சொன்னவனை எவனாவது கொல்ல வேண்டும் - அதைத் தாங்கள் பார்க்க வேண்டும் - இதுதான் அவர்கள் ஆசை. நான் நிகழ்த்திய அவ்வளவு சண்டைகளிலும், நான் சந்தித்த அத்தனை நாற்சந்திகளிலும், இந்தச் சண்டைதான் மிக ஜீவாதாரமானதாக இருந்தது. சண்டை முடிந்து பல மாதங்களுக்குப் பின்னரும் கூட, அப்போது என்ன நடந்தது என்று சின்னச் சின்னச் சம்பவங்களைக் கோத்துப் பார்க்கிறேன்.

ஆஞ்செலோவும் பண்டினியும் நானும் டாக்டர் பாச்சிகோவின் வீட்டில் இருக்கிறோம். டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கிறார். "ஏன் அன்றிரவு உன் வெள்ளைக்கார நண்பர்களைப் பற்றி அத்தனை சந்தேகம் கொண்டிருந்தாய் என்பது எனக்குப் புதிராக இருக்கிறது. நாமெல்லாம் சேர்ந்துதான் இருந்தோம். நீ, நான், ஆஞ்செலோ, ரூடி, பண்டினி எல்லாரும் அறைக்குள் இருந்தோம். கதவுகள் தாள் போட்டிருக்கிறது. சண்டை ஆரம்பமாக வேண்டிய சமயம். யாரும் உள்ளே வர முடியாது, யாரும் வெளியே போக முடியாது. உன் தண்ணீர்ப் புட்டிகள் யாரும் ஏதும் கலந்து விடாதபடி ஸீல் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியும் அதை விட்டுக் கண்ணை நகர்த்தவே கூடாது என்றாய் ரூடியிடம். 'புட்டியை கவனமாய் பார்த்துக் கொண்டாயா?' என்று கேட்பாய். இரண்டொரு நிமிடம் அந்தண்டை போயிருந்ததாக ரூடி ஒப்புக் கொள்வான். 'அப்படியானால் மூடியைப் பிய்த்தெறிந்துவிட்டு அந்தத் தண்ணீரை வெளியே கொட்டு. வேறே புதுத் தண்ணீர் பிடித்து வைத்து வாயை மூடி வை' என்பாய். யாராவது உள்ளே வந்தாலல்லவா அந்தத்

தண்ணீரில் ஏதாவது கலக்க முடியும் என்று எனக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. என்ன ஆச்சு? ஏன் அப்படி நடந்து கொண்டாய்?" என்று டாக்டர் கேட்கிறார்.

எனக்கு அந்த இரவு ஞாபகம் வருகிறது. பாச்சிகோவும் நாங்களும் அந்த அறையில் உட்கார்ந்திருந்ததை நினைவுபடுத்திக் கொள்கிறேன். நான் எச்சரிக்கையாய் இருந்தது லிஸ்டன் விஷயத்தில் மட்டுமல்ல.

"உண்மையைச் சொல்கிறேன்," என்கிறேன் பாச்சிகோவிடம். "அந்தச் சமயத்தில் நான் ஆஞ்செலோவை நம்பவில்லை. டாக்டர் பாச்சிகோ, உங்களையும் நான் நம்பவில்லை. என் சகோதரனையும் முஸ்லிம் காப்டன் சாமையும் மட்டுமே நம்பினேன். ஏனெனில் அந்த வாரம் பூரா எனக்குப் போன் கால்கள் வந்த வண்ணம் இருந்தன. 'டேய் நீக்ரோ, நீ அந்த லிஸ்டனை ஒருநாளும் ஜெயிக்கப் போவதில்லை!' என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அன்று காலை என்னை டெலிபோனில் கூப்பிட்டு, 'டேய் அப்பன் பெயர் தெரியாத ஓட்டை வாய்! நீ மேடையில் ஏறினாலே பெரிய காரியம்!' என்றார்கள். ஒரு ஆள் போனை வைப்பான். உடனே இன்னொருவன் கூப்பிடுவான். 'உன்னை லிஸ்டன் ஒழித்துக் கட்டாவிட்டால் நாங்கள் ஒழித்துக் கட்டப் போகிறோம். நீ உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஒருநாளும் வரமாட்டாய்' என்பான். முதலில் இதையெல்லாம் நான் லட்சியம் பண்ணவில்லை. ஆனால் காப்டன் சாமுவேல் சொன்னார் : 'இந்த வெள்ளைக்கார சமூக அமைப்பு உன்னைத் தொலைத்துக் கட்ட வேண்டுமென்று விரும்புகிறது. நீ நியூயார்க்கில் குத்துச் சண்டை ஆரம்பிப்பதற்கு இரண்டு நாள் முந்தி மால்கம் எக்ஸுடன் இருந்தாயாம். வணக்கத்துக்குரிய எலிஜா முகம்மதுவைப் பின்பற்றுகிறவன் நீ என்பது வெளியே தெரிந்துவிட்டது. நீ ஒரு

'கறுப்பு முஸ்லிம்' என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. எல்லாவற்றையும் கவனமாய்க் கண்காணித்து வரும்படி ரூடியிடம் சொல்லி வைப்போம் - முக்கியமாய்த் தண்ணூரை' என்றார்.

"சில மாதங்களுக்கு முன் தான் ஹேரல்ட் ஜான்ஸன் என்ற குத்துச் சண்டைக்காரருக்கு ஆரஞ்சுப் பழத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்துவிட்டதாகச் செய்தி வந்திருந்தது மேடையில் அவர் தள்ளாடி விட்டார். ஸிண்டிகேட் என்ற ஒரு கூட்டம் எத்தனை மோசமான காரியங்களைக் குத்துச் சண்டைத் துறையில் புரிந்து வருகிறது என்ற விவரங்களை கிஃபாவர் கமிட்டி அம்பலப்படுத்தியிருந்தது.

"அது என் முதல் சண்டை ஜான்ஸனை வெறுத்ததைக் காட்டிலும் அதிகமாக என்னை வெறுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்."

41

"ஆரம்பக் காலந்தொட்டு ஆஞ்செலோ உன்னுடன் இருந்து வந்திருக்கிறானே, அவனை ஏன் நீ நம்பவில்லை?" என்று டாக்டர் பாச்சிகோ கேட்கிறார்.

"ஏனா? எப்படிப்பட்ட மனிதர்களும் மாறி விடுவார்கள் என்பது சரித்திரம். நான் முஸ்லிமாக ஆனபோது என் சொந்தக் குடும்பத்தினரே எனக்கு எதிராகி விட்டார்கள். மற்றக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் என்னை எதிர்த்தார்கள். குத்துச் சண்டை மேடையில் என் தரப்பில் வேலை செய்தானென்பதற்காக ஒரு வெள்ளைக்காரனை நம்பிவிடவேண்டுமா என்ன? எனக்கு அப்போது இருபத்திரெண்டு வயது. எனக்கு மிக நெருக்கமாய் யார் இருக்கிறார்களோ அவர்களை மட்டுமே நம்பினேன். அன்று ராத்திரி ஒரே ஒரு எண்ணம்தான் என்னை ஆட்டிப் படைத்தது. குத்துச் சண்டை மேடையில் ஏறுகிறபோது என் உடம்புக்குள் போதை மருந்து எதுவும் புகுந்து விடாதபடி கவனமாயிருக்க வேண்டும். நாம் பத்திரமாக இருக்கிறோம் என்ற திருப்தி எனக்கு ஏற்பட வேண்டும். என் சகோதரன் - என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்பு - அவன் ஒருவன்தான் நான் குடிக்கும் தண்ணீரைக் கண்காணிக்க வேண்டும். அவன்தான் எனக்குப் பாதுகாப்பு, வேறு யாரும் கூடாது. மற்றப்படி ஆஞ்செலோ மோசடி பண்ணக் கூடியவன் என்று ஒருபோதும் நான் நினைக்கவில்லை. எனக்கு ஏதாவது ஆபத்து வரக் கூடுமானால் அது தண்ணீர் வழியாகத்தான் வரும் என்று எண்ணினேன். ஐந்தாவது ரவுண்டில் என் கண்கள் குருடாகிற மாதிரி ஆனபோது தண்ணீர் மூலமாக ஏதோ நேர்ந்துவிட்டது என்றுதான் நினைத்தேன்.

"முதல் ரவுண்டு கன கச்சிதமாக நான் திட்டமிட்டிருந்த படியே நடந்து முடிந்தது. என் தந்திரம் நல்ல பலன் அளித்திருப்பதை அறிந்தேன். மாடு மாதிரி லிஸ்டன் என்மீது பாய்ந்தார், கன்னாபின்னாவென்று குத்துக்களை வீசியபடி பாட்டர்ஸனை வீழ்த்திய மாதிரி ஒரே அமுக்காய் என்னை வீழ்த்திவிடலாம் என்பது அவர் எண்ணம். ஆனால் பின்புறம் வளைந்து, டான்ஸ் ஆடியபடியே நகர்ந்து விடுகிறேன். என்னை கயிற்றிலே தள்ளி மடக்க முயலுகிறார். ஆனால் நான் அவருடைய குத்துக்கள் என்மீது விழாதபடி சட்டெனக் குனிந்து கொண்டு சுழன்று விலகுகிறேன். பாதி ரவுண்ட் வரை நான் அவரை நோக்கிக் கையையே வீசவில்லை. காத்துக் கொண்டிருந்தேன். பின்னர் சின்ன இடது கைக் குத்துகளால் அவரைக் கொட்டுகிறேன். வலது குத்துக்களை அவர் தலையில் வீசுகிறேன். அந்த ரவுண்ட் முடியும்போது எனக்கு நிச்சயமாகிவிட்டது - இந்த ஆளை மடக்கிவிட முடியும் என்று...

"மூன்றாவது ரவுண்ட் பாதி நடந்து கொண்டிருக்கும் சமயம் - எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. என் வேகத்தை ஈடு கொடுக்க அவர் சிரமப்படுகிறார் என்பதை உணர்கிறேன். என் சிறு குத்துக்களால் அவர் முகம் வீங்கியிருக்கிறது. வலது கிராஸ் குத்துக்களை மேலும் வீசுகிறேன். அவர் இடது கண்ணின் கீழே ஒரு வெட்டு ஏற்படுத்துகிறேன். நன்கு தெரிகிறது - அவருக்கு அதிர்ச்சி - குழப்பம் - திகைப்பு. இத்தனை வருடங்களில் அவருக்கு ஒரு காயம்கூட ஏற்பட்டது கிடையாது. முதல் தடவையாக மேடையில் அவருடைய ரத்தம் சிந்துகிறது. அடிபட்ட மிருகம் போல் என் மேல் பாய்கிறார். வலுவான குத்துக்களை என் உடம்பு மீது பொழிகிறார். ஆனால் பெரும்பாலான குத்துக்களை என் முழங்கையால் தடுத்துக் கொண்டு விடுகிறேன்.

"சிறு குத்துக்களை வீசுவதும் உடனே விலகுவதும் மறுபடி குத்துவதுமாக நாலாவது ரவுண்டை முடித்தேன்.

"ஐந்தாவது ரவுண்ட். அவருக்குத் தோளில் வலி இருந்ததென்பதற்காக ஏதோ களிம்பு தடவியிருந்தார்கள். அது எனக்குப் பிற்பாடு தெரிய வந்தது. அவருடன் உராய்ந்ததால் அந்தக் களிம்பு என் நெற்றியில் பட்டிருக்கிறது. அது அப்போது எனக்குத் தெரியவில்லை. ஒரு ரவுண்டுக்கும் இன்னொரு ரவுண்டுக்குமிடையே இடைவேளை விட்ட போது ஆஞ்செலோ என் முகத்தை ஒற்றினான். அந்தக் களிம்பு என் கண்ணுக்குள் சொட்டிவிட்டது. எழுந்து கொண்டபோது எனக்குக் கண் தெரியவில்லை. "என்னால் பார்க்க முடியவில்லை!" என்று கத்தினேன். "கண்ணை எரிகிறது. ஒன்றுமே பார்க்க முடியவில்லை. கையுறைகளைக் கழற்றி எறி! கோல்மால் நடக்கிறது என்று உலகம் தெரிந்து கொள்ளட்டும்!"

முதல் ரவுண்டிலிருந்தே நான் லிஸ்டனுக்குச் செம்மையாய்க் கொடுத்துக் கொண்டிருந்தேன். அவன் கண்களில் வெட்டுக் காயம் பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் பத்திரிகைகள் என்ன சொல்லுமென்று எனக்குத் தெரியும். எனக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. அதனால் ஓடிவிட்டேன் என்பார்கள். கண் தெரியவில்லை என்பதால் நான் விலகிக் கொள்ள நினைத்தேன். ஆனால் என்னை லிஸ்டன் கசாப்புப் போடத் தொடங்கியதால் நான் ஓடி விட்டேன் என்றுதான் அவர்கள் எழுத விரும்புவார்கள். கண் தெரியவில்லை என்பது சும்மா சாக்கு என்பார்கள்.

ஆஞ்செலோ என்னிடம் சொன்னான் : "இது மாபெரும் குத்துச் சண்டை. டைட்டிலுக்காக நடக்கிற சண்டை போ, தொடர்ந்து சண்டை போடு. நீ ஜெயித்துக் கொண்டிருக்கிறாய்," என்றான்.

மணி அடித்தது.

42

இன்னும் பத்து வினாடி நான் தாமதித்திருந்தால் லிஸ்டன் ஜெயித்ததாக நடுவர் அறிவித்திருப்பார். பண்டினி கூச்சலிடுவது எனக்குக் காதில் விழுந்தது "சாம்பியன் நீ தான்! அந்த ஆள் உன்னை அடிக்க இடம் கொடுக்காதே! விடாதே! விடவே விடாதே!"

என் வலது கண்ணை மூடியபடியே மேடையினுள் நுழைந்தேன். லிஸ்டன் என்மீது பாய்ந்தார். காட்டுத்தனமான குத்துக்களை என்னை நோக்கி வீசினார். நான் மயிரிழையில் தப்பிக் கொண்டிருந்தேன். அவருடைய உருவத்தை என்னால் சரியாகப் பார்க்கக்கூட முடியவில்லை. இருந்தாலும் சட்டெனக் குனிந்து கொண்டும் நகர்ந்து கொண்டும் ஆடிக் கொண்டும் அவரை ஏமாற்றினேன்.

கண்களைத் துடைத்துக் கொண்டேன். லிஸ்டன் என்மீது மோதினார். அவரது கொடூரமான குத்துக்கள் என்னைக் குறி தவறாமல் தாக்கின. முழு மூச்சுடன் இறங்கிவிட்டார் அவர். கைக்கெட்டும் தூரத்துக்குள் அவர் வந்த போதெல்லாம் நான் கையை நீட்டி அவர் தலை மீது அடித்தேன். அவர் கைகளைக் காட்டிலும் என் கைகள் நீளமாயிருந்தன. என் கைத் தூரத்துக்கு அப்பால் அவரை நான் வைத்திருக்கும் வரை அவர் என்னைத் தாக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்.

அந்தச் சமயத்தில் மேடைக்கருகே யாரோ ஒருவர் கூவுவது எனக்குக் கேட்டது : "ஸானி! அந்த நீக்ரோப் பயலின் பிட்டத்தில் அடி அந்த நீக்ரோவைப் போடு ஒன்று!"

அந்தக் கூச்சல் எனக்கு ஊக்கம் கொடுத்தது, கடைசி வரை தாக்குப் பிடிப்பது என்ற என் உறுதியை இன்னும் தூவிரமாக்கிற்று. அந்த ரவுண்ட் முடிவடையும் சமயம் என் கண்கள் தெளிவடையத் தொடங்கின. நான் மூண்டும் தாக்க ஆரம்பித்தேன். சின்னச் சின்னக் கூர்மையான குத்துக்களை அவர் தலைமூது வூசினேன். ரவுண்ட் முடிந்து என் மூலைக்குத் திரும்பியபோது, எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது இனி எல்லாம் சரியாகிவிடும் என்று.

ஆறாவது ரவுண்ட்....

நான் பாய்ந்தேன். லிஸ்டன் இதற்குள் மிகவும் மாறிப் போய்விட்டிருந்தார். தனக்கு எத்தனை சாமர்த்தியம் உண்டோ அத்தனையையும் காட்டியாகிவிட்டதே! ஆனால் என்னைச் சேதாரம் பண்ண முடியவில்லையே!

அவருக்கு மூச்சு இரைப்பது எனக்குத் தெரிந்தது. அவர் களைத்துப் போயிருந்தார். நானோ இன்னும் வலுவுடன் இருந்தேன். என்னுடைய வலது இடது குத்துக்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்பது அவருக்குத் தெரிந்து விட்டது.

ஏழாவது ரவுண்ட் ஆரம்பமாவதற்கு மணி அடித்தபோது அவர் எழுந்து வரவில்லை. தளர்ந்து போனவராக முக்காலியில் உட்கார்ந்து கொண்டு என்னை வெறித்து நோக்கிய வண்ணம் இருந்தார். ஆஞ்செலோவும் பண்டினியும் என்னை நோக்கி, "நூ தான் சாம்பியன்! நூ தான் சாம்பியன்" என்று கத்தினார்கள்.

அவர்களது விரிந்த கைகளுக்குள் நான் தாவினேன். என்னைக் கட்டியணைத்துக் கொண்டார்கள். நூண்ட போராட்டம் முடிவடைந்து விட்டது. நான் பட்டம் பெற்று விட்டேன். என் ஆரூடம் பலித்து

விட்டது.

(அன்று அந்த ஆறாவது ரவுண்ட் முடிவடைந்த சமயம் ஆஞ்செலோ மயிரிழையில் உயிர் தப்பினானாம். அவனே சொன்னான். "உன் ஆட்கள் என்னைத் தூக்குக் கட்டப் போகிறார்கள் என்று நடுங்கி விட்டேன்." என்றான். அவன் சொன்னது ரானியையும் ஆர்ச்சியையும் பற்றி. "தண்ணீரிலே நான் ஏதோ கலந்து விட்டேன் என்று அவர்களுக்குத் தோன்றி விட்டது. சட்டென்று அந்தத் தண்ணீர் பாக்கெட்டை எடுத்து நாலு வாய் குடித்துக் காட்டினேன். என் கண்ணில் அந்தத் தண்ணீரை விட்டுக் கொண்டு காட்டினேன். தண்ணீரில் கெடுதல் எதுவும் இல்லையென்று நிரூபித்த பிறகுதான் என் உயிர் தப்பியது!")

எல்லாம் முடிந்துவிட்டது. ஒன்றே ஒன்று பாக்கி இருந்தது : பத்திரிகை நிருபர்களை நான் கேட்க வேண்டிய கேள்வி.

சண்டை வெற்றிகரமாக முடிந்ததும் என்னைப் பேட்டி காண அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஏறத்தாழ அத்தனை பேரும் என்னை ஒரு போலி ஆள் என்று கருதியவர்கள் என்பதை என்னால் மறக்க முடியவில்லை.

என்னைக் கேள்வி கேட்க வாயெடுத்தார்கள். நான் முந்திக் கொண்டேன். "இருங்கள், இருங்கள்!" என்றேன். "சண்டை நடப்பதற்கு முன் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை விஸ்தாரமாகச் சொல்ல உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சொன்னீர்கள். ஸானி லிஸ்டன் என்னைக் கொன்றுவிடப் போகிறான் என்றீர்கள். ஜாக் ஜான்ஸனைக் காட்டிலும், ஜாக் டெம்ப்ஸியைக் காட்டிலும் - ஏன், ஜோ லூயியைக் காட்டிலும் கூட - லிஸ்டன் கெட்டிக்காரன் என்றீர்கள். சரித்திரத்திலேயே மாபெரும்

ஹெவி வெயிட் சாம்பியன் என்று அவரை வர்ணித்தார்கள். ஃப்ளாயிட் பாட்டர்ஸனை எப்படி இரண்டு முறை அவர் மண் கவ்வ வைத்தார் என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். லிஸ்டனை எட்டாவது ரவுண்டில் அடித்துக் காட்டுகிறேன் என்று நான் சொன்ன போது நீங்கள் நம்பத் தயாராயில்லை. இப்போது என் முறை. உங்களைக் கேட்கிறேன். சொல்லுங்கள். இவ்வளவு காமெராக்களும் என்னை மொய்த்துக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் உலக மொத்தமும் அறியும்படி சொல்லுங்கள்; நான்தான் மகத்தானவன் என்பதை உலகத்துக்குச் சொல்லுங்கள்."

மௌனம் நிலவியது.

43

மீண்டும் நான் பத்திரிகையாளரைக் கேட்கிறேன்: "சொல்லுங்கள், யார் மாபெரும் ஆள்?"

யாரும் பதில் சொல்லக் காணோம். தங்கள் குறிப்பு நோட்டுக்களை அல்லது மைக்ரபோன்களை நோக்கித் தலையைக் குனிந்து கொள்கிறார்கள். "யார் மகத்தானவன்" என்று மறுபடியும் கேட்கிறேன். கவலை நிறைந்த முகத்துடன் அவர்கள் என்னை நிமிர்ந்து நோக்குகிறார்கள். ஆனால் அறையில் மௌனமே நிலவுகிறது.

"கடைசி முறையாகக் கேட்கிறேன்" என்று கத்துகிறேன். "உலகம் மொத்தமும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மோசடிக்காரர்கள். லிஸ்டனை வீழ்த்துவேன் என்று உங்களிடம் சொன்னேன். வீழ்த்தி விட்டேன். இந்தப் போட்டி பற்றிப் பந்தயம் கட்டியவர்கள் அத்தனை பேரும் என் சான்ஸ் எட்டுக்கு ஒன்றுதான் என்று சொன்னார்கள். உங்கள் எல்லோருடைய கணக்கையும் நான் தப்பாக்கி விட்டேன். உலகத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டேன். சொல்லுங்கள், யார் மகத்தான குத்துச் சண்டைக்காரன்? யார் மகத்தானவன்?"

அவர்கள் ஒரு நிமிடம் தயங்குகிறார்கள். பிறகு இறுதியில் சோர்ந்த குரலில் அனைவரும் சொல்கிறார்கள். "நீங்கள் தான் மகத்தானவர் - க்ரேட்டஸ்ட்!"

மஸ்ஸாசூசெட்ஸில், சிகோபியில் நான் பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன் - லிஸ்டனிடம் பதில் மாட்ச் செய்வதற்காக. மால்கம் எக்ஸை நியூயார்க்கில் கொலை செய்து விட்டார்கள் அந்த

வருட ஆரம்பத்தில். எங்கு பார்த்தாலும் ஒரே வதந்தி - எலிஜா முகம்மதுவின் விசுவாசமான பக்தர்களில் ஒருவன் என்ற முறையில் என்னைத் தாக்கப் போகிறார்கள் என்று. ஒரு பத்திரிகை நிருபர் என்னிடம் சொன்னார் : "பழிக்குப் பழி வாங்கச் சில பேர் துடித்துக் கொண்டிருக்கிறார்களாம். அவர்கள் உங்களைக் கொலை செய்ய வரப் போகிறார்களாம். ஊர் பூரா வதந்தியாக இருக்கிறது. 'இஸ்லாம் நேஷன்' இயக்கத்தில் நீங்கள்தான் மிகவும் பிரபலமான முஸ்லிமாகையால் உங்களைக் குறி வைத்திருக்கிறார்கள்."

வதந்திகள் மேலும் மேலும் கிளம்பிக் கொண்டேயிருக்கின்றன. துப்பாக்கி ஏந்திய ஆட்கள் இரண்டு கார் நிறையக் காத்திருக்கிறார்களாம். என்னைக் கொல்லுவதற்காக நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்களாம். நான் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போதோ அல்லது குத்துச் சண்டை மேடையில் இருக்கும் போதோ என்னைத் தீர்த்துக் கட்டப் போகிறார்களாம். என் உயிருக்கு அபாயம் நேர்ந்திருப்பதாக அந்த வாரம் பூரா பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணமிருந்தது.

பயிற்சி முகாமுக்கு நான் வந்த முதலாவது வாரம். ரகசியப் போலீசைச் சேர்ந்த ஐந்து பேர் என் ஓட்டலுக்கு வருகிறார்கள். தாங்கள் இன்னாரென்று அத்தாட்சி காட்டுகிறார்கள். "இந்த வதந்திகளில் கொஞ்சம் உண்மை இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்" என்கிறார் ஒருவர். "உங்கள் அறைக்கு வெளியே இருபத்து நாலு மணி நேரமும் காவல் நிறுத்தப் போகிறோம். காலை வேளையில் நீங்கள் வெளியே போகும்போது ஒரு போலீஸ்காரர் உங்களுக்குத் துணையாக உங்களுடன் கூட வருவார்."

அது முதற்கொண்டு, தினந்தோறும் காலையில் இரண்டு கார்களில் போலீசார் என்னைப் பின் தொடர்ந்து பயிற்சி மைதானத்திற்கு

வருகிறார்கள். நான் ஓட்டப் பயிற்சி மேற்கொள்ளுமுன் மைதானத்தைச் சுற்றிப் பார்த்து, என்னைத் தாக்குவதற்காக யாரேனும் ஒளிந்திருக்கிறார்களா என்று சோதனை செய்துவிட்டுத் திரும்பி வந்த பிறகுதான் ஐந்நூறு அறுநூறு அடி தூரத்துக்கு ஒரு முறை ஓடுவதற்கு அனுமதிக்கிறார்கள். துப்பாக்கியுடன் போலீசார் புதர் மறைவில் பதுங்கியிருக்கிறார்கள்.

உடற்பயிற்சி சாலைக்கு நான் போனால், மப்டி போலீசார் கூட்டத்தினுள் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, இந்தக் காவலர்களின்பால் என் மனத்தினுள் ஆழ்ந்த வெறுப்பு ஏற்படுகிறது. என்னைத் தூக்குக்கட்ட யாரோ முயற்சி செய்கிறார்கள் என்பதை நான் நம்பத் தயாராயில்லை. நான் பயிற்சி செய்வதற்கு இதெல்லாம் அபாயமான இடைஞ்சல்கள் என்று கருதுகிறேன்.

போட்டிக்கு மூன்று நாட்கள் இருக்கின்றன. எல்லிஸுடன் பயிற்சிக்காகச் சண்டை செய்து கொண்டிருக்கிறேன். கூர்மையான வலது குத்தொன்று என் விலாவில் விழுகிறது. அந்த வலி என்னைச் சுருண்டு மடங்கச் செய்கிறது. அங்கே எதுவோ முறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டாலும் ஆழமான சிராய்ப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் டாக்டரிடம் போய் காட்டினேனால் மறுபோட்டியை ஒத்தி வைத்து விடுவார்கள். அன்று நான் லிஸ்டனை வீழ்த்தியது ஏதோ குருட்டாம் போக்கினால் தான் என்று குறை சொல்வோரின் வாயை அடைப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமற் போய்விடும்.

எரிச்சலுடன் வீடு திரும்புகிறேன். சிடு சிடுவென்று கோபம் ஏற்பட்டிருக்கிறது. என் மனைவி சோன்ஜி மீது கோபம் வருகிறது. ஏனெனில், அவள் சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறாள். எங்கள்

மதத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி உடையணிந்து கொள்ளாமல் இருக்கிறாள்.

நான் கோபித்துக் கொண்டதும் அவள் திரும்பிக் கத்துகிறாள்! "எனக்கு இது அலுத்துப் போய்விட்டது. இந்த விதி முறைகளையெல்லாம் என்னால் கடைப்பிடிக்க முடியாதென்று உங்களிடம் முன்பே சொன்னேன். உன்னிடம் எனக்குப் பிரியம்தான். ஆனால் இந்த மதம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் முஸ்லிமாக விரும்பவில்லை."

44

உடற்பயிற்சி சாலையில் எல்லிஸ் கொடுத்த குத்தைப் போலவே என்னைத் தாக்குகிறது என் மனைவி சோன்ஜியின் பேச்சு. இறுதியில் நான் சொல்கிறேன்: "நல்லது கண்ணே, இத்தனை வெளிப்படையாக நூ சொன்னது பற்றி சந்தோஷம். நாம் விவாகரத்து செய்து கொள்ளலாம்."

முடிவின் ஆரம்பம் அது. அன்றிரவு விலாவிலும் இருதயத்திலும் வலியுடன் நான் தூங்குகிறேன். நான் காதலித்த முதல் பெண்ணுடன் வாழ்ந்த வாழ்க்கை அநேகமாக முடிவடைந்து விட்டது என்பதை உணர்கிறேன்.

அமெரிக்க ராணுவத்தில் நான் கலந்து கொண்டு வியட்காங் (வடக்கு வியட்நாம்) படையினருடன் போர் செய்ய வேண்டுமென்று தாக்கூது வந்தது. 'வியட்காங்குகளுடன் எனக்கு எவ்வித சண்டையும் கிடையாது' என்று நான் அறிவித்தேன். டெலிவிஷன் பேட்டியில் என்னிடம் திரும்பத் திரும்ப அதைப் பற்றிக் கேட்டார்கள். அதற்காக ஒரு பாட்டு எழுதினேன்:

"எவ்வளவு தடவை வேண்டுமானாலும்

கேளுங்கள். வியட்னாம் போர் எத்தனை

நாள் நூடித்தாலும் சரி.

வியட்நாம்காரர்களுடன் எனக்குச் சண்டை

எதுவும் கிடையாது."

இதைத் தவிரவும் நான் பல விஷயங்கள் சொன்னேன். ஆனால் இந்தப் போர் எதிர்ப்புப் பேச்சு ஒன்றைத்தான் உலகம் பிடித்துக் கொண்டது. அமெரிக்காவெங்கிலும் வெளி நாடுகளிலும் - லண்டன், பாரூஸ், பெர்லின், மாட்ரிட், ஜூரிச், ஹாங்காங், ரோம், ஆம்ஸ்டர்டாம் - எங்கெங்கும் - இதுதான் பெரும் செய்தியாகப் பரபரப்பு ஏற்படுத்தியது. அதற்குப் பல வருடங்களுக்குப் பிறகு கூட அதன் எதிரொலி காற்றிலே சுழன்று கொண்டேயிருந்தது.

அன்றிரவு நான் தூங்கப் போகுமுன்பே என் பேச்சின் விளைவுகள் என்னைத் தாக்கத் தொடங்கி விட்டன.

நிருபர்கள் புறப்பட்டுப் போன பின்னர் நான் மையாமி பூச்சில் ஓர் ஓட்டல் வரை காரில் சென்றேன். திரும்பி வந்தபோது வாசலில் என் தம்பி நின்றிருந்தான். சாடை காட்டி என்னை உள்ளே அழைத்தான். பத்திரிகை நிருபர்கள் யாரும் என்னுடன் வர வேண்டாமென்று அவன் சாடையில் புரிந்து கொண்டேன்.

அவனுடன் உள்ளே போனவுடனேயே, "போன் ஓயவேயில்லை. இவர்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்து விட்டது போலிருக்கிறது" என்றான்.

என்னிடம் மூன்று போன்கள் இருந்தன. மூன்றும் மணியடித்துக் கொண்டிருந்தன. அருகிலிருந்த போனை எடுத்தேன். என் சகோதரன் என்னைத் தடுக்க முயன்றான்.

"இரு, இரு. நான் பேசுகிறேன். இவர்கள் அத்தனை பேரும் பைத்தியம்."

ஆனால் அதற்குள்ளேயே டெலிபோனில் கூப்பிடுபவனின் குரல் என் காதில் விழுந்து விட்டது. முரட்டுத்தனமான, அற்பத்தனமான குரல்.

"காஷியஸ் தானே!" என்றான், "இல்லை ஐயா, இது முகம்மது அலி."

"முகம்மதோ, காஷியஸோ என்ன பெயர் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்," என்று அவன் கத்தினான். "நீ பேசியதை டெலிவிஷனில் கேட்டேன். கோழைப் பயலே! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிற துரோகி! நீக்ரோ எலி! என் கையில் மட்டும் வெடிகுண்டு இருந்தால் உன் தலையில் போட்டுத் தூள் தூளாக்குவேன். உனக்கும் உன் கூட்டத்துக்கும் ஒரு விஷயம்.........."

சொல்ல வேண்டிய விஷயத்தைத்தான் சொல்லி விட்டானே! இதற்கு மேல் என்ன சொல்லப் போகிறான்? நான் போனை வைத்து விட்டேன். சமையலறையில் ஒலித்துக் கொண்டிருந்த இன்னொரு போனை எடுத்தேன். ஜன்னி பிடித்த மாதிரி ஒரு பெண் கத்தினாள்: "யாரங்கே? காஷியஸ் க்ளேயா பேசுவது? நீ என்ன, என் பிள்ளையைக் காட்டிலும் உசத்தியா? நீ அப்பன் பெயர் தெரியாத அனாதை! கவர்ன்மெண்டில் நாளைக்கே உன்னை யுத்தத்துக்கு இழுத்துக் கொண்டு போய் உன்னைச் சுட்டுக் கொல்ல வேண்டும்."

அவளை அப்படியே நிறுத்திப் படுக்கையறையிலிருந்த போனை எடுக்கிறேன். இப்போது கேட்ட குரல் எனக்குப் பழக்கமானது. மர்பி என்று ஒரு போலீஸ் துணை அதிகாரி. மையாமி பீச்சில் எனக்குக் காவலாகப் பலமுறை வந்திருப்பவர். மெதுவாக, இழுத்து இழுத்துப் பேசினார். "இதோ பார் காஷியஸ், இந்தத் தடவை நீ கொஞ்சம் அதிகப்படியாகத்தான் பேசிவிட்டாய். யாரோ உனக்குத் தப்பாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்......"

அதை வைத்தேன். இன்னொரு போன். காடி ஜோன்ஸ் - என்னுடன் பயிற்சி சண்டைகள் செய்கிறவன். புஸ் புஸ்ஸென்று அவன் சீறுவதுதான் முதலில் கேட்கிறது. பிறகு கத்தினான் : "நீ சாகப்

போகிறாய் - இன்று ராத்திரிக்குள் சாகப் போகிறாயடா நூக்ரோப் பயலே!"

45

முகம்மது அலி வெறும் குத்துச் சண்டை வீரர் மட்டுமல்ல; அவர் தத்துவம். அவர் ஜெயித்துக் கொண்டேயிருந்தார். இருக்கிறார் என்றால் உடல் வலுவும் சாமர்த்தியங்களும் மட்டும் காரணம் அல்ல. சில கொள்கைகளையும் லட்சியங்களையும் அவர் தன் வாழ்க்கைக்கு ஆதாரமாக வைத்திருக்கிறார்.

அவர் போராட்டங்கள் நடத்தியது குத்துச் சண்டை மேடைகளில் மட்டுமல்ல. அநீதி என்று எங்கெங்கே தனக்குத் தோன்றுகிறதோ அங்கெல்லாம் அவர் குத்துச் சண்டைகள் நிகழ்த்தினார்.

அமெரிக்கா வியட்னாமில் நடத்திய யுத்தத்தை அவர் எதிர்த்தார். அமெரிக்க இராணுவத்தில் சேருவதற்கு மறுத்தார். அதன் விளைவாக, அவருடைய குத்துச் சண்டை லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது. ராணுவத்தில் சேர மறுத்ததற்காக ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (பின்னர் அந்தத் தண்டனை வாபஸ் பெறப்பட்டது).

இப்படி அவருடைய போராட்டங்களையும் வெற்றிகளையும் பற்றிச் சொல்வதானால் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டே போகலாம். இடமில்லாத காரணத்தால் நிறுத்திக் கொள்ள வேண்டியதாகிறது.

'தி க்ரேட்டஸ்ட்' என்ற புத்தகத்தின் முன்னுரையில் முகம்மது அலி கூறுகிறார்:

"ஒரு குத்துச் சண்டை வீரன் வெற்றிகரமாக இருக்க வேண்டுமானால் - தனக்கு உரியதைப் பிடித்து வைத்துக் கொள்ள

வேண்டுமானால் - ஒரே சமயத்தில் அவன் இரண்டு வேறு இடத்தில் இரண்டு வேறு ஆளாக இருக்க வேண்டியது அவசியம்: உடற்பயிற்சி சாலையில் ஒருவன் - வழக்கறிஞரின் அலுவலகத்தில் ஒருவன்; குத்துச் சண்டை மேடையில் ஒருவன் - அக்கவுண்டண்டின் அறையில் ஒருவன் என்றிருக்க வேண்டும். எவரும் இரண்டு ஆளாக இருப்பது சாத்தியமல்லவாகையால் குத்துச் சண்டை வீரனுக்கு ஒரு பங்காளி தேவைப்படுகிறான். ஓர் உடன்பிறப்பு, நண்பன், ஆலோசனை கூறுபவன், அவனுடைய இரட்டைச் சகோதரன் ஒருவன் தேவை. இவனுக்கு அவசியமான அந்த மறுபாதியை அவன் கொடுப்பான்.

இவ்வளவும் சேர்ந்தவன் ஹெர்பர்ட் முகம்மது. நான் எந்த முடிவு எடுத்திருந்தாலும் அதில் ஹெர்பர்ட்டின் தீர்மானமான, முக்கியமான பங்கு இல்லாதிருந்தது கிடையாது.

நான் குத்துச் சண்டையிலிருந்து முற்றிலும் நீக்கி வைக்கப்பட்டிருந்த காலத்தில் சுயசரிதம் எழுதத் தொடங்கலாமே என்று எனக்குச் சொன்னவன் ஹெர்பர்ட்தான். எனக்குத் தெரிந்த ஒரே தொழில் எதுவோ அதிலிருந்து மூன்று வருட காலத்துக்கு அமெரிக்கா என்னை விலக்கி வைத்திருந்தது. நான் வேறு நாட்டுக்குப் போய்த் தொழில் செய்ய முடியாதபடி என் பாஸ்போர்ட்டையும் பறித்து வைத்திருந்தது. சுயசரிதத்தைப் புத்தகமாக எழுதி வெளியிடுவதற்காக 'ராண்டம் புக்ஸ்' நிறுவனத்தை நான் அணுகிய போது, நான் போடக்கூடிய குத்துச் சண்டைகள் அனைத்தும் போட்டு முடித்தாகிவிட்டது என்ற நிலைமை இருந்தது. என் கதையை அனேகமாய்ச் சிறையில் தான் முடிக்க வேண்டியிருக்கும் என்றுகூடத் தோன்றியது.

என் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்தனைகள் செய்து, அவற்றை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த சமயம் -

அதற்கெல்லாம் கிளைமாக்ஸ் போல சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வெளியாகப் போகிறது என்று எண்ணியிருந்த வேளையில் - ஹெர்பர்ட் இடைவிடாது செய்து வந்த இயக்கத்தின் பலனாக என் மீதிருந்த தடை விலக்கப்பட்டது.

ஒருமுறை ஹெர்பர்ட் என்னிடம் சொன்னார் :

"ஹெவி வெயிட் சாம்பியன்ஷிப் போட்டிகளில் மக்களுக்கு இப்போதிருக்கிற மாதிரி இத்தனை ஆர்வம் ஒரு போதும் இருக்கப் போவதில்லை - காரணம் நீ அப்படி அதைக் கட்டி வளர்த்து உருவாக்கியிருக்கிறாய். உன் காலத்துக்குப் பிறகு இந்த ஆர்வம் செத்துவிடும். ஏனெனில், உலகமனைத்தையும் பல வழிகளிலும் தழுவியவனாக உன்னைப் போல ஒரு குத்துச் சண்டை வீரனைச் சரித்திரம் கண்டதில்லை. நீ இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்ததன் மூலமாக, உலக ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தைப் பற்றி ஏராளமான பேர் அக்கறை கொள்ளுமாறு செய்தாய். அதற்கு முன் நாங்கள் குத்துச் சண்டையைப் பற்றி - ஏன், எந்த விளையாட்டைப் பற்றியுமே - எண்ணிப் பார்த்தது கிடையாது. ஒரே ஒரு குறிப்பிட்ட விளையாட்டு வீரனிடம் இந்த அளவு கவனத்தை உலகம் இதுவரை காட்டியதில்லை. இது உன் யுகம். இதிலிருந்து நீ அனுகூலம் அடையத்தான் வேண்டும்."

ஆற்றலும் நேர்மையும் விசுவாசமும் உள்ள இப்படிப்பட்ட ஒருவரை மானேஜராக நான் பெற்றது என் அதிர்ஷ்டம். இந்த நண்பர் என் வாழ்க்கையை வழிப்படுத்த எத்தனையோ உதவிகள் செய்தபோதிலும் தன்னைப் பொறுத்த மட்டில் ஒதுங்கியிருப்பவராயும் அடக்கமுள்ளவராயும் இருந்து வந்திருக்கிறார்.

இப்படிப்பட்ட நலன்களை எனக்கு அருளியதற்காக எல்லாம் வல்ல

அல்லா அவர்களுக்கும் அல்லாவின் ஊழியரான மேன்மைக்குரிய எலிஜா முகமது அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்."

நிறைந்தது